Sangathamil
# சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 119 | சர்வதேச மின் செய்தித்தாள் | ஏப்ரல் 15 2026





## நாட்டுப்பற்றாளர்

# அன்னை பூபதி கணபதிப்பிள்ளை

## (Annai Poopathy Kanapathipillai)

### கிரான், மட்டக்களப்பு- தமிழீழம்

உலகிலேயே உண்ணா நோன்புப் போராட்டத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட முதல் பெண்மணி

**தமிழீழத்தில்: 11.03.1932** | **ஈகைச்சாவு: 19.04.1988**

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

**NISHANTHAN LAW OFFICE**

SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney

NOTARY SERVICES

NEW LOCATION

Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com

39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

**MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION**
MT CPA CA
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING

Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 · 647-989-6298 · 647-748-6444 · www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

**Ideal Auto Tech**
Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

**JRS AUTO TECH**
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399

| | |
|---|---|
| AC | $119.99 + |
| OIL CHANGE | $59.99 + |
| USED TIRE | $74.99 + |
| BRAKES JOB | $299.99 + |

7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
SERVICE@JRSAUTOTECH.CA

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோர்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathananthan
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

**LONGO LAWYERS**
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

உங்கள் கனவு இல்லத்தை நனவாக்கிட என்னை அழையுங்கள்!
Kaja Sivalingam
Sales Representative
647-338-5252
skajaruban@gmail.com
Higher Standard Agents... Higher Results!
HOMELIFE
HOMELIFE/GTA REALTY INC.
5215 Finch Ave E, Suite 203, Scarborough ON M1S 0C2 OFFICE: 416-321-6969

Muhunthan Sivathasan (Danny)
Graphic Designer & Printer
**Silver Print House**
Digital Printing, Graphics & Publication
D'impression numérique, les graphiques et la publication
437 423 5460
Silverprinthouse@gmail.com

உங்கள் விருப்பத்திற்கேற்ப வீடு, வியாபாரம் வாங்க, விற்க நம்பிக்கையுடன் நாடுங்கள்
THINKING OF BUYING OR SELLING
Suresh Theivendram
Broker
416.890.7179
realtorsuresh@outlook.com

RIGHT AT HOME REALTY INC. RealtorGroup
JEY RASATHURAI MBA, BBA
REALTOR & MORTGAGE BROKER
MORTGAGE ALLIANCE
- Mortgage, Line of Credit, Refinance, Renewal
- Private 1st,2nd & 3rd Mortgages - No Income Verification
- Solutions for Power of Sale Issues
- Buying & Selling & Lease Commercial & Residential Properties

Cell : 416-624-4843
Bus : 416-816-9011
301-305 Milner Ave, Toronto ON M1B 3V4
" NO PROMISES BUT SOLUTIONS"

Kurinchi
Beauty & Makeup
647.918.9742

ACCIDENT HAPPENS!
But your injuries don't have to last a lifetime.
TRUST ARAM LEGAL SERVICES!
ONE CALL - WE WILL HANDLE IT ALL!
Motor Vehicle Accident? Questions? Get Answers
ARAM Legal Services
Selva Thiyagarajah
416-618-1447
www.aramlegal.ca


## விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்


**ஒரு புதிய பிறப்பு அறிவித்தல் தளம்**

இறந்தவரின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு துயர அறிவிப்புக்கு எமது **Thuyarpakirvu.com** இணையம் செயல்படுகிறது. நீங்கள் "துயர் பகிர்வு" இணையத்தில் ஒரு இரங்கல் செய்தியை வெளியிடும் போது, அந்த விபரங்களை ஒரு சில நிமிடங்களில் உலகத்தின் அனைத்து பாகங்களுக்கும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இதன் மூலம் நாமும் உங்களுடன் பயணிக்கிறோம்.

மேலும்... சாவு அறிவித்தல், கண்ணீர் வணக்க பகிர்வு, நினைவு நாள் வணக்க பகிர்வு, ஆண்டு நினைவு நாள் வணக்க பகிர்வு, நன்றி நவில்...!

தொடர்புகளுக்கு
**437 345 4203**
thuyarariviththal@gmail.com

**Thuyarpakirvu.com**

# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**அன்னை பூபதி தனிமனிதப் பிறவியாகச் சாகவில்லை. தமிழீழத் தாய்க்குலத்தின் எழுச்சி வடிவமாக அவரது தியாகம் உன்னதம் அடைந்தது.**







சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

437 345 4203

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.com



அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# எங்கள் இனத்தின் அடையாளம்

# கேணல் தமிழ்ச்செல்வி




“அம்மா… நீங்க செய்தது கொஞ்சம் கூட சரியில்ல… எனக்குச் சுத்தமாப் பிடிக்கேல்லையம்மா… எப்படியம்மா உங்களுக்கு மனசுவந்திச்சு… அதுவும் உங்கட சொந்த தங்கச்சிக்கு ஒரு பச்சை மண் குழந்தை இருந்திருக்கு நீங்க அதப்பற்றி ஒரு நாள் கூட சொல்லவே இல்லையம்மா… ஏனம்மா… உங்களுக்கு உங்கட தங்கச்சி மேல கொஞ்சம் கூட பாசம் இல்லையாம்மா…, தமிழ்ச்செல்வி வீரச்சாவு அடைந்த பிறகு அவான்ர குழந்தையை நீங்களும் கைவிட்டுட்டுவந்திட்டீங்களேயம்மா… அந்தப்பிள்ள என்னம்மா செய்திருக்கும்… ஏனம்மா நீங்க இவ்வளவு நாளும் அந்தப்பிள்ளையைத் தேடேல்ல… ஆனா நான் மட்டும் உங்கள மாதிரி இருக்க மாட்டன். என்ர அண்ணாச்சிக்கு ஏதுமெண்டா என்ர உயிரைக் கொடுத்தாவது அவனக் காப்பாற்றியிருப்பன்… ஆனா…, நீங்க அப்படியில்லையே. அம்மா… உங்கட தங்கச்சியின்ர கைக்குழந்தையைக்கூட விட்டிட்டு வந்திட்டீங்களே… எனக்கு கவலையா இருக்கம்மா… உங்களில கோபம் கோபமா வருகுதம்மா…”அவள் படபடத்தாள். அன்று தான் இணையத்தளத்தில் கேணல் தமிழ்ச்செல்விக்காக வெளிவந்த பாடல் வரிகளை அவள் கேட்டிருந்தாள். அதில்தான் அவருக்கொரு குழந்தை இருந்தது என்ற உண்மை அவளுக்குத் தெரிய வந்தது. அதிலிருந்து அம்மாவை அவள் அரிக்கத்தொடங்கி விட்டாள். “எப்பயம்மா… நாங்க தமிழ்ச்செல்வி அக்கான்ர பிள்ளையை எப்படித் தேடப் போறம்… அந்தப்பிள்ள இப்ப நல்லா வளர்ந்திருக்குமே அம்மா… நாங்க எங்க போய் எப்படித்தேடப் போறம்…? அவள் அம்மாவை விடுவதாக இல்லை. அம்மாவால் பதில் சொல்ல முடியவில்லை. “செல்லம் அம்மாவும் தேடிக்கொண்டு தான் இருக்கிறன் கண்ணா… கண்டிப்பா ஒரு நாள் அந்தப் பிள்ளை எங்களுக்கு கிடைப்பா… நீ கவலைப்படாத செல்லம்” அம்மா மகளுக்கு ஆறுதல் சொன்னாள். ஆனால் அந்த ஆறுதலில் எல்லாம் அமைதியாகிப் போகும் ரகம் அவளல்ல…

அவள் பிடி வாதக்காரி, வீட்டின் கடைக்குட்டி, கடைக்குட்டி என்பதை விட அவள் தான் அந்த வீட்டின் குட்டித்தேவதை, இளவரசி, மகா ராணி, எல்லாமே, அவளுக்கொரு அண்ணா இருந்தான் அவ னுக்கும் அவளுக்குமான வயது இடைவெளி கொஞ்சம் அதிக மாகவே இருந்தது. இதனாலோ என்னவோ அவன் தங்கச்சி மீது உயிரையே வைத்திருந்தான். தங்கச்சிக்காக எல்லாவற் றையுமே விட்டுக்கொடுத்துவிடுவான். அவளோடு போட்டி போடு வதற்கோ சண்டையிடுவதற்கோ வீட்டில் யாரும் இல்லை. எல் லோருமே அவளிடம் சரணாகதி அடைபவர்களாகத்தான் இருந் தார்கள். அம்மா, அப்பா, அண்ணா மூவருக்குமே அவள்தான் உலகமாகத் தெரிந்தாள். அதனாலோ என்னவோ பயம் என்பது அவள் அகராதியில் இல்லை. வீட்டில் யார் தவறு செய்தாலும் நேருக்கு நேர்நின்று நியாயம் கேட்பாள். அப்படித்தான் இன்று அம்மா மாட்டிக்கொண்டார். “என்னதான் நீங்க ஆயிரம் கார ணம் சொன்னாலும் உங்கள என்னால மன்னிக்கவே முடியாதம்மா… நீங்க செய்தது தப்பு, தப்புத்தான்… அவளது நீதி மன்றில் தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது. முட்டிவெடித்த கண்ணீர்த் துளிகளை அவள் அறியாது மெல்லத் தட்டி விட்டார் அம்மா. அவள் சிறுமியாக இருந்தாலும் நல்ல புத்திக்கூர்மைமிக்கவள். எல்லாவற்றையும் துருவித்துருவி அறியும் ஆர்வம் உடையவள். ஏதாவது ஒன்றைப்பற்றிய தேடல் அவளுக்குள் வந்து விட்டால், அதைத்தேடி முழுமையாக அறிந்து கொள்ளாமல் அவள் விடமாட்டாள். பள்ளியிலும் அவள் நல்ல கெட்டிக்காரி. சிறு வயதில் இருந்தே நடனக்கலையில் அவளது ஆர்வம் அதிக மாகவே இருந்தது. அதனால் நடனம் பயிலத் தொடங்கியிருந்தாள். மகளின் ஒவ்வொரு அசைவிலும் செயலிலும் அம்மா தன் தங்கையைக் கண்டு கொண்டிருந்தாள். மகளிடம் இருக்கும் பிடிவாதம், கோபம் வரும் போது பல்லை நெறுமிக்கொண்டு பேசுவது, எந்தளவுக்கு கோபமும் பிடிவாதமும் அவளுக்குள் இருக்கிறதோ அதற்கு மேலாய் அவள் காட்டும் அன்பு என அவளது குண இயல்புகள் ஒவ்வொன்றும் தமிழ்ச்செல்வியை நேரடியாகப்பார்ப்பது போன்றே அம்மாவுக்குத் தோன்றும்.” அது சரியம்மா… உங்கட தங்கச்சி, அதுதான் தமிழ்ச்செல்வி அக்கா ஏனம்மா இயக்கத்துக்குப்போனவா…” “போராடத்தான்….” அப்படியெண்டா…?” அவளின்ர வயதுக்கு எப்படி விளக்கம் தருவது… எப்படிச் சொன்னால் அவளுக்குப் புரியும்… அம்மா ஒரு கணம் தயங்கினார்… “இதுக்குக் கூட பதில் தெரியாதா… ஏய் அம்மா நோண்டி… அம்மா நோண்டி…” அவள் கைகளைத் தட்டித் துள்ளினாள். “நான் சொல்லட்டா அம்மா… எங்கட நிலங்களப் பிடிக்கவாற எதிரிகள விரட்டியடித்து…, எங்கட தமிழ் மக்கள மகிழ்ச்சியா தங்கடதங்கட வீட்டில, தங்கட தங்கட ஊரில நின்மதியா வாழ வைக்கத்தான் போராடப் போனவா… சரியா அம்மா…” அம்மாவின் கன்னத்தைச் செல்லமாக வருடினாள் அம்மாவுக்கு ஆச்சரியம்…! இந்த வயதில் அதுவும் உரிமைக்காகத் தூக்கிய ஆயுதங்கள் மௌனித்துப்போன சூழலில் வளர்ந்துவரும் இந்தக் குழந்தை எவ்வளவு தெளிவாக இருக்கிறது. அம்மா வியந்து போனாள். தன் வளர்ப்பில் தவறில்லை, எங்கு புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் தன் தேசத்தின் நினைவுகளோடும், சொந்த மண்ணின் வாசனையோடும், நியாயமான விடுதலைப்போர் பற்றிய தெளிவோடும் மகள் வளர்க்கப்பட்டிருக்கிறாள், அதுவே அம்மாவுக்குப் பெரும் ஆத்ம திருப்தியாக இருந்தது. தன் மகளை நன்றாக வளர்த்து, நல்ல உயர் கல்வி கற்க வைத்து, நல்ல பட்டம் பதவியில் இருத்தி, அவளுக்கென்று வளமான எதிர் காலமொன்றை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பதே அம்மாவின் விருப்பம், கனவு எல்லாமே… அந்த இலட்சியம் நிறைவேறும் வரை கண்ணுக்குள் பொத்தி வைத்து அவளைப் பாதுகாக்கும் பெரும் கடமையில இருந்து அம்மா ஓயப்போவதில்லை. கேணல் தமிழ்ச்செல்வி, எத்தனையோ ஈக வரலாறுகளையும் தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களையும் தாங்கி நிற்கும் எமது விடுதலைப்போராட்ட வரலாற்றில் ஒரு மைல்கல். இறுதிக்கட்டப்போர் மிக இறுக்கமடைந்திருந்த காலப் பகுதி, களமுனைகளோ நாளுக்கு நாள் விரிந்து கொண்டே சென்றது.

கூடநின்ற தோழிகள், அணித்தலைவர்கள் என போராளிகள் தங்கள் உயிர்களைக்கொடுத்துப் போராடிக்கொடிருந்தனர். தமிழ்ச்செல்வியின் கையிலோ குழந்தை, அதனால் பின்னரங்கில் இருந்து கொண்டு போராளிகளைக் களமுனைக்குத் தயார் படுத்துவதும் அவர்களுக்குத் தேவையான ஆயுத தளபாடங்களைச் சீர்செய்வதும் என களப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் தனது போராட்டகால வாழ்க்கையில் பெரும்பகுதியை களமுனையிலேயே கழித்தவள். அதிலும் கனரக ஆயுதங்களோடும், அணிகளை வழிப்படுத்தும் கொம்பனித்தலைவியாகவும் இருந்து சண்டைகளை நேருக்கு நேர் எதிர்கொண்ட அவளால், இப்போது களமுனைக்கு அணித் தலைவர்கள் தேவைப்படும் சூழ்நிலையில் பின்னரங்கில் நிற்பது என்பது முடியாத காரியம். அவளது மனச்சாட்சி என்ற தராசில் ஒரு பக்கம் அவளது குழந்தை, மறுபக்கம் அவளது கடமை. இரண்டையும் சீர்தூக்கிப்பார்த்தாள், இறுதியில் அவளது கடமை உணர்வே வென்றது. கணவனிடம் பேசி முடிவெடுத்தாள், அவளது குழந்தையை சகோதரியிடம் ஒப்படைத்து விட்டு களமுனைக்கு விரைந்தாள். மாலதி படையணியின் சிறப்புத் தளபதி பிரிகேடியர் விதுஷாக்கா குழந்தைகளுடன் இருக்கும் போராளித் தாய்மாரைக்கள முனைக்கு அனுப்புவதை ஒரு போதும் விரும்புவதில்லை. அந்தத் தாய்மாருக்கு ஏதாவது நடந்தால் பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக் குறியாகி விடும் என்பது அவரது நிலைப்பாடாக இருந்தது. ஆனாலும் அவள் பிடிவாதமாக இருந்து களமுனையிலே தன் பணியைத் தொடர்ந்தாள். இறுதிக்காலப் போரரங்கு வித்தியாசமாக இருந்தது. எதிரி எந்தப்பக்கத்தால் நகர்கிறான், எந்தப் பக்கத்தால் உடைப்பை ஏற்படுத்துவான் என எதிர்பார்க்க முடியாததாகக்களம் அமைந்திருந்தது.

ஏனெனில் மக்களின் வாழ்விடங்கள் மிகக் குறுகிவிட்டிருந்தன. எந்தப்பகுதியில் மக்கள் செறிவாக வாழ்கிறார்களோ அந்தப் பகுதிகளே எதிரியின் இலக்குகளாக இருந்தன. அப்படித்தான் ஒரு முறை தேவிபுரம் பகுதியில் விதுஷாக்காவோடு அவள் நின்றிருந்தாள். அவர்கள் நின்றது சிறியதொரு வெட்டைப் பிரதேசம். முன்னால் அடர்ந்த காடு. வெட்டையைக் கடந்து சற்று முன்னதாய் இருந்த மரமொன்றில் ஏறிசண்டைக்கான கட்டளை மையத்தைத் தயார் செய்வதற்காக தொலைத்தொடர்பு அன்ரனாவைக் கட்ட அவள் முயற்சி செய்து செய்து கொண்டிருந்தாள். சில நொடிகள் தான், அவர்கள் நின்றிருந்த இடம் எறிகணை மழையில் நனைந்தது. தலை நிமிர்த்தி என்ன நடக்



கிறது என்பதை அறிய முடியாத சூழல், தமிழ்ச்செல்வி மரத்திலிருந்து எப்படிக்குதித்தாள், எப்படித்தனக்கான பாதுகாப்பைத் தேடினாள் என்பது தெரியவில்லை. அவளுக்குப்பக்கத்தில் சிறிய பாதுகாப்பகழிக்குள் இரு போராளிகள் வீரச்சாவை அடைந்து விட்டனர். எறிகணைத்தாக்குதல் சற்று ஓய்ந்துவிட்டதால் துப்பாக்கி ரவைகள் தாறுமாறாக பறந்தன. அடுத்து அந்த இடத்தில் எதிரியின் நகர்வு ஆரம்பித்து விட்டது. எதிரி மிக நெருங்கி விட்டிருந்தான். அந்த இடத்தில் இரு போராளிகளின் வித்துடல் கிடந்தது. அதை அப்படியே விட்டு விட்டு வர அவள் தயாராக இல்லை. எதிரி மிக நெருங்கி விட்ட சூழலிலும் விதுஷாக்காவை பாதுகாத்து பத்திரமாக பின்னகர்த்தி விடுவதில் பிடிவாதமாக இருந்து அவரை அனுப்பி விட்டு அந்த இடத்தில் நின்று சண்டையிட்டு அந்த இரு போராளிகளின் வித்துடலையும் தமிழ்ச்செல்வி தூக்கி வந்திருந்தாள். அதுதான் தமிழ்ச்செல்விக்கே உரிய பண்பாகும். விடுதலைப் போராட்ட வரலாற்றில் இறுதிப் பெரும் முற்றுகைச்சமராக அமைந்த ஆனந்தபுரம் போரரங்கு போராளிகளின் ஓர்மத்துக்கும், விடாமுயற்சிக்கும் பெரும் எடுத்துக்காட்டாக அமைந்திருந்தது. இந்தக் களத்தில் தேசியத்தலைவரே நேரடியாகச் களமிறங்கி இருந்ததையும் யாரும் மறந்து விட முடியாது. பெரும் வேகத்தோடு வந்த எதிரி அசைக்க முடியாது திண்டாடிய பெரும் கோட்டையாக ஆனந்தபுரம் இருந்தது. நாட்கள் நகர நகர எதிரியின் முழுப்படை வலுவும் ஆனந்தபுரத்திலே இருந்தது. அதனால் போர் அரங்கு நாளுக்கு நாள் இறுகிக் கொண்டே போனது. அதனால் தலைவரை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்பதே முற்றுகைக்கு வெளியே இருந்த தளபதிகள் போராளிகளினதும், ஒருமித்த வேண்டுதலாக இருந்தது. தவிர்க்க முடியாத சூழலில் தலைவர் முற்றுகைக்குள் இருந்து வெளியில் வர, அன்றைய தினமே ஆனந்தபுர முற்றுகைக்குள் சென்ற அணியில் தமிழ்ச்செல்வியும் இருந்தாள். அவள் அந்த முற்றுகைச் சண்டைக்குள் புறப்படுவதற்கு முன்னதாக தனது கணவனிடம் சென்று விடைபெறும் போது, அவர் தனது துப்பாக்கியை அவளிடம் கொடுத்து உன்னருகில், உனக்குத்துணையாக எப்பவும் நானிருப்பன் வென்று வா! என்று விடைகொடுத்து அனுப்பியிருந்தார் அப்போது இருவருக்கும் தெரியாது அது தான் தமது இறுதிச் சந்திப்பென்று. ஆனந்தபுரம் எதிரியின் அதியுயர் தாக்குதல் வலுவின் உச்சமாக மாறியிருந்தது. ஆட்லறி எறிகணைகள், மோட்டார் பீரங்கிகள், கனரக ஆயுதங்கள், சூட்டு வலு வழங்க, வான் படை குண்டு மழைபொழிய, இதற்கு இடையில் நின்று பசி மறந்து, தூக்கம் மறந்து, விழுப்புண்களின் வலிமறந்து, கூட நின்று களமாடி வீழ்ந்த வீரர்களின் இழப்புகளின் துயர் கடந்து, வீரர்கள் விழ விழதங்களின் முழுப்பலத்தையும் மனவைராக்கியத்தையும் பயன்படுத்தி போராளிகள் போராடிக்கொண்டிருந்தனர். அந்தக்களத்தில் தமிழ்ச்செல்வியும் கையில் விழுப்புண் தாங்கியிருந்தாள். இனி அந்த முற்றுகையைத்தக்க வைத்துக்கொள்ள முடியாத சூழல் உருவாகிக் கொண்டிருந்தது. இந்த நிலையில் அந்த முற்றுகையை உடைத்துக்கொண்டு எப்படியாவது வெளியில் வரும்படி அவர்களுக்குகட்டளையிடப்பட்டிருந்தது. 04.04.2009 அதிகாலை பெரும் உடைப்புச்சமர் ஒன்றை களத்தில் நின்ற தளபதிகள் போராளிகள் மேற்கொண்டிருந்த போது, அந்த சமர் பெரும் வெற்றியைத்தரவில்லை. நீண்ட விடுதலைப் போராட்டத்தின் பெரும் தூண்களாக இருந்த பிரிகேடியர் விதுஷா, பிரிகேடியர் துர்க்கா, உட்பட பல தளபதிகள் போராளி-களை இழந்த போது தமிழ்ச்செல்வி மிகவும் மனம் தளர்ந்திருந்தாள். கூட நின்ற தோழியிடம் "இந்த முற்றுகைக்குள் இருந்து அக்காவைய எப்படியாவது பாதுகாத்துக்கூட்டிச் செல்ல வேண்டும் என்று நினைச்சன் என்னால அது முடியேல்லே... கடைசியா என்ர பிள்ளைக்கு நல்ல அம்மாவாகவும் இருக்க முடியல்லே..." என்ரபிள்ளை என்று அவள் சொன்ன அந்த நொடி, அவளது துடிப்பும் தவிப்பும் அவளது உணர்வில் தெரிந்தது. "தானாடா விட்டாலும் தசை ஆடும்" என்பார்கள். அதன் உண்மையை அவளிடம் கண்ட போது, "தாய்மை" என்கின்ற அந்தப்புனிதமான உணர்வு அவளுக்குள் இருந்ததை அவள் ஒரு போதும் வெளிப்படுத்தியதில்லை. முதல் தடவையாக அவளை இந்த நிலையில் பார்த்த போது மெய்சிலிர்த்துப் போனது. அன்றைய தினம் மிக இறுக்கமான சூழ்நிலையிலும் தொலைத்தொடர்பு சாதனத்தில் தன் நெருங்கிய போராளித் தோழிகள் ஒரு சிலரோடு அவள் பேசினாள். "எவ்வளவு போராடியும் என்னால அக்காக்களப்பாதுகாக்க முடியாமல் போயிற்று... அவைய நான் இழந்திட்டன், அவள் கதறினாள். என்ர குஞ்சுகள் நிறைய வீரச்சாவடைஞ்சிற்று... என்ர செல்வங்கள் எல்லாம் விழுப்புண் தாங்கி துடித்துக்கொண்டிருக்கினம்...

"அவள் பேசிக்கொண்டிருக்கும் போதே இராணுவத்தினர் ஒலி பெருக்கியில் போராளிகளைச்சரணடையும்படி அறிவிப்புச் செய்வது மிகத்தெளிவாக கேட்டது. அவள் சொல்லாமலே இராணுவத்தினரும் அவர்களும் மிக அருகில் நின்று களமாடும் களச் சூழலின் இறுக்கமும், நெருக்கமும்மிகத் தெளிவாகப் புரிந்தது. அந்தக்கணத்தில் கூட தான் திரும்பி வரவேண்டும் என்ற எண்ணம் துளியேனும் அவளிடத்தில் இருக்கவில்லை. எப்படியாவது அதற்குள் இருக்கும் போராளிகளைக் காப்பாற்றி முற்றுகையை உடைத்து அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே அவள் மனதில் இருந்தது. இறுதியாக ஒரேயொருவார்த்தை "என்ர பிள்ளையைப் பத்திரமாகப் பாருங்கோ..." அது தான் அவளது கடைசித் தொடர்பாடலாக





இருந்தது. அன்றைய தினம் இரவே எஞ்சிய போராளிகள் அனைவரையும் ஒருங்கிணைத்துக் கொண்டு மீண்டும் ஒரு உடைப்புச்சமரை மேற்கொள்ள தளபதிகளும் போராளிகளும் தயாராகினர்.

அந்த உடைப்புச்சமருக்கு எஞ்சிய மகளிர் போராளிகளையெல்லாம் ஒருங்கிணைத்துக்கொண்டு தமிழ்ச்செல்வி களம் இறங்கினாள். அந்த உடைப்புச்சமர் உக்கிரமாய் நடந்து பச்சைப்புல் மோட்டைக் கடல் நீரேரியூடாக ஒரு உடைப்பொன்றை ஏற்படுத்திபோராளிகள் நகர்ந்து கொண்டிருக்கும் போதுதான் தற்துணிவும் விடாமுயற்சியும், வைராக்கியமும் கொண்ட தமிழ்ச்செல்வி என்கின்ற பெருமலை எதிரியின் குண்டேந்தி அந்த இடத்திலேயே சரித்திரமாய் வீரவரலாற்றின் பக்கங்களில் இடம் பிடித்துக் கொண்டாள். 1991 இன் பிற்பகுதி, உயர்தரம் கற்றுக்கொண்டிருந்த பள்ளித் தோழிகளான கேணல் தமிழ்ச்செல்வியும் மேஜர் எழிலரசியும் விடுதலை நோக்கிய பயணத்தில் தம்மை இணைத்திருந்தனர். மணலாற்றுக் கானகத்தே மகளிர் படையணியின் 20 ஆவது பயிற்சி முகாம், 27.02.1992 இல் தொடங்கிய போது அந்தப்பயிற்சி முகாமில்தான் தோழிகள் இருவரும் தமக்கான ஆரம்பப் பயிற்சிகளை ஆரம்பித்திருந்தனர். பயிற்சிகளின் போது அனைவருக்குமே துப்பாக்கிகளுக்குப் பதிலாக கொட்டன்களே வழங்கப்பட்டிருந்தன. ஆனால் கனம் இல்லாத அந்தக்கட்டைகளைத் தூக்கிக்கொண்டு செல்வதற்கு தமிழ்ச்செல்வி தயாராக இல்லை. பாடசாலை நாட்களிலேயே விளையாட்டுத்துறையில் மிகத்திறமையான மாணவியாக அவள் இருந்தவள். பயிற்சி ஆசிரியர்களிடம் சென்று தனக்குப் பாரம்கூடிய குத்திகள் தரும்படி கேட்டாள். பயிற்சி ஆசிரியர்கள் அவளுக்கு எவ்வளவோ எடுத்து கூறினர். இந்தக்கட்டைகளைத் தூக்கிக்கொண்டு தான் ஓட வேண்டும். பயிற்சிகளின் போதும் அதைத்தான் வைத்திருக்க வேண்டும் என்றனர். "அது பரவாயில்லை, என்னால முடியும்" ஒரு பிடியாக இருந்து பாரம் கூடிய குத்தியை வாங்கி விட்டாள். எல்லோருமே பயந்தார்கள். இவள் என்னென்று இந்தக் குற்றியை வைத்துக் கொண்டு பயிற்சி எடுக்கப்போகிறாள் என்று. ஆனால் அவளுக்கு அது ஒரு பிரச்சனையாகவே இருக்கவில்லை. மிக இலகுவாக எல்லோ





ரையும் போல என்பதை விட மிகச்சிறப்பாக அவள் பயிற்சிகளைச் செய்தாள். அடிப்படைப் பயிற்சி முகாமிலேயே அவளது திறமை பயிற்சி ஆசிரியர்களால் இனங்காணப்பட்டுவிட்டது. அவர்களது பயிற்சி முகாம் நடைபெற்றுக்கொண்டு இருக்கும் போதே, “ஒபரேசன் கஜபார” என்ற இராணுவ நடவடிக்கையை எதிரி ஆரம்பித்திருந்தான். 17.03.1992 மணலாற்றின் நாயாறு, அளம்பில், ஆகிய பகுதிகளை வல்வளைப்புச் செய்யும் நோக்கில் கடல், வான், தரையென மும்முனைகளாலும் தாக்குதலைத் தொடுத்தபடி இந்த இராணுவ நடவடிக்கை தொடங்கியிருந்தது. இந்தத்தாக்குதலை முறியடிப்பதற்கான சண்டைகள் மணலாறு - முல்லை மாவட்ட தளபதி லெப்டினன் கேணல் அன்புஅவர்களது தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதன் போது இந்தத் தாக்குதலுக்கு உதவி அணியாகப்பங்காற்ற பயிற்சி முகாமில் இருந்து மிகத்திறமையாகச் செயற்படக் கூடிய 90 பேர் தெரிவு செய்யப்பட்டனர். இதில், தமிழ்ச்செல்வி முதலாவது ஆளாக இருந்தாள். முன் பின் தெரியாத அடர்ந்த காடு முன் அனுபவம் இல்லாத களமுனைப் பயிற்சிகள் கூட நிறைவு பெறாத நிலைமை இருந்தபோதிலும் ஒரு குறுகிய காலப் பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. தற்காப்புக்கான பயிற்சியுடன், துப்பாக்கி குறி பார்த்துச் சுடுவது, குண்டெறிவது, ஆயுதங்களைக் கழற்றி பூட்டுவது, திசைகாட்டியின் உதவியுடன் திசைகளை அறிவது என அடிப்படை இராணுவப் பயிற்சியும் அவர்களுக்கு வழங்கப்பட்டன. பயிற்சியின் போது தமிழ்ச்செல்வி காட்டிய வேகமும் நிதானமும், எல்லாவற்றையும் உடனுக்குடன் புரிந்து, புரியாதவர்களுக்குஅதைத் தெளிவு படுத்தும் விதமும் அவளை 9 பேர் கொண்ட அணிக்கு தலைவியாக்கியது. கஜபார இராணுவ நடவடிக்கையை முறியடித்து இராணுவத்தினரைப் பழைய நிலைகளுக்கே விரட்டியடிக்கும் சமரில் எதிரிகள் தடுமாறி தாம் கொண்டு வந்த கனரக வாகனங்களிற் பூட்டிய கனரக ஆயுதங்களைக் கைவிட்டு விட்டு ஓட்டம் பிடிக்கத்தொடங்கினர்.

இந்த நிலையில் கனரக வாகனத்தில் பூட்டியிருந்த 30 கலிபர் ஆயுதம் ஒன்றை தமிழ்ச்செல்வி மிக விரைவாகக் கழற்றி எடுத்தாள். உண்மையிலேயே 30 கலிபர் எப்படி இருக்கும் அதை எப்படிக் கையாளுவது, அதை எப்படிக்கழற்றுவது என்று எதுவும் அவளுக்குத் தெரியாது. ஆனால் அவளது முயற்சியும் சக போராளிகளின் உதவியும் அதைக்கழற்றி எடுக்க வைத்தது. அந்த முதற் களமே அவள் யார் என்பதைத் தளபதிகளுக்கு இனங்காட்டியது. சண்டைக்கு பின்னர் அடிப்படைப்பயிற்சிகளை நிறைவு செய்து கொண்டு சிறப்புப் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்ட அணியில் அவளும் ஒருத்தியானாள். தமிழ்ச்செல்வியின் ஆசை, கனவு, இலட்சியம் எல்லாமே ஒன்றாகத்தான் இருந்தது. எப்போது பயிற்சி நிறைவடையும், எப்போது கனரக ஆயுதத்துடன் தான் சண்டைக்குச் செல்வது என்ற எண்ணம் மட்டுமே அவளிடம் இருந்தது. அந்த எண்ணமும், அவளது மன உறுதியும் அவளைக் கனரக ஆயுதத்தில் சிறப்பு தேர்ச்சி பெற வைத்தது. அவளது திறன் கண்டு லெப்.கேணல் அன்பு அவர்களால் 30 கலிபர் ஆயுதம் ஒன்று அவளுக்குப் பரிசாக வழங்கப்பட்டது. இதன் பின்னர் மணலாற்று அணியில் தமிழ்ச்செல்வி பெரும் சண்டைக்காரி ஆகிவிட்டாள். இராணுவ ரோந்து அணிகள் மீதான பதுங்கித் தாக்குதல்களில் தனக்கென்றோர் இடத்தைப் பிடித்தாள். அளம்பிற் பகுதி தொடர் காவலரண்கள் மீதான தாக்குதல், அளம்பிற் பகுதி மீட்புச்சமர், கொக்குளாய், கொக்குத்தொடுவாய் முன்னரங்கக் காவலரண்கள் மீதான தாக்குதல், மண்கிண்டிமலை இராணுவமுகாம் தகர்ப்பு என மணலாற்றுப் பகுதியில் இடம் பெற்ற அனைத்துத் தாக்குதல் நடவடிக்கைகளிலும் தமிழ்ச்செல்வியின் கை ஓங்கியிருந்தது. விடுதலைப் போராட்டத்தில் இணைந்து மிகக்குறுகிய காலத்திலேயே பெருவளர்ச்சிப் பாதையை நோக்கி அவள் பயணிக்கத் தொடங்கினாள். அவளது இந்த வளர்ச்சிக்குக் காரணமே துணிவு, தன்னம்பிக்கை, விடாமுயற்சி, என்கின்ற மூன்றுமே. முடியாது என்ற சொல் அவள் அகராதியில் கிடையாது போனது. இதன் பின்னர் அவளது செயற்பாடு யாழ் மண்ணை நோக்கிநகர்ந்திருந்தது. அங்கு அவளது முதற்களம் “யாழ்தேவி” இராணுவ நடவடிக்கை எதிர்ச்சமராக இருந்தது. தொடர்ந்து பூநகரிப்படைத்தளம் மீதான அழித்தொழிப்புச்சமரிலும் அவள் தனது முத்திரையைப் பதித்துக் கொண்டாள். 1994ஆம் ஆண்டின் ஆரம்பக் காலப்பகுதி, விடுதலைப்போராட்ட வரலாற்றில் இதுவரை காலமும் பெண் போராளிகளுக் கானகனரக ஆயுதப் பயிற்சிகளை ஆண் போராளிகளே வழங்கி வந்திருந்தனர். இந்த நிலமையை மாற்றி பெண் போராளிகளுக்குப் பெண் போராளிகளே கனரக ஆயுதப் பயிற்சிகளை வழங்குவதற்காக ஆசிரிய அணி ஒன்றை உருவாக்குவதற்காக கனரக ஆயுதங்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற போராளிகள் உள்வாங்கப்பட்டிருந்தனர். அந்த அணியில் தமிழ்ச்செல்வியும் ஒருத்தியானாள். இவர்களுக்கான ஆசிரியப் பயிற்சி எழுதுமட்டுவாளில் அமைந்திருந்த “கஜன்” பயிற்சிப் பாசறையில் இடம்பெற்றது. இதன் போது தமிழ்ச்செல்வி 30கலிபர் 50 கலிபர் ஆயுதங்களில் ஆசிரியப் பயிற்சியை எடுப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்டிருந்தாள். ஆரம்ப காலத்தில் பொதுவாக ஆண் போராளிகள் பயிற்சி வழங்கும் போது பெண் பிள்ளைகளால் சில கடின பயிற்சிகளை செய்ய முடியாது என்ற நிலைப்பாடு இருந்தது. அதுகும் 50 கலிபர் ஆயுதம் அதன் முக்காலி என்பவற்றைத் தூக்கிப் பயிற்சி எடுப்பது என்பது கடினமானதொன்று. அதனால் இதனை இவர்கள் இலகுவாகச் செய்யமாட்டார்கள் என பயிற்சி ஆசிரியர்கள் கருதியிருந்தனர் ஆனால் இந்த நிலைப்பாட்டைப் பெண் போராளிகள் தவிடுபொடியாக்கினர். அதிலும் தமிழ்ச்செல்வியின் ஆற்றல் கண்டு பயிற்சி ஆசிரியர்கள் ஒருகணம் பிரமித்துப் போயினர். ஒரு முறை எவ்வளவு தூரத்துக்கு பெண் போராளிகளால் ஆயுதங்களைத் தூக்கிக்கொண்டு பயிற்சி எடுக்க முடியும் என ஆசிரியர்கள் பரீட்சித்துப் பார்த்தார்கள். நாகர்கோயில் சந்தியில் இருந்து ஆரம்பமான அந்தப் பயிற்சியில் தமிழ்ச்செல்வியின் தோளில் 75 கிலோ கிராம் நிறையுடைய 50 கலிபர் ஆயுதத்தைப்பொருத்தும் முக்காலி இருந்தது. ஓய்வில்லாமல் நிலைகள் எடுத்தெடுத்து 10கிலோ மீற்றர்கள் கடந்து நிறைவுற்றது அந்தப் பயிற்சி. அதுவரை அந்தக் கடினப் பயிற்சியில் இருந்து அவள் ஒரு துளி கூட அசந்ததில்லை. பாரத்தைத் தூக்கித் தூக்கி தோள்கள் சோர்ந்தது. ஓடியோடிக் கால்கள் ஓய்ந்திருந்தது. ஆனாலும் மனம் தளராது ஓர்மத்துடன் பயிற்சி ஆசிரியர்களாலே நம்ப முடியாத அளவுக்கு அவள் செய்து காட்டினாள். அப்போது பயிற்சி தந்த ஆசிரியர் தனது வாயாலேயே பாராட்டினார். “உங்களை நான் தவறாக எடை போட்டு விட்டேன், உங்களால் எல்லாவற்றையும் செய்ய முடியும்” என்றார். தமிழ்ச்செல்வி ஒன்றை செய்து முடிக்க வேண்டும் என்று நினைத்தால் அதை நூற்றுக்கு நூறு வீதம் மிகத்திறமையாகச்செய்து முடிப்பாள். எந்தக் கடினச் சவாலாக இருந்தாலும் எந்தத்தயக்கமும் இன்றி நேருக்குநேர் நின்று முகம் கொடுப்பாள். இதுதான் அவளுக்கே உரிய சிறப்பியல்பாக இருந்தது. இந்தப்பயிற்சியின் நிறைவில் தமிழ்ச்செல்வி சகல ஆயுதங்களையும் பயிற்றுவிக்கும் ஆசிரியராக இருந்தாள். பயிற்சிக்காலத்திலேயே சூரியக்கதிர் 1, 2, மண்டைதீவுச்சமரென அவளது களப்பணி விரியத் தொடங்கியது. கனரகப் பயிற்சி ஆசிரியராக அவள் இருந்த போது பயிற்சி நேரத்தில் அவளிடம் இருக்கும் கண்டிப்பு பயிற்சி நிறைவடைந்த மறுநொடியே அவளை விட்டுப்பறந்து விடும். போராளிகளோடு மிக இறங்கி அவர்களது பிரச்சினை, குறை நிறைகளைக்கண்டறிவதில் அவளுக்கு நிகர் அவளேதான். அவள் போராளிகளை அணுகும் முறையே வித்தியாச மானது. “செல்லம்” “குஞ்சு” பெரியவர்கள் என்றால் “அக்காச்சி” என்றும் அன்பு பொழிய அழைக்கும் அவளது பேச்சு வழக்கு அவளது சொந்த இடமான கற்சிலைமடுவின் மண் வாசணையைச் சொல்லும். அந்த அன்பான பேச்சை இறுதிவரை அவள் கைவிட்டதே இல்லை. பொதுவாகப் போராளிகளுக்கு அவள் பயிற்சி ஆசிரியராக வருவது விருப்பமான ஒன்றாக இருந்தது. அதனால் போராளிகள் விரும்பும் நல்லாசானாக அவள் இருந்தாள். 1995ஆம் ஆண்டு புலிப்பாச்சல் சண்டைக்கான பயிற்சிகளை வழங்கியதோடு களமுனைக்கும் கனரக ஆயுதங்களை ஒருங்கிணைத்துச் சண்டை செய்திருந்தாள். அதன் பின்னர் யாழ் நகரை விட்டு வெளியேறும் வரை 50 கலிபர் ஆயதத்தோடுகளத்தில் நின்றிருந்தாள். 1996ஆம் ஆண்டு மகளிர் படையணி 2ஆம் லெப் மாலதி படையணியாக பரிணாமம் பெற்ற போது மாலதி படையணியின் சிறப்புத்தளபதி பிரிகேடியர் விதுஷாக்காவுடன் அவளது செயற்பாடு தொடர்ந்தது. ஓயாத அலைகள் 1 எனப் பெயரிடப்பட்டு சிறீலங்காப் படைகளால் வல்வளைப்புச் செய்யப்பட்டிருந்த முல்லைச் சமரில் உதவியணிக்குப் பொறுப்பாளராக களம் சென்றிருந்தாள். தொடர்ந்து “சத்ஜெய” இராணுவ நடவடிக்கை, கிளிநொச்சி நகர், பரந்தன் சண்டையென ஓய்வின்றி அவள் உழைத்தாள். தமிழ்ச்செல்விக்கென்று ஒரு ராசி இருந்தது. எந்தச்சண்டைக்குச் சென்றாலும் விழுப்புண் தாங்காமல் குறைந்தது ஒரு கீறலாவதுபடாமல் களமுனையை விட்டு அவள் திரும்பமாட்டாள். “ஜெயசிக்குறு” என்ற பெயரில் எதிரி பெரும் இராணுவ நடவடிக்கையைத் தொடங்கிய போது அந்தக்கள முனைக்குச் செல்லும் போராளிகளுக்கான கனரக ஆயுதப்பயிற்சிகளை வழங்கி அவர்களைக் களமுனைக்குத் தயார்படுத்தும் பணியோடு நேரடியாகவேகளத்திலும் நின்றாள். புளியங்குளம் புரட்சிக்குளம் என்று கூறுமளவுக்கு போராளிகளின் போரியல் நடவடிக்கை மிகச் சிறப்பானதாக அமைந்திருந்த புளியங்குளச்சமரில் கொம்பனியை வழிப்படுத்தும் 2ஆவது அணித்தலைவியாகச் செயற்பட்டிருந்தாள். இதுவே புதூரில் ஒரு கொம்பனியைக் கொண்டு நடத்தும் அளவுக்கு அவளை உயர்த்தியது. புதூரில் இருந்து இராணுவத்தினரின் முன்னேற்ற முயற்சிகளை ஒரு அங்குலம் கூட நகரவிடாது போராளிகள் ஓர்மத்துடன் நின்று சமராடிய போது மிகச் சிறப்பாகச் சண்டைகளை வழிப்படுத்தினாள். நீண்டு விரிந்த ஜெயசிக்குறுவைப் போலவே இவளது களப்பட்டியலும் நீண்டு கொண்டேசென்றது. தாண்டிக்குளம், மன்னகுளம் என எல்லாச்

சமர்களிலும் அவளது பங்கும் இருந்தது. தீச்சுவாலை இராணுவ நடவடிக்கையின் எதிர் சமரிலும் கொம்பனியை வைத்து திறம்படச் சண்டையிட்டாள். அவளது போரியற் திறனை தளபதிகள் மட்டுமன்றி, தேசியத் தலைவரே பாராட்டும் அளவுக்கு அவளது செயற்பாடு விரிந்திருந்தது. மன்னார் பள்ளமடுச் சண்டை அவளது போரிடும் திறனுக்கு இன்னும் வலுச் சேர்த்தது. இங்கும் கொம்பனித் தலைவியாகவே எதிரியைத் திணறடித்துக் கொண்டிருந்தாள். எந்த இறுக்கமான சண்டையாக இருந்தாலும் பதற்றமின்றிக் கட்டளைகளை வழங்கி சண்டையிடும் போராளிகளுக்கு ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக ஒளிர்ந்தாள். அவளது குரல் தொலைத் தொடர்புக் கருவியில் ஒலித்தாலே போராளிகளுக்குள் புதுவேகம் பிறக்கும். அதுவே அவர்களைத் திறம்படச் சண்டை செய்ய வைக்கும் அவளது திறன் விரைவிலேயே அவளை மாலதி படையணியின் தளபதியாக மாற்றியது. தளபதியாக அவள் தேர்ந்தெடுக்கப்பட்டபோது களமுனையில் இருந்து அவளைப் பின்னுக்கு எடுக்க வேண்டியிருந்தது. அதனால் மாலதி படையணியின் சிறப்புத்தளபதி விதுஷாக்கா அழைத்தும் அவளுக்கு களமுனையை விட்டு வருவதற்கு விருப்பம் இருக்கவில்லை. “நான் சண்டையிலேயே நிக்கிறன் பின்னுக்கு வரவில்லை” என விதுஷாக்காவிடம் தெரிவித்தாள். அந்த இடத்தில் விதுஷாக்காமிக இறுக்கமான கட்டளை ஒன்றை பிறப்பித்தார். சண்டையில் நிற்பதாக இருந்தால் குப்பி, தகட்டைக்கழற்றிவிட்டு நிக்கும் படியும் இல்லை என்றால் பள்ளமடுவில் இருந்து தனது இடத்துக்கு நடந்து வரும் படியும் பணித்திருந்தார். தமிழ்ச்செல்விக்கு களமுனையை விட்டு வருவது என்பது முடியாத காரியமாக இருந்தாலும் கட்டளைக்குக் கீழ்ப்படிதல் என்பது எவ்வளவு முதன்மையானது





என்பது அவளுக்குப் புரியும். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் தண்டனையை மகிழ்வோடு ஏற்று மன்னாரில் இருந்து நடந்து வந்தே விதுஷாக்காவைச் சந்தித்தாள். மாலதி படையணியின் தளபதிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட தமிழ்ச்செல்விக்கு நிர்வாகப் பணி என்பது புது அனுபவமாகவே இருந்தது. போராட்டத்தில் இணைந்த காலப்பகுதியில் இருந்து ஓய்வின்றிச் சண்டை, பயிற்சி, சண்டை, பயிற்சி, என மாறிமாறி உழைத்தவளுக்கு நிர்வாகப்பணி என்பது பெரும் சவால் தான். ஆனால் சவால்களையே சாதனையாக்கிக் காட்டிய அவளுக்கு நிர்வாகப் பணிகளிலும் சிறப்பாகச் செயற்பட முடிந்தது. தளபதியாக இருந்த போதிலும் அவளது செயற்பாடு களமுனைகளைச் சுற்றிச் சுற்றியே இருந்தது. போராளிகளின் முக்கியத்துவம் புரிந்து நல்ல நிர்வாகியாக அவள் இருந்தாள். இதன் பின்னர் 2004 ஆம் ஆண்டு திருமண பந்தத்தில் தன்னை இணைத்துக் கொண்டாள். நிர்வாகத்துறையில் பணியாற்றிக்கொண்டிருந்த பூவண்ணன் என்கின்ற போராளியே அவளது வாழ்க்கைத் துணையாக அமைந்தார். போரியலில் எப்படித்திறம் படச் செயற்பட்டாளோ அதேபோல் இல்லற வாழ்விலும் அவள் தன் கடமைகளைச் சரிவரச்செய்தாள். அவள் இல்லறத்தின் நல்லறப் பயனாய் தாய்மை அடைந்திருந்த நிலையிலும் தனது பணியிலிருந்து சிறிதளவு கூடபின்னிற்கவில்லை. குழந்தை பிறந்த பின்னரும் அவளது செயற்பாடு களம் சார்ந்ததாகவே இருந்தது. கடமைக்குச் செல்லும் பெண் போராளிகளின் குழந்தைகளைப் பராமரிப்பதற்காகத் தளிர்கள் என்ற குழந்தைகள் காப்பகம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அங்கு தான் தமிழ்ச்செல்வி தனது குழந்தையைப் பகல் பொழுதில் விட்டுவிட்டுக் களமுனைகளுக்குச் சென்று வருவாள். எவ்வளவு தான் கடமைகள் இருந்தாலும் அவள் தனது குழந்தைக்கு நல்ல அம்மாவாகவும் இருக்கத்தவறியதில்லை.







# தமிழீழச் செய்திகள்

## யாழ். மண்டைதீவு படுகொலை வழக்கு ஒத்திவைப்பு!

01.04.2026

மண்டைதீவு படுகொலையின் வழக்கு 31.03.2026 அன்று ஊர் காவற்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்ட நிலையில் அது எதிர்வரும் யூலை மாதம் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்துறை நீதிமன்றில் நீதவான் அனீபா ரஜீவ் முன் னிலையில் இன்று குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது காணாமல் போனோர் அலுவலகத்தின் சட்டத் தரணி பூர்ணி மரியநாயகம் மற்றும் அதன் பிராந்திய இணைப் பாளர் த.செல்வக்குமார், வேலணை பிரதேச சபையின் உறுப் பினர் சுவாமிநாதன் பிரகலாதன் ஆகியோர் குறித்த வழக்கு சார்பில் நீதிமன்றில் முன்னிலையாகி இருந்த நிலையில் வழக்கின் சான்றுகளை காவல்துறையினர் மன்றில் சமர்ப் பித்தனர்.

இந்த வழக்கு கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, ஊர்காவற்துறை காவல்துறையினரால் குறித்த புதைகுழியின் அகழ்வுப் பணியை முன்னெடுப்பதற்கான வசதிகள் இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து இந்த வழக்கு யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவினரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளதுடன் மண்டைதீவு மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் யாழ்.மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுக்கு நீதவான் உத்தரவு பிறப்பித்திருந்தார்.










இந்நிலையிலேயே குறித்த வழக்கு எதிர்வரும் யூலை 28 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல்களை கடற்படையினர் கட்டுப்படுத்த தவறுவதாக ரவிகரன் எம்.பி. குற்றச்சாட்டு; கண்காணிப்பு கருவிகள் பழுதடைந்துள்ளனவா எனவும் கேள்வி எழுப்பினார்

01.04.2026

முல்லைத்தீவு உட்பட வடபகுதி கடற்பரப்புக்களில் அதிகரித் துள்ள இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் செயற் பாடுகளை கடற்படையினர் கட்டுப்படுத்த தவறுவதாக குற்றஞ் சாட்டிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கடற்படையினரது கண்காணிப்புக் கருவிகள் பழு தடைந்துள்ளனவா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்நிலையில் இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் தொடர்பாக தம்மால் கண்காணிக்கப்படுவதாகவும், அத்தகைய அத்துமீறல்களுக்கெதிரா தம்மால் நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படுவதாகவும் கடற்படை அதிகாரி பதிலளித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் 31.03.2026 நேற்று கடற்தொழில் அமைச்சரின் தலைமையில் இடம்பெற்ற, சட்ட விரோத கடற்தொழில் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டத்திலேயே குறித்த விடயம் பேசப்பட்டுள்ளது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு கடற்பரப்புக்களில் இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல்கள் அதிகரித்துள்ளன.

குறிப்பாக இந்திய இழுவைப் படகுகள் கடற்கரையை அண்மித்த பகுதிகளுக்கு வருகைதந்து அத்துமீறிய சட்டவிரோத கடற் தொழில் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

எவ்வித தடையுமின்றி இந்திய இழுவைப்படகுகள் எமது கடற் கரையை அண்மித்து வருகைதந்து கடற்தொழில் செயற் பாடுகளில் ஈடுபடும் வரையில் கடற்படையினர் என்ன பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள்.

இவ்வாறு அத்துமீறி எமது கடற்பரப்பிற்குள் நுழைந்து எமது மீனவர்களின் வாழ்வாதார வளங்களை அழிக்கின்ற செயற் பாடுகளில் ஈடுபடும் இந்திய இழுவைப்படகுகளை கடற்படை யினர் கட்டுப்படுத்த தவறுகின்றனர். இது எமக்கு பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

அத்து மீறி எமது கடற்பரப்புகளுக்குள் உள்நுழையும் இந்திய இழுவைப் படகுகளை கடற்படையினருக்குத் தெரிவ தில்லையா?

அல்லது அத்து மீறி எல்லைதாண்டி எமது நாட்டுக் கடற் பரப்பிற்குள் சட்டவிரோதமாக உள்நுழைபவர்களைக் கண் காணிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற கடற்படையினரிட முள்ள கருவிகள் பழுதடைந்துள்ளனவா?

அவ்வாறு கடற்படையினரிடமுள்ள கண்காணிப்புக் கருவிகள் பழுதடைந்திருந்தால் அதனை வெளிப்படுத்துங்கள். நாம் ஜனாதிபதியுடன்பேசி புதிய கண்காணிப்பு கருவிகளை பெற் றுக்கொடுப்பதற்கு நடவடுக்கை மேற்கொள்வோமென நாடாளு மன்ற உறுப்பினர் தெரிவித்தார்.




இதன்போது சிறீலங்காக் கடற்படை அதிகாரி பதிலளிக்கையில்,

இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் தொடர்பாக 24 மணித்தியாலங்களும் கடற்படையினர் கண்காணிப்புக்களில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

அவ்வாறு அத்துமீறி எல்லைதாண்டிவரும் இந்திய இழு வைப்படகுகளை கடற்படையினர் ரேடார் கருவிகள் மூலம் கண் காணித்து அவர்களுக்கெதிராக உரிய சட்டநடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாகவும் கடற்படை அதிகாரியினால் இதன் போது பதிலளிக்கப்பட்டது.

www.sangathamil.com



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# பச்சிலைப்பள்ளியில் சிறீலங்கா இராணுவத் தேவைக்காக காணி சுவீகரிப்புக்கு எதிராக மக்கள் போராட்டம்: நில அளவை நடவடிக்கை கைவிடப்பட்டது

02.04.2026

கிளிநொச்சி மாவட்டம், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஊர்வணிக்கன்பற்று கிராமத்தில், சிறீலங்கா இராணுவத் தேவைக்காக முன்னெடுக்கப்படவிருந்த காணி சுவீகரிப்பு நடவடிக்கைக்கு எதிராக இன்று (02) காலை பாரிய போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.



மக்களின் பலத்த எதிர்ப்பினைத் தொடர்ந்து, திட்டமிடப்பட்டிருந்த நில அளவை நடவடிக்கை தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

சிறீலங்கா இராணுவத்தின் 4 ஆவது பட்டாலியன் படைப் பிரிவின், மின் மற்றும் இயந்திரப் பொறியியல் படையணி அமைப்பதற்காக 25.73 ஏக்கர் தனியார் காணிகளைச் சுவீ கரிக்கும் நோக்குடன் இந்த நில அளவை முயற்சி மேற்கொள் ளப்பட்டது. அரசாங்க நில அளவையாளர் திரு. வ. நிதர்சன் அவர்களால் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ அறிவித்தலின் படி, காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் இன்று காலை 9:00 மணியளவில் பணிகள் ஆரம்பிக்கப்படவிருந்தன.

குறித்த நிலமானது இராணுவ முகாம் அமைப்பதற்காகவே சுவீகரிக்கப்படுவதை அறிந்த பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் திரு. சுப்பிரமணியம் சுரேன், இந்த ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அதன்படி, இன்று காலை 8.00 மணி முதல் காணி உரிமை யாளர்களும் பொதுமக்களும் ஒன்றுகூடித் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.



போராட்டத்தில் கலந்துகொண்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்கள் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்:

"பச்சிலைப்பள்ளி பகுதியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகள் இதுவரை விடுவிக்கப்படாத நிலையில், அவற்றை இராணுவத் தேவைகளுக்காக வலுக்கட்டாயமாக அளவீடு செய்யும் முயற்சி இன்று முன்னெடுக்கப்பட்டது. தமது பூர்வீக நிலங்களை இழந்து நிற்கும் உரிமையாளர்களும், அவர்களுக்கு ஆதரவாக நாங்களும் இணைந்து இந்த அநீதி யான அளவீட்டுப் பணியைத் தடுத்து நிறுத்தினோம்.

தமிழ் மக்களின் பெரும்பான்மையான நிலப்பரப்புகள் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டு இன்னும் விடுவிக்கப் படாமல் உள்ளன. இன்றும் தமிழ் மக்கள் ஒரு "திறந்தவெளிச் சிறைச்சாலைக்குள்" வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு இத் தகைய நில ஆக்கிரமிப்பு முயற்சிகளே சான்றாகும். சொந்தக் காணி இல்லாமல், அருகில் உள்ள பள்ளமான பகுதிகளில் தற் காலிகமாக வசிக்கும் மக்கள், மழைக்காலங்களில் வெள்ள அனர்த்தத்தினால் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். மக்களின் காணிகள் முழுமையாக விடுவிக்கப் படும் வரை எமது ஜனநாயகப் போராட்டங்கள் தொடரும்," எனத் தெரிவித்தார்.

மக்களின் இடைவிடாத எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து, நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் அங்கிருந்து வெளி யேறியதுடன், இன்றைய அளவீட்டுப் பணிகளும் நிறுத்தப் பட்டன.

குறித்த போராட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் மேனாள் நாடா ளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், கரைச் சிப் பிரதேச சபையின் தவிசாளர் அருணாச்சலம் வேழ மாலிகிதன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப் பிரமணியம் சுரேன், பிரதேச சபைகளின் கௌரவ உறுப் பினர்கள், மதத்தலைவர்கள், காணி உரிமையாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்."







# மட்டக்களப்பு பாலையடிவட்ட சிறீலங்கா இராணுவ முகாம் விடுவிப்பு

03.04.2026

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவூபற்று பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட பாலையடிவட்டை கிராமத்தில் அமைந்துள்ள பொதுச் சந்தைக் கட்டடத் தொகுதியில் சுமார் 25 வருடங்களுக்கு மேலாக சிறீலங்கா சிங்கள இராணுவம் கையகப்படுத்தி முகாமிட்டிருந்துவந்தது.



இந்த பொதுச்சந்தைக் கட்டடத் தொகுதியில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் தற்போது அவ்விடத்திலிருந்து வெளியேறி அக்காணியை விடுவித்துள்ளனர். அவ்விடத்தை வியாழக் கிழமை மாலை (02) மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மற்றும் பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், அப்பகுதி கிராம



மக்கள் என பலரும் நேரடியாகச் சென்று பார்வையிட் டிருந்தனர்.

**தமிழர்களுடன் சமாதான சகவாழ்வை நடத்துவதா அன்றி தமிழர்களை பிரிந்து செல்ல நிர்ப்பந்திப்பதா என்பது சிங்கள தேசத்தின் அரசியற் போக்கில்தான் தங்கியிருக்கிறது.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை நிருவாகக் குழு உறுப்பினருக்கு கொழும்பிலுள்ள குற்றத்தடுப்புப் பிரிவு அழைப்பாணை!

5.04.2026

இலங்கைத் தமிழரசுக்கட்சி, கிளிநொச்சி மாவட்டக் கிளையின் நிருவாகக் குழு உறுப்பினரும், கிராஞ்சி வட்டாரத்தின் அமைப்பாளருமான திருமதி. தயாநந்தன் ஜெயச்சித்திரா அவர்கள், கொழும்பிலுள்ள பயங்கரவாதத் தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினரால் (TID) விசாரணைக்காக மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார். கடந்த கால அரசாங்கங்களைப் போலவே, மாற்றம் என்று கூறி ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கமும் தமிழ் மக்கள் மீதான அச்சுறுத்தல்களையும் அடக்குமுறைகளையும் அதே பாணியில் தொடர்வதை இந்த நடவடிக்கை மேலும் உறுதிப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

இது குறித்துக் காவல்துறை வழங்கிய அழைப்பாணையில், 2026.04.07 அன்று காலை 10:00 மணிக்கு கொழும்பிலுள்ள விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறு அவருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

திருமதி. தயாநந்தன் ஜெயச்சித்திரா அவர்கள் குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவால் (TID) மூன்றாவது முறையாகவும் விசாரணைக்காக கொழும்புக்கு அழைக்கப்படுவது பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு ஒரு தமிழ்த் தேசிய அரசியல் செயற்பாட்டாளரைத் தொடர்ச்சியாகக் கொழும்புக்கு அழைத்து விசாரணை என்ற பெயரில் அச்சுறுத்துவது தமிழ் மக்கள் மத்தியில் மிகுந்த கவலையையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த கால ஆட்சியாளர்களின் கொள்கைகளையே தற்போதைய அரசாங்கமும் தமிழர்களுக்கு எதிராகக் கையாண்டு வருவதோடு, இவ்வாறான அநீதியான செயல்கள் தொடர்ச்சியாகத் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுவது பாரிய ஜனநாயக விரோதச் செயலாகும்.

தமிழ் மக்களின் அரசியல் குரல்களை நசுக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் இத்தகைய தொடர் விசாரணைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாக உள்ளது.



# அமெரிக்க ஈரான் போர்: இலங்கையின் பொருளாதாரம் ஈடு செய்ய நமக்கு நாமே துணை!

பா. அரியநேத்திரன்

07.04.2026

இலங்கை 2022 தொடக்கம் 2026 தற்போதுவரை கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து, சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் மெதுவான மீட்சியைச் சந்தித்து வருகிறது. பணவீக்கம் கட்டுக்குள் வந்தாலும், வறுமை விகிதம் 2026 வரை 20% க்கும் அதிகமாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பொருளாதார நிலைப்படுத்தல், கடன் மறுசீரமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை வளர்ச்சி ஆகியவை மீட்புக்கு உதவினாலும், மக்கள் மீதான நிதிச்சுமை தொடர்ந்து நீடிக்கிறது.



2024 இல் இலங்கையின் பொருளாதார நிலை குறித்த முக்கிய அம்சங்களாக 2024 ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதாரம் 5% வளர்ச்சி அடைந்ததாகக் கணக்கிடப் பட்டுள்ளது. இது 2022 இன் பொருளாதாரச் சரிவுக்குப் பின் ஏற்பட்ட நேர்மறையான மாற்றமாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் மற்றும் கடன் மறுசீரமைப்பு விரிவாக்கப்பட்ட நிதி வசதி தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு, இரண்டாவது தவணை பெறப்பட்டது. மேலும், வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புப் பேச்சுவார்த்தை கள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு, 'கட்டுப்படுத்தப்பட்ட திவால்' நிலையிலிருந்து இலங்கை மீண்டது. வறுமை நிலை இன்னும் உச்சத்தில் உள்ளது. குறிப்பாக 2026 ஆம் ஆண்டு வரை அது 20% க்கும் அதிகமாகவே இருக்கும் என உலக வங்கி அறிக்கை கணித்துள்ளது.

இலங்கையானது கிராமங்கள் நிறைந்த நாடு என்ற வகையையும் கொண்டது. இங்குள்ள கிராமங்களில் பெரும்பாலானவை பொருளாதார நிலையில் மிகப் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன. இலங்கையிலுள்ள பதிவு செய்யப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை சுமார் 14000 மற்றும் அதே அளவு எண்ணிக்கையில் கிராம சேவக உத்தியோகத்தர்கள் பிரிவுகளும் உள்ளன.

இவ்வாறான நிலையில் மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த நிலைமை அமெரிக்கா ஈரான் யுத்தம் அதனால் ஏற்பட்ட மத்திய கிழக்கின் போர் தாக்கத்தின் விளைவுகளால் இன்று இலங்கை வாழ் மக்களும் குறிப்பாக வடகிழக்கு மக்களும் பல நெருக்கடிகளை சந்திக்கும் ஆண்டாக எதிர்வரும் சித்திரை புத்தாண்டு மலர உள்ளது.

போர்களால் பேரழிவை ஏற்படுத்தி, கட்டமைப்பு மற்றும் மனித வளங்களை அழிப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை வெகுவாகப் பாதிக்கின்றன. போர் நிலவும் நாடுகளில் சராசரியாக 30% பொருளாதார உற்பத்தி சரிவு மற்றும் 15% வரை பணவீக்கம் ஏற்படுகிறது. இது முதலீடுகளைக் குறைத்து, நீண்ட கால வறுமை மற்றும் கடன் சுமையை உருவாக்குகிறது.

போர் பொருளா தாரத்தின் முக்கிய பாதிப்புகளாக உற்பத்தி இழப்பு தொழிற்சாலைகள், உள்கட்டமைப்பு மற்றும் மனித மூல தனத்தின் அழிவு. பணவீக்கம், போருக்கான நிதியைத் திரட்ட நாணயங்களை அச்சிடுவதால், பொருட்களின் விலை கடுமையாக உயர்கிறது.

உள்நாட்டு மற்றும் அண்டை நாடுகள் பாதிப்பு போரிடும் நாடுகள் மட்டுமல்லாது, அண்டை நாடுகளிலும் பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு, வர்த்தகம் குறைகிறது. நுகர் வோர் பொருட்களின் உற்பத்தி குறைக்கப்பட்டு, ஆயுதங்கள் மற் றும் பாதுகாப்பு சார்ந்த உற்பத்திகளுக்கு அரசு முக்கியத்துவம் அளிக்கிறது. வேலைவாய்ப்பு மற்றும் வறுமை போரின் காரணமாக வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து, வறுமை நிலை மோசமடைகிறது. இவ்வாறான தாக்கம் இலங்கையிலும் ஏற்படலாம். இவைகளில் இருந்து ஈடு செய்யக்கூடியவிடயங்களை தற்போதைய தேசிய மக்கள் அரசால் முன் எடுத்தாலும் அவர்களால் முழுமையாக இலங்கையின் பொருளாதாரத்தை மீளவும் சீர் செய்வது என்பது இன்னும் பல வருடங்கள் கடக்கலாம். எதிர்கட்சிகளை பொறுத்தவரை வழமையாக ஆளும் தரப்பை குற்றம் சாட்டும் பாரம்பரிய அரசியலே இப்போதும் உள்ளன.

ஆனால் இந்த பொருளாதார நெருக்கடிகளால் மின்சார வாடகை, எரிபொருள் விலை ஏற்றம், என்பவற்றின் தாக்கம் அத்தியாவசிய பொருட்கள் தொடக்கம் உடுதுணி மற்றும் சகல உணவுப் பண்டங்களின் விலைகளும் உயர்ந்துள்ளன. மக்களைப் பொறுத்தவரை ஆடம்பர பொருட்களையும், அனாவசிய பொருட்களையும், அலங்காரப் பொருட்களையும் வாங்குவதை தவிர்த்து அன்றாட உணவுப்பொருட்களை மட்டும் கொள்வனவு செய்ய பழகுவது அவசியமாகும்.

இவைகளுடன் வீட்டுத் தோட்டங்கள், சுயதொழில் வளர்ச்சியையும் ஊக்கப்படுத்துவதும் கட்டாயமாகும் ஏனெனில் ஈரான் அமெரிக்கா போர் எப்போது முற்றுப்பெறும் மேலும் அழிவுகளை ஏற்படுத்துமா என்பதற்கெல்லாம் எவராலும் விடை கூற முடியாது.

விவசாயம் சார்ந்த தொழில், முதலில் வருவது கால்நடை வளர்ப்பு, கறவை மாடுகளை நிலம் உள்ளவர்கள் வீட்டில் வளர்பது அதனால் பால் உற்பத்தியும், அதன் சாணம் வயலுக்கு சிறந்த உரமாக பயன்படும்.

வீட்டுத் தோட்டம் இருந்தால் வாழை, முருங்கை மற்றும் காய்கறி பயிரிடலாம். இது குடும்ப தேவைக்கும், சில்லறை வருமானத்திற்கான சிறந்த பக்க வியாபாரம். மேற்கூறிய மூன்று தொழிலை சிறப்பாக நடத்தினால் குடும்பம் நடத்த நமக்கு தேவையான பொருளாதாரம் நல்ல முறையில் கிடைக்கும்.

வடக்கு கிழக்கு மக்களை பொறுத்தவரை ஈழ விடுதலைப் போராட்டங்களில் பல பொருளாத தடைகளை சந்தித்த மக்கள் என்பதால் அவர்களுக்கு ஏனைய மாவட்ட மக்களை விட அனுபவம் உண்டு. குறிப்பாக 2006 ஜனவரி தொடக்கம் 2010 வரை முல்லைத்தீவு மாவட்டத்தில் மூன்று இலட்சம் மக்கள் முடக்கப்பட்டு பாரிய போராட்டம் கண்மூடித் தனமான எறிகணைத் தாக்குதல், விமான குண்டுத் தாக்குதல் என்பவற்றுக்கு முகம் கொடுத்து ஒருவேளை உணவு கூட கிடைக்காமல் கஞ்சி குடித்து வாழ்ந்து பழக்கப்பட்டவர்களும் பல ஆயிரம் மக்கள் பல இடர்களை சந்தித்து பொருளாதார நெருக்கடிகளை சமாளித்த வரலாறுகள் உண்டு.

ஆனால் தற்போதைய பொருளாதார நெருக்கடி அமெரிக்கா ஈரான் போரால் இலங்கை பொருளாதார நெருக்கடிகளை சந்திக்கும்போது சகல மக்களும் சுய தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக சிக்கனமான வாழ்க்கையை கடைப்பிடிப்பது காலத்தின் தேவையாக உள்ளது.

சுயதேவை பொருளாதார நடைமுறையை பின் பற்றுவதன் மூலம் ஒரு சமூகம், கிராமம் அல்லது நாடு தனக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை உணவு, உடை, உறைவிடம் பிறரைச் சாராமல், உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து பயன்படுத்தும் முறை ஒன்றை கையாள்வதற்கு உள ரீதியான மாற்றத்தை இப்போது ஏற்படுத்துவது அவசியமாகும். இறக்குமதியை எதிர்பார்க்காமல் , உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்து, பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதே காலத்தின் தேவையாகும்.

தற்போதைய உலக போர் சூழல் அதனால் ஏற்படும் தாக்கம் உள்ளாட்டில் மக்கள் முகம் கொடுத்து அதனை எதிர்கொள்ள கூடிய செயல் அமர்வுகளையும், கருத்தரங்குகளையும் சகல சமூக அமைப்புகள், அரசியல் கட்சிகள், மத தலைவர்கள்,பொது நிறுவனங்கள் தற்போது மக்களுக்கு விழிப்பூட்டும் செயல்பாடுகளை முன் எடுப்பதும் இன்றைய இக்கட்டான காலத்தில் அவசியமாகும்.

தற்போதைய ஈரான் அமெரிக்கா போர் எப்போது முற்றுப்பெறும் என்பதை எவராலும் கூறமுடியாத நிலையே காணப்படுவதால் இதனை உணர்ந்து நாமும் மற்றவர்களில் தங்கி இராமல் நமக்கு நாமே துணை என்ற எண்ணப்பாட்டுடன் வாழ்வதே சிறப்பு.

# யாழ். செம்மணி மனிதப் புதைகுழியினை ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் பார்வையிட யாழ். நீதவான் நீதிமன்று அனுமதி

07.04.2026

செம்மணி மனிதப் புதைகுழி காணப்படும் பகுதியை ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் பார்வையிட யாழ்.நீதவான் நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி பகுதியை நேரில் பார்வையிட ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் நீதிமன்றில் அனுமதி கோரி விண்ணப்பம் செய்திருந்தனர்.

அது குறித்து இன்றைய தினம் நடைபெற்ற செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பிலான வழக்கு விசாரணையின் போது ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் புதைகுழி பகுதியை பார்வையிட மன்று அனுமதித்துள்ளது.

அதன் அடிப்படையில் எதிர்வரும் 21ஆம் திகதி காலை 09.30 மணிக்கு முன்னராக அல்லது மாலை 02.30 மணிக்கு பின்னராக மனிதப் புதைகுழி காணப்படும் பகுதிக்கு சென்று நேரில் பார்வையிட முடியும் என அனுமதித்துள்ள மன்று, இரண்டு நேரங்களில் எந்த நேரத்தில் செல்லவுள்ளனர் என்பதனை முன்னரே மன்றுக்கு அறிவிக்க வேண்டும் என மன்று அறிவுறுத்தியுள்ளது.



# யாழ். செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுக்கான பாதீட்டுக்கு நீதி அமைச்சு அங்கீகாரம் வழங்கவில்லை

07.04.2026

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு பணிக்கான செலவீன பாதீட்டுக்கு நீதி அமைச்சு இன்று வரையில் அனுமதி வழங்காதமை தொடர்பில் யாழ். நீதவான் நீதி மன்றுக்கு சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் தெரியப்படுத்தியுள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளை முன்னெடுப்பது தொடர்பான வழக்கு விசாரணைகள் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை யாழ்.நீதவான் நீதிமன்றில் நடைபெற்றது.

அதன் போது, மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளை எதிர்வரும் 20ஆம் திகதி முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில், அன்றைய தினம் அகழ்வு பணிகளை முன்னெடுப்பதற்கான ஏது நிலை காணப்படவில்லை. அதனால் 27ஆம் திகதி ஆரம்பிப்பது தொடர்பிலான கலந்துரையாடல் இடம்பெற்றது .

அதன், மூன்றாம் கட்ட அகழ்வு பணிக்கான பாதீட்டுக்கான அங்கீகாரம் நீதி அமைச்சினால் இது வரையில் வழங்கப்படவில்லை என்ற விடயத்தை சட்ட வைத்திய அதிகாரி மன்றில் சுட்டிக் காட்டினார்.

அதனை அடுத்து பாதீடு தொடர்பிலும், 27ஆம் திகதி அடுத்த கட்ட அகழ்வு பணிகளை முன்னெடுக்க முடியுமா என்பதனை இறுதி செய்யும் வகையிலும் எதிர்வரும் 21ஆம் திகதி திறந்த மன்றில் வழக்கினை விசாரணைக்கு எடுத்து கொள்ள திகதியிடப்பட்டது

அதேவேளை, புதைகுழியில் இருந்து வெள்ளநீர் முழுமையாக வெளியேற்றப்பட்டுள்ள நிலையில் தற்போது சிறிதளவான ஈரலிப்பு தன்மையே காணப்படுகிறது. 20ஆம் திகதிக்கு முன்னர் அகழ்வு பணிக்கு ஏற்றவாறான நிலைமை காணப்படும் என எதிர்க்கப்பார்க்கப்படுவதாக மன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.



# தமிழர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான சிந்தனையில் எள்ளளவும் அரசாங்கம் காலடி எடுத்து வைக்கவில்லை

## பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்

07.04.2026

தமிழ் மக்களின் பிரச்சினை மற்றும் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக சிந்தனை மற்றும் எண்ணங்களில் எள்ளளவும் அரசாங்கம் காலடி எடுத்து வைக்கவில்லை. சமாதானம், நல்லிணக்கம் பற்றி பேசுவதற்காக கடக்கவேண்டிய பாதை இன்னும் கடினமானது. மக்களின் எண்ணங்களை புரிந்துகொள்ளுங்கள். அப்போதே இனங்களை இணைத்துக்கொள்ளும் கௌரவமான நாட்டை உருவாக்க முடியுமாக இருக்கும் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (7) நடைபெற்ற விளையாட்டில் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள், செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மற்றும் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

அரசாங்கம் பொறுப்பேற்றதன் பின்னர் தமிழ் பல்ககலைக்கழக மாணவர்களும் தமிழ் உத்தியோகத்தர்களும் பல்வேறு நெருக்கடிகளை சந்திக்கின்றனர். குறிப்பாக கடந்த மாதம் 16ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தின் மூன்று மாணவர்கள் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு அலுவலத்தில் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழகத்தில் கற்கும் மாணவர்களுக்கு தமது சுதந்திரமான செயற்பாடுகளுக்கும், தமது உரிமைகள் தொடர்பான கருத்துக்களை வெளியிடுவதற்கும், தமது இனம் சார்ந்த கொள்கைகளை வெளிப்படுத்துவதற்கும் இந்த அரசிலும் அவர்களுக்கு தடைகள் உள்ளது என்பதனையே இந்த செயற்பாடு வெளிப்படுத்துகின்றது. இதனை வன்மையாக கண்டிக்கின்றோம்.

எதிர்காலத்தில் தமிழ் பல்கலைக்கழக மாணவர்கள் சுதந்திரமாக தமது கல்வி நடவடிக்கைகளை தொடர வேண்டும். இவர்களுக்கு அரச இராணுவ, பொலிஸ் அடக்குமுறைகள் இருக்கக்கூடாது என்று வலியுறுத்துகின்றேன்.

இதேவேளை இலங்கை தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட கிளையின் நிர்வாக உத்தியோகத்தராக இருக்கின்ற தயாபரன் ஜெயசித்திரா கொழும்பில் உள்ள பயங்கரவாத தடுப்புப் பிரிவுக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். கிளிநொச்சியிலும் அவர் அடிக்கடி பொலிசாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அவரை அச்சுறுத்தும் வகையில் பயங்கரவத குற்றத் தடுப்பு பிரிவினரும், பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் விசாரணை நடத்துவதானது தங்களில் இயல்பான உரிமைகளை செயற்படுத்த முடியாமல் தடுக்கப்படுகின்றார் என்பதனையே காட்டுகின்றது.

அத்துடன் கடந்த 2ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தின் இயக்கச்சியில் ஊர்வணிகன்பற்று என்ற கிராமத்தில் உள்ள காணி அந்த மக்களின் சொந்த காணியாகும். அவர்கள் பரம்பரையாக ஆண்டுவந்த காணியாகும். அந்த காணியில் முத்துமாரியம்மன் ஆலயம், சிறுவர் முன்பள்ளி என்பன இருக்கின்றன. இந்த மக்கள் 1990இல் யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீண்டும் அந்த மக்கள் அங்கு குடியேறினர். பின்னர் 2006இல் மீண்டும் அவர்கள் அங்கிருந்து வெளியேறினர். இந்நிலையில் அந்த இடத்தை பிடித்துள்ள இராணுவத்தின் பொறியியல் இயந்திர பிரிவினர் அங்கு 30 ஏக்கர் காணியை தங்களுக்கு தர வேண்டும் என்று சட்டவிரோதமாக அளவிட்டு எடுத்துக்கொள்ள முயற்சிக்கின்றனர். நில அளவை திணைக்களம் அந்த காணியை அளந்து இராணுவத்திற்கு வழங்க முயற்சித்த போதும் மக்கள் அங்கு சென்று அதனை முறியடித்தனர். மக்களின் சொந்த காணிகளை வலுக்கட்டாயமாக யுத்தமில்லாத நாட்டில் பரித்துக்கொடுக்க ஏன் அரசாங்கம் முயற்சிக்கின்றது. சொந்த காணிகளை தமது கண்களுக்கு முன்னாலேயே இராணுவ, பொலிஸ் பிரசன்னத்துடன் அளக்க முயற்சிப்பது ஏன்?



இந்த மக்களின் துயரங்கள் மிகவும் முக்கியமானது. ஏன் இந்த நாடு இன்னும் உருப்படாமல் இருக்கின்றது. கர்ம வினைகள் ஒருபோதும் உங்களை உருப்பட விடாது. கடந்த காலங்களில் இருந்த அரசியல் தலைவர்கள் விட்ட தவறுகள், தமிழ் மக்கள் மீது புரிந்த யுத்தங்கள், இன்றும் தொடர்ந்து அந்த மக்களை தெருக்களில் வைத்துக்கொண்டு அவர்களின் காணிகளை விடமால் பறிக்க முயற்சிப்பது மிகவும் கொடூரமானது. இந்த மக்களின் உண்மைகளை புரிந்துகொள்ளுங்கள். அனைவருக்கும் சமவுரிமைகள் என்று கூறுகின்றீர்கள். ஆனால் மக்களின் எண்ணங்களை புரிந்துகொண்டு நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை. நல்லெண்ணங்களை பிரதிபலிக்கத் தவிறினால் இப்போது நிலவும் பிரச்சினைகள் இன்னும் நீடிக்கும்.

இந்த அரசாங்கமும் தமிழ் மக்களின் பிரச்சினையை, இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக சிந்தனை மற்றும் எண்ணங்களில் எள்ளளவும் இன்னும் காலடி எடுத்து வைக்கவில்லை. சமாதானம், நல்லிணக்கம் பற்றி பேசுவதற்காக கடக்க வேண்டிய பாதை இன்னும் கடினமாது. இதற்காக பாதையை திறவுங்கள். மக்களின் எண்ணங்களை புரிந்துகொள்ளுங்கள். அப்போதே இனங்களை இணைத்துக்கொள்ளும் கௌரவமான நாட்டை உருவாக்க முடியுமாக இருக்கும் என்றார்.

**கொண்ட கொள்கையில் நம்பிக்கையும், அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடமுள்ளவரை, எமது இலட்சியப் பயணம் வெற்றியில் முடியுமென்பது நிச்சயம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு பணிகள் விரைவில் ஆரம்பம்

## சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா

08.04.2026

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு பணிகளை எதிர்வரும் ஏப்ரல் 27ஆம் திகதி ஆரம்பிப்பது தொடர்பிலான சாத்தியங்களை தீர்மானிப்பதற்கு எதிர்வரும் ஏப்ரல் 21ஆம் திகதி குறித்த வழக்கு அழைக்கப்படும் என சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா தெரிவித்துள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழி வழக்கு விசாரணைக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

செம்மணி மனிதப் புதைகுழி வழக்கு இடம்பெற்ற போது சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவநாதன், அடுத்த கட்ட அகழ்வு பணிக்கான வேலைகள் முடிவடைந்து தயார் நிலையில் உள்ளதாக அறிவித்திருந்த நிலையிலும், ஏற்கனவே பெப்ரவரி 12ஆம் திகதி 2026 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் இருந்து நீதி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பாதீடானது இன்று வரை அனுமதி வழங்காத நிலையில் காணப்படுவது நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த தவணையின் போது அடுத்த கட்ட அகழ்வுப் பணிக்கு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி என உத்தேசமாக நிர்ணயிக்கப்பட்டிருந்த போதும் அன்றைய திகதியில் ஆரம்பிக்க முடியாத சூழல் இருப்பதாக நீதிமன்றத்தினுடைய அவதானத்திற்கு கொண்டு வரப்பட்டது.

அடுத்த கட்ட அகழ்வு பணி கிட்டத்தட்ட 27ஆம் திதி தற்காலிகமாக ஆரம்பிக்கப்படலாம் என்ற கலந்தாலோசனையின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டதோடு அது தொடர்பான விடயத்திற்கு பாதீடு தயார் நிலையில் உள்ளதா இல்லையா என்பதை ஆராய மீண்டும் வழக்கு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி அழைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குறித்த புதைகுழியை பார்வையிடுவதற்கான அனுமதியை கோரப்பட்டிருந்த நிலையில், அவர்கள் காலை 9 மணிக்கு முன்னதாக அல்லது மாலை இரண்டு மணிக்கு பின்னராக குறித்த புதைகுழியை தரிசனம் செய்வதற்கான அனுமதியை நீதிமன்றம் வழங்கி இருக்கிறது.

நிச்சயமாக எந்த நேரத்தில் அவர்கள் விஜயம் செய்ய உள்ளார்கள் என்ற விடயத்தை முற்கூட்டியே நீதிமன்றத்தில் அறிவிக்கும் படியும் நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது.

எதிர்வரும் 27ஆம் திகதி அகழ்வு பணி ஆரம்பிக்கிறதா? இல்லையா? என்பதை தீர்மானிப்பதற்கு 21ஆம் திகதி குறித்த வழக்கு அழைக்கப்படும் அகழ்ந்தெடுக்கப்பட்ட மனித எலும்புகளை ஆய்வு செய்வதற்கான பாதீடும், மூன்றாம் கட்ட அகழ்வு பணிக்கான பாதீடும் இரண்டும் ஒரேயடியாக அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டது.

இரண்டுக்குமே அனுமதி இன்னும் அளிக்கப்படாத நிலைமையில் இருக்கிறது என்றும் அதில் மனித எலும்புகளின் ஆய்வுக்



கான பாதீட்டில் சிறிய திருத்தம் செய்யப்பட்டு சட்ட வைத்திய அதிகாரி நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறார். இரண்டையும் சேர்த்து அனுமதி வழங்க வேண்டி சட்ட வைத்திய அதிகாரி நீதிமன்றத்தில் தெரிவித்திருக்கிறார் என்றார்.

குறித்த வழக்கு விசாரணைகளின்போது சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன், பாதிக்கப்பட்ட தரப்பினர்களின் சட்டத்தரணிகளான வி.எஸ்.நிரைஞ்சன், ரனித்தா ஞானராஜா, காணாமல் போனார் பற்றிய அலுவலக சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் போனார் பற்றிய அலுவலக பிரதிநிதி, குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர், பொலிஸார், முறைப்பாட்டாளர்கள், அரியாலை சித்துப்பாத்தி இந்து மயான நிர்வாகத்தினர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# வடக்கில் கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தொடரும் ஆசிரியர் இடமாற்ற தோல்விகளால் வன்னி மாணவர்களின் கல்விக்கான சம அணுகல் மறுக்கப்படுகிறது

## வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

07.04.2026

வடக்கு மாகாணத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக தொடரும் ஆசிரியர் இடமாற்ற தோல்விகளால் வன்னி மாணவர்களின் கல்விக்கான சம அணுகல் மறுக்கப்படுவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே கல்வியில் சம அணுகலுக்காக தொடர்ந்து பசித்திருக்கும் வன்னிப் பிள்ளைகளுக்கான உடனடித் தீர்வைத்தாருமாறு பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரியவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கோரிக்கையினையும் முன்வைத்துள்ளார்.

நாடாளுமன்றில் 07.04.2026இன்று இடம்பெற்ற விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டுக்கு எதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் தொடர்பான விவாத்தில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த ஆண்டு தேசிய மற்றும் மாகாண இடமாற்ற கொள்கைகளுக்கு முரணாக சேவையின் தேவை கருதிய இடமாற்றம் என 2025இல் வடமாகாண கல்வித்திணைக்களம் வழங்கிய 290 அளவிலான ஆசிரியர்களுக்கான இடமாற்றத்தை யாழ் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, வடமாகாண கல்வித்திணைக்களம் மீளப்பெற்றுக்கொண்டது.

மீண்டும் இவ்வருடம் அதே போன்றதொரு இடமாற்றத்தை வருடாந்த இடமாற்றத்துடன் இணைத்து வடமாகாணக் கல்வித் திணைக்களம் நடைமுறைப்படுத் தொடங்கித் தற்போது 193 அளவிலான சேவையின் தேவை கருதிய இடமாற்றத்தை மனித உரிமைகள் ஆணைக்குழு இரத்துச்செய்துள்ளது.

இந்நிலையில் வன்னிப்பெருநிலப்பரப்பிலிருந்து (கிளிநொச்சி அடங்கலாக) 368 அளவிலான ஆசிரியர்கள் யாழ்ப்பாணம் செல்லவுள்ள நிலையில் யாழில் இருந்து சேவையின் தேவை என்ற இடமாற்ற முயற்சியும், மனித உரிமைகள் ஆணைக் குழுவால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இரண்டு ஆண்டுகளாக தொடரும் இந்த இடமாற்ற தோல்விகளுக்கு யார் பொறுப்புக்கூறுவது?

போதியளவு ஆசிரியர்கள் இன்றி கல்விக்கான சம அணுகல் மறுக்கப்படும் எமது பிரதேச மாணவர்களுக்கு யார் வகைகூறுவது?
இவ்வாறான ஒர்முறைகேடாகும் சேவையின் தேவை அடிப்படையிலான இடமாற்றத்தை ஆசிரியர்கள் மீது திணித்தது ஏன்?

பேரவைத்தலைவர் அவர்களே, இந்த நாட்டின் பிரதமர் அவர்களே...



கல்வியில் சம அணுகலுக்காக தொடர்ந்து பசித்திருக்கும் எமது பிள்ளைகளுக்கான உடனடித் தீர்வைத்தாருங்கள் – என்றார்.


# முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

www.sangathamil.com

# இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலுள்ள கேப்பாப்பிலவு மக்களின் பூர்வீகக் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தல்

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

08.04.2026

முல்லைத்தீவு - கேப்பாப்பிலவில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளை உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் துரைராசா ரவிகரன் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் கேப்பாப்பிலவு காணி விடுவிப்புத்தொடர்பில், கூடியவிரைவில் இராணுவத்துடன் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க, குறித்த கலந்துரையாடலின் பின்னர் கேப்பாப்பிலவு காணி விடுவிப்புத் தொடர்பான முடிவு தம்மால் அறிவிக்கப்படுமெனவும் பதிலளித்துள்ளார்.



பாராளுமன்ற குழு அறையில் 07.04.2026நேற்று இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சின் அமைச்சுசார் ஆலொசனைக் கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

கேப்பாப்பிலவு காணிவிடுவிப்பு விடயம் தொடர்பில் குறித்த பாதுகாப்பு அமைச்சின் அமைச்சுசார் ஆலேசனைக்குழுக்கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

பாதுகாப்பு அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், முப்படை அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

இந்நிலையில் கடந்த கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முன்னேற்ற நிலைமைகள் குறித்து ஆராயும்போது கேப்பாப்புலவு மக்களின் காணி விடுவிப்பு விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

குறித்த கேப்பாபுலவு காணி விடுவிப்பு விடயத்தில், கடந்த கூட்டத்தில் இராணுவத்தினரிடமிருந்து ஜனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சருமான அனுரகுமார திசாநாயக்க அவர்களால் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்தது. எனினும் இராணுவத்தினரிடமிருந்து முழுமையான அறிக்கை இதுவரை கிடைக்கப்பெறவில்லையெனச் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில் இராணுவத்திற்கு அந்தக் காணிகள் தேவையென காணி உரிமையார்களிடம் இராணுவத்தால் ஏற்கனவே கோரப்பட்டதா எனவும் இதன்போது கேள்வி எழுப்பப்பட்டது.

குறித்த காணிவிடயத்தில், காணி உரிமையாளர்கள் தமக்கு சீரான அறிவித்தல்கள் எதனையும் தமக்குத் தரவில்லை எனவும், அது தொடர்பாக தாம் விரிவான அறிக்கையொன்றினைச் சமர்ப்பிப்பதாக இராணுவத்தினரால் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை இவ் விடயத்தில் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளுக்கு மாற்றீடாக 44காணி உரிமையாளர்களுக்கு மாற்றுக்காணிகள் வழங்கப்பட்டிருந்தாலும், 11பேருக்கு மாற்றுக்காணிகள் வழங்கப்படவில்லை என ஜனாதிபதியால் சுட்டிக்காட்டப்பட்டது. எனவே இந்தவிடயத்தில் கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் 11பேருக்கான மாற்றுக்காணி வழங்கும் விடயத்தில் கவனஞ்செலுத்தியிருக்கலாம் எனவும் ஜனதிபதியால் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இதன்போது கேப்பாப்புலவு மக்களின் பூர்விகக் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி நான் எனது கருத்துக்களை முன்வைத்திருந்தேன்.

குறிப்பாக 1818ஆம் ஆண்டளவிலிருந்து கேப்பாப்பிலவில் மக்கள் குடியிருப்பதாக வரலாறுகள் இருக்கின்றது என்ற விடயத்தினை இதன்போது சுட்டிக்காட்டினேன்.

அந்தவகையில் மக்களின் வாழ்வாதார மூலங்களுடன்கூடிய பூர்வீக குடியிருப்புக் காணிகளே இவ்வாறு இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் தெளிவுபடுத்தினேன்.

அத்தோடு முன்னைய காலங்களில் கேப்பாப்பிலவுப் பகுதியில் இராணுவமுகாம்கள் எவையும் இருந்திருக்கவில்லை என்பதையும் இதன்போது சுட்டிக்காட்டியிருந்தேன்.

இந்நிலையில் கடந்த 2009ஆம் ஆண்டு மக்கள் தமது பூர்வீக வாழ்விடத்திலிருந்து இடம்பெயர்ந்திருந்தனர். இவ்வாறு இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்வதற்கு வந்தபோது அவர்களின் காணிகளை இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்திருப்பதை அந்த காணிகளுக்குரிய மக்களால் அவதானிக்க முடிந்துள்ளது.

இத்தகையசூழலில் அயற் கிராமமான சீனியாமோட்டை என்னும் கிராமத்தில் இந்த மக்கள் குடியேற்றப்பட்டனர். குறிப்பாக ஒரு குடும்பத்திற்கு 0.25 ஏக்கர் காணிகள் வழங்கப்பட்டு அந்த மக்கள் குடியேற்றஞ் செய்யப்பட்டனர். இவ்வாறு மக்கள் தமது கேப்பாப்பிலவு பூர்வீகக் கிராமத்தில் மீள்குடியமர்த்தப்படாமல் அயற்கிராமத்தில் குடியேற்றஞ்செய்வதற்கு அப்போது மிகக் கடுமையான எதிர்ப்புக்களை வெளியிட்டிருந்தனர்.

இந்நிலைமில் இது ஒரு தற்காலிக ஏற்பாடு எனவும், இராணுவம் மக்களின் காணிகளில் இருந்து வெளியேறிய பிற்பாடு, மக்கள் அவர்களது சொந்தக்காணிகளில் மீளக்குடியமர்த்தப்படுவார்கள் என முல்லைத்தீவு மாவட்டசெயலகம் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் என்பவற்றினால் மக்களுக்கு உறுதிமொழி வழங்கப்பக்கப்பட்ட விடயம் தொடர்பிலும் இதன்போது தெளிவுபடுத்தினேன்.

அவ்வாறு தெரிவிக்கப்பட்டபோதும் கேப்பாப்பிலவில் பகுதியளவான காணிகளே விடுவிக்கப்பட்டு மக்கள் குடியேற்றப்பட்டனர்.

அந்தவகையில் இன்னும் 55 பேருக்குரிய 59.9 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவேண்டியுள்ளது. குறித்த விடயத்தை முல்லைத்தீவு மாவட்டசெயலாளரும் உறுதிப்படுத்தியுள்ளார் என்பதையும் சுட்டிக்காட்டினேன்.

அத்தோடு நான் ஏற்கனவே குறித்த கேப்பாப்பிலவு காணி விடுவிப்பு தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இருந்து பெறப்பட்ட உத்தியோகபூர்வ தரவுகளுடன் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியதற்கு அமைவாக, ஜனாதிபதி செயலகம் இராணுவத்தரப்பினருக்கு கடிதம் அனுப்பியுள்ளதுடன், அந்தக் கடிதம் எனக்கும் பிரதியிடப்பட்டிருப்பதையும் இதன்போது நினைவு படுத்தியிருந்தேன்.

அத்தோடு கேப்பாப்பிலவில் விடுவிக்கப்படவேண்டிய காணிகள் தொடர்பான விவரங்கள் மற்றும் ஏற்கனவே அனுப்பப்பட்ட



கடிதங்களின் பிரதிகள் என்பவற்றை ஜனதிபதியிடம் இதன்போது நேரடியாகக் கையளித்துமிருந்தேன்.

அத்தோடு மக்களுடைய இந்தகாணிகள் விடுவிக்கப்படவேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியிருந்தேன்.

குறிப்பாக இராணுவத்தினர் வெளியேறிய பிற்பாடு சொந்தக் காணிகளில் குடியேற்றப்படுவீர்கள் என்ற உத்தரவாதத்துடன் ஒரு குடும்பத்திற்கு 0.25 ஏக்கர் காணிவீதம் 44 குடும்பங்களுக்கு மாற்றுக்காணிகள் வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு 11 பேருக்கு மாற்றுக்காணிகள் எவையும் வழங்கப்படவில்லை. எனினும் இராணுவம் அபகரித்து வைத்துள்ள பகுதியில் மக்கள் ஒவ்வொருவருக்கும் 01 ஏக்கருக்கும் மேலான பூர்வீக காணிகள் இருப்பதையும் இதன்போது சுட்டிக்காட்டினேன்.

அத்தோடு மக்களின் பூர்வீகக் காணிகள் நந்திக்கடல் களப்பின் அருகோடு இருப்பதனால், அவர்களுக்கு நந்தித்கடல் களப்பு பெரும் வாழ்வாதார வளமாக இருந்துவந்துள்ளது. இதுதவிர இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ள மக்களின் பூர்வீக காணிகள் ஒவ்வொன்றுக்குள்ளும் தென்னை, உள்ளிட்ட பல்வேறு பலன்தரு மரங்கள் காணப்படுவதுடன், பயிர்ச்செய்கை நிலங்களும் காணப்படுகின்றன. இத்தகைய வளம்மிக்க காணிகளை இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்திருப்பதால் அந்த மக்களின் வாழ்வாதாரம் பலவழிகளிலும் பாதிக்கப்படுகின்றது என்ற விடயத்தினை இதன்போது ஜனாதிபதியிடம் தெளிவுபடுத்தியிருந்தேன்.

எனவே அந்தக்காணிகளை உடனடியாக விடுவிப்புச்செய்து, மக்களை அங்கு மீளக்குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென ஜனாதிபதியிடம் வலியுறுத்தினேன்.

அத்தோடு கேப்பாப்பிலவு மக்கள் தமது காணி விடுவிப்பினை வலியுறுத்தி தொடர் போராட்டங்களை மேற்கொண்டுவந்தனர். இந்நிலையில் இந்த அரசாங்கம் தமது காணிகளை விடுவிக்கும் என்ற பெருத்த எதிர்பார்ப்புடனும், நம்பிக்கையுடனும் போராட்டங்களை மேற்கொள்ளாது தமது பூர்வீக காணிவிடுவிப்பிற்காக கேப்பாப்புலவு மக்கள் காத்திருக்கின்றனர் என்பதை இதன்போது ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்தேன். எனவே கேப்பாப்பிலவு மக்களின் நம்பிக்கையை காப்பாற்றும் வகையில் அவர்களின் காணிகளை விடுவிக்க விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் தொடர்ந்து வலியுறுத்தினேன்.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பில் இராணுவத்துடன் தாம் கூடியவிரைவில் கலந்துரையாடவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார். அந்தகலந்துரையாடலில் எட்டப்பட்ட முடிவுகள் தம்மால் வெளிப்படுமெனவும் ஜனாதிபதியால் தெரிவிக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் இதன்போது தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**மனித உரிமைக்கும் மனித நீதிக்கும் சமாதானத்திற்கும் குரலெழுப்பும் இந்த உலகமானது, உரிமைகேட்டு, நீதிகேட்டு, சமாதான வழியில் தீர்வுகேட்டு நிற்கும் எமது மக்களிற்குச் சார்பாகக் குரலெழுப்பவேண்டும்; இதுவெ உலகத்தின் இன்றைய தார்மீகக் கடப்பாடு ஆகும்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.com

# வட்டுக்கோட்டை தீர்மானத்தின் 50ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழில் எழுச்சி மாநாடு!

08.04.2026

வரலாற்றுச் சிறப்புமிக்க வட்டுக்கோட்டை தீர்மானத்தின் 50 ஆம் ஆண்டு நினைவாக, எதிர்வரும் மே 30 ஆம் திகதி தந்தை செல்வா அரங்கில் நினைவு எழுச்சி மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளதாக ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

யாழ் ஊடக அமையத்தில் இன்றைய தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

மேலும் தெரிவிக்கையில்,

1976ஆம் ஆண்டு ஈழத்தமிழ் இனத்தின் வரலாற்று இறைமையின் அடிப்படையில் அரசியல் அபிலாசையாக முன்மொழியப்பட்ட வட்டுக்கோட்டை தீர்மானம், தமிழர் மக்களின் ஒருமித்த மற்றும் ஜனநாயக அரசியல் விருப்பத்தின் வெளிப்பாடாக அமைந்தது.

ஐம்பது ஆண்டுகள் கடந்தபின்னரும், அதன் அடிப்படை கோரிக்கைகளும் கொள்கைகளுமே தமிழின விடுதலை பாதையின் அடிநாதமாகவும், அடித்தளமாகவும் உள்ளது.

இந்த மாநாட்டில் கல்வியாளர்கள், மாணவர்கள், அரசியல் தலைவர்கள், சமூக அமைப்புகள் மற்றும் சர்வதேச பங்கேற்பாளர்கள் கலந்து கொள்கின்றனர். கலந்துரையாடல்கள் மற்றும் கருத்தரங்குகள் மூலம், தீர்மானத்தின் அரசியல், சட்ட மற்றும் தமிழ் இனத்தின் இறைமையின் பரிமாணங்களும் ஆராயப்படும்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு, தமிழ்மக்களின் அபிலாசையை வெளிப்படுத்த பொதுமக்கள், மாணவர்கள், தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள், ஊடக பிரதிநிதிகள், கொள்கை வடிவமைப்பாளர்கள் மற்றும் சர்வதேச சமூகத்தினரை அன்புரிமையுடன் அழைக்கின்றோம் என தெரிவித்தனர்.




குறித்த ஊடக சந்திப்பில் தவத்திரு வேலன் சுவாமிகள், அருட்தந்தை அகஸ்ரின் அடிகளார், அருட்பணி ஜெகதாஸ் அடிகளார் மற்றும் க.இதயராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்

# மட்டக்களபில் தமிழ் மீனவர் ஒருவர் சிறீலங்காக் கடற்படை புலனாய்வு பிரிவினரால் சித்திரவதை!

08.04.2026

மட்டக்களப்பு செட்டிபாளையம் கடற்கரையில் அனுமதியற்ற மீன்பிடி வலையை பாவித்து மீன்பிடியில் ஈடுபட்டவர் என்ற குற்றச்சாட்டில் மீனவர் ஒருவரை சிறீலங்காக் கடற்படை புலனாய்வு பிரிவினர் கைது செய்து முழங்காலில் இரண்டு மணித்தியாலம் வைத்து அடித்து சித்திரவதை செய்துள்ளதாக இன்று புதன் கிழமை (08) மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு



செய்துள்ளதாக பாதிக்கப்பட்ட மீனவர் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (05) காலையில் செட்டிபாளையம் கடலில் மீன்பிடிப்பதற்காக ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர் நந்தீசன் அனுமதியற்ற மீன்பிடி வலைக்கு பாவிக்கும் ஈயம் துண்டுகளை வைத்துக் கொண்டிருந்தபோது அங்கு சிவில் உடையில் சென்ற கல்லடி சிறீலங்காக் கடற்படை முகாமில் புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையில் 5 பேர் கொண்ட குழுவினர் சென்று குறித்த மீனவரை கைது செய்தனர்

இதன்போது மீனவர் நான் அனுமதியற்ற மீன்பிடி வலையான சுருக்குவலை பாவித்து மீன்பிடிக்கும் குற்றத்தை ஒப்புக் கொண்டு அங்கிருந்த வலையை அவர்களிடம் ஒப்படைத்துள்ளார். இந்த நிலையில் குறித்த மீனவரை பிடித்து இரண்டு மணித்தியாலம் முழங்காலில் இருக்க வைத்து அடித்து தாக்கினர். இதன் போது அவர் நான் ஒரு சர்க்கரை வியாதி நோயாளி அதற்கான குளிசையை போடுவதற்கு விடுமாறு கோரியும் அவர்கள் அதற்கு அனுமதி வழங்காது அவரை முழங்காலில் வைத்துக் கொண்டனர்.

இதனை அறிந்த அவரது மனைவி சென்று தனது கணவரை முழங்காலில் வைத்து அடித்து சித்திரவதையை கண்டு உடன் அதனை கையடக்க தொலைபேசியில் புகைப்படம் மற்றும் வீடியோ பதிவை செய்து கொண்டதை கண்ட சிறீலங்காக் கடற்படை புலனாய்வு பிரிவினர் குறித்த பெண்ணின் கையடக்க தொலைபேசியை பறித்து அவர் வீடியோ செய்த காட்சிளை அழித்ததுடன் அவருக்கு தகாதவர்த்தைகளால் பேசியும்

அவரை கைது செய்யப் போவதாக மிரட்டி அவரை தாக்க முற்பட்டு அச்சுறுத்தல் விடுத்துள்ளார். இதனை தொடர்ந்து முழங்காலில் வைத்திருந்த மீனவரை களுதாவளை கடற்படை முகாமிற்கு அழைத்து சென்று அங்கு வைத்திருந்த பின்னர் மட்டக்களப்பு கடற்தொழில் நீரியல் வளத்துறை பணிப்பாளர் காரியாலய அதிகரிகளிடம் ஒப்படைத்தனர்.

இதனை தொடர்ந்து சிறீலங்காக் கடற்படை புலனாய்வு பிரிவினரின் தாக்குத லுக்கு உள்ளான மீனவர் மிகவும் மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தன்னை முழங்காலில் வைத்திருந்த காட்சியை தனது பிள்ளைகள் மற்றும் அந்த பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் வேடிக்கை பார்திருந்ததாகவும் அதனால் மிகவும் வேதனையடைந்துள்ளதுடன் அவமானம் ஏற்பட்டுள்ளதுடன் பிள்ளைகள் அவமானத்தால் பாடசாலைக்கு செல்ல முடியாது என இருந்து வருகின்றனர்.



நான் மட்டும் இந்த சுருக்குவலை பாவித்து மீன் பிடிக்க வில்லை சுமார் நூற்றுக்கு மேற்பட்டோர் இந்து சுருக்குவலை பாவித்து மீன்பிடித்து வருகின்ற நிலையில் என்னை மட்டும் கைது செய்தது மட்டுமல்ல முழங்காலில் இருக்க வைத்து அடித்து சித்திரவதை செய்துள்ளனர் எனக்கு நீதி வேண்டும் சம்மந்தப்பட்வர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# பௌத்த சாசன அமைச்சரின் கருத்துகளுக்கு கிழக்கு மாகாண சிவில் சமூக செயற்பாட்டாளர் ஒன்றியம் கண்டனம்

10.04.2026

வெடுக்குநாறி மலை தொடர்பாக பௌத்த சாசன அமைச்சர் சுனில் செனவி தெரிவித்த கருத்துக்களுக்கு கிழக்கு மாகாண சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றியத் தலைவர் ச.சிவயோகநாதன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

வெடுக்குநாறி மலை தொடர்பாக பௌத்த சாசன அமைச்சர் சுனில் செனவி வியாழக்கிழமை 09.04.2026 பாராளுமன்றில் உரையாற்றும் பொழுது வவுனியா வெடுக்குநாறி மலையில் காணப்படும் தடயங்கள் அனைத்தும் பௌத்தத்திற்குரியது என தெரிவித்தது மட்டுமல்ல விரைவில் வர்த்தமாணி படுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் வெளியிட்டுள்ள இந்த கருத்தை நாம் மிக வண்மையாக கண்டிக்கிறோம். வெடுக்குநாறி மலை என்பது தமிழரின் பாரம்பரிய வழிபாட்டு தளமாக நீண்டகாலமாக இருந்து வருகின்றது. இங்கு வழிபாட்டு முறைமை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயமாக நீண்ட காலமாக சைவ சமயத்தவர்களால் வழிபாடு நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிட தக்க விடயமாகும்.

அப்பகுதி மக்களின் வரலாறு, கலா சாரம் மற்றும் தொடர்ச்சியான ஆன்மீகச் செயல்பாடுகள் இதனை உறுதிப்படுத்துகின்றன. இவ்வாறான சூழலில், எந்தவித பரந்த ஆய்வும் இல்லாமல் ஒருதலைப்பட்சமாக இத்தளம் பௌத்த மதத்தினருக்குரியது என அறிவிப்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

இந்த ஆட்சியாளர்கள் இதன் மூலம் மிக தெளிவாக தமது இனவாத மதவாத போக்கினை கடைப்பிடிக்கிறார்கள் என்பதற்கு இதைவிட ஆதாரம் தேவையில்லை. இது மிக மோசமான அதிகார துஸ்பிரயோகமாகும்.

இத்தகைய அறிவிப்புகள்: வரலாற்று உண்மைகளை மறைக்கும் முயற்சியாகும். தமிழ் மக்களினது மத மற்றும் கலாச்சார உரிமைகளை மீறும் செயலாகும். சமூக நல்லிணக்கத்தை பாதிக்கும் அபாயத்தை ஏற்படுத்தும்.

பல இன, பல மத மக்கள் இணைந்து வாழும் நாட்டில், பொறுப்பான பதவியில் உள்ளவர்கள் சமநிலையுடனும் நியாயத்துடனும் கருத்து வெளியிட வேண்டும். எந்த ஒரு சமூகம் அல்லது மதத்தினரின் உரிமைகளையும் புறக்கணிக்கும் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் பெரும் பாதிப்புகளை உருவாக்கக்கூடும்.



எனவே, நாம் வலியுறுத்துவது,
அமைச்சர் வெளியிட்ட கருத்தை உடனடியாக வாபஸ் பெற வேண்டும். வெடுக்குநாறி மலை தொடர்பாக சுயாதீன மற்றும் உண்மையான விஞ்ஞான ரீதியான ஆய்வு நடத்த வேண்டும். அப்பகுதி மக்களின் வர லாற்று மற்றும் வழிபாட்டு உரிமைகள் பாதுகாக்கப்பட வேண் டும். இவ்விடயத்தில் நீதியும் சமத்துவமும் நிலைநிறுத்தப்படும் வரை எங்களது ஜனநாயகமான எதிர்ப்பும் நடவடிக்கைகளும் தொடரும்.

www.sangathamil.com

# இலங்கையில் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை குறித்த அநுர அரசின் தேர்தல் வாக்குறுதி மீண்டும் ஜனாதிபதிக்கு நினைவூட்டப்பட்டது!

08.04.2026

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிபீடமேறி ஒன்றரை ஆண்டுகள் கடந்த பின்னரும் இன்னமும் நிறைவேற்றப்படாத அரசியல் கைதிகளை விடுதலை செய்தல் என்ற தேர்தல் வாக்குறுதியை, கைதிகளின் உறவினர்கள், தொழிற்சங்கங்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மாத்திரமன்ற பௌத்த பிக்குகள், அருட்தந்தையர்கள் உள்ளிட்ட மதகுருமார்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் ஜனாதிபதிக்கு நினைவூட்டியுள்ளனர்.



இலங்கையின் முன்னணி மனித உரிமை ஆர்வலர்களான அருட்தந்தை மாரிமுத்து சத்திவேல் மற்றும் அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் உள்ளிட்ட சிவில் செயற்பாட்டாளர்களது குழுவொன்று, "தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதியளிக்கப்பட்டமைக்கு அமைய நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 10 தமிழ் அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்தல் தொடர்பாக" எனும் தலைப்பிலான மனுவொன்றை ஜனாதிபதி செயலகத்தில் கையளித்து, ஜனாதிபதிக்கு அவ்வாக்குறுதியை நினைவூட்டியுள்ளது.

இலங்கையில் அரசியல் கைதிகள் விவகாரம் நீண்டகாலமாக நிலவும் பிரச்சினையாக உள்ளதோடு, நூற்றுக்கணக்கான அரசியல் எதிர்ப்பாளர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் அவசரகாலச் சட்டம் மற்றும்/அல்லது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காலவரையறையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள விதம் குறித்து 324 கையொப்பங்களுடன் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவுக்கு அனுப்பப்பட்ட அந்த மனு மூலம் நினைவூட்டப்பட்டுள்ளது.

"1970 மற்றும் 1980 ஆகிய தசாப்தங்களில் மக்கள் விடுதலை முன்னணியின் இரண்டு கிளர்ச்சிகள் முதல் 30 வருடங்களாக நீடித்த இன மோதல் வரையிலும், அதன் பின்னர் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் முஸ்லிம் சமூகம் அநியாயமாக இலக்கு வைக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட சந்தர்ப்பம் வரையிலும், அண்மையில் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தின் பின்னரும், அரசாங்கம் போராட்டங்களையும் அரசியல் எதிர்ப்பாளர்களையும் ஒடுக்குவதற்கு 'பயங்கரவாத சட்டங்களையும்', அவசரகாலச் சட்ட விதிமுறைகளையும் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தியது." என அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் குறிப்பிடுகின்றார்.

ஜனாதிபதி செயலகத்தின் நிர்வாக அதிகாரி மஞ்சுள ஜயசிங்கவிடம் குறித்த மனு கையளிக்கப்பட்டதாக ஊடகவியலாளர்களிடம் தெரிவித்த அருட்தந்தை ஜீவந்த பீரிஸ், தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது இரண்டு தேர்தல்களின் போதும் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியையே இதுவரை நிறைவேற்றவில்லை என மேலும் குறிப்பிட்டார்.

"அரசியல் கைதிகள் சுமார் 10 பேர் இன்னும் சிறையில் உள்ளனர். அவர்கள் 15, 16, 20 வருடங்களாக இன்னும் தடுப்புக் காவலில் உள்ளனர். அவர்களில் இருவர் குற்றச்சாட்டுகள் இன்றி இன்னமும் சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர். இந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது வழங்கிய ஒரு தேர்தல் வாக்குறுதிதான் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்பது. அது நாடாளுமன்றத் தேர்தலிலும், ஜனாதிபதித் தேர்தலிலும் அவர்கள் வழங்கிய வாக்குறுதி. ஒன்றரை வருடங்கள் ஆகப்போகின்றன, அது இன்னும் நிறைவேற்றப்படாத ஒரு வாக்கு மீறலாகவே மக்களாகிய எமக்குத் தெரிகிறது."

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளில் எஞ்சியுள்ள 10 பேரில் இருவரான 2009 ஓகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்ட செல்வராஜா கிருபாகரன் மற்றும் தம்பையா பிரகாஷ் ஆகிய இருவருக்கும் எதிரான வழக்குகள் இன்னும் விசாரணை இடம்பெறுவதாக ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவுக்கு அனுப்பப்பட்ட அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

"இது சிறைத்தண்டனை விதிக்கப்படுவதற்கு முன்னரே, அவர்களது வாழ்க்கையில் சுமார் இரண்டு தசாப்த காலத்தை சிறையில் கழிப்பதற்குச் சமமானது. தமது வழக்கு விசாரணைகள் நிறைவடையும் வரை காத்திருக்கும் அவர்கள் தமது இளமைக் காலம் முழுவதையும் முதிர் வயதின் பெரும் பகுதியையும் இழந்துள்ளனர்."

தண்டனை விதிக்கப்பட்டிருந்த போதிலும், ஏனைய எட்டு கைதிகளும் பதினைந்து (15) வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக சிறையில் உள்ளனர். அவர்களில் இருவர் சுமார் முப்பது (30) வருட காலம் சிறைவாசம் அனுபவித்து, பொலிசார், சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் ஏனைய கைதிகளின் கொடூரமான சித்திரவதைகள் மற்றும் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளதுடன், தன்னிச்சையான தாமதங்கள் மற்றும் நடைமுறைச் சிக்கல்களால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த மனு மேலும் வலியுறுத்துகிறது.

அரசியல் கைதிகளுக்கு விடுதலை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து, ஜனாதிபதிக்கு நெருக்கமான முன்னுதாரணம் ஒன்றும் நினைவூட்டப்பட்டுள்ளது.

"இந்த நடவடிக்கைக்கு முன்னுதாரணம் இல்லாமலில்லை. 1977 நவம்பர் மாதம், முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன குற்றவியல் நீதி ஆணைக்குழுச் சட்டத்தின் (1971 மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான வழக்குகளை விசாரணை செய்ய பயன்படுத்தப்பட்ட சட்டம்) கீழ் தண்டனை அனுபவித்து வந்த அனைத்து மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்களுக்கும் பொது மன்னிப்பை அறிவித்தார்."

அரச ஒடுக்குமுறையை நேரடியாக அனுபவித்துள்ள இந்த அரசாங்கம், தமது முதிர் வயதில் பாதியை ஏற்கனவே சிறையில் கழித்துள்ள, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய 10 தமிழ் கைதிகளுக்கும் அதேபோன்ற நிபந்தனையற்ற விடுதலையை வழங்கும் என்ற எதிர்பார்ப்புடன், மேலே விபரிக்கப்பட்டுள்ள விடயங்களைக் கருத்திற் கொண்டு பின்வரும் கோரிக்கைகளை அவர்கள் ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ளனர்:




1. நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு முக்கிய நடவடிக்கையாகவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவதாகவும், நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 10 தமிழ் அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்தல்,

2. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் கைது செய்யப்பட்டவர்கள் உட்பட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய அனைத்துக் கைதிகளினதும் வழக்குகளை மீளாய்வு செய்து துரிதப்படுத்தல் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்துக் கைதிகளுக்கும் எதிரான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தல் அல்லது நிபந்தனையின்றி விடுதலை செய்தல்,

3. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு - சிலர் 15 வருடங்கள் வரை சிறைவாசம் அனுபவித்ததன் பின்னர் - அனைத்துக் குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்ட அனைத்துக் கைதிகளுக்கும் நியாயமான மற்றும் விகிதாசார ரீதியான இழப்பீடுகளை வழங்குதல்,

4. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக இரத்துச் செய்தல் மற்றும் தடை செய்யும் வரை அந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவதை உடனடியாகத் தடை செய்தல்,

5. முன்மொழியப்பட்டுள்ள 'பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டத்தை' மீளப்பெறுதல் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குப் பதிலாக புதிய பயங்கரவாதச் சட்டங்களை அறிமுகப்படுத்தவதில்லை என வாக்குறுதியளித்தல்.

தமிழீழ விடுதலைப் புலிகள் என, முத்திரை குத்தி அரசியல் கைதிகளை 15, 20, 30 வருடங்களாக தடுத்து வைத்திருப்பதன் மூலம் எவருக்குமே நீதி கிடைக்காது என ஊடகவியலாளர்கள் முன்னிலையில் தெரிவித்த அருட்தந்தை ஜீவந்த பீரிஸ், இந்த அரசியல் கைதிகளில் சிலர் ஏற்கனவே உயிரிழந்து விட்டனர் என்ற உண்மையையும் அங்கு வெளிக்கொணர்ந்தார்.

"இந்த 10 அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யுங்கள். ஏனெனில் அவர்களில் மூவர் ஏற்கனவே தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே மரணமடைந்துள்ளனர். இது மனிதாபிமானத்துக்கும் மனிதநேயத்துக்கும் எதிரான பாவமாகும். எனவேதான், இந்த நிபந்தனையற்ற கோரிக்கையை முன்வைக்கிறோம், அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு."

அவ்வாறு விடுதலை செய்ய முடியாத பட்சத்தில் அதற்கான காரணங்களை வினவுவதற்கு ஒரு கலந்துரையாடலையும் கோரியுள்ளதாக அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் ஊடகவியலாளர்களிடம் மேலும் தெரிவித்தார்.

ஒரு புதிய பிறப்பு அறிவித்தல் தளம்

இறந்தவரின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு துயர அறிவிப்புக்கு எமது Thuyarpakirvu.com இணையம் செயல்படுகிறது. நீங்கள் "துயர் பகிர்வு" இணையத்தில் ஒரு இரங்கல் செய்தியை வெளியிடும் போது, அந்த விபரங்களை ஒரு சில நிமிடங்களில் உலகத்தின் அனைத்து பாகங்களுக்கும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இதன் மூலம் நாமும் உங்களுடன் பயணிக்கிறோம்.

மேலும்... சாவு அறிவித்தல், கண்ணீர் வணக்க பகிர்வு, நினைவு நாள் வணக்க பகிர்வு, ஆண்டு நினைவு நாள் வணக்க பகிர்வு, நன்றி நவில்...!

தொடர்புகளுக்கு
437 345 4203
thuyarariviththal@gmail.com

Thuyarpakirvu.com

சங்கத்தமிழ்

# ஈகைச்சுடர் அன்னை பூபதி அவர்களின் திருவுருவப்படம் தாங்கிய நினைவு ஊர்தி மக்களின் வணக்கத்திற்காக யாழ்ப்பாணத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்துள்ளது

09.04.2026

ஈகைச்சுடர் அன்னை பூபதியின் 38ஆவது நினைவு சுமந்த ஊர்தி அவரது திருவுருவப் படத்தினை தாங்கிய ஊர்தியானது இன்றைய நாள் யாழ்ப்பாணம் நல்லூர் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவாலயத்தில் இருந்து புறப்பட்டுள்ளது.

இந்த ஊர்தியானது வடக்கு - கிழக்கு முழுவதும் ஊர்வலமாக வந்து, இறுதி நாளில் மட்டக்களப்பில் உள்ள ஈகைச்சுடர் அன்னை பூபதியின் விதைக்கப்பட்ட அன்னையின் ஆலயம் அமைந்துள்ள பகுதியை சென்றடையவுள்ளது. அதன் பின்னர் அங்கு இறுதி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனார்.

அன்னை பூபதி அவர்கள் மட்டக்களப்பில் இந்திய இராணுவப படைகு எதிராக சாகும் வரை உண்ணா நோன்பு இருந்து ஏப்ரல் 19ஆம் திகதி 1988 இல் தனது உயிரை ஈர்ந்தார்.















# தொல்பொருள் திணைக்களம் பௌத்த மதம் சார்ந்து செயற்படுவதாகக் குற்றச்சாட்டு!

08.04.2026

இலங்கையின் தொல்பொருள் திணைக்களம் என்பது பௌத்தர்களுக்கு மட்டுமேயான ஒரு நிறுவனம் என்ற பிம்பம் மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் சபையில் கடும் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

பாராளுமன்றில் இன்று (08) நிலையியற்கட்டளை 27/2-இன் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சரிடம் கேள்வியெழுப்பிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பாடுகள் குறித்து அவர் பல முக்கிய விடயங்களைச் சுட்டிக்காட்டினார்.

திருகோணமலை கோணேஸ்வரம் ஆலயத்திற்குச் சொந்தமான 18 ஏக்கர் நிலப்பரப்புக்குள் ஒரு வாழைமரம் கூட நட தொல்பொருள் திணைக்களம் அனுமதிப்பதில்லை.

ஆனால், ஆலயத்திற்கு வெளியே 58 சட்டவிரோத கடைகள் பெரும்பாலும் பெரும்பான்மைச் சமூகத்தினரால் நடத்தப்படுகின்றன.

அவற்றுக்குத் திணைக்களம் அனுமதி வழங்குகிறது. ஆலயத்திற்கு ஒரு சட்டம், ஏனையோருக்கு ஒரு சட்டமா? என்று சாணக்கியன் கேள்வி எழுப்பினார். மட்டக்களப்பு தாந்தாமலை முருகன் ஆலயத்தில் மின்சார மீற்றர் பெட்டி எரிந்த நிலையில், புதிய பெட்டியைப் பொருத்தத் தொல்பொருள் திணைக்களம் முட்டுக்கட்டை போடுகிறது.

ஆலயக் கட்டடத்தைச் சேதப்படுத்தும் அரச மரத்தை அகற்றவும் அனுமதி மறுக்கப்படுகிறது.

ஆனால், அதே மாவட்டத்தில் கிரான் பகுதியில் தொல்பொருள் அடையாளங்கள் உள்ள இடத்தில் புதிய விகாரை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒரே மாவட்டத்தில் இரண்டு விதமான சட்டங்கள் அமுல்படுத்தப்படுவதாக அவர் சாடினார்.

திருகோணமலை குச்சவெளி பிரதேசத்தில் 500-க்கும் குறைவான பெரும்பான்மையின குடும்பங்களே வாழ்கின்றனர். ஆனால், அங்கு புதிதாக 38 பௌத்த விகாரைகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதாவது 10 குடும்பங்களுக்கு ஒரு விகாரை என்ற அடிப்படையில் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இது தமிழ் மக்களின் இனப்பரம்பலைச் சிதைக்கும் முயற்சி என்று சாணக்கியன் குற்றம் சுமத்தினார்.

முல்லைத்தீவு குருந்தூர்மலையில் தமிழ் கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலில் ஈடுபட தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், சிவில் பாதுகாப்புப் படையினரின் உதவியுடன் பெரும்பான்மையின கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலில் அனுமதிக்கப்படுகிறார்கள்.

அங்கு ஒரு தேங்காய் உடைத்து வழிபடக் கூடத் தடையுள்ளது. அதேபோல் வெடுக்குநாறிமலையிலும் வழிபாட்டுச் சுதந்திரம் மறுக்கப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணம் தையிட்டிப் பகுதியில் தனியார் காணியில் அமைக்கப்பட்ட சட்டவிரோத விகாரையைச் சட்டப்பூர்வமாக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. ஆனால் மயிலிட்டி பலாலி பிரதேசத்தில் கத்தோலிக்கத் தேவாலயம் இராணுவத்தால் இடிக்கப்பட்டுள்ளது. இது அரசாங்கத்தின் பாரபட்சமான போக்கைக் காட்டுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத் தொல்பொருள் அதிகாரிகள் பிரதேச செயலாளர்களுடன் ஆலோசிக்காமல், காவல்துறையினருடன்



இணைந்து இரகசிய காவல்துறை போலச் செயற்படுகின்றனர்.

அங்கு தமிழ் தெரிந்த அதிகாரிகளை இடமாற்றம் செய்துவிட்டு, சிங்களம் மட்டும் தெரிந்த அதிகாரிகளை நியமிப்பதன் மூலம் மக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

அத்தோடு அனைத்து ஆவணங்களும் சிங்களத்திலேயே அனுப்பப்படுவதாகவும், அவற்றை உடனடியாகத் தமிழில் அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் வலியுறுத்தினார்.

# தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி உரிமையாளர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிப்பு

12.04.2026




எமது காணிகளை விகாரைக்காக சுவீகரிக்க மாட்டோம் என தந்த உறுதிமொழியை அடுத்தே காணிகளை அளவீடு செய்ய சம்மதித்துள்ளோம். நம்பிக்கை துரோகம் செய்யாது வெசாக் தினத்திற்கு முன்னர் எமது காணிகளை கையளிப்பார்கள் என நம்புகிறோம் என காணி உரிமையாளர்களில் ஒருவரான சாருஜன் சுகுமாரி தெரிவித்துள்ளார்.

தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி உரிமையாளர் களுக்கும், கடற்தொழில் அமைச்சர், மாவட்ட செயலர், தெல்லிப் பழை பிரதேச செயலர், நிலஅளவை திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டவர்களுடன் மாவட்ட செயலகத்தில் இன்றைய தினம் சனிக்கிழமை விசேட கலந்துரையாடல் நடைபெற்றது

குறித்த கலந்துரையாடலின் பின்னர்,ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

எமது காணி விடுவிப்பு தொடர்பில் கொழும்பில் மூன்று தடவைகள் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தியுள்ளனர். அவை எதற் கும் எம்மை அழைக்கவில்லை. இந்த முறை குறுகிய கால அறி வித்தல் தந்து எம்மை மாவட்ட செயலகத்திற்கு அழைத்து கடற் தொழில் அமைச்சர் தலைமையில் இன்றைய தினம் சனிக் கிழமை பேசினார்கள்.

எமது காணிகளை கையளிப்பதற்காக தாம் முயற்சிகளை முன் னெடுத்துள்ளதாகவும், உறுதிகளை உறுதிப்படுத்தி கொண் டுள்ள நிலையில், காணியின் வரைபடங்கள் தேவையாக உள் ளதால் காணிகளை அளவீடு செய்து காணி வரைபடம் வரை வதற்கு, காணிகளை அளவீடு செய்ய அனுமதிக்க வேண்டும் என கோரினார்கள்.

அதற்கு நாம் விகாரையின் பிக்கு தனது விகாரைக்குரிய காணி எது என்பதனை காண்பிக்குமாறு கேட்குமாறும், அவரிடம் ஆவணங்கள் எவற்றையும் இது வரையில் இவர்கள் கேட்க வில்லை. எம்மை மட்டுமே எல்லா ஆவணங்களையும் கொண்டு வா என அலைக்கழிக்கின்றனர்.

தற்போது கூட எமது காணிகளை நாம் அடையாளம் காட்டி காணிகளை அளவீடு செய்ய சம்மதித்து, காணி அளவீட்டு பணிகளை மேற்கொண்டு, எமது காணிகளை சுவீகரிக்கும் முயற்சியா? என்ற சந்தேகம் உண்டு.

எமது சந்தேகத்தை நாம் கேட்ட போது, இது நிச்சயமாக காணியை அடையாளம் கண்டு கையளிப்பதற்காவே அளவீடு செய்கிறோமே தவிர, காணிகளை சுவீகரிக்கவில்லை என கடற்தொழில் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

அவரை நம்பி காணி அளவீட்டு பணிக்கு சம்மதம் தெரிவித் துள்ளோம். காணி அளவீட்டு பணிகள் முடிவடைந்ததும், காணிகளை எப்போது விடுவிப்பீர்கள் என கேட்ட போது, இரண்டு கிழமைக்குள் அதனை விடுவிப்போம் என தெரிவித் தனர். மே மாதம் முதலாம் திகதி வெசாக் தினம். அன்றைய தினத்திற்கு முன்னர் காணிகளை விடுவிக்கப்படும் என நம்பி எதிர்பார்க்கிறோம் என தெரிவித்தார்.

அதேவேளை மற்றுமொரு காணி உரிமையாளரான பாஸ் கரன் தெரிவிக்கையில்,

எமது காணிகளை விட்டு நாம் வெளியேறி 36 வருடங்கள் ஆகின்றன. காணிகளை அடையாளம் காண்பது என்பது மிக சவாலான விடயம்

எமது காணிகளின் எல்லைகள் அழிக்கப்பட்டுள்ளன. அவற் றினை மீள அடையாளம் கண்டு அளவீடு செய்ய வேண்டும்.

இந்த காணி அளவீட்டு பணியானது, எமது காணிகளை விகா ரைக்காக நிரந்தரமாக சுவீகரிக்க எடுக்கும் முயற்சியாக இருக்க கூடாது என வலியுறுத்தினோம். கடந்த கால கசப்பான அனு பவங்களை கூட நாம் தெரிவித்தோம்.

இந்த காணி அளவீடானது , காணிகளை மீள கையளிப்பதற் கான நாடாவடிக்கையே என எமக்கு உறுதியளித்துள்ளனர். அவர்கள் அதனை மீற மாட்டார்கள் என்ற நம்பிக்கையில், காணிகளை அளவீடு செய்து எல்லைப்படுத்த சம்மதித் துள்ளோம் என தெரிவித்தார்.

# வெருகலில் மரணித்த போராளிகளும் மாவீரர்களே...!

## பா.அரியநேத்திரன்

12.04.2026

நேற்று முன்தினம் (10.04.2026) வெருகல் படுகொலையின் 23ஆவது ஆண்டு நினைவு தினம் இடம் பெற்றது.

இந்த மோதல் ஏற்பட பிரதான காரணகர்த்தா கருணாதான்.

2004 மார்ச் 03இல் விடுதலைப்புலிகளில் இருந்து தாம் விலகி விட்டதாக ஊடகத்தில் கருணா அறிவித்தார்.

2004 மார்ச் 06இல் விடுதலைப்புலிகளில் இருந்து கருணா-வை நீக்கிவிட்டதாகவும், அவருக்கும் விடுதலை புலிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என அரசியல் துறை பொறுப்பாளர் தமிழ்செல்வன் ஊடகங்களில் உத்தியோக பூர்வமாக அறி வித்தார்.

அதன்பின்னர் தாம் கிழக்குப்புலிகள், வன்னிப்புலிகள், என்ற பிரதேசவாதக்கருத்தை கருணா தரப்பினர் பரப்பி மட்டக்களப்பு நகர் பகுதி, செங்கலடி பகுதி எங்கையும் யாழ்ப்பாண வர்த்தகர், யாழ் பொதுமக்கள் மீது பிரதேசவாதக் கருத்தை பரப்பி அவர்களை வெளியேற்றும் காடைத்தனத்தை புரிந்தனர்.

2004 ஏப்ரல் 04, பாராளுமன்ற பொதுத்தேர்தல். தேர்தல் முடியும் வரை விடுதலைப்புலிகள் கருணா குழு மீது எந்த நடவடிக்கையையும் செய்யவில்லை. (தேர்தலில் 22, தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு)

2004 ஏப்ரல் 09 இரவு தொடக்கம் 2004 ஏப்ரல் 10 வரை வாகரைக்கும், வெருகல் பாலத்துக்கும் (அப்போது பாலம் இல்லை) இடையில் ஏற்பட்ட மோதலில் கருணா தரப்பை சேர்ந்த போராளிகள் சிலர் உயிரிழந்தனர்.

2004 ஏப்ரல் 20இ ல் கிளிநொச்சியில் தலைமைச்செயலகத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன், அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், புலனாய்வுப்பொறுப் பாளர் பொட்டம்மான், மற்றும் புலிகளின் தளபதிகள் உள்ளிட்ட வர்கள் 22, தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப் பினர்களுடன் சந்திப்பை ஏற்படுத்தினர். அதுதான் 22, பாரா ளுமன்ற உறுப்பினர்களுடன் தலைவரின் முதல் சந்திப்பு.

இந்த சந்திப்பின்போது நான் (பா.அரியநேத்திரன்) தலைவர் மேதகுவிடம் கேட்டேன் கடந்த 2004 ஏப்ரல் 10ஆம் திகதி கருணா குழுவினருடன் இடம்பெற்ற மோதலில் கருணாதரப் பில் மரணித்த போராளிகளை மாவீரர் பட்டியலில் இணைக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் இனவிடுதலைக்காக போராடவே இயக்கத்தில் இணைந்தார்கள் அவர்களை தவறாக கருணாதான் பயன்படுத்தினார் என்றேன்.

தலைவர் பதில் கூறுவதற்கு முன்னம் யாழ் மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் என்னிடம் கூறி னார் அண்ணர் இந்த விடயங்களை எல்லாம் நாம் இங்கு கேட் ககூடாது என்றார்.

அப்போது உடனே தலைவர் தமது கையால் செ.கஜேந்திரனை பேசவேண்டாம். என சைகைகாட்டிவிட்டு "அரியம் அண்ணர் கேட்டதில் என்னதவறு உள்ளது அந்த போராளிகள் இன விடுதலைக்காகத்தானே போராட்டத்தில் இணைந்தவர்கள் அவர்களை தவறாக பயன்படுத்தியுள்ளனர் என்பது உண்மை. அரியம் அண்ணர் கேட்டது சரி அந்த போராளிகள் அனைவரை




யும் மாவீரர் பட்டியலில் இணைத்துக்கொள்கிறேன்" என்றார். (இதற்கு சாட்சியாக அப்போது இருந்த பாராளுமன்ற உறுப் பினர்கள் இப்போதும் சிலர் உள்ளனர்)

இந்த செய்தி மறுநாள் கிளிநொச்சியில் இருந்து வெளிவந்த



ஊடகங்களில் வெளியிடப்பட்டது.

கடந்த 23 வருடங்களாக தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி யால் வெருகல் படுகொலை என்ற பெயரில் இதனை நினைவு கூருகிறார்கள்.

ஆனால் இந்த உயிர் நீத்த அத்தனை போராளிகளும் தலை-வரின் கட்டளைப்படி மாவீரர் பட்டியலில் இணைத்துக்கொள்ளப் பட்டு கார்த்திகை 27இல் மாவீரர் தினநாளில் அவர்களுக்காக வுமே தீபச்சுடர் ஏற்றி வணக்கம் செலுத்தப்படுகிறது என்பதே உண்மை. (இந்த உண்மையை பலதடவை கூறியுள்ளேன்)

"வெருகல் படுகொலை" என வேறுபடுகொலை தினம் உண்டு. தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியில் உள்ளவர்களுக்கு தெரியாது என நினைக்கிறேன்.

திருகோணமலை மாவட்டத்தின் ஈச்சிலம்பற்று பகுதியில் 1986, காலப்பகுதியில் முதன்முதலாக ஓர் இடப்பெயர்வு இடம்பெற்று ஈச்சலம்பற்றுவில் ஒரு அமைக்கப்பட்டிருந்து. அந்த அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்த மக்களுக்கான உலர் உணவுப்பொருட்களை 1986 யூன் 12 அன்று சேருவில பகுதி யில் இருந்து ஈச்சிலம்பற்று நோக்கி எடுத்து வரும்போது மகிந்த புர பகுதியில் வைத்து மூன்று அரச அதிகாரிகள் உட்பட 21 பேர் இராணுவம் மற்றும் ஆயுததாரிகளினால் படுகொலை செய்யப் பட்டிருந்தார்கள் அந்த படுகொலையையே "வெருகல் படுகொலை" என நினைவு கூருவது குறிப்பிடத்தக்கதாகும்.

# அன்னை பூபதி அவர்களின் நினைவூர்தி வத்திராயன் பகுதியில் சிறீலங்காப் பொலீசாரினால் தடுத்து நிறுத்தப்பட்டது

12.04.2026

ஈகைச்சுடர் நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதி அவர்களின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி வடமராட்சி கிழக்குப்பகுதியால் பயணித்துக்கொண்டிருந்த வேளை, மருதங்கேணி பொலீசார் மூர்க்கத்தனமான முறையில் அன்னைபூபதி அவர்களின் நினைவூர்தி வத்திராயன் பகுதியில் 11.04.2026 அன்று தடுத்துநிறுத்தப்பட்டு, தொடர்ந்து பயணிக்க முடியாதெனத் தடுக்கப்பட்டு, நீண்ட நேரத்திற்குப்பிறகு ஊர்தியில் பொறுப்பாகச் சென்றவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டபின் விடுவிக்கப்பட்டது.







# அரசை பாதுகாப்பதற்கான சட்டம் கொண்டு வர நினைப்பது இன்னுமொரு சுற்றில் தமிழர்களையும் ஒடுக்குவதற்கே

## அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா. சத்திவேல்

13.04.2026

அரசை பாதுகாப்பதற்கான சட்டம் கொண்டு வர நினைப்பது இன்னுமொரு சுற்றில் தமிழர்களையும் ஒடுக்குவதற்கே என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் இன்று திங்கட்கிழமை (13) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“வெடுக்கு நாறி மலையில் உள்ள மத அடையாளங்கள் அனைத்தும் பௌத்த மதத்திற்குரியவை. அதனை பாதுகாக்க வர்த்தமானி அறிவித்தல் வரும்” என புத்தசாசன அமைச்சர் கூறி உள்ளமை சிங்கள பௌத்தர்களுக்கு புது வருட பரிசா? எனக் கேட்பதோடு இது ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முகம் கொடுக்கும் அரசியல் தோல்வியை மறைத்து தமிழர்களின் கோபத்தில் அரசியல் செய்ய நினைக்கும் நரித்தனமாகும். இதனை வடக்கு - கிழக்கு தமிழர் தாயக அரசியல் கோட்பாட்டினின்று வன்மையாக கண்டிக்கின்றோம்.

கடந்த கால அரசாங்கங்கள் தங்களின் பிழையான பொருளாதார மற்றும் அபிவிருத்தி கொள்கையாலும் ஊழல், கொள்ளை காரணமாகவும் நாடு பாதாளத்தில் வீழ்ந்தப்போதெல்லாம் ஆட்சியாளர்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள இனவாதத்தை கையில் எடுத்தனர். அதனை பாதுகாத்துக் கொள்ள சிங்கள பௌத்தத்தை முன்னிலை படுத்தியே மக்களை மயக்கி நாட்டை அழிவு பாதைக்கு இட்டுச் சென்றனர் என்பதே வரலாறு. அதே பாதையிலேயே தற்போது தேசிய மக்கள் சக்தியும் பயணிக்க முனைவது ஆச்சரியமான விடயமல்ல. இவர்களுக்கு வாக்களித்து ஏமாந்த தமிழர்கள் உணர்கின்ற காலம் இது எனலாம்.

மாற்றத்தை மகுடமாக்கி ஆட்சியை தமதாக்கிய தற்போதைய அரசாங்கம் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத நிலையில் நிலக்கரி ஊழல் காரணமாக மக்கள் முன் மூக்குடைப்பட்டு நிற்கையில் புத்த சாசன அமைச்சர் சிங்கள பௌத்தத்தை சூட்சுமமாக பாவித்து தமிழர்களை போராட்டத்திற்குள் தள்ளி தெற்கினை வடக்கிற்கு எதிராக கிளர்ந்தெழ செய்யவிட்டு இன சமய முறுகல்களில் அரசியல் பாதுகாப்பு தேடுவது நாகரீகமற்ற அரசியலாகும்.

தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிரான தொடர் போராட்டம் இரண்டு வருடங்களுக்கு மேலாக நடந்து வருகின்றது. நடந்த பிழையினை ஏற்றுக்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலைநாட்ட தவறிய ஜனாதிபதி அப் போராட்டத்தினை கொச்சைப்படுத்தும் நோக்கில் கருத்து தெரிவித்தமை நாம் அறிவோம். தற்போது வவுனியா வெடுக்குநாறி கோயில் வளாகம் அதன் பூமி பிரதேசத்தையும் தொல்லியல் திணைக்கள மூடாக சிங்கள பௌத்த ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர முனைவது தமிழர்களின் தாயக கோட்பாட்டை சிதைக்கும் மூலோபாயம் என்றே கூறலாம்.

தமிழ் சைவர்களின் பூர்வீக பக்தி பண்பாட்டுத்தளமான வெடுக்குநாறி மலை பிரதேசத்தை தொல்லியல் திணைக்களம் ஊடாக பறிக்க வர்த்தமானி அறிவித்தல் விடுக்க உள்ளதாக கூறுவது கடந்த கால செயற்பாட்டை தொடர்வதற்கே. ஆயுத யுத்தம் நடந்து கொண்டிருந்த போது அதற்கான ஆதரவினை அன்றைய அரசாங்கத்திற்கு நேரடியாக வழங்கியதோடு மட்டும் நின்று விடாது இளைஞர்களை திரட்டி கொடுத்து போரை தீவிரப்படுத்தி தமிழர் நிலங்களை ஆக்கிரமித்த மக்கள் விடுதலை முன்னணி தற்போது மக்களின் காணிகளை விடுவிப்பதாக கூறிக்கொண்டு எந்த விதமான சேதாரமும் இன்றி தொல்லியல் திணைக்களம் ஊடாக தமிழர் தாயகத்தை பௌத்த ஆக்கிரமிப்புக்குள் கொண்டு வர துடிப்பது இராணுவத்தின் செயற்பாட்டினை வேறு வகையில் முன்னெடுப்பதற்கே.

பாரம்பரிய கட்சிகளின் அரசியலால் தொடர் ஏமாற்றம் அடைந்த தெற்கு மாற்றத்திற்காக நடத்திய காலிமுகத்திடல் போராட்டத்தினை தமது அரசியல் கட்சியின் வெற்றிக்கு சாதகமாக்கி கொண்ட தேசிய மக்கள் சக்தி புலமைசார் கல்வியாளர்களின் ஆதரவினையும் தமதாக்கிக் கொண்டது.

தற்போது தேசிய மக்கள் சக்தியின் அரசியல் செயல்பாடுகள் காரணமாக அத்தகைய புலமை சார் கல்வியாளர்கள் முன் கதவாலும் பின் கதவாலும் பகிரங்கமாகவும் மறைமுகமாகவும் வெளியேறிக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் சிங்கள பௌத்தத்தின் ஆதரவு தளத்தினை தேடி அரசியல் செய்ய நினைப்பதாகவே தோன்றுகின்றது . அரச பயங்கரவாதத்தையும் அதனை பாதுகாப்பதற்காக பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாப்புக்கான சட்டம் கொண்டு வர நினைப்பது இன்னுமொரு சுற்றில் தமிழர்களையும் ஒடுக்குவதற்கே.

தமிழர்களை பொறுத்தவரையில் தொல்லியல் திணைக்களமும் இன்னுமொரு ஆக்கிரமிப்பு இராணுவமே. அதேபோன்றே புத்த சாசன அமைச்சுமாகும். புத்தசாசன அமைச்சர் ஆக்கிரமிப்பு படை தளபதியாகவே செயல்பட முனைகின்றார். இது தொடர்ந்தால் புத்தசாசன அமைச்சருக்கு மார்சல் பட்டமும் கிடைக்கலாம்.

வடக்கு கிழக்கு தமிழர்களின் தேசிய அரசியலுக்கு எதிராகவும் தாயக கோட்பாட்டிற்கு எதிராகவும் தற்போதைய அரசு தீவிர செயல்பாட்டை முன்னெடுப்பது தெளிவு. தெற்கின் அரசியல் செயற்பாடுகள் தமிழ் தேச தாயக கோட்பாட்டினை சிதைக்கும் முனைப்பு காட்டுகையில் தமிழர் தாயக அரசியலில் ஒன்றான கொள்கையோடு செயல்படல் வேண்டும்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடத்துவதற்காக ஆயத்தப்படுகின்ற காலகட்டத்தில் அங்கு ஏற்றுகின்ற தியாகசுடர் உயிர் தியாகிகளுக்கு மட்டுமல்ல. தமிழர் தேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எங்களுக்குமானதே. எமது அரசியல் போராட்டமே இருண்ட தேசத்திலிருந்து எம்மை விடுக்கும்.

**இன ஒடுக்குமுறையாலும், இராணுவ அடக்கு முறையாலும், தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

**www.sangathamil.com**

# யாழ். செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுக்காக விடுவிக்கப்பட்டுள்ள நிதி

13.04.2026

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளுக்காக 2 கோடியே 10 இலட்சம் ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை இரண்டு கட்டங்களாக அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், 240 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றில் 239 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டிருந்தன.

மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகள் சீரற்ற காலநிலை காரணமாகப் பிற்போடப்பட்ட நிலையில், இந்த மாதத்தின் இறுதியில் அல்லது எதிர்வரும் மாதத்தின் ஆரம்பத்தில் அந்தப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது.

எனினும், அகழ்வுப் பணிகளுக்கான நிதி ஒதுக்கப்படாததால், மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிக்கான திகதிகள் இதுவரை நிர்ணயம் செய்யப்படவில்லை.

இவ்வாறான நிலையிலேயே, இந்தப் பணிகளுக்காக 2 கோடியே 10 இலட்சம் ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதியன்று மீள விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

நிதி விடுவிக்கப்பட்டுள்ளதால், அன்றைய தினம் அகழ்வுத் திகதிகள் அறிவிக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன என்று கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




# யாழ். தீவகப் பகுதி ஆசிரியர்களுக்கான இடர் கொடுப்பனவு நிறுத்தத்துக்கு எதிர்ப்பு

13.04.2026

யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு போன்ற நிலப்பரப்புடன் இணைக்கப்படாத தீவுகளில் பணியாற்றும் 174 ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இடர் கொடுப்பனவை சிறீலங்காக் கல்வி அமைச்சு இரத்து செய்துள்ளது.

கல்வி அமைச்சின் புதிய சுற்றறிக்கை ஒன்றின் மூலம் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிகவும் பின்தங்கிய மற்றும் சவாலான சூழலில் பணியாற்றும் இந்த ஆசிரியர்களின் நலனைப் புறக்கணிக்கும் வகையில் இந்த முடிவு அமைந்துள்ளதாக ஆசிரியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தத் தீவுகளில் உள்ள 16 பாடசாலைகளில் பணியாற்றும் பெரும்பாலான ஆசிரியர்கள், பிரதான நிலப்பரப்பிலிருந்து தினமும் படகுகள் மூலமே பயணிக்கின்றனர்.

குறிப்பாக பருவமழைக் காலங்களில் கொந்தளிப்பான கடல் மற்றும் பலத்த காற்றுக்கு மத்தியில் மரத்தாலான படகுகளில் பயணிப்பது பெரும் அச்சுறுத்தலான காரியம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான கடினமான சூழலில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவை நிறுத்துவது, அவர்கள் அந்தப் பகுதிகளில் தொடர்ந்து பணியாற்றத் தயங்கும் நிலையை உருவாக்கும் என அஞ்சப்படுகிறது.

எனவே, கல்வி அமைச்சரான பிரதமர் மற்றும் அதிகாரிகள் இந்த விடயத்தில் தலையிட்டு, ஆசிரியர்களுக்கான இடர் கொடுப்பனவை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.








# கனடியச் செய்திகள்

## மக்களுக்கும் பொருளாதாரத்துக்கும் வலுச்சேர்க்கும் 2026 வரவு செலவுத் திட்டத்தை ஒன்ராரியோ அரசு வெளியிட்டது

01.04.2026

ஒன்ராரியோ அரசாங்கம் கடந்த 2026 மார்ச் 26 அன்று, தொழிலாளர்களையும் குடும்பங்களையும் பாதுகாக்கும் நோக்கில் தனது 2026ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை வெளியிட்டது. இதன் மூலம் புதிய வீடுகளை வாங்குவோருக்கு 130,000 டொலர்கள் வரை வரி மீளளிப்புச் சலுகை வழங்கப்படுவதுடன், வீட்டு வசதித் துறையில் சுமார் 2.2 பில்லியன் டொலர்கள் வரி நிவாரணமாக ஒதுக்கப்பட்டுள்ளன. அத்துடன், சிறு வணிகங்களுக்கான வரி வீதம் 3.2 சதவீதத்திலிருந்து 2.2 சதவீதமாகக் குறைக்கப்படவுள்ளதால், சுமார் 375,000 வணிகங்கள் அடுத்த மூன்று ஆண்டுகளில் 1.1 பில்லியன் டொலர்களைச் சேமிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

உழைக்கும் குடும்பங்களுக்கும் சிறு வணிகங்களுக்கும் முன்னுரிமை அளிக்கும் வகையில் இந்தத் திட்டம் அமைந்துள்ளதாக அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்தார். குறிப்பாக ஸ்காபரோ பிராந்திய மக்கள் மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொள்ளவுள்ளனர். இதில் ஸ்காபரோ நிலக்கீழ்த் தொடரி விரிவாக்கம் மற்றும் நெடுஞ்சாலைகள் சீரமைப்பு என்பன முக்கியமானவை. மேலும், 3.4 பில்லியன் டொலர் முதலீட்டில் சுமார் 20 இலட்சம் மக்களுக்கு மேலதிகமாக ஆரம்ப சுகாதார சேவைகளை வழங் கவும், குடும்பங்களின் எரிசக்தி மற்றும் போக்குவரத்துச் செலவு களைக் குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக 2026 இல் "ரொரான்ரோ இடைக்கால நிலையம்" மீண்டும் திறக்கப்பட்டு, மேலதிக படுக்கை வசதிகளுடன் 700 இற்கும் மேற்பட்ட புதிய பணியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். ஒட்டுமொத்தமாக வரிச் சலுகைகள், உட்கட்டமைப்புகளுக்கான மேம்பாடு மற்றும் பாதுகாப்பு முயற்சிகள் ஊடாக ஒரு வலிமையான, பிணைக்கப்பட்ட மற்றும் தன்னிறைவு கொண்ட ஒன்ராறியோவை உருவாக்குவதே இந்த 2026 வரவுசெலவுத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.



## கனடாவில் தமிழ் இனவழிப்பு நினைவுத் தூபியை சேதப்படுத்திய சிறுவன் மீது வழக்குப் பதிவு

03.04.2026

கனடாவின் பிராம்ப்டன் நகரில் அமைந்துள்ள சிங்குயாகுசி பூங்காவில் (Chinguacousy Park) உள்ள தமிழ் இனப்படுகொலை நினைவுத் தூபியை அவதூறான வாசகங்கள் மற்றும் வர்ணங்களைப் பூசி சேதப்படுத்திய விவகாரத்தில் 14 வயது சிறுவன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மார்ச் 20 திகதி நினைவுத் தூபியில் வர்ணங்கள் பூசப்பட்டு சேதப்படுத்தப்பட்டிருப்பதாகப் பீல் பிராந்திய காவல்துறைக்குத் தகவல் கிடைத்தது.

சம்பவ இடத்திற்கு விரைந்த அதிகாரிகள், இந்தச் செயலைத் திட்டமிட்ட வெறுப்புணர்வால் தூண்டப்பட்ட குற்றமாக (Hate Crime) கருதி, விசாரணையைத் தீவிரப்படுத்தினர்.

தொடர் விசாரணையின் பலனாக, மார்ச் 31 அன்று பிராம்படனைச் சேர்ந்த 14 வயது சிறுவன் கைது செய்யப்பட்டார். அவர் மீது 5,000 டொலருக்கும் அதிகமான மதிப்புள்ள பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்ததாக (Mischief over $5,000) இரண்டு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இளையோர் குற்றவியல் நீதிச் சட்டத்தின் (Youth Criminal Justice Act) கீழ் அச்சிறுவனின் அடையாளத்தை வெளியிட முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்துத் தெரிவிக்கையில்,

பொது இடங்களைச் சேதப்படுத்துவதை, குறிப்பாக நமது சமூகங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த நினைவிடங்கள் மீது வெறுப்புணர்வால் நடத்தப்படும் தாக்குதல்களை ஒரு போதும் பொறுத்துக்கொள்ள முடியாது பீல் பிராந்திய காவல் துறைத் தலைவர் நிஷான் துரையப்பா தெரிவித்துள்ளார்.

இந்தப் பிராந்தியத்தில் வாழும் மக்கள் பொது இடங்களில் பாதுகாப்பாக உணர முழு உரிமை பெற்றுள்ளனர் தெரிவித்துள்ளார்.

மேலும், குற்றவாளிகளை விரைந்து கண்டறிந்த வெறுப்புணர்வுக் குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு அவர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த இனப்படுகொலையை நினைவுகூரும் வகையில் இந்த நினைவுத் தூபி 2025 ஆம் ஆண்டு மே மாதம் திறக்கப்பட்டது. இது திறக்கப்பட்டதிலிருந்து சில முறை சமூக விரோதிகளால் இலக்கு




வைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சம்பவங்களைத் தடுக்கவும், கலாச்சார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாக்கவும் பீல் காவல் துறை தற்போது ஒரு சிறப்பு "வெறுப்புணர்வுக் குற்றத் தடுப்புப் பிரிவை" (Hate Crime Unit) வலுப்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலதிகத் தகவல்கள் தெரிந்தவர்கள் 905-453-2121 (ext. 6098) என்ற எண்ணிலோ அல்லது அடையாளம் காட்டாமல் "Crime Stoppers" மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கனடாவில் உயிருக்கு ஆபத்தான பாக்டீரியாத் தாக்கம் குறித்து எச்சரிக்கை!

03.04.2026

கனடாவில் அரிதான ஆனால் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய "இன்வேசிவ் மெனிங்கோகோக்கல்" (Invasive Meningococcal Disease - IMD) எனும் பாக்டீரியா தொற்று பாதிப்பு, கடந்த பத்து ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு உச்சத்தை எட்டியுள்ளது.

மூளை மற்றும் தண்டுவடத்தைச் சுற்றியுள்ள சவ்வுகளில் வீக்கம் (மெனிஞ்சைடிஸ்), இரத்த ஓட்டத்தில் தொற்று மற்றும் உறுப்பு செயலிழப்பு போன்ற தீவிர பாதிப்புகளை ஏற்படுத்தும் இந்த நோய், தற்போது நாடு முழுவதும் வேகமாகப் பரவி வருவது பொதுச் சுகாதாரத் துறையினரிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது.

கனடா பொதுச் சுகாதார முகமையின் (PHAC) தரவுகளின் அடிப்படையில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது. 2021இல் வெறும் 48 ஆக இருந்த பாதிப்புகள், 2023இல் 100 ஆக உயர்ந்தன.

தற்போது கிடைத்துள்ள ஆரம்பக்கட்ட தகவல்களின்படி, 2024 இல் 132 ஆகவும், 2025இல் 155 ஆகவும் இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இது 2012 ஆம் ஆண்டிற்குப் பிறகு பதிவான மிக உயர்ந்த அளவாகும்.

குறிப்பாக ஒன்ராரியோ, கியூபெக் மற்றும் மேனிடோபா ஆகிய மாகாணங்களில் அதிகப்படியான மரணங்களும் பாதிப்புகளும் பதிவாகியுள்ளன.

இந்தத் தொற்று பாதிப்பு ஏற்பட்டவர்களில் 14 சதவீதம் பேர் உயிரிழப்பதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

பிழைப்பவர்களில் 15 முதல் 20 சதவீதம் பேருக்குக் காது கேளாமை, நரம்பியல் குறைபாடுகள் அல்லது உடல் உறுப்புகளை நீக்க வேண்டிய கட்டாயம் போன்ற நீண்டகால பாதிப்புகள் ஏற்படுகின்றன.



கடுமையான தலைவலி மற்றும் காய்ச்சல், கழுத்து விறைப்பு (Stiff Neck), வெளிச்சத்தைப் பார்க்க முடியாமை (Sensitivity to Light), வாந்தி, குழப்பமான மனநிலை அல்லது அதிகப்படியான தூக்கம், உடல் முழுவதும் திடீரெனத் தோன்றும் தடிப்புகள் (Rash) போன்ற நோய் அறிகுறிகள் தென்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# கனடாவில் எரிபொருள் வரியை தற்காலிகமாக ரத்து செய்ய கோரிக்கை!

## கனடாவின் எதிர்க்கட்சித் தலைவரான பியர் பொய்லிவ்ரே

03.04.2026

இந்த ஆண்டின் மீதமுள்ள காலத்திற்கு பெட்ரோல் மற்றும் டீசல் மீதான மத்திய அரசின் வரிகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு கனடிய மத்திய அரசை, எதிர்க்கட்சித் தலைவரான பியர் பொய்லிவ்ரே வலியுறுத்தியுள்ளார்.

ஒட்டாவாவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜிஎஸ்டி (GST) மற்றும் கலால் வரி (Excise tax) ஆகியவற்றை நீக்குவதன் மூலம் ஒரு லிட்டர் எரிபொருளுக்கு சுமார் 25 சதங்கள் வரை சேமிக்க முடியும் என்று குறிப்பிட்டார்.

மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றத்தால் உலகளவில் எரிபொருள் விலை உயர்ந்துள்ள நிலையில், தேவையற்ற அரசுச் செலவுகளைக் குறைப்பதன் மூலம் இந்த வரிச்சலுகைக்குத் தேவையான 5.25 பில்லியன் டொலர் நிதியைத் திரட்ட முடியும் என்று அவர் யோசனை தெரிவித்தார்.

கனடாவில் எரிபொருள் விலை அமெரிக்காவை விட சுமார் 28 சதங்கள் அதிகமாக இருப்பதைச் சுட்டிக்காட்டிய பொய்லிவ்ரே, இந்த உயர்வுக்கு உலகளாவிய காரணிகள் மட்டுமன்றி, லிபரல் அரசின் வரிகளுமே முக்கியக் காரணம் என குற்றம் சுமத்தியுள்ளார்.

மக்களின் உழைப்பில் கிடைத்த ஒவ்வொரு பைசாவும் அவர்களின் பாக்கெட்டிலேயே இருக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

ஏற்கனவே ஆஸ்திரேலியா மற்றும் அயர்லாந்து போன்ற




நாடுகள் எரிபொருள் விலையேற்றத்தைக் குறைக்க வரிகளைக் குறைத்துள்ளதை அவர் உதாரணமாகக் காட்டினார்.

# தமிழ் ஏதிலி நாடு கடத்தல் குறித்து நீதிமன்றமே தீர்மானிக்கும்

## கனடாவின் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் கேரி ஆனந்தசங்கரி

03.04.2026

சுமார் 16 ஆண்டுகளுக்கு முன்பு கடல் வழியாக கனடாவிற்கு வந்த தமிழ் ஏதிலி ஒருவரை இலங்கைக்கு நாடு கடத்தும் விவகாரத்தில், தாம் தலையிடப் போவதில்லை என கனடாவின் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் கேரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

2010ஆம் ஆண்டில் "எம்.வி. சன் சீ" (M.V. Sun Sea) கப்பல் மூலம் கனடாவின் மேற்கு கடற்கரைக்கு வந்த 492 பேரில் ஒருவரான குமார் துரைசிங்கம் என்பவரின் எதிர்காலம் குறித்து நீதிமன்றமே தீர்மானிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இது குறித்து கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஆனந்தசங்கரி, "இந்த விவகாரம் தற்போது நீதிமன்றத்தின் முன் உள்ளது.

நீதிமன்றமே இது குறித்து முடிவெடுக்கட்டும். கடந்த காலங்களில், "சன் சீ" கப்பலில் வந்தவர்கள் இலங்கைக்குத் திரும்பக் கூடாது என நான் வாதிட்டுள்ளேன். ஏனெனில், அங்கு திரும்பிய ஒருவர் அரசாங்கத்தால் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது.

இருப்பினும், இந்த விவகாரத்தை விசாரிக்க கனடிய நீதிமன்றங்களே சரியான இடம் என்று நான் நம்புகிறேன்," என்றார். குமார் துரைசிங்கத்தின் வழக்கறிஞர் கேஸ் போஸ்கேட் (Kes Posgate) கூறுகையில், குமார் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டால் அவர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்பட்டு உயிருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளதாகத் தெரிவித்தார்.

முன்னதாக, இதே கப்பலில் வந்த சத்தியபவன் ஆசிர்வாதம் என்பவர் இலங்கைக்குத் திரும்பியபோது சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாகக் கூறி சத்தியக்கடதாசி தாக்கல் செய்திருந்ததை வழக்கறிஞர் சுட்டிக்காட்டினார்.

2010ஆம் ஆண்டு இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த பிறகு, தாய்லாந்திலிருந்து புறப்பட்ட "எம்.வி. சன் சீ" சரக்குக் கப்பல் மூலம் 492 தமிழர்கள் கனடாவிற்கு வந்தனர்.

இவர்களில் 63 சதவீதத்தினரின் ஏதிலி தஞ்சக் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால், குமார் துரைசிங்கத்தின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.





"நான் 16 ஆண்டுகளாக இங்குள்ளேன், என்னைக் கனடியனாகவே உணர்கிறேன். இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டால் எனக்கு என்ன நடக்கும் என்று நினைத்தால் மிகுந்த அச்சமாக உள்ளது," என குமார் துரைசிங்கம் கவலையுடன் தெரிவித்துள்ளார்.

குறிப்பு: குமார் துரைசிங்கம் அவர்களை கனடாவிலிருந்து நாடுகடத்தவிருந்த நிலையில் பலரது முயற்சியின் காரணமாக அவரது நாடுகடத்தல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

# ரொரான்ரோ காவல்துறை உத்தியோகத்தர்கள் 6 பேரின் பணி இடைநீக்கம்: இனி ஊதியம் வழங்கப்படமாட்டாது!

12.04.2026

ஊழல் மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்கள் தொடர்பான அதிரடி விசாரணையில் சிக்கிய ரொரான்ரோ காவல்துறையைச் சேர்ந்த ஆறு அதிகாரிகளுக்கு இனி ஊதியம் வழங்கப்பட மாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கான்ஸ்டபிள்கள் திமோதி பார்ன்ஹார்ட், ஜான் மேட்லி ஜூனியர், சௌரப்ஜித் பேடி, எலியாஸ் மௌவாட் மற்றும் சார்ஜென்ட்கள் ராபர்ட் பிளாக், கார்ல் கிரெலட் ஆகியோர் விசாரணை முடியும் வரை ஊதியமின்றி பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதை காவல்துறை செய்தித் தொடர்பாளர் ஏமி டேவி உறுதிப்படுத்தியுள்ளார்.

இவர்களுடன் தொடர்புடைய ஏழாவது அதிகாரியான டெரெக் மெக்கார்மிக், ஆரம்பத்தில் ஊதியத்துடன் கூடிய பணிநீக்கத்தில் இருந்த நிலையில், எதிர்வரும் மே 1 முதல் அவருக்கும் ஊதியம் நிறுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"புராஜெக்ட் சவுத்" (Project South) என்று பெயரிடப்பட்ட இந்த விசாரணையில், சம்பந்தப்பட்ட ஏழு அதிகாரிகள் மீதும் மொத்தம் 41 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

சிறைச்சாலை அதிகாரி ஒருவருக்கு எதிரான கொலைத் திட்டத்திற்கு ரகசியத் தகவல்களை வழங்கி உதவியது, லஞ்சம் வாங்கியது, போதைப்பொருள் கடத்தல்காரர்களின் சட்டவிரோத கஞ்சா விற்பனை நிலையங்களுக்குப் பாதுகாப்பு அளித்தது மற்றும் அடையாளத் திருட்டு போன்ற அதிர்ச்சியூட்டும் புகார்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் நான்கு அதிகாரிகளுக்கு மட்டுமே ஊதியமில்லா பணிநீக்கத்தை அமல்படுத்தத் திட்டமிட்டிருந்த காவல்துறை தலைமை அதிகாரி மைரன் டெம்கிவ், பின்னர் ஏழு பேருக்கும்




அதே நடவடிக்கையை எடுக்க முடிவு செய்துள்ளார்.

# கனடாவில் மூன்று தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்களில் மார்க் கார்ணியின் லிபரல் கட்சி வெற்றி!

14.04.2026

கனடாவின் ரொரான்ரோவில் இரண்டு தொகுதிகளிலும், மொன்றியலில் ஒரு தொகுதியிலும் நேற்று இடைத்தேர்தல்கள் நடைபெற்றன.

நடந்து முடிந்த கனடா இடைத்தேர்தல்கள், மார்க் கார்ணி அரசுக்கு பெரும்பான்மையை பெற்றுத் தந்துள்ளன.

விடயம் என்னெவென்றால், இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் ஆகும். அதாவது, கனடா நாடாளுமன்றத்தின் கீழவையில் ஒரு கட்சி தனிப்பெரும்பான்மை கொண்ட கட்சியாக இருக்க வேண்டுமானால், அக்கட்சிக்கு 172 இருக்கைகள் இருக்க வேண்டும்.

மார்க் கார்ணியின் லிபரல் கட்சியிடம் 171 இருக்கைகள்தான் இருந்தன.

விடயம் என்னவென்றால், நாடாளுமன்றத்தில், ஏதாவது ஒரு வாக்கெடுப்பில் இரண்டு பிரிவினரும் ஒரே அளவில் வாக்களித்தால், கூடுதல் ஒரு வாக்குக்காக, சபாநாயகரின் உதவியை ஆளும் கட்சி நாடவேண்டியிருக்கும். ஆக, ஆளும் லிபரல் கட்சிக்கு 173 அல்லது 174 இருக்கைகள் கிடைத்துவிட்டால், யாருடைய உதவியையும் நாடாமலே மசோதாக்களை நிறைவேற்ற முடியும்.

அதனால்தான், இந்த இடைத்தேர்தல் கனடா அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்பட்டது.

இந்நிலையில், மார்க் கார்ணியின் லிபரல் கட்சி, தேர்தல் நடைபெற்ற மூன்று தொகுதிகளிலுமே வெற்றி பெற்றுள்ளது.

ஆக, ஒரு தொகுதியில் வெற்றி பெற்றாலே பெரும்பான்மை கிடைத்துவிடும் என்றிருந்த நிலையில், தற்போது மூன்று தொகுதிகளிலுமே வெற்றி பெற்று பெரும்பான்மை பெற்றுள்ளது மார்க் கார்னியின் லிபரல் கட்சி.

விடயம் என்னவென்றால், கனடா அரசியல் வரலாற்றில் 24




பிரதமர்கள் நாட்டை ஆண்டுள்ளார்கள்.

அவர்களில் இதுவரை 13 பேருக்குத்தான் பெரும்பான்மை கிடைத்திருந்த நிலையில், தற்போது மார்க் கார்னி கனடாவின் பெரும்பான்மை பெற்ற 14ஆவது பிரதமராகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

www.sangathamil.com

# தமிழ் நாட்டுச் செய்திகள்



## சாத்தான்குளம் தந்தை மற்றும் மகன் கொலை வழக்கு: குற்றவாளிகள் 09 பேருக்கும் மரண தண்டனை விதிப்பு

06.04.2026

சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கில் குற்ற வாளிகள் 9 பேருக்கும் மரண தண்டனை விதித்து உயர் நீதி மன்றம் மதுரை கிளை தீர்ப்பு வழங்கியது.

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான் குளத்தைச் சேர்ந்த ஜெயராஜ் மற்றும் அவரது மகன் பென்னிக்ஸ் ஆகியோர் சாத்தான்குளத் தில் செல்போன் கடை நடத்தி வந்தனர். கரோனா ஊரடங் கின்போது குறித்த நேரத்தைத் தாண்டி கடையை திறந்து வைத்திருந்ததாகக் கூறி, இவர்கள் இருவரையும் கடந்த 2020 ஜூன் 19ஆம் தேதி இரவு சாத்தான்குளம் போலீஸார், காவல் நிலையம் அழைத்துச் சென்று கடுமையாகத் தாக்கினர்.

இதில் ஜூன் 22ஆம் தேதி பென்னிக்ஸூம், 23ஆம் தேதி ஜெயராஜூம் உயிரிழந்தனர். இந்த வழக்கை சிபிசிஐடி விசா ரித்த நிலையில், உயர் நீதிமன்ற மதுரை அமர்வு உத்தரவின் படி, சிபிஐ விசாரணைக்கு மாற்றப்பட்டது. இதை கொலை வழக்காக சிபிஐ பதிவு செய்து, காவல் ஆய்வாளர் சிறீதர், உதவி ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகு கணேஷ், சிறப்புசார்பு ஆய்வாளர் பால்துரை, தலைமைக் காவலர் முருகன், காவ லர்கள் சாமதுரை, முத்துராஜா, செல்லத்துரை, தாமஸ் பிரான் சிஸ், வெயிலுமுத்து ஆகிய 10 பேர் கைது செய்யப்பட்டு, மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். இதில் பால்துரை சிறை யில் உடல்நலக் குறைவால் உயிரிழந்தார்.

இந்த வழக்கு விசாரணை கடந்த 5 ஆண்டுகளாக மதுரை நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. மொத்தம் 100-க்கும் மேற்பட்ட சாட்சிகளிடம் விசாரணை நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, கடந்த 23ஆம் தேதி நீதிபதி முத்துக்குமரன் தீர்ப் பளித்தார். “தந்தை மற்றும் மகன் இருவரையும் கம்பு, கம்பி போன்ற ஆயுதங்களால் போலீஸார் கொடூரமாகத் தாக்கியுள் ளனர். மரணத்தை விளைவிக்கும் காயங்கள் உருவாகும் வகையில் இருவரும் தாக்கப்பட்டுள்ளனர்.

அவர்களது உடலில் இருந்த காயங்கள் இயற்கைக்கு மாறாக, மரணத்தை விளைவிக்கும் அளவுக்கு இருந்துள்ளன. இது போன்ற கொடூர தாக்குதல்கள் ஆங்கிலேயர் ஆட்சியில் நடந்த தாக கேள்விப்பட்டுள்ளோம். அதுபோல போலீஸார் தாக்கியுள் ளனர். இருவரையும் இரவு 8 மணி முதல் அதிகாலை 3 மணி வரை போலீஸார் தாக்கியுள்ளனர். தவிர, இருவர் மீதும் போலீ ஸார் பொய் வழக்கு பதிவு செய்துள்ளனர். இதற்காக போலி ஆவணங்களை உருவாக்கியுள்ளனர்.





போலீஸார் தாக்கியதால்தான் தந்தை, மகன் இருவரும் உயி ரிழந்தனர் என்ற முடிவுக்கு நீதிமன்றம் வருகிறது. சாட்சியங் களின் அடிப்படையில் 9 பேர் மீதான கொலைக் குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த வழக்கில் சிறீதர் உள்ளிட்ட 9 பேரும் குற்றவாளிகள் என முடிவு செய்யப்படுகிறது. இவர்களுக்கான தண்டனை விவரம் மார்ச் 30ஆம் தேதி அறிவிக்கப்படும்” என தெரிவித்தார்.

இதையடுத்து, குற்றவாளிகள் 9 பேருக்கும், மதுரை அரசு மருத் துவமனையில் உடல், மனநல பரிசோதனை நடத்தப்பட்டு, அதற்கான அறிக்கையை மருத்துவர்கள் நீதிமன்றத்தில் நேற்று தாக்கல் செய்தனர். இதைத் தொடர்ந்து, குற்றவாளிகள் 9 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். உயிரிழந்த ஜெயராஜ், பென்னிக்ஸ் குடும்பத்தினரும் வந்திருந்தனர்.

## மகளுக்கு நீதி கேட்டு தலைமைச் செயலக வாயிலில் திமுக கட்சிக் கொடியை எரித்து காவலர் போராட்டம்

10.04.2026

மருத்துவர்களின் தவறான சிகிச்சையால் மகளின் பாதம் அகற் றப்பட்டதாகக் கூறி, அதற்கு நீதி கேட்டு காவலர் ஒருவர் தலை - மைச் செயலக நுழைவு வாயிலில் திமுக கட்சிக் கொடியை எரித்து போராட்டத்தில் ஈடுபட்டார்.

திருவள்ளூர் அடுத்த காக்களூாரை சேர்ந்தவர் கோதண்ட பாணி (44), ஆவடி டேக்ங் பேக்டரி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணியாற்றுகிறார். இவருக்கு மனைவி மற்றும் 2 ஆண் மற்றும் 13 வயதில் பிரதிக்ஷா என்ற மகள் உள்ளார்.

பிரதிக்ஷாவுக்கு 3 வயது இருக்கும்போது திடீர் உடல் நலக் குறைவு ஏற்பட்டது. இதையடுத்து, அவர் எழும்பூர் குழந்தைகள் நல அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேல் சிகிச்சைக் காக ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப் பட்டார்.

அங்கு சிறுமியின் காலின் பாதம் அறுவை சிகிச்சை மூலம் அகற்ற வேண்டிய சூழல் ஏற்பட்டது. மருத்துவர்களின் தவறான சிகிச்சையே மகளுக்கு கால் பறிபோகக் காரணம் எனக்கூறி, நீதி கேட்டு 5 ஆண்டுகளாக தலைமைக் காவலர் தொடர்ந்து போராடி வருகிறார்.

மருத்துவத் துறை அலுவலகம், டிஜிபி அலுவலகம், தலைமைச் செயலகம் எனப் பல இடங்களில் முறையிட்டும் அவரது கோரிக்கை இதுவரை நிறைவேறவில்லை. இந்நிலையில், மகளுக்கு நீதி கேட்டு, சீருடையில் தலைமைச் செயலக நுழைவு வாயிலுக்கு நேற்று வந்த கோதண்டபாணி, திமுக கட்சிக் கொடியை எரித்து போராட்டத்தில் ஈடுபட்டார்.

மேலும், 2021ஆம் ஆண்டு திமுக ஆட்சிக் காலத்தில்தான் தனது மகளுக்கு தவறான சிகிச்சை அளிக்கப்பட்டதாகக் கூறிய, மகளுக்கு நீதி கேட்டு கோஷமிட்டார்.அங்கு பாதுகாப்புப் பணியி லிருந்த போலீஸார் உடனடியாக தீயை அணைத்து கோதண்ட பாணியை அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

முன்னதாக, தலைமைக் காவலர் கோதண்டபாணி கூறுகை யில், “மகள் பிரதிக்ஷாவுக்கு 3 வயது இருக்கும்போது சிறுநீர் கழிப்பதில் பிரச்சினை ஏற்பட்டது. இதையடுத்து, எழும்பூர் குழந் தைகள் நல அரசு மருத்துவமனையில் காண்பித்தேன்.

அப்போது, காலில் அரிப்பும் ஏற்படத் தொடங்கியது. இது சாதாரண அரிப்புதான் எனக் கூறி அலட்சியமாக சில மருந் துகளைக் கொடுத்து அனுப்பி வைத்தனர். பின்னர், 2 நாளில்



மீண்டும் காலில் அரிப்பு அதிகரித்தது.

வலது காலில் ரத்த ஓட்டம் சரியாக இல்லை என கூறினர். இறுதியில் அவர்கள் அளித்த தவறான சிகிச்சையால் மகளின் கால்பாதத்தை அகற்றும் நிலை ஏற்பட்டது. எனவே, இதில் சம்பந்தப்பட்ட மருத்துவர்கள் உட்பட அனைவர் மீதும் நட வடிக்கை எடுத்து எனது மகளுக்கு உரிய நீதி வழங்க வேண்டும்” என்றார்.

**மக்களின் துன்பங்களில் நாம் பங்கெடுத்துக் கொள்ளும் போதுதான் மக்கள் எம்முடன் இணைந்து கொள்ளவார்கள்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-




# அமெரிக்க போர் விமானத்தின் உயர் அதிகாரி மீட்பு: "நாங்கள் அவரை மீட்டு விட்டோம்"

## அமெரிக்க ஜனாதிபதி டொனாலட் ட்ரம்ப்

05.04.2026

அமெரிக்காவின் F-15E போர் விமானம் ஈரான் வான்பரப்பில் சுட்டு வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து, அதில் பயணித்த உயர் அதிகாரி ஒருவரை அமெரிக்கப் படைகள் அதிரடி மீட்பு நடவடிக்கை மூலம் மீட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உறுதிப்படுத்தியுள்ளார்.

"நாங்கள் அவரை மீட்டுவிட்டோம்!" என அமெரிக்க டொனால்ட் ட்ரம்ப் தனது சமூக வலைதளப் பதிவில் இந்தத் தகவலை உற்சாகத்துடன் பகிர்ந்துள்ளார்:

மீட்கப்பட்டவர் ஒரு புகழ்பெற்ற கேணல் தரத்திலான அதிகாரி ஆவார். அவர் தற்போது பாதுகாப்பாகவும் நலமுடனும் இருப்பதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தில் அவருக்குச் சில காயங்கள் ஏற்பட்டுள்ள போதிலும், அவர் விரைவில் குணமடைந்து விடுவார் என உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

விமானம் வீழ்த்தப்பட்ட கணத்திலிருந்து, அந்த அதிகாரியின் இருப்பிடத்தை அமெரிக்க இராணுவம் 24 மணிநேரமும் கண்காணித்து வந்துள்ளது.

அவரை மீட்பதற்காக உலகிலேயே அதிநவீன ஆயுதங்களைக் கொண்ட டஜன் கணக்கான போர் விமானங்களை அமெரிக்கா ஈரானுக்குள் அனுப்பியது.

இந்த ஆபத்தான மீட்புப் பணியின் போது ஒரு அமெரிக்க வீரர் கூட உயிரிழக்கவோ அல்லது காயமடையவோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வெற்றியின் மூலம் ஈரான் வான்பரப்பில் அமெரிக்கா தனது முழுமையான ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

"ஒரே நேரத்தில் இரண்டு பாரிய இராணுவ நடவடிக்கைகளை எவ்வித இழப்புமின்றிச் செய்திருப்பது, நமது இராணுவத்தின்



மேன்மையை உலகிற்கு நிரூபித்துள்ளது" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேற அனுமதி பெறவேண்டும்!

## ஜேர்மன் அரசு

04.04.2026

ஜேர்மனியில், 17 வயது முதல் 45 வயது வரையுள்ள ஆண்கள், இனி ஜேர்மனியிலிருந்து வெளியேறவேண்டுமானால், அதற்கு அதிகாரப்பூர்வமாக அனுமதி பெற்றாகவேண்டும்.

17 வயது முதல் 45 வயது வரையுள்ள ஜேர்மன் ஆண்கள், கல்விக்காகவோ, பணிக்காகவோ அல்லது நீண்ட கால பயணத்துக்காகவோ வெளிநாடு செல்லவேண்டுமானால், இனி அதற்காக அரசிடம் அனுமதி பெறவேண்டும்.

இந்த விதி, 2026ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி அமுலுக்கு வந்துள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

முன்னர், போர் முதலான அச்சுறுத்தல் ஏற்பட்டால் மட்டுமே இத்தகைய அனுமதி பெறும் நிலை இருந்த நிலையில், தற்போது, இந்த விதி சட்டத்தில் ஒரு நிரந்தர அம்சமாகியுள்ளது. விடயம் என்னவென்றால், அமைதியாக, பெருமளவில் கவனம் ஈர்க்காமலே இந்த விடயம் இராணுவ சேவை நவீனமயமாக்கல் சட்டத்தில் ஒரு அம்சமாக இணைக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் போர் முதல், தற்போதைய ஈரான் போர் வரை உலக நாடுகள் சிலவற்றில் போர்ச்சூழல் நிலவும் நிலையில், அமெரிக்கா உதவாது என தெரியவந்ததிலிருந்து ஜேர்மனி முதலான பல ஐரோப்பிய நாடுகள் தங்கள் இராணுவத்தை பலப்படுத்திவருகின்றன.

விடயம் என்னவென்றால், தற்போது 184,000 ஆக இருக்கும் இராணுவ வீரர்களின் எண்ணிக்கையை 255,000 ஆகவும், 2035 வாக்கில் 270,000ஆகவும் உயர்த்த ஜேர்மனி திட்டமிட்டுவருகிறது.

இப்படிப்பட்ட ஒரு சூழலில், திடீரென, 17 வயது முதல் 45 வயது வரையுள்ள ஜேர்மன் ஆண்கள் வெளிநாடு செல்லவேண்டுமானால் அதற்காக அரசிடம் அனுமதி பெறவேண்டும் என்னும்



விதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இசுரவேல் சர்வதேச சட்டங்களை மீறுகிறது: ஸ்பெயின் வெளிவிவகார அமைச்சர் கண்டனம்

25.03.2026

மேற்காசியாவில் புதிதாக எட்டப்பட்ட இரண்டு வார கால போர் நிறுத்த ஒப்பந்தத்தை இசுரவேல் மீறி வருவதாகவும், சர்வதேச சட்டங்களுக்கு முரணாக லெபனான் மீது தாக்குதல் நடத்துவதாகவும் ஸ்பெயின் வெளிவிவகார அமைச்சர் ஜோஸ் மானுவல் அல்பாரெஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

ஈரான் மற்றும் லெபனான் விவகாரத்தில் அமெரிக்கா மற்றும் இசுரவேலின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து விமர்சித்து வரும் மேற்கத்திய நாடுகளில் ஒன்றாக ஸ்பெயின் உருவெடுத்துள்ளது. இந்த மோதல்களை "பொறுப்பற்றது மற்றும் சட்ட விரோதமானது" என குறிப்பிட்டுள்ள மாட்ரிட் நிர்வாகம், தனது வான்பரப்பைப் பயன்படுத்தவும் தடை விதித்துள்ளது.

பாராளுமன்றில் உரையாற்றிய அமைச்சர் அல்பாரெஸ்,

"நேற்று இசுரவேல் எவ்வாறு போர்நிறுத்தத்தை அலட்சியம் செய்தது என்பதையும், சர்வதேச சட்டத்தை மீறி லெபனான் மீது நூற்றுக்கணக்கான குண்டுகளை வீசியதையும் நாம் கண்டோம்." எனத் தெரிவித்துள்ளார்.

மேற்காசியாவில் அமைதியை நிலைநாட்டும் முயற்சியின் ஒரு பகுதியாக, ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் உள்ள தனது தூதரகத்தை மீண்டும் திறப்பதாக ஸ்பெயின் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் பேசிய அல்பாரெஸ்,

"எங்கள் தூதர் மீண்டும் தெஹ்ரானுக்குத் திரும்பி தனது பொறுப்புகளை ஏற்குமாறும், தூதரகத்தை மீண்டும் திறக்குமாறும் நான் அறிவுறுத்தியுள்ளேன். ஈரானிய தலைநகரில் இருந்தும் அமைதிக்கான அனைத்து முயற்சிகளையும் முன்




னெடுக்க நாங்கள் விரும்புகிறோம்," எனத் தெரிவித்துள்ளார்.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# நிலவுப் பயணத்தை முடித்து பூமிக்கு பாதுகாப்பாக திரும்பிய விண்வெளி வீரர்கள்

11.04.2026

நிலவுக்கு மனிதர்களை மீண்டும் அனுப்பும் முயற்சியின் ஒரு முக்கிய கட்டமாக, நாசா மேற்கொண்ட ஆர்டெமிஸ்-2 (Artemis II) திட்டம் வெற்றிகரமாக நிறைவு பெற்றுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ், Orion spacecraft விண்கலம் மூலம் 4 விண்வெளி வீரர்கள் இந்த மாத தொடக்கத்தில் 10 நாள் பயணமாக விண்வெளிக்கு அனுப்பப்பட்டனர். இந்த குழுவில் ஒரு பெண் விண்வெளி வீரரும் இடம்பெற்றிருந்தார்.

இந்த பயணத்தின் போது, மனிதர்கள் இதுவரை சென்றிராத 4,06,771 கிலோமீற்றர் தொலைவை எட்டியதன் மூலம் புதிய சாதனை படைக்கப்பட்டது. மேலும், இந்த குழுவினர் நிலவைச் சுற்றி ஆய்வு மேற்கொண்டு, நிலவின் மறுபக்கத்தை நேரில் கண்டவர்கள் என்ற வரலாற்றுச் சாதனையையும் பதிவு செய்துள்ளனர்.

ஆய்வுப் பணிகளை வெற்றிகரமாக முடித்த பின்னர், விண்வெளி வீரர்கள் பூமியை நோக்கி திரும்பினர். அவர்கள் பயணித்த ஒரியன் விண்கலம், இலங்கை நேரப்படி சனிக்கிழமை அதிகாலை 5.37 மணியளவில், அமெரிக்காவின் San Diego நகரத்திற்கு அருகிலுள்ள பசுபிக் பெருங்கடல் ( Pacific Ocean ) பகுதியில் திட்டமிட்டபடி பாதுகாப்பாக இறங்கியது.

மூன்று பாராசூட்டுகளின் உதவியுடன் விண்கலம் கடலில் மெதுவாக இறங்கியது. இதில் பயணித்த 4 விண்வெளி வீரர்களும் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.








நிலவுக்கு மனிதர்களை மீண்டும் அனுப்பும் Artemis program முயற்சியின் முக்கிய முன்னேற்றமாக இந்த மிஷன் பார்க்கப்படுகிறது. எதிர்காலத்தில் மனிதர்களை நிலவில் தரையிறக்குவதற்கான அடித்தளத்தை இந்த சாதனை அமைத்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்கா – ஈரான் அமைதிப் பேச்சுவார்த்தை தோல்வி

12.04.2026

அமெரிக்கா மற்றும் ஈரானுக்கு இடையிலான அமைதி பேச்சுவார்த்தை சுமார் 15 மணித்தியாலங்கள் நீடித்தபோதிலும், எந்தத் தீர்வும் எட்டப்படாமல் தோல்வியில் முடிந்துள்ளது.



அணுசக்தி ஒப்பந்தத்தை மையமாகக் கொண்டு, அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி ஆரம்பித்த தாக்குதல்கள் 06 வாரங்களாக நீடித்த நிலையில், கடந்த 07ஆம் திகதி 02 வாரங்களுக்கு போர்நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இதன் பின்னணியில் பதற்றம் தற்காலிகமாக குறைந்திருந்தது.

இந்த சூழலில், மத்தியஸ்தமாக பாகிஸ்தான் முன்வந்து, அமைதி பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகளை செய்தது. இதனைத் தொடர்ந்து, ஈரான் பாராளுமன்ற சபாநாயகர் மொஹமட் பாகர் காலிபாஃப் தலைமையிலான உயர்மட்ட குழு இஸ்லாமாபாத்திற்கு சென்றது. இதில் ஈரானின் வெளிவிவகார அமைச்சர் சையித் அப்பாஸ் அர்காஷ், தேசிய பாதுகாப்பு ஆணைக்குழு செயலாளர் அலி அக்பர் ஹம்தான், மத்திய வங்கி ஆளுநர் அப்தோல்நசர் ஹெம்மாட்டி உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் கலந்து கொண்டனர்.





இதேபோல், அமெரிக்க தரப்பில் துணை ஜனாதிபதி ஜே. டி. வான்ஸ் தலைமையிலான குழுவும் பேச்சுவார்த்தையில் பங்கேற்க இஸ்லாமபாத் நகரை சென்றடைந்தது.

பாதுகாப்பு காரணங்களால், இஸ்லாமாபாத் நகரம் முழுவதும் பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டதால், முக்கிய வீதிகள் வெறிச்சோடியிருந்தன.

இந்த முக்கிய பேச்சுவார்த்தை இஸ்லாமாபாத்திலுள்ள செரீனா ஹோட்டலில் நேற்று சனிக்கிழமை (11) மதியம் 1 மணியளவில் ஆரம்பமாகி, இன்று ஞாயிற்றுக்கிழமை (12) அதிகாலை 3.40 மணி வரை நீடித்தது. பேச்சுவார்த்தையின் போது இரு தரப்பினரும் எழுத்து வடிவிலான ஆவணங்களை பரிமாறிக் கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பேச்சுவார்த்தைக்கு முன், ஈரான் அதிகாரிகள் பாகிஸ்தான் தரப்பினருடன் தனிப்பட்ட கலந்துரையாடலும் நடத்தினர்.

பேச்சுவார்த்தை குறித்து கருத்து தெரிவித்த முகமது பாகர் காலிபாஃப்,

“அமெரிக்காவுடன் நடத்தப்படும் அமைதி பேச்சுவார்த்தைகள் பெரும்பாலும் தோல்வியிலும், வாக்குறுதி மீறல்களிலும் முடிவடைகின்றன. நல்லெண்ணம் இருந்தாலும், நம்பிக்கை இல்லை” என தெரிவித்துள்ளார்.

மற்றுபுறம்ஜே. டி. வான்ஸ் ஊடகவியலாளர்களிடம் தெரிவிக்கையில், “இரு தரப்பும் விரிவான விவாதங்களில் ஈடுபட்டது நல்ல விஷயம். ஆனால், எந்த ஒப்பந்தமும் எட்டப்படாதது வருத்தமளிக்கிறது. இது அமெரிக்காவுக்கு மட்டும் அல்ல, ஈரானுக்கும் பாதகமானது” என்றார்.

மேலும், ஈரான் அணு ஆயுதங்களை உருவாக்கவோ, அதற்கான திறனை வைத்திருக்கவோ கூடாது என்பதே அமெரிக்காவின் முக்கிய நிபந்தனை எனவும், அதில் உறுதி கிடைக்காததே பேச்சுவார்த்தை தோல்விக்கான காரணம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த பேச்சுவார்த்தை, 06 வாரங்களாக நீடித்து வரும் போருக்கு முற்றுப் புள்ளி வைக்கும் முயற்சியாக கருதப்பட்ட நிலை யில், தற்போது அது தோல்வியில் முடிவடைந்துள்ளது. இதனால், மேற்காசிய பிராந்தியத்தில் மீண்டும் பதற்றம் அதிகரிக்கும் அபாயம் உருவாகியுள்ளது.

# ஈரானில் அமெரிக்காவின் முற்றுகை தொடங்கியது

## அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்

14.03.2026

அமெரிக்க கடற்படை முற்றுகைக்கு அருகில் வந்தால் ஈரானின் “தாக்குதல் கப்பல்கள்” அழிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் எச்சரித்துள்ளார்.

ஈரான் துறைமுகங்கள் மீதான அமெரிக்காவின் முற்றுகை நடவடிக்கை இந்திய நேரப்படி திங்கட்கிழமை இரவு 07:30 மணி முதல் தொடங்கியுள்ளது.



ஈரான் துறைமுகங்களுக்குள் நுழையும் அல்லது அங்கிருந்து வெளியேறும் அனைத்து நாட்டுப் போர்க்கப்பல்கள் மற்றும் சரக்குக் கப்பல்களுக்கும் தடுக்கப்படும் என அமெரிக்கா கூறியுள்ளது.

ஈரானின் கடற்படை முழுமையாக அழிக்கப்பட்டு, மொத்தம் 158 கப்பல்கள் கடலடியில் உள்ளன என தனது ட்ரூத் சோஷியலில் விடுத்துள்ள பதிவு ஒன்றில் டிரம்ப் கூறியுள்ளார்.

”ஆனால், அவர்கள் ‘வேக தாக்குதல் கப்பல்கள்’ என்று அழைக்கும் சில சிறிய கப்பல்களை தாக்கவில்லை, ஏனெனில் அவை பெரிய அச்சுறுத்தலாக கருதப்படவில்லை. இந்தக் கப்பல்களில் ஏதேனும் எங்கள் முற்றுகைக்கு அருகில் வந்தால், அவை உடனடியாக அழிக்கப்படும். கடலில் போதைப் பொருள் கடத்துபவர்களை எதிர்கொள்ள நாம் பயன்படுத்தும் அதே தாக்குதல் முறையையே பயன்படுத்துவோம்” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் முற்றுகைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் ஈரானின் எந்தவொரு சிறிய “வேகத் தாக்குதல் கப்பல்களையும்” மிகக் கடுமையாகத் தாக்கப் போவதாக டொனால்ட் டிரம்ப்



எச்சரித்துள்ளார்.

டொனால்ட் டிரம்ப் குறிப்பிட்டது போல, ஈரானிய கடற்படை இலக்குகளை மையப்படுத்தி அமெரிக்கா நடத்திய பெரும்பாலான தாக்குதல்கள் பெரிய ரகக் கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் மீதே இருந்தன. பாரசீக வளைகுடாவில் அமெரிக்காவின் இராணுவ ஆதிக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு இவை உத்தி ரீதியாக முக்கியமான இலக்குகளாகக் கருதப்பட்டன.







சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# அன்னை பூபதியின் நினைவு நாள்

## ஏப்ரல் 19

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



மனித வரலாற்றில் என்றுமே நிகழ்ந்திராத, எவருமே சாதித்திராத, மகத்தான மனித அர்ப்பணிப்புக்களைக் கொண்டதாக எமது விடுதலைப் போராட்டம் புகழீட்டி நிற்கிறது. இந்த அற்புதமான தியாக வரலாற்றில் அன்னை பூபதி ஒரு உன்னதமான, தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளார்.

சத்தியத்திற்காகச் சாகத் துணிந்துவிட்டால் ஒரு சாதாரண மனிதப் பிறவியும் சரித்திரத்தை படைக்க முடியும். இதற்கு அன்னை பூபதியின் தியாகம் ஒரு சிறப்பான எடுத்துக்காட்டு. சத்தியத்திற்காக, தர்மத்திற்காக அவர் சாவை அரவணைத்துக் கொண்டார். இந்த ஒப்பற்ற ஈகையால் ஒரு சாதாரண தாயான அவர், அசாதாரண சாதனையைப் புரிந்து தேசியத்தாய் என்ற அந்தஸ்திற்கு உயர்ந்தார்.

அறப்போரிலும் சரி, ஆயுதப்போரிலும் சரி எமது விடுதலைப் போர் உலக சாதனைகளைப் படைத்து வருகின்றது, மனித சிகரத்தை எட்டியிருக்கிறது.

அகிம்சையின் அறத்தையும், ஆன்மீக தர்மத்தையும் போதித்துவந்த பாரதநாடு ஆக்கிரமிப்புப் பூதமாக அன்றொருநாள் எம்மண்மீது கால் மிதித்தது. அப்பொழுது எமது போராளி ஒருவன் பாரத்தின் ஆன்மீக மரபில் அறப்போரைத் தொடுத்தான். காந்தி அடிகளின் சாத்விக தத்துவத்தை பாரத நாட்டிற்குப் புகட்டிக்காட்ட விரும்பினான். ஆன்மீக உறுதிப்பாட்டில் அவனது உயிர்த்தியாகம் காந்தியின் அறக்கோட்பாட்டிற்கு ஒரு மகோன்னதமான செயற்பாட்டு வடிவம் கொடுத்தது.

பாரதத்தின் மடிந்து போன ஆன்மீகம் தமிழீழத்தில் புதுப்பொலிவுடன் புரட்சி வடிவத்தில் மறுபிறப்பு எடுத்தது.

திலீபனின் தியாகம் இந்திய மாயையைக் கலைத்தது. தமிழீழ தேசிய உணர்வைத் தட்டி எழுப்பியது. இந்த தேசிய எழுச்சியின் வெகுசன வடிவமாக அன்னையின் அறப்போர் அமைந்தது.

அந்த வயோதிபத் தாய் நீதியின் நெருப்பில் தன்னை எரித்துக் கொண்டாள். அந்தத் தீ என்றும் அணையாத சுதந்திர தீபமாக எரிந்து கொண்டு இருக்கிறது.

***1992 ஆம் ஆண்டு பூபதி நினைவு நாளை முன்னிட்டு தேசியத் தலைவர் அவர்கள் விடுத்த செய்தியிலிருந்து.***


Lucksme
Gold House
Traditional of Trust & Quality
மின்னும்
பொன் நகை
மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
திருமணத்திற்கு தேவையான தாலிக்கொடிகள் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் தங்கநகைகள் செய்து தரப்படும்
பழைய தங்க நகைகள் அதி கூடிய விலைக்கு வாங்கப்படும்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


Shiyara
Financial Services
(An Agency for the Real Estate, Mortgages & Finance)
BUSINESS LOANS - LINE OF CREDITS
MORTGAGES
SECOND MORTGAGES
REFINANCING
CALL:
KRISHNA
647 308 6069
Shiyara@ymail.com
ENJOY THE FREEDOM OF BETTER CREDIT


K
Kurinchi
Beauty Creations
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & ★
Draping
Hair Flowers & ★
Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu



# சுடரான தாய்

சுடரான தாய்

அன்னை உதரத்தின் அக்கினி!
எண்ணை விளக்காகி
எங்களுள் எரிகின்றது!

அது தீயாகி பின் சுடராகி
முது உருவின் உணர்வாகி
மட்டுநகரில் நெஞ்சுமுட்டும்
சுட்டதுயராகித் துலங்கியது!

தம்பி திலீபன்
தாங்கிய வேள்வியில்
தம்முடல் காய்ந்து
வெந்துடல் சோர்ந்து
உயிர் ஒய்ந்தது கண்டு நாம்
கண்ணீர் விட்டோம்!
கவிதைகள் பாடினோம்!
கும்பிட்டோம்! பின்பு,
வெம்பல் அடங்கி எம்
வேலைகளில் மூழ்கினோம்!
ஆனால், பாரும்!
அன்னைபூபதித்தாய்
தன்னையும் பசித்தணலிலே
திணித்து எண்ணிறைந்த
காயங்கள் பட்ட
பொன் உதரத் தீயோடு,
மன்னன் திலீபனின் ஆத்மாவைப்
பின்தொடர்ந்து,
தாய்மையின் நித்தியச்சுடராய்
நிலமிசை நிமிர்ந்தாள்!

வாழ்வைச் செதுக்கும்
வலிமை கொண்டவள் தாய்!
வீழ்பழி நேர்ந்தக்கால்
சூழ் புயலாகி
பகை உழுதபாதையில்
நெருப்பாய்ப் பெருகி
தொகை எதிரி துகளாக
துர்க்கையாய் மாறுவாள்!

உள் நுளைந்த சினம்
உருப்பெருக்கம் எய்தியதால்
உதிரம் கருகவென
உணவுமறுத்து,
உட்திணிந்த விடுதலைப்பசி
நெருப்பில்
உருகி ஆன்மா ஓடவென
முப்பதுநாள் முழுதும் துடித்தே
அன்று சுதந்திரத்தின்
சுடரானாள் பூபதித் தாய்!

திசைவெளி விருட்சங்கள்
தீப்பிடித்து எரிய
அன்னை ஒய்ந்தகணத்தில்
அவதரித்த போரில்,
வேய்ந்த ஒரு இலட்சம்
வெகுளிப்படையில்
தோய்ந்த குரதியாடி
தொகையானோர் வீழ,
பாய்ந்த புலியின் முன்
பாரதம் நிற்கமுடியாது,
வேரறுத்தே வெளிப்பட்டு,
பாராமுகச் சிங்களத்தின்
பாதகத்தைச் சந்தித்து,
வெந்தமனத்தோடு
விழுந்த தம் படைவிட்டு
அழுந்துவசை அவர் சுமந்தே
அழாக்குறையாக அகன்றார்!

கருவறையில்காவி
உருதந்து, உணர்வு ஈந்து
உதிரம்பெருக்கி எம்
சதிரம்நோகாது ஈன்று,
மதுரப்பால் தந்து
மருந்து தான் உண்டு
வருந்தி வகை வகையாய்
அருந்த, உண்ண
அனைத்தும் தந்து,
விருந்து ஈந்து வளர்க்கும்
தாயின் அன்ன உதரம்
சுடரானபோதும் அது
தீமைசூழின் தீயாக மாறுமில்
உவமையென பூபதி
இவ்வையத்தில்
வாழ்ந்து சென்றாள்!

நெடுந்துயர்காவி
நொந்தெரிந்து சுருண்டு கருகி
மாய்ந்து கிடக்கும் எம்
மண்ணைப் பார்த்து
மனம் பொறுக்காது
உதிரம் தீயாக உருப்பட
அதரங்கள் நெரும
அங்கே தாயகத்தில்
ஆயுதங்கள் தாங்கி
சமராடும்காட்சி கண்டு அன்று
சிங்களம் அடங்கியது! இன்றோ
நடுங்கிக் கிடக்கின்கிறது!
பொங்கிய துயரின் பெருக்கிடை
கங்குல்கழியவே எங்கள்
தாய்க் குலம்
கலங்கள் தூக்கவே
விளங்கும் ஒளியானாள்
கலங்கரைப் பூபதித்தாய்!

சுதந்திரத்தின் சுடரான
அன்னை இவள்
பதந்தனைத் தொடர்ந்த
புதிய பூபதிகள்
நிதம்எழுந்து நிலமிசை விரிய,
உதித்த தாரகைகள்
கதிர்த்தெழுந்த கதிரவனாய்
முதிர்ந்த விடுதலையின்
மூலச்சுடராய்
கொதித்தே குதித்துள்ளனர்!

சிதைக்கப்பட்ட தாயின்,
சோதரியின், சொந்தங்களின்
சதைத்துண்டங்களை
திரட்டியெடுத்த தீரத்தின் உருவாய்
பகைவிரட்டும் தீயாய்
உவகைத் தாயகத்தை
மிகை வீரத்தால் மீட்க
பூவிரியும் நினைவுகளோடு
புதுயுகம்காணப் புறப்பட்ட
எமதீழ மகளிர் மாபடைஎழுக

பசிநெருப்பு எனும் உதிரத்தீயால்
திசைகள் திறந்திட அன்று
நடுநிசி இருளில்...
அன்னை பூபதி ஏற்றிவைத்த
சுதந்திரச் சுடரின்
விதந்திடும் தோற்றம்
வீறுகொண்டு
இது வழியெனக்காட்டி
வெற்றியின் பாதையில்
நாட்டுப் பற்றாளர்களைக்
கூட்டி வளர்க்கின்றது!

ந. கிருஷ்ணசிங்கம் – எரிமலை
ஏப்ரல் 2006




# வரலாறு சொல்லும் பாடம்

## தமிழர் ஏமாற்றப்பட்ட வரலாறு

– தமிழீழக் கல்விக் கழகம் –






**1987 யூலை 29இல் இலங்கை – இந்திய உடன்படிக்கையில் ராஜிவ்–ஜே. ஆர் கையெழுத்து இடுகின்றனர்**

### "ஒப்பிரேசன் லிபரேசனும் பிரபாகரன் எடுத்த உயிராயுதமும்"

1987இல், தமிழர் மீதான சிங்கள அரசின் ஒடுக்குமுறை தனது உச்சத்தை எட்டியது. பெரும் பொருளாதாரத் தடையைத் தமிழர் மீது விதித்தது. 1987மே 26 இல், "ஒப்பரேசன் லிபரேசன்" என்ற பெயரில் கண்மூடித்தனமான பெரும் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து, போரியல் நடை முறைக்கு மாறாக எரி குண்டுகளை எண்ணிக்கையற்றளவு ஏவி. எரியூட்டி, எண்ணிக்கையற்ற தமிழ் மக்களைக் கொன்றுகுவித்தது. வடமராட்சியின் சில பகுதிகளைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. ஆயினும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அர்ப்பணிப்பு நிறைந்த விடுதலைப் போராட்டத்தினால் சிறீலங்கா இரா



**கரும்புலி கப்டன் மில்லர்**

யில், வாய்ப்பை பயன்படுத்தி, தெற்கிலே ஜே.வி.பி. கிளர்ச்சியாளரால் மேற்கொள்ளப்பட்ட எழுச்சி, சிறீலங்கா அரசுக்குப் பெருந்தலையிடியாக இருந்தது. இரண்டு போர்களை ஒரே நேரத்தில் வெல்ல முடியாதெனக் கணக்குப்போட்ட சிறீலங்கா அரசு, இந்திய அரசின் கால்களில் விழ்ந்தது.

இந்திய அரசும் இத்தகையதொரு வேளையைத் தான் எதிர் பார்த்திருந்தது. அமெரிக்காவின்பக்கம் சாய்ந்து கொண்டிருக்கும் சிறீலங்காவை எச்சரித்து, தனது கையகத்துக்குள் வைத்திருக்கவும் தனது பிராந்திய நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் இந்த நேரத்தை இந்தியா முறையாகப் பயன்படுத்திக் கொண்டது. இந்திய விமானங்கள் வடக்கு மாகாணத்திலே பறந்து உணவுப் பொட்டலங்களைப் போட்டுச் சென்றமை வார்த்தைகளில் சொல்லப்படாத கடும் எச்சரிக்கையாகவே சிறீலங்கா அரசுக்குத் தெரிந்தது.

40 ஆண்டுகால ஈழத்தமிழர் சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்கெனச் செய்துகொள்ளப்பட்ட இந்த உடன்படிக்கை ஈழத்தமிழர்களது போராட்ட நியாயங்களையோ வாழ்வியல் அவாவினை-யோ எந்த வகையிலும் கணக்கிலெடுத்து மதிப்பளிக்கவில்லை அடையாளங்கண்டு சிக்கல்களைத் தீர்க்கவுமில்லை.

1987 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆம் நாள், ஜே.ஆர் ஜெயவர்த்தனாவுக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையிலே இந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இலங்கை ஒரு பல்தேசிய பன்மொழி நிலவும் நாடு எனவும் ஒவ்வொரு இனமும் தனித்தனியான மொழி, பண்பாட்டு அடையாளங்கள் கொண்டது எனவும், வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்கள் மற்றும் இனங்களோடு வாழ்ந்து வரும் பாரம்பரிய வாழ்விடங்கள் எனவும் இலங்கை-இந்திய உடன்படிக்கை ஏற்றுக் கொண்டது. இந்த ஒருப்பாடுகள் எவையுமே





*மரியாதை அணிவகுப்பின் போது ராஜீவ் காந்தியைத் தாக்கும் சிங்களச் சிப்பாய்*

### தமிழர் எதிர்பார்ப்பைப் புறந்தள்ளிய இலங்கை இந்திய உடன்படிக்கை

இந்திய அரசும், சிறீலங்கா அரசும் தமிழர் நலன்களைக் கணக்கிற் கொள்ளாது தத்தம் நலன்களைப்பேணும் அடிப்படையிற் செய்துகொண்டதே இலங்கை, இந்திய அமைதி உடன்படிக்கை ஆகும். தமிழ் மக்களுக்காக, தமிழ் மக்களின் பங்களிப்பு ஏதுமின்றி இந்திய, சிங்கள அரசுகளுக்கிடையிற் செய்யப்பட்ட உடன்படிக்கை என்ற வகையில், அந்த உடன்படிக்கை உலகில் மிகவும் பேசப்பட்டது. இந்திய, இலங்கை உடன்படிக்கை என்பது வெறும் ஏட்டுச்சுரைக்காய் என்பதோடு சிறீலங்காவின் அதிபர் ஜே.ஆர் ஜெயவர்த்தனா தனது மாக்கியவல்லி அரசியல் தந்திரத்தால் இந்தியாவையும் உலகத்தையும் ஒரேநேரத்தில் ஏமாற்றியதோர் ஏற்பாடாகவே அது அமைந்தது. இந்தியாவைப் பொறுத்தவரையில் தனது பிராந்திய அரசியல் நலனைக் காப்பாற்றுவதற்குச் சிறீலங்காவுடன் செய்து கொண்ட ஒரு பொருத்தனையாக அது அமைந்தது.

நடைமுறைக்கு வரவில்லை. சிங்களப் பௌத்த பேரினவாதம் வழக்கம் போலச் சீறி எழுந்து கொழும்பு நகரை முற்றுகையிட்டது.

சிறீலங்காவின் பிரதமரான ரணசிங்க. பிரேமதாச முதல், கிளர்ச்சி அமைப்பான ஜே.வி.பி.பௌத்தப் பிக்குகள். இனவெறிச் சிங்களக் கும்பல், எல்லாமே திரண்டு வந்து உடன்படிக்கையையும் இந்தியாவின் தலையீட்டையும் எதிர்த்தன.

உடன்படிக்கை கையெழுத்தாகி சிறீலங்கா இராணுவ மரியாதையை ராஜீவ் காந்தி ஏற்று நடந்தபோது றோகண விஜிதமுனி என்ற இராணுவவீரன் தனது துப்பாக்கியால் ராஜீவ் காந்தியின் தலையில் அடித்தான், ராஜீவ்காந்தி அத்தாக்குதலிருந்து தப்பிக் கொண்டாராயினும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் உள்மனம் இந்த இராணுவ வீரனின் செயலைச் சரியானதென்றே ஏற்றுக் கொண்டது. அவனுக்கு Sun Stroke ஏற்பட்டிருக்கக் கூடுமென்று தான் ஜே.ஆர். ஜெயவர்த்தனா முதலில் திருவாய் மலர்ந்தார். துணிந்து நின்று ஒரு சாதாரண சிப்பாயின் கொடிய செயலை விமர்சிக்கக்கூட ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுக்குத் துணிவு





றோகண
விஜிதமுனி

இருக்க வில்லை. அத்துணைதூரம் சிங்கள பௌத்த பேரின வாதத்திற்கு அவர் பயந்தார். அல்லது அக்கொள்கையிலேயே தான் தனது எதிர்கால அரசியல் வெற்றிகள் தங்கியிருக்கின்றது என்று நம்பினார். சிறையிலே அடைக்கப்பட்ட இந்தச் சிப்பாய் தேசிய வீரனாகப் போற்றப்பட்டு தண்டனைக்காலத்துக்கு முன் னேயே சிறீலங்கா அரசால் விடுவிக்கப்பட்டான். இந்த ஒன்றே இலங்கை, இந்திய உடன் படிக்கையின் அர்த்தமற்ற தன்மைக் கும் இந்தியாவின் மீது இலங்கை அரசு வைத்திருந்த மதிப் புக்கும் ஒரு வெளிப் படையான சான்றாகும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்த ஒரு மாகாணசபை ஒரு முதலமைச்சரின் கீழ் அமைக்கப்படும் என உடன்படிக்கை உறுதியுரைத்தது. ஆனால், 1988.12.31 இற்கு இடையில் கிழக்கு மாகாண வாக்காளரிடமிருந்து எடுக்கப்படும் பொதுமக்கள் வாக்கெடுப்பு மூலம் வட மாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைந்திருப்பதா? பிரிந்து போய் இரண்டு மாகாணசபைகள் ஆவதா? என்ற தீர்மானம் எடுக்கப்படும் என்ற வரைமுறையையும் உடன்படிக்கை விதித்தது. தமிழர் தாயகத்தின் நிலையான நிரந்தரமான இணைப்புக்கு ஜே.ஆர். ஜெயவர்த்தனா வைத்த தந்திரமான ஆப்புத்தான் இந்தக் கட்டுப் பாடு. விடுதலைப்போராட்டத்தில் பல ஆயிரக்கணக்கான உயிர் உடைமை. வாழ்வியல் இழப்புக்களை எதிர்கொண்ட தமி ழர்கள் இந்த நச்சுத் திட்டத்தை எதிர்த்ததில் வியப்பென்ன இருக்கிறது.

இந்த உடன்படிக்கையைச் சிங்களப் பேரினவாதமும் எதிர்க்கத் தான் செய்தது. ஆனால், முற்றிலும் மாறுபட்ட இன்னொரு கோணத்திலிருந்து. வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண சபை இருக்கக்கூடாது என்பதுதான் சிங்களப் பேரினவாதத்தின் வாதமாக இருந்தது.

இந்த இணைப்புப் பற்றிய சிங்களவர் மனப்பாங்கு எப்படி இருந்தது என்பதை. அவர்களது எதிர்ப்பு நன்கு விளக்கியது. அவர்களைத் திருப்திப்படுத்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா என்ன செய்தார் என்பதிலே அவரது ஏமாற்றுத்தனம் நன்கு விளங்கும். 1987 ஆகஸ்ட் மாதம் 6ஆம் நாள், சிங்கள மக்களுக்கு ஜே.ஆர் ஜெயவர்த்தனா பின்வருமாறு உரையாற்றினார். “பிரிவினை கேட்போரை இந்தியாவிலிருந்து வெளியேற்ற இந்தியா இணங் குகிறது. பயங்கரவாதிகளை ஆதரித்துப் பரப்புரை செய்வோரை யும் பயங்கரவாதத்தைப் பேசி அதைச் செய்வோரையும் இந் தியா தனது மண்ணிலிருந்து வெளியேற்றும். சிறீலங்காவோடு ஆயுதமேந்தி மோத இந்தியாவிடமிருந்து ஆயுதங்கள், வெடி மருந்துகளோடு பயங்கரவாதிகள் வருவதைத் தடுக்க, எங்கள் கடற்கரையோடு சேர்ந்து ஒரு கண்காணிப்பு வலயத்தை உரு வாக்கவும் துணையாகச் செயற்படவும் இந்தியா இணங்கி யிருக்கிறது. வடக்கு கிழக்கு சட்ட ஒழுங்கைப் பேணவும் பயங்கரவாதிகள் சமாதானத்துக்கு வரவும், ஆயுதம் சுமந்து திரியாமல் பார்க்கவும் எனக்கு உதவுவதாகவும் இந்தியா இணங்குகிறது. இதனாற்றான் இந்தியப் படையை இங்கு நான் வரவழைத்தேன். இந்தியப்படை எனது கண்காணிப்பின் கீழே தான் இயங்கும். உங்கள் வீட்டுக்குத் திரும்பிப்போய் விடுங்கள் என்று நான் சொன்னால் அவர்கள் போய்விடுவார்கள்”.

இந்தியாவுக்கும் இந்தியப்படைக்கும் உடன்படிக்கைக்கும் ஜே.ஆர். ஜெயவர்த்தனா எவ்வளவு மதிப்புக் கொடுத்தார் என் பதை அவரது பேச்சு நன்கு புலப்படுத்தும். எத்தகைய ஒருப் பாடுகளை இந்திய அரசு சிறீலங்காவோடு செய்திருந்தது என் பதை ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் வார்த்தைகள் மிகத்தெளி வாகச் சொல்லின. வடக்கு கிழக்கு மாகாண இணைப்பைப்பற்றி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சிங்கள மக்களுக்குச் சொன்ன வார்த்தைகள் இலங்கை-இந்திய உடன்படிக்கை தமிழர்களின் விடுதலை அவாவைத் தீர்க்கப்போவதில்லை என்பதை வெள் ளிடை மலையாகக் காட்டியது.

“இந்த இணைப்புத் தற்காலிகமானதே. நிரந்தரமாக இருக்கப் போவதில்லை இணைப்புக்கெதிராக ஒரு வாக்கு விழுந்தாலும் பொதுமக்கள் வாக்கெடுப்பின் மூலம் கிழக்கு வடக்கிலிருந்து பிரி யும். எனக்கு வாக்கெடுப்பின் முடிவு பற்றி எந்தப்பயமும் கிடை யாது. இந்த இணைப்புக்கெதிரானவர்களை நான் கேட்கவிரும் புவது என்னவென்றால், வடக்கு கிழக்கு மாகாணங்கள் தொடர்ந்து இணைந்திருக்கக்கூடாது என்பதற்காகச் சேர்ந்து வேலைசெய்ய என்னோடு வாருங்கள்”.

தமிழர் தாயகம் தொடர்ந்து இணைந்திருந்தால் இலங்கைத் தீவை. தனிச் சிங்கள நாடாக்கும் தமது பேரவா கனவாகும் என் பதையும் அதற்கான முட்டுக்கட்டைகளையும் எவ்விதமும் போட்டே ஆக வேண்டும் என்பதையும் சிங்கள அரசு நன்கு புரிந்திருந்தும், இந்திய அரசை ஏமாற்றியது. இந்திய அரசும் தனது பிராந்திய நலன்களுக்காக, தமிழர்களை ஏமாற்றத் துணிந்தது. உடன்படிக்கையின் 2:11 பிரிவின்படி பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறையிலிருப்பவர்கள், போராளிகள், குறித்த சட்டங்களின் கீழ் குற்றம் சாட்டப்பட்டிருப்பவர்கள் ஆகி யோருக்கு சிறீலங்கா அதிபர் பொது மன்னிப்பு அளிக்கவேண் டும். ஆயுதம் ஏந்திய தமிழ் இளைஞர்கள் தேசிய வாழ்வுக்குத் திரும்பும்படியாக மீள் வாழ்வு அளிக்கும்படியாக தனி முயற் சிகளை சிறீலங்கா அரசு செய்யவேண்டும். இம் முயற்சிகளுக்கு இந்திய அரசு உதவியளிக்க வேண்டும்.



## தலைவர் அவர்களின் பேச்சைக் கேட்கத் திரண்ட மக்களின் ஒரு பகுதியினர்

இதிலே எந்தவொரு வாக்குறுதியையும் சிறீலங்கா அரசு நிறை வேற்றவில்லை. இந்திய அரசும் உதவவில்லை. இலங்கை அரசைத் தட்டிக் கேட்கவுமில்லை. இலங்கை இந்திய உடன் படிக்கையில் தமிழர்கள் பங்காளிகளாகவும் இல்லை. உடன் படிக்கையின் பின்னர் த.வி.கூட்டணியும் தமிழீழ விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய போராளிக் குழுக்களும் தமது அரசியல் நலன்களுக்காக அதை ஏற்று ஒத்தூதின.

### தமிழர் நலன்கருதி உடன்படிக்கையை எதிர்த்த புலிகள்

தமிழர்களின் நலன்களை அந்த உடன்படிக்கை முற்றாகவே புறக்கணிப்பதை அவர்கள் உணர்ந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அதை எதிர்த்தார் ஏற்றுக் கையொப்பமிட மறுத்தார் சிறீலங்கா அரசு உடன்படிக்கையில் ஏற்றுக்கொண்ட எந்தவொரு அரைகுறைத் தீர்மானத்தைத் தானும் நிறைவேற்ற முயலாது. அவ்வாறு நிறைவேற்ற, சிங் களப் பேரினவாதமும் பௌத்த மதமும் உறுதியாக விடப்போவ தில்லை என்று இந்திய அரசுக்கு எடுத்துரைத்தார். பேச்சுவார்த் தைக்கென தமிழீழத்திலிருந்து இந்தியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்ட புலிகளின் தலைவர் கறுப்புப் பூனைகள் படைசூழ நட்சத்திர விடுதியிலே வைக்கப்பட்டார் வற்புறுத்தப்பட்டார். தமிழர்களின் எதிர்காலத்திற்கு வேட்டுவைக்கும் இந்த உடன் படிக்கைக்கு ஒருப்படுவதைவிட “தற்கொலை செய்து விடலாம் என்றுகூட எண்ணுவதாக தமக்கு வே.பிரபாகரன் கூறியதாக வை.கோ அவர்கள் அப்போது பேசியிருந்தார். இருந்தாலும் இந்தியாவைப் பகைத்துக்கொள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் விரும்பவில்லை. **ராஜீவ்காந்தி பல்வேறு வாக்குறுதிகளை அளித்ததின்பேரில் இந்திய நல்லெண்ணதிற்கு இடங்கொடுக்க தமிழீழ மக்கள் சார்பில் விடுதலைப்புலிகள் முடிவெடுத்தனர். சிங்கள ஆட்சியாளரின் ஏமாற்றுக் குணத்தை இந்திய அரசு உணர்ந்துகொள்ள ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தக் கருதினர்.**

### பிரபாகரனின் வரலாற்றுச் சிறப்புமிக்க சுதுமலைப் பேச்சு

தமிழ் மக்கள் பாதுகாப்புக்கு இந்திய அரசு உறுதியளித்ததால் போர் நிறுத்தததுக்கும் ஆயுதக் கையளிப்புக்கும் தமிழீழ விடு தலைப்புலிகள் ஒப்புக் கொண்டனர். 1987.08.04ஆம் நாள் சுது மலையில் தன் முன்னே திரண்டிருந்த பல இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் முன்னே நடந்த கூட்டத்தில் இந்திய அமைதிப் படைகளின் தளபதிகள் கேட்கக் கூடியதாக வே. பிரபாகரன் பேசி னார். தேசிய சர்வதேச ஊடகவியலாளர்கள் நிறைந்திருந்தனர். அந்தப் பேச்சு ஒரு தனி மனிதனின் உரையல்ல. தமிழீழ ஆன் மாவின் பேச்சு என்பதை, அதைத் தொடர்ந்து நிகழ்ந்த போரும், அவலங்களும் உலகுக்கு மெய்ப்பித்தன. “எங்களுடைய விடு தலைப் போராட்டம் இன்று பெரிய திருப்பத்துக்குள்ளாகி இருக் கிறது. இந்தத் திருப்பங்கள் எங்களுக்குச் சாதகமாக அமையுமா என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்”



1987 ஆகஸ்ட் 04ஆம் நாள்
தலைவர் அவர்களின் சுதமலை அறிவிக்கை

“இந்த உடன்படிக்கையின் மூலம் தமிழர்களின் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத்தீர்வு வரும் என்று நான் நினைக்கவில்லை. சிங்கள இனவாதப் பிசாசு இந்த உடன்படிக்கையை விழுங்கும் காலம் வெகுதொலைவில் இல்லை. தமிழீழ மக்களின் பிரச் சினைகளுக்கான நிரந்தரத் தீர்வை, தமிழீழத் தனியரசு மட் டுமே தரமுடியும் என்பதுதான் எனது கணிப்பும் மாறாத நம்பிக் கையுமாகும். தமிழீழம் பெறுவதற்கான போரை நான் தொடர்- ந்து நடத்துவேன் என்பதை ஒருவித சந்தேக நிழலுமின்றி உங்களுக்குத் தெளிவாக்க விரும்புகின்றேன்.”



விடுதலைப் புலிகளின் ஆயுதக் கையளிப்பு

“போராட்டவடிவங்கள் மாறலாம். ஆனால், எமது போராட்டத் தின் நோக்கம் மாறப்போவதில்லை” திரு.பிரபாகரன் அவர்கள் ஆயுதக் கையளிப்பைப் பற்றிப் பேசும்போது, தமிழ் மக்களின் எதிர்காலப் பாதுகாப்பு இந்தியாவின் கைகளிலே அளிக்கப் படுகிறது என்பதையும் தெளிவாகக் குறிப்பிட்டார்.

### இந்தியாவின் முயற்சிக்கு புலிகள் கொடுத்த வாய்ப்பும் ஜெயவர்த்தனாவின் உடன்படிக்கை மீறலும்

29.07.1987 இல், சமாதானமும் இயல்பு நிலையும் ஏற்படுத்து வதற்காகவென இந்திய, இலங்கை உடன்படிக்கை கைச்சாத் திடப்பட்டது. இந்த உடன்படிக்கை முரண்பாட்டிலே சம்பந்தப் பட்ட பகுதியினரிடையே நடைபெற்றதல்ல. இருந்த போதும், இந்தியாவினுடைய பிராந்தியப் பாதுகாப்பு நலன்களை உறுதி செய்யும் அதேவேளையில், தமிழர்களின் தலைவிதியையும் தீர்மானித்தது. உண்மையில் சிறீலங்காத் தமிழர்களைப் பற்றிச் செய்யப்படுகின்ற முதலாவது உடன்படிக்கை இதுவல்ல. இவ் வுடன்படிக்கையே கடைசியாகவும் இருக்கப்போவதில்லை. இவ் வுடன்படிக்கைகள் தமிழர்களின் பிரதிநிதிகளையோ தலைவர் களையோ கலந்து அவர்களின் ஒப்புதல்களைப் பெற்றுக் கொள் ளாமலே செய்யப்பட்டு, அவர்களின் தலையிலே சுமத்தப்படுகின் றன. எந்தவொரு உடன்படிக்கையும் தமிழர்கள் அவாவை நிறைவேற்றவில்லை. துயரத்தையும் வேதனையையுமே விளைவாகத்தந்தன.



# உண்ணா நோன்பில் லெப். கேணல் திலீபன்

இந்திய-இலங்கை உடன்படிக்கை கூட இத்தகையதே. தமிழர்களின் தலையிலே பாறாங்கல்லாக வைக்கப்பட்ட உடன்படிக்கையே இது. இருந்தாலும் தமிழர்கள் விட்டுக்கொடுத்தனர். ஒத்துழைக்க முன்வந்தனர். உடன்படிக்கை வடக்கும். கிழக்கும் தமிழர்களின் தாயக நிலம் என ஒப்புக்கொண்டபோதும் உடன்படிக்கை கைச்சாத்தான அடுத்த நொடியிலிருந்தே ஜே. ஆர். ஜெயவர்த்தனா போர்நிறுத்த வாய்ப்பைப் பயன்படுத்தி, வடக்கு கிழக்கில் சிங்களக் குடியேற்றத்தைத் விரைவுப்படுத்தத் தொடங்கினார்.

***விடுதலைப் புலிகளின் ஆயுதக் கையளிப்பு***

போர் நடைபெற்ற காலத்தில் போராளிகளின் ஆயுத எதிர்ப்பால் முடியாமலிருந்த குடியேற்ற முயற்சியை, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி, கிழக்கில் பெருத்த வேகத்தோடும், முனைப்போடும் செயற்படுத்தினார். தமிழர்களின் மீட்பராக வந்த இந்தியாவிடம் தமிழர்கள் முறையிட்டுப் பார்த்தனர். இந்தியா கண்களை இறுக மூடிக்கொண்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பூகோளரீதியான தொடர்பைத் துண்டிக்கும் இந்தச் சிங்களக் குடியேற்றங்கள் பற்றி தமிழர்களின் எதிர்ப்புக்கள் எதுவித பயனையும் கொடுக்கவில்லை. சிங்கள ஆயுதப் படைகள் தமது முகாமுக்குள் இருப்பர் என்று உடன்படிக்கை கூறியது. ஆனால், ஆயுதம் தாங்கிய ஊர்காவலர்களும் சிறப்புக் கொமாண்டோக்களும் தமிழ்ப் பகுதிகளிலே திரிந்தனர். சட்டவிரோதமாக அரச ஆதரவுடன் நடைபெற்ற சிங்களக் குடியேற்றங்களுக்கும் பாதுகாப்பு அளித்தனர். ஆயுதத்தைக் கையளித்துவிட்ட வெறுங்கையர்களாக தமிழர்களின் நலன்களை வெல்லமுடியாத நிலையிருந்த விடுதலைப் புலிகள், அதற்கான உறுதி உரைகளை அள்ளி வழங்கி அப் பொறுப்புக்களை தமது கைகளில் தாங்கிக் கொண்ட, இந்தியாவிடம் முறையிட்டனர். அவர்களின் முறையீடு புறக்குடத்து நீராகியது.

ஆயுதக்களைவு என்ற உடன்படிக்கையின் பிரிவின்படி, விடுதலைப்புலிகள் இந்திய அமைதிப்படையின் பார்வையில், ஜே. ஆரின் பிரதிநிதியான சேபால ஆட்டிக்கலவிடம் ஆயுதங்களைக் கையளித்தனர். ஆனால், முகாம்களுக்குள் போகவேண்டிய அரசின் பொலிசாரும், படையினரும் ஆயுதங்களோடு வெளியே திரிந்தனர். உடன்படிக்கைக்கு கையொப்பத்தினுடனான ஒப்புதலை அளிக்க மறுத்த விடுதலைப் புலிகளை ஒடுக்கவும் ஒழிக்கவும் நினைத்த "றோ" அமைப்பு. தமிழர் நலன்களைத் தமது சுயநலத்துக்காகக் கைவிட்ட ஏனைய தமிழ்க் குழுக்களின் கைகளிலே பாரிய ஆயுதங்களைக் கொடுத்து, தெருவிலே தம்மோடு நிறுத்திக் கொண்டது. வெறுங்கையராக நின்ற விடுதலைப்புலிகளின் மீதும் நியாயமான விடுதலையை நேசிக்கும் தமிழ் மக்களின் மீதும் இந்தக் குழுக்கள் சிறீலங்காவினதும், இந்திய அமைதிப் படைகளினதும் ஆசீர்வாதத்தோடு, தமது வேட்டையைத் தொடங்கின. விடுதலைப்புலி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் நடுத்தெருவில் சுட்டுக் கொல்லப்படுவதும், சித்திரவதைக் குள்ளாக்கப்படுவதுமான காட்டு நீதி, தமிழீழத் தெருவெங்கும் ஆரம்பமாகியது. இவை உடன்படிக்கையின் உயிர்ப்புக்கும், நேர்மைக்கும் நோக்கத்துக்கும் ஊறவிளைவிக்கின்றன என்பதை. பலமுறை சுட்டிக்காட்டியபோதிலும் அவை யாவும் சாத்தான் முன் படிக்கப்பட்ட வேதமாகப் பயனொழிந்தன.

உடன்படிக்கையில் உத்தரவாதப்படுத்தப்பட்ட இடைக்கால மாகாணசபை சிறீலங்கா அரசினால் வேண்டுமென்றே இழுத்தடிக்கப்பட்டது. முதலமைச்சர் பதவிக்காக புலிகளினால் முன்மொழியப்பட்ட பத்மநாதனின் பெயர் ஜே.ஆரினால் மறுதலிக்கப்பட்டது. அவர் வழக்குகளில் தொடர்புபட்டிருந்தார் என்பதே மறுப்புக்காகச் சொல்லப்பட்ட காரணம். ஆனால், அவை அரசியல் சார்ந்த வழக்குகளே. உடன்படிக்கையில் சொல்லப்பட்ட பொது மன்னிப்பு விதி ஜே.ஆரால் மறுக்கப்பட்டபோது இந்திய அரசு கையாலாகாமற் பார்த்துக் கொண்டிருந்தது மட்டுமன்றி, புலிகள் முன்வைத்த காசியானந்தனின் பெயரை, தான் விரும்பில்லை என்று மறு ஆப்பு வைத்தது. உண்மையில் இந்த உடன்படிக்கையை அதன் நிபந்தனைகளின்படி நிறைவேற்றுவது சிறீலங்கா அதிபரின் நோக்கமல்ல. தமிழர்களின் நலனுக்காகப் பேசிவந்த இந்திய அரசினை தமிழர்களுக்கெதிராகத் திருப்பி விடுவது ஒரு நோக்கம். இந்த வேளையைப் பயன்படுத்தி வடக்கில் நிறைத்து வைக்கப்பட்டடிருந்த சிறீலங்கா இராணுவத்தை. தென்னிலங்கைக்குத் திருப்பி அழைத்துப் பயன்படுத்தி, தெற்கிலே வலிமை பெற்று வந்த ஜே.வி.பி. கிளர்ச்சியாளர்களை ஒடுக்குவது இன்னொரு நோக்கம். இந்த இரண்டு திட்டங்களிலுமே ஜே.ஆர். வெற்றியடைய இந்திய இராசதந்திரத்தின் படுகேவலமான தோல்வியின் விலையை தமிழர்கள் செலுத்த நேரிட்டதே வரலாறு சொல்லும் துயர்நிறைந்த பாடம். ஆயுதக் கையளிப்பின் பின்னர்கூட, தமிழ்ப் போராளிகளை ஜே.ஆர். பயங்கரவாதிகள் என்றே அழைத்தார். உடன்படிக்கையின் போதும் அதன்பிறகான பத்திரிகையாளர் மாநாட்டிலும் அதைத் தொடர்ந்து நாட்டு மக்களுக்கான உரையிலும் இந்தியப் பிரதிநிதிகளை வைத்துக்கொண்டே விடுதலைப்புலிகளை "பயங்கரவாதிகள்" என்று குறிப்பிட ஜே.ஆர். மறக்கவில்லை. இந்த உடன்படிக்கையை, சிங்கள மக்களைக் காப்பாற்றும் உடன்படிக்கையாக ஜே.ஆர். கருதினாரே அன்றி, தமிழ் மக்களுடைய பேரவாவை அடையாளம் கண்டு அவர்களுக்கு நீதிவழங்கும் உடன்படிக்கையாக அவர் கருதவில்லை.

1987 யூலை 29ஆம் நாளைய, ரூபவாகினி உரையில் ஜே.ஆர் வெளிப் படையாகவே கூறினார். அந்த உரையின் உள் நோக்கம் இந்தியாவுக்குப் புரியாததுதான் விந்தை. "2500 ஆண்டுகளுக்கு முன் இளவரசர் விசயனின் இலங்கை வருகைக்குப் பின், இந்தியத் தலைவரின் (ராஜீவ்) இந்த வருகை முக்கியம் வாய்ந்தது. இளவரசர் விசயன் சிங்கள இனத்தைத் தோற்றுவித்தார். ஆனால், பிரதமர் ராஜிவ்காந்தி கையொப்பமிட்ட இந்த உடன்படிக்கை சிங்கள இனத்துக்கு ஒரு மறு பிறப்பைக் கொடுக்கும் என்று நான் நினைக்கின்றேன். ஏனென்றால், சிறீலங்காவில் குறிப்பாக வடகிழக்கு மாகாணங்களின் சண்டைகளால் எங்களுக்கிடையிலான (சிங்களவர்) முரண்பாட்டால், வன்முறையால் மற்றும் மனிதக் கொடுமைகளில் அட்டூழியங்களால் அழிந்து போயுள்ளோம். இந்த உடன்படிக்கை சிங்கள இனத்துக்குக் கிடைத்த வரம்." என ஜே.ஆர் பேசியது முற்றிலும் உண்மை. இதனை இன்னொரு இடத்திலே அவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

"இந்திய அமைதிகாக்கும் படை வராதிருந்தால் நாங்கள் புலிகளோடு சண்டை செய்துகொண்டிருக்க நேர்ந்திருக்கும். நாங்கள் சம்பள அதிகரிப்புக்குச் செலவு செய்யும் தொகையைவிட மேலான தொகையைச் சண்டைக்குச் செலவுசெய்ய நேரிட்டிருக்கும்" என்று ஜே.ஆர். பேசியதாக 1987.12.27ஆம் நாளைய பி.ரி.ஐ செய்தி சொல்கிறது. இன்னொரு இடத்தில் பேசும்போது, இந்தியப்படைகளை நாம் அழைத்திராவிட்டால், இந்த நாட்டை தமிழர்களுக்குத் தாரைவார்க்க வேண்டி வந்திருக்கும் என்றும் ஜே.ஆர் இனவாதத்தைக்கக்கத்தவறவில்லை. ஜே.ஆர் உட்பட எந்தவொரு சிங்களத் தலைவரும் ஒருகாலமும் தமிழர்களை, சிறீலங்காவின் உரிமையுள்ள குடிமக்களாகக் கருதவேயில்லை. கனடிய பத்திரிகைக்கு செவ்வியளித்தபோது கனடிய முறைப்படி உங்கள் பிரச்சனைக்கு ஏன் தீர்வு காணமுடியாது எனச் செய்தியாளர் கேட்டார். அப்போது ஜே.ஆர் அவருக்குத் திருப்பிச் சென்னார். கனடாவுக்கு தங்கள் பிரச்சனையைத் தீர்ப்பது வெகுசுலபம். ஏனென்றால், உங்கள் மக்கள் அனைவருமே கனடியர்கள். ஜே.ஆரின் இந்தப்பதில் தமிழர்களை இலங்கையராக அவர் கருதவில்லை என்பதையே காட்டுகின்றது. (சிங்களத் தலைவர்களுடைய இந்த வெறியை நன்கு இனங் கண்ட பிரெயின் செனிவிரத்தின என்ற சிங்கள அறிவியலாளர்) இலங்கையின் பிரச்சினை என்பது தமிழ்ப் பயங்கரவாதமல்ல சிங்களத் தீவிரமாதமே. என்று தனது கட்டுரையிலே எழுதினார். அவரே பிறிதொரு இடத்தில் வருத்தத்தோடு "சிறீலங்காவெனும் பௌத்த நாட்டில் தமிழராக இருக்கும் பட்சத்தில், அவரைக் கொல்லுவது அனுமதிக்கப்படக் கூடியதே என்ற கருத்து பரவி வருவது வியப்புக்குரியதாக இருக் கின்றது. தமிழர்கள் தெற்கு ஆபிரிக்காவின் கறுப்பு நீக்ரோக்கள் நடத்தப்படுவதைப் போல மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்டு கேவலப் படுத்தப்படுகிறார்கள்" என்றார்.



பிரெயின் செனிவிரத்தினா

பிரெயின் செனிவிரத்தினாவின் கருத்து மேலெழுந்த வாரியானதல்ல. சிங்களப் பேரினவாதிகளின் வேதப்புத் தகமான மகாவம்சம் கூட இதனையே கூறுகின்றது. போர் வெற்றியின் பின் இலட்சக் கணக்கான மனிதர் (தமிழர்) களைக் கொன்றதற்காக துயருற்றிருந்த துட்டகை முனுவைத் தேற்ற வந்த 500 புத்த பிக்குகளும், "பௌத்த மதத்தை ஏற்றுப் பேணாத தமிழர்கள் விலங்குகளைவிடக் கேவலமானவர்கள். அவர்களைக் கொல்வது கொலையாகாது." என்று கூறித் தேற்றுவதாக மகாவம்சம் கூறுகின்றது. "இலங்கையில் வனவிலங்குகளுக்குக்கூடச் சரணாலயம் உண்டு. தமிழர்கள் மதிப்புடன் வாழ அது கூடக் கிடையாது." என்று பேசினார் வை.கோபாலசாமி. உடன்படிக்கையின் கீழான எந்தவொரு விடயமும் நிறைவேற்றப்படாத நிலையில், உயிரிழப்புக்கு ஆளானபோதும் விடுதலைப் புலிகளோ, தமிழ் மக்களோ உணர்ச்சிவசப்பட்டு ஆயுதத்தைத் தூக்கவில்லை. இடைக்கால மாகாணசபை அமைப்பதிலுள்ள இழுத்தடிப்பை, சிங்களக் குடியேற்றத்தை, பொலிஸ் ஊர்காவற் படை ஆயுதம் தாங்கிய தமிழ்க் குழுக்களின் அட்டூழியத்தை இந்திய அரசுக்குத் தெரிவித்து, அதைத் தடுத்து நிறுத்துமாறு கோரும் அமைதி வழியான போராட்டத்தைச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

விடுதலைப்புலி திலீபன் 15.09.1987இல், யாழ்ப்பாண நல்லூர்க் கந்தன்கோவில் முன்றலிலே. நீர்கூட அருந்தாது சாகும் வரையான உண்ணா நோன்பைத் தொடங்கினார். இந்திய இலங்கை உடன்படிக்கையை உள்ளவாறு நிறைவேற்றும் படியும், விடுதலைப்புலிக்கு இந்திய அரசு வழங்கிய உறுதி மொழியைச் செவ்வனே நிறைவேற்றும்படியும் கோரிக்கை விடுத்து அவரது உண்ணா நோன்பு தொடங்கியது. மக்கள் வெள்ளம் அவர் முன்னே திரண்டது. பல்வேறு இடங்களில் அவரின் கோரிக்கையை ஆதரித்து வலுச் சேர்க்கும் வகையில் உண்ணா நோன்புப்போர் விரிந்தது. முல்லையில் சிங்களப் படைகளால் தமது நிலங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட கொக்கிளாய் மக்கள் மறியற்போர் செய்தனர். ஆனால், இந்திய அரசு அசைந்து கொடுக்கவில்லை, மாறாக சிறீலங்காவிற்கான இந்தியத் தூதுவர் டிக்ஸிற் திலீபனது போராட்டத்தை இழிவு செய்வது போலப் பேசி, தமிழர்களின் ஆத்மாவை மேலும் காயப்படுத்தினார். திலீபன் 26.09.1987 இல் உயிர்துறந்தார்.

- தமிழர் ஏமாற்றப்பட்ட வரலாறு தொடரும்....




## தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# புதுக்குடியிருப்பு ஐயன்கோவிலடி படுகொலை 21 ஏப்ரல் 1985

முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு நகரிலிருந்து இருபது கி.மீ தூரத்தில் புதுக் குடியிருப்புப் பிரதேசம் அமைந்துள்ளது. புதுக் குடியிருப்புப் பிரதேசத்தில் பல்வேறு தொழில் களைச் செய்யும் மக்கள் வாழ்கின்றனர். கூடுத லானவர்கள் விவசாயத்தையே தொழிலாக மேற்கொள்கிறார்கள்.

இக்கிராமம் அடிக்கடி இராணுவச் சுற்றி வளைப்புக்கு உட்படுவதுண்டு. 21-04-1985 அன்று இக்கிராமம் அதிகாலை சுற்றிவளைக் கப்பட்டுப் பல பொதுமக்கள் கைது செய்யப்பட் டார்கள். கைது செய்யப்பட்டவர்கள் புதுக்குடியி ருப்பு எரிபொருள் நிரப்பு நிலையம் அருகில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் சிலர் அரச உத்தியோகத்தர்களென அடை யாளம் காணப்பட்டு விடுதலை செய்யப் பட்டனர். விடுதலை செய்யப்படாத அனை வரும் அன்று மாலை மூன்று மணியளவில் புதுக்குடியிருப்பிலிருந்து ஒட்டுசுட்டான் நோக்கி இராணுவத்தினரின் வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

கைதுசெய்து கொண்டு சென்றவர்களில் இரு பத்து நான்கு பேரை இராணுவம் காட்டுக்குள் வரிசையாக நிற்கவைத்துச் சுட்டது. இவர் களில் இராமநாதன், துரைரட்ணம் ஆகிய இருவரும் காயப்பட்ட நிலையிலும், செபஸ்ரியாம்பிள்ளை, நடனசபாபதி ஆகியோர் காயம் எதுவுமின்றியும் தப்பினார்கள்.

இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு உட் பட்டவர்கள் அனைவரையும் இராணுவ ராக் வண்டியில் ஏற்றி ஒட்டுசுட்டான் நோக்கிச் செல்லும் வழியில் காயாமோட்டை என்னும் இடத்தில் தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருந்த வர்களையம் கைது செய்துகொண்டு இடை யில் இறக்கிவிட்டு சென்றனர். காயப்பட்டுக் குற்றுயிராகக் கிடந்தவர்களும் தண்ணீர் தண்ணீர் என்று கத்தியபடி பரிதாபமாக உயிரிழந்தார்கள்.

அடுத்தநாள் கற்சிலைமடுவில் வைத்து மக்க ளைக் கொண்டு ரயர்கள் சேகரித்து இராணுவ வாகனத்தில் ஏற்றிச்சென்று ஒட்டுசுட்டான் காவல்துறை நிலையத்தின் பின்புறத்தில் வைத்து ரயர்கள் மீது இறந்தவர்களின் உடல் களை அடுக்கித் தீமூட்டி எரித்தார்கள்.

புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்க முன்னாள் தலைவர் துரைரட்ணம் சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்,
“அதிகாலையில் நகரைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் பலரைக் கைது செய்தனர். அதில் அரசாங்க ஊழியர்கள் விடுவிக்கப்பட் டனர். விசாரணை முடிந்த பின்னர் எல்லோரையும் 3.00 மணியளவில் ஏற்றி ஒட்டுசுட்டான் வீதி நோக்கிச் சென்றனர். பின் காட்டுப்பகுதியில் வைத்து எல்லோரையும் இறக்கி அவ்வீதியிலிருந்த சிறு வீதியில் வைத்து வரிசையாக நிறுத்திச் சுட்டனர். இதில் நானும் நடனசபாபதியும் படுகாயத்துடன் உயிர் தப்பினோம்.”

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர், வயது)

1. கனகசுந்தரம் கருணானந்தம், 39, -
2. சீனி ஜோசப், 32, -
3. சீனி தேவதாஸ், 24, -
4. அதிரியான் அமலதாஸ், 19, -
5. அப்பையா இந்திரன், 32, -
6. றைமேந்து இருதயநாதன், 45, -
7. தாமோதரம்பிள்ளை, 20, -
8. மாணிக்கம் பௌளின்ராசா, 21, -
9. கிட்டினன், 32, -
10. சங்கரப்பிள்ளை சத்தியசீலன், 21, மாணவன்
11. சிங்கரத்தினம் இளங்கோ, 18, மாணவன்
12. அந்தோனிப்பிள்ளை சுவாம்பிள்ளை, 32, விவசாயம்
13. அந்தோனிப்பிள்ளை டைட்சிங்ஸ்சி, 16, தொழிலாளி
14. அப்பையா புவனேந்திரன், 32, விவசாயம்
15. வினாயகமூர்த்தி ரகுநாதன், 28, தனியார்தொழில்
16. பெரியதம்பி பாலசுந்தரம், 30, தொழிலாளி
17. இலட்சுமணன், 30, -

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)






www.sangathamil.com

# பட்டித்திடல் படுகொலை 26.04.1987



திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூரிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலையில் பத்து கி.மீ. தொலைவில் பட்டித்திடல் கிராமம் அமைந்துள்ளது. மல்லிகைத்தீவு கிராமசபை எல்லைக்குள் அமைந்துள்ள இப்பூர்வீக கிராமத்தில் விவசாயம் செய்பவர்களும் கூலிவேலை செய்பவர்களும் அதிகமாக வாழ்கின்றார்கள். 1987ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சிங்கள இராணுவத்தின் தாக்குதல்கள் ஆங்காங்கே இடம் பெற்ற வண்ணம் இருந்தன. பட்டித்திடல் கிராமமும் 26.04.1987 அன்று இராணுவத் தாக்குதலுக்குள்ளாகியது.

பட்டித்திடல் கிராமத்திலிருந்து நெடுஞ்சாலையின் மேற்கே மல்லிகைத்தீவு சந்தியும் வாசிகசாலையும் உள்ளன. அப்பகுதியில் மோதல் சம்பவங்கள் நடந்தது. அதனை அறிந்த மக்கள் தாங்கள் இராணுவத்தால் தாக்கப்படுவோம் என்ற அச்சம் காரணமாக ஊரைவிட்டு அகன்றுவிட்டனர். பழிதீர்க்கும் எண்ணத்தில் கிராமத்திற்குள் வந்த இராணுவத்தினர் மக்களை தேடி வந்த போது கிறிஸ்தவக் குடம்பமான பொன்னம்மா குடும்பத்தை சேர்ந்த பதினெட்டுப் பேர் தாங்கள் கிறிஸ்தவர்கள் என்பதால் தங்களுக்கொன்றும் நடக்காது என்ற நம்பிக்கையில் இறைவழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

வீடு வீடாகத் தேடிக்கொண்டு வந்த இராணுவத்தினர் இறை வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன். குற்றுயிரோடு இருந்தவர்களை வெட்டிவிட்டு அனைவரையும் குறிப்பாக குறை உயிரோடு இருந்தவர்களையும் வீட்டினுள் வைத்துத் தீயிட்டு படுகொலை செய்தனர். மொத்தம் ஒரே குடும்பத்தில் பதினேழு பேர் உயிரிழந்தனர். அதில் மூன்று கைக்குழந்தைகளுக்கும் பாடசாலை மாணவ, மாணவிகளும் அடங்குவர். தாக்குதல் நடந்த வீட்டிலிருந்து திரு.கோணன் உலகநாதன் என்பவர் மட்டுமே உயிர் தப்பினார்.

26.04.1987 அன்று பட்டித்திடல் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:

1.உலகநாதன் ஜெயப்பிரியா (வயது 06)
2.உலகநாதன் ஜெயரதி (வயது 01 – குழந்தை)
3.உலகநாதன் யோகேஸ்வரி (வயது 26 – வீட்டுப்பணி)
4.கோனன் பத்தினியன் (வயது 42 – தொழிலாளி)
5.பத்தினியன் சீதையம்மா (வயது 34 – வீட்டுப்பணி)
6.பத்தினியன் நேசன் (வயது 17 – மாணவன்)
7.பத்தினியன் பிரகாஸ் (வயது 13 – மாணவன்)
8.பத்தினியன் சோபனா (வயது 12 – மாணவி)
9.பத்தினியன் கிருசாந்தி (வயது 10 – மாணவி)
10.பத்தினியன் அற்புதராசா (வயது 08 – மாணவன்)
11.கோணன் பொன்னம்மா (வயது 60 – வீட்டுப்பணி)
12.கோணன் மேரி (வயது 23)
13.சின்னத்துரை யோகேஸ்வரி (வயது 29)
14.சிந்தாமணி பாலமுருகன (வயது 11 – மாணவன்)
15.சிந்தாமணி யோகராசா (வயது 14 – மாணவன்)
16.சிந்தாமணி கோகுலேஸ்வரி (வயது 15 – மாணவி)
17.சிந்தாமணி செந்தில்மணி (வயது 30 – கமம்)

மூலம்: தமிழினப் படுகொலைகள் 1956 – 2001 நூல்.









# கரப்பொழை, முத்துக்கல் படுகொலை ஏப்ரல் 1987

கரப்பொழை, முத்துக்கல் கிராமங்கள் பொல நறுவை மாவட்டத்தில் அமைந்துள்ளன. இக்கிராமங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக்கிராமங்களாகும். இக்கிராம மக்களின் பிரதான தொழில் கூலிவேலை செய்தல், மந்தை வளர்த்தல், காடுகளிற் தேனெடுத்தல் என்பனவாகும்.

29.04.1992 அன்று நள்ளிரவு இராணுவத் தினரும் முசுலிம் குழுக்களும் இணைந்து பகல் முழுவதும் வேலை செய்த களைப்பில் இரவு நல்ல உறக்கத்திலிருந்த கரப்பொழை, முத்துக்கல் கிராமமக்களை, அவர்களின் வீடுகளினுட் புகுந்து வெட்டிப் படுகொலை செய்தனர். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், குழந்தைகளென தொண்ணூற்றேழிற்கும் மேற்பட்டவர்கள் இராணுவத்தினராலும் முசுலிம் குழுக்களினாலும் படுகொலை செய்யப்பட்டார்கள். இதனைத் தொடர்ந்து இரண்டு கிராம மக்களும் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றார்கள்.

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# புத்தூர் படுகொலை – 18 ஏப்ரல் 2006

புத்தூர் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த கிராமம். புத்தூரைச் சேர்ந்த கண்ணன் என்னும் முச்சக்கரவண்டி சாரதி தமது வர்ணம்தீட்டும் நண்பரை வழமையாக வேலை முடிவடைந்ததும் அவரது வீட்டில் இறக்கி விடுவார். வழமைபோல் ஏப்பிரல் 18ஆம் நாள் தமது வர்ணம்தீட்டும் நண்பரை அவரது வீட்டில் இறக்கிவிடுகிறார். அந்த முச்சக்கர வண்டியில் மேலும் மூன்று நண்பர்கள் உல்லாசமாக பிரயாணம் செய்வதற்காக சென்றனர். முச்சக்கரவண்டி தாண்டிச் சென்ற கடையில் நின்ற நபர்கள் அந்த வண்டி நிறைய ஐந்து நண்பர்களும் அடுக்கி ஏற்றிக்கொண்டு கடையை தாண்டி வர்ணம்தீட்டும் நண்பரை இறக்கிவிடுவதற்கு சென்றதையும், பின்பு வர்ணம்தீட்டும் நண்பரை தவிர ஏனைய நான்கு நண்பர்களும் திரும்பி சென்றதையும் கண்டிருக்கின்றார்கள். சிறீலங்கா இராணுவத்தினர் மோட்டார் சைக்கிளில் முச்சக்கர வாகனத்தின் பின்னால் வந்ததையும் பின்பு அதை நிறுத்தி திருப்பி அனுப்பியதையும் கடையில் நின்ற நபர்கள் கண்டிருக்கின்றார்கள். அந்தவேளையில் வேறு ஒரு நபர் சைக்கிளில் வந்து கடையடியில் இறங்கி சீனி வாங்கிக்கொண்டு முச்சக்கரவண்டி சென்ற பக்கமாக தமது வீட்டுக்குத் திரும்பிச் சென்றதையும் கண்டார்கள். இரவானதும் தமது மகன் கண்ணன் வீடு திரும்பாததால் அவரது தகப்பன் அவரை தேடிசென்றபோது மகனின் உடலத்தையும் முச்சக்கர வண்டியையும் றோட்டில் கண்டார். ஆரம்பத்தில் மிகுதி நான்கு நண்பர்களையும் தேடிப்பார்ப்பதற்காக அப்பகுதிக்குச் செல்ல சிறீலங்கா இராணுவம் எவரையும் அனுமதிக்கவில்லை. ஈற்றில் தேடிப்பார்ப்பதற்கு மக்கள் அனுமதி பெற்றுப் போனபோது நான்கு நண்பர்களினதும் கடையில் சீனி வாங்கிய நபரினதுமாக ஐந்து சடலங்களை றோட்டோரமாக இருக்கும் வயலிலிருந்து மீட்டெடுத்தனர்.







இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் விபரம் (பெயர் வயது)

01. கந்தசாமி கௌரிபாலன், 32
02. செல்லன் கமலதாசன், 25
03. தங்கராசா கவீந்திரன், 23
04. மகாதேவன் கிசோக்குமார், 22
05. சுப்பிரமணியம் கண்ணதாசன், 27











எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.





# திருகோணமலை மூதூர் படுகொலை 25 ஏப்ரல் 2006

திருகோணமலை மூதூர் கிழக்கில் 2006 ஏப்ரல் 25ஆம் நாள் புதன்கிழமை மாலை 5.30 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை சிறீலங்கா விமானப்படையினர் கிபிர் விமானங்கள் மூலம் தாக்குதலை மேற்கொண்ட அதேசமயம் சிறீலங்கா இராணுவத்தினர் ஆட்லெறி, பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர் இதன்போது குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் பெண்களென 12 தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். நசுக்கப்பட்ட 12 பொதுமக்களின் உடல்கள் இத்தாக்குதலின் பின் கண்டெடுக்கப்பட்டது. இதில் 4, 15, 16 வயதான மூன்று சிறுவர்கள் அடங்குவர் இத்தாக்குதலைத் தொடர்ந்து 3000 குடும்பங்கள் மூதூர் கிழக்கிலிருந்து இடம்பெயர்ந் தனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களில் 25 பொதுமக்கள் மேற்சொன்ன தாக்குதலில் காயப்பட்டவகளாவர்கள்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

1. ஞானசேகரம் ரேணுகரன், 23
2. செல்வராணி, 32
3. மெய்யன், 34
4. மெய்யன் கிருசாந்தன், 04
5. நாகையா ருக்குமணி, 49
6. நவரட்னம் ரஞ்சிதமலர், 56
7. பத்தினியன் நாகம்மா, 67
8. தர்மலிங்கம் சுரேஸ்ரூபன், 23
9. துரையப்பா ரதீஸ், 15
10. வரதன் ராஜ்குமார், 16
11. வீரபத்திரன் பகவதிப்பிள்ளை, 67
12. ஏ.மயூரன், 21
13. விழிராசா மயூரன், 21



# விசுவமடுவில் உள்ள புன்னைநீராவியடியில் சிறீலங்கா விமானப்படையின் வான் தாக்குதலில் 15 வயது பாடசாலை மாணவி பலி - 17.04.2008

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள விசுவமடுவில் உள்ள புன்னைநீராவியடியில் வியாழக்கிழமை காலை 6:30 மணியளவில் இலங்கை விமானப்படையின் குண்டுவீச்சு தாக்குதலில் 15 வயது சிறுமி கொல்லப்பட்டதாக தமிழீழ காவல்துறை தெரிவித்துள்ளது. விசுவமடு சந்தியில் இருந்து ஒன்றரை கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள பிறமந்தன் ஆற்றில் உள்ள சிவிலியன் குடியிருப்பு மீது நான்கு விமானப்படை குண்டுவீச்சாளர்கள் 16க்கும் மேற்பட்ட குண்டுகளை வீசினர்.

விமானப்படை தாக்குதலில் கொல்லப்பட்ட 15 வயதான அஞ்சலஸ் சுலக்சனா, கிளிநொச்சி புனித பாத்திமா பெண்கள் பாடசாலையில் தரம் பத்தாம் மாணவி.

சுலக்சனா தவணை இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் விசுவமடுவில் தனது உறவினர்களுடன் தங்கியிருந்தார்.

எட்டுக்கும் மேற்பட்ட வீடுகள் மீது வெடிகுண்டுகள் விழுந்து வெடித்ததில் வீடுகள் சேதமடைந்தன.



**இந்த உலகமானது**
**மானிட தர்மத்தின் சக்கரத்தில் சுழலவில்லை. ஒவ்வொரு நாடும் தனது தேசிய சுயநலத்தையே முதன்மைப்படுத்துகின்றது.**
**மனித உரிமை, மக்கள் உரிமை என்ற தார்மீக அறத்திலும் பார்க்க பொருளாதார, வர்த்த நலன்களே இன்றைய உலக ஒழுங்கமைப்பை நிர்ணயிக்கின்றன.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# பாதுகாப்பு வலயத்தின் மீதான சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்; பல பொதுமக்கள் படுகொலை – 15.04.2009



தமிழீழ விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு வீதியில் இருந்து இரட்டை வாய்க் கால் சந்தியை இலக்கு வைத்து சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதலில் ஈடுபட்டனர். இரட்டைவாய்க்கால் சந்திப்பு அருகே, பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படும் நுழைவாயிலுக்கு அருகில் கடுமையான சண்டை இடம்பெற்றது. முள்ளிவாய்க் காலில் தாக்கிய மல்டி பீரல் ரொக்கெட் லாஞ்சர் (எம்பிஆர்எல்) குண்டுகள் பாதுகாப்பு வலயத்தை உலுக்கியதால், சிறீலங்கா விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்கள் காலை வேளை யில் குறைந்தது 6 தடவைகள் இப்பகுதியைத் தாக்கியதுடன், மாலையில் ஹெலிகாப்டர் துப்பாக்கிக் கப்பல்கள் ராக்கெட்டு களைச் சுடுவதைக் காண முடிந்தது. இறந்த பொதுமக்கள் அவர்கள் தாக்கப்பட்ட இடத்தில் புதைக்கப்பட்டதால், காய மடைந்த 83 பொதுமக்கள் மட்டுமே மாலை 5:00 மணி வரை புதுமாத்தளனில் உள்ள மருத்துவமனைக்குச் செல்ல முடிந்தது என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தனர்.

காயமடைந்த 12 நோயாளிகள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படாமல் செல்லும் வழியில் இறந்துவிட்டதாக மருத்துவ வட்டாரங்கள் முன்னதாக தெரிவித்தன. எறிகணைத் தாக்குதல் நிறுத்தப்பட்டதையடுத்து, மருத்துவமனை ஆம்புலன்ஸ்களை முள்ளிவாய்க்காலுக்கு அனுப்பியது. மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்ட 83 பேரில், 6 பேர் அனுமதிக்கப்பட்ட பின்னர் இறந் ததாக மருத்துவ அதிகாரிகள் மாலை 5:00 மணியளவில் தெரிவித்தனர்.

இதனிடையே வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்ட சிவஞான மூர்த்தி பிரசிதா என்ற 2 வயது பெண் குழந்தை மருத்துவ மனையில் புதன்கிழமை உயிரிழந்தது. ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் வயிற்றுப்போக்கால் பல குழந்தைகள் பாதிக்கப்பட் டுள்ளனர். தேவைகளுக்கு ஏற்ப மனிதாபிமான பொருட்கள் கொண்டு வரப்படாததால் நிலைமை மோசமடைந்து வருவதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

மருத்துவமனையில் உள்ள குழந்தைகள் வார்டு காயம் மற்றும் நோயாளிகளால் நிரம்பியது.

கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இரண்டரை மாத குழந்தை சகிலாவின் உயிரை மருத்துவர்களால் காப்பாற்ற முடியவில்லை. குழந்தை செவ்வாய்க்கிழமை இறந்தது.

மேலும், வார்டில் அறுவை சிகிச்சைக்குப் பின் 4 நோயாளிகள் இறந்தனர்.













# உயர் பாதுகாப்பு வலயத்தின் மீது தாக்குதல்; 57க்கும் மேற்பட்டோர் படுகொலை – 16.04.2009

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறீலங்கா படைகளின் ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் வியாழன் அன்று பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படுவதற்குள் 57 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதாக வன்னியில் உள்ள செய்தியாளர் தெரிவித்தார். வியாழன் அன்று சிறீலங்கா இராணுவத்தால் ஏவப்பட்ட எறிகணைகள்; நிருபரால் கிட்டத்தட்ட 1,500 ஷெல் வெடிப்புகள் பதிவு செய்யப்பட்டன, அவற்றில் சுமார் 600 குண்டுகள் பாதுகாப்பு வலயத்தைத் தாக்கியதுடன், சுமார் 150 பீரங்கி குண்டுகள் கடற்கரையைத் தாக்கின.



காயமடைந்த பொதுமக்கள் புதுமாத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

காலை 9:30 மணி முதல் 12:30 மணி வரை முள்ளிவாய்க்கால் மற்றும் இரட்டை வாய்க்கால் மீது தீவிர ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. பொக்கனைப் பகுதியும் சிறீலங்கா படையினரின் எறிகணைகளால் தாக்கப்பட்டது.

நாள் முழுவதும் துப்பாக்கிச் சூடு பரிமாற்றம் தொடர்ந்து நடந்ததாக தெரிவிக்கப்பட்டது.

வியாழன் அன்று புதுமாத்தளன் தற்காலிக மருத்துவமனையில் 130 பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டனர், அவர்களில் 107 பேர் சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலால் காயமடைந்துள்ளனர் மற்றும் 23 பேர் சிறீலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூடு காரணமாக துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு உள்ளாகியிருந்தனர். நோயாளிகளில் 7 பேர் அனுமதிக்கப்பட்ட பிறகு இறந்தனர். காயமடைந்தவர்களில் 60 பேர் பொக்கனை பிரதேசத்தில் இருந்து வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டனர்.

அறுவை சிகிச்சைக்குப் பின் 5 நோயாளிகள் மருத்துவமனையில் உயிரிழந்ததாக புதுமாத்தளன் மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்ட 13 வயது நபர், 52 வயதான நீரிழிவு பெண் மற்றும் 71 வயதுடைய ஆண் ஒருவரும் நோயறிதல் இல்லாமல் மருத்துவமனையில் வியாழக்கிழமை உயிரிழந்தனர்.

300க்கும் மேற்பட்ட படுகாயமடைந்துள்ளனர்.

















# முள்ளிவாய்க்கால் பாதுகாப்பு வலயத்தில் மக்கள்




















# மாத்தளன் மற்றும் பொக்கனைப் பகுதியில் பல நூறு பொதுமக்கள் படுகொலை - 20.04.2009

20.04.2009 அன்று மாத்தளன் மற்றும் பொக்கனையில் நூற்றுக்கணக்கான சடலங்கள் மற்றும் காயமடைந்த பொது மக்கள் இன்னும் கிடத்தப்பட்டுள்ளனர், மேலும் 600 இற்கும் மேற்பட்ட படுகாயமடைந்தவர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டில் உள்ள முள்ளிவாய்க்காலில் உள்ள பாடசாலையில் இயங்கும் தற்காலிக வைத்தியசாலைக்கு திங்கட்கிழமை முழு வதும் கொண்டு வரப்பட்டுள்ளனர். 60 காயமடைந்தவர்கள் மட்டுமே புதுமாத்தளனில் உள்ள மருத்துவமனைக்குச் சென்றனர்,
















# யுத்த காலப்பகுதியில் வைத்தியர் வரதராஜா துரைராஜா 20.04.2009

“மாத்தளனில் ஆமியாம்”

“ஆஸ்பத்திரியடியில் நிக்கிறானாம்” “நிறைய சனம் செத்தும் போச்சாம்” சனம் நிறைய உள்ளே போயிட்டுதாம்,” என்று எம் செவிகளுக்கு கிடைத்த அந்தச்செய்தியோடு 2009, ஏப்பிரல் 20 ஆம் திகதி விடிந்தது. “முள்ளிவாய்க்கால் வைத்தியசாலைக்கு நானும் மதியும் ஓடிப்போனோம். காயப்பட்டவர்களை கடலால் இறக்கி, அங்கிருந்து வாகனங்களில் கொண்டு வந்திருந்தார்கள்.” காயமடைந்தவர்களை இறக்கி இறக்கி என்னால ஏலாது.

முள்ளிவாய்க்கால் வைத்தியசாலையில் இடம்போதாமையால் முன்பக்க காணியில் உள்ள மரங்களுக்கு கீழே தரப்பாள் விரிக்கப்பட்டு அதில் காயமடைந்தவர்களை கிடத்தினோம்.

அன்று காலையில் எம்மால் எந்த விபரங்களையும் எடுக்கக் கூடிய நிலையில் நாங்கள் இல்லை. அன்று மாலையில் எம்மால் முடிந்த வரையில் காயமடைந்தவர்களின் விபரங்கள் மற்றும் இறந்தவர்களின் விபரங்களைச் சேகரித்தோம். முழுமையாக விபரங்களை பத்திரிகையில் வெளியிடமுடியவில்லை. முல்லைத்தீவு நகரப்பகுதிக்கு அருகருகே அமைந்துள்ள முள்ளிவாய்க்கால், இரட்டைவாய்க்கால், வலைஞர்மடம், அம்பலவன் பொக்கனை புதுமாத்தளன் ஆகிய கடற்கரைக்கிராமங்களே 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதி யுத்தகாலப்பகுதியில் பெருமளவு தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட பிரதேசங்களாகும். இன்றையநாளில் , ஏப்பிரல்-20,2009 அன்று 1983 இற்கு பின்னர் ஒரே நாளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களை சிறீலங்கா படையினர் படுகொலை செய்திருந்தனர். எறிகணைத்தாக்குதலில் காயமடைந்தவர்களை மீண்டும் சுட்டும், பதுங்குகுழிகளில் இருந்த மக்கள் மீது கைக்குண்டுகளை வீசியும் படுகொலை செய்த இன்றைய நாளில் நான் சந்தித்த முதலாவது மிகப்பெரிய அவலம் இதுவேயாகும். இன்று ஏப்பிரல் -20. அதன் நினைவுகளோடு தான் இன்று நான் வேலைக்குப் போனேன். ஏதாவது எழுதுவம் என்று நினைக்கும் பொழுது தான் “வைத்தியர் வரதராஜா துரைராஜா அவர்களின் நினைவு வந்தது”.






“படையினர் புதுமாத்தளன் வைத்தியசாலைக்கு மிகக்கிட்டிய தூரத்தில் நிற்கும் போது அவரும் இன்னொரு மருத்துவபணியாளரும் வலைஞர்மடம் பகுதியில் இருந்து கடற்கரை வழியாக புதுமாத்தளன் வைத்தியசாலைக்குச் சென்று அங்கிருந்தவர்களையும் முக்கியமான மருந்துப்பொருட்களையும் மீட்டு வந்தவர்”. அவரிடம் இன்று பேசியபொழுது மருத்துவபணியாளர்களின் அர்ப்பணிப்பான பணிகளையும் அவர்கள் தங்கள் குடும்பங்களை பற்றி நினைக்காமல் காயமடைந்துவரும் மக்களுக்கு சிகிச்சை அளித்த அத்தனை பேரும் மதிப்புக்குரியவர்கள் என்று சக மருத்துவ பணியாளர்களின் பெயர்களை சொல்லி பல விடயங்களை பகிர்ந்து கொண்டார்.

அவருடைய முழுமையாக பகிர்வு பிறிதொரு சமயத்தில் வெளிவரும். அன்றைய நாளில் நடந்தது என்ன? வைத்தியர் வரதாராஜா... “படையினர் எங்களைக் கண்டுவிட்டனர். எங்களை நோக்கி சுட்டுக்கொண்டிருந்தனர். நான் வாகனத்தில் இருந்து இறங்கி ஓடி, பனைமரங்களுக்குள் ஒளித்து ஒளித்தே புதுமாத்தளன் வைத்தியசாலைக்குள் ஓடினேன்.” இவ்வாறு இறுதியுத்தகாலப்பகுதியில் மருத்துவ பணிகளில் ஈடுபட்ட வைத்தியர் வரதராஜா துரைராஜா இன்று தெரிவித்துள்ளார்.

இவரே முல்லைதீவு மாவட்ட பிராந்திய சுகாதாரசேவை பணிப்பாளராக அந்நேரத்தில் கடமையாற்றியவர். தற்பொழுது வட அமெரிக்காவில் வசித்து வரும் இவர் எம்முடன் அன்றைய நாட்களில் நடந்த கொடூர நினைவுகளை பகிர்ந்து கொண்டார். “வலைஞர்மடம் பகுதியில் தான் நாங்கள் தங்கியிருந்தோம். எங்களுக்கு அன்று காலை “மாத்தளனில் ஆமி வந்திட்டான் என்றும் நடக்கக்கூடிய நோயாளர்கள் மற்றும் பல மருத்துவ பணியாளர்களும் ஆமிக்குள்ள போயிட்டினமாம்” என்று தகவல் வந்தது. “நான் வெளிக்கிட்டன். அங்க ஒருக்கா போவம் என்று” என்னை ஒருதரும் விடவில்லை. “காலை 9.30 மணிக்கு தான் எப்படியாவது போய்ப்பார்ப்பம் என்று நானும் இன்னொரு மருத்துவபணியாளரும் கடற்கரை வழியாக புதுமாத்தளன் பகுதிக்குச் சென்றோம். வைத்தியசாலைக்கு அருகில் உள்ள ஒழுங்கையில் வாகனத்தை செலுத்திக்கொண்டிருக்கும் பொழுது திடீரென்று படையினர் எம்மை நோக்கி சராமரியாக எம்மை நோக்கி சுட்டனர்.

“நாங்கள் வாகனத்தை விட்டு இறங்கி அருகில் உள்ள பனைமரங்களுக்குள் ஒளித்து ஒளித்து வைத்தியசாலைக்குள்ளே ஓடிட்டம்.” அங்கே பலரது உயிரற்ற உடல்களுக்கு மத்தியில் காயப்பட்டவர்களின் முனகல் சத்தங்கள் ஒருபுறம் மறுபுறத்தே இடையிடையே சண்டையும் நடைபெறுகிறது. வைத்திசாலை ஜன்னலால் எட்டிப்பார்த்தால் நூறு மீற்றரில் ஆமி நிக்கிறான்.

வைத்தியசாலையில் இருந்த காயமடைந்தவர்களுக்கு சரியாக சிகிச்சை அவ்விடத்தில் வழங்கமுடியவில்லை. அவர்களை எம்முடன் வரவிரும்பியவர்களையும் முக்கியமான மருந்துப் பொருட்களையும் வைத்தியசாலையில் இருந்த பிறிதொரு வாகனத்தில் ஏற்றினோம். வாகனம் வெளியே எடுத்தால் ஆமி தாக்குதல் நடத்துவானோ அல்லது இல்லையோ எங்களுக்கு தெரியாது. ஏதோ! கண் இமைக்கும் நேரத்தில் வாகனத்தை வைத்தியசாலை முன்புறமாக செலுத்தி அருகில் உள்ள ஒழுங்கை ஊடாக கடற்கரைக்கு சென்று முள்ளிவாய்க்கால் சென்றடைந்தோம். அன்றைய நாளில் மக்களுடைய இழப்புத்தொகையை என்னால் சரியாக சொல்லமுடியாமல் இருக்கிறது. எல்லா இடமும் காயமடைந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள். அன்று எங்களுக்கு ஏற்பட்ட நெருக்கடி நிலையிலும் மிகுந்த சிரமப்பட்டு பலரது உயிர்களை காப்பாற்றியிருப்பது மனதிற்கு ஆறுதல் அளிக்கிறது...!

குறிப்பு: பதிவு





# முள்ளிவாய்க்கால் பாதுகாப்பு வலயத்தில் சிறீலங்காப் படைகளின் தாக்குதல்கள் - 27.04.2009

சிறீலங்கா விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்கள் முள்ளிவாய்க்கால் மீது 23 முறை கடுமையான குண்டுவீச்சுகளைத் தொடர்ந்தனர், கனரக ஆயுதங்களை நிலைநிறுத்துவதை நிறுத்துமாறு தனது ஆயுதப்படைகளுக்கு அறிவுறுத்தப்பட்டதாக கொழும்பு அரசாங்கத்தின் அறிவிப்பை முற்றிலும் புறக்கணித்தது. பல திசைகளில் இருந்து கொத்துக் குண்டுகள், மல்டி பீப்பாய் ராக்கெட் லாஞ்சர் (எம்பிஆர்எல்) தீ மற்றும் கனரக மோட்டார் குண்டுகள் பொருத்தப்பட்ட பீரங்கி குண்டுகளை எஸ்.எல்.ஏ சுடத் தொடங்கியபோது, இரவு 7:00 மணி முதல், முள்ளிவாய்க்கால் பகுதியை குறிவைத்து சிறீலங்கா இராணுவத்தினர் கடுமையாக சரமாரியாக தாக்கியதாக அன்றைய தகவல்கள் தெரிவிக்கின்றன. முள்ளிவாய்க்காலின வடக்குப் பகுதியில் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படுகின்றது, இலங்கை கடற்படையின் பீரங்கிப் படகுகளும் மாலையில் சுட ஆரம்பித்துள்ளதாக தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.



திங்கட்கிழமை நண்பகல் வானொலி செய்திகள் மூலம் கொழும்பின் அறிவிப்பு அவர்களுக்கு எட்டப்பட்டதால் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படும் பொதுமக்கள் சிறிது நேரம் நிம்மதியடைந்தனர். ஆனால், சிறீலங்கா விமானப்படையினரின் குண்டுவீச்சு விமானங்கள் பாதுகாப்பு வலயத்தின் மீது பறந்து, மண்டலத்தின் தெற்குப் பகுதியை 4 முறை மதியம் 12:40 மணியளவில், 2 முறை மதியம் 1:10 மணியளவில் தாக்கியதால், அவர்களின் எதிர்பார்ப்பு குறுகியதாக இருந்தது. மற்றும் 3 முறை சுமார் 3:45 பி.ப.

சிறீலங்கா விமானப்படையினர் காலை 9:00 மணியளவில் 6 முறையும், 10:00 மணியளவில் 8 முறையும் இறக்கி, இரண்டு முறை வான்வழித் தாக்குதல்களை நடத்தினர்.

முள்ளிவாய்க்காலுக்கு வடக்கே 2 கிலோமீற்றர் தொலைவில் உள்ள வலைஞர்மடத்திலும், தெற்கில் வட்டுவாகலிலும் பலத்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை மாலை, 139 நோயாளிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக பதிவு செய்யப்பட்டதாக மருத்துவ வட்டாரங்கள் சரிபார்த்தன, சில நோயாளிகள் தங்கள் காயங்களுக்கு கட்டுப்பெட்டு வெளியேறினர். காயமடைந்தவர்களில் 19 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். இறந்தவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு வரப்படவில்லை. மருத்துவ ஊழியர்கள் தங்களிடம் மருந்துகள் இல்லை என்றும், காயம் அடைந்தவர்களுக்கு கட்டு போடுவதாகவும், பலத்த காயம் அடைந்த நோயாளிகள் தற்காலிக மருத்துவமனை வளாகத்தில் தங்கி இருப்பதாகவும் புகார் தெரிவித்தனர்.

பாதுகாப்பு வலயத்தில் பட்டினி நிலவுகிறது. குழந்தைகளுக்கு பால் பவுடர் இல்லை. பெரும்பாலான மக்கள் கூழ் மற்றும் பருப்பை நம்பியிருக்கிறார்கள். யாராலும் மீன் பிடிக்க முடியவில்லை.

3-4 நாட்களுக்குள் உணவு வழங்கப்படாவிட்டால் பல முதியவர்கள் இறந்துவிடுவார்கள் என்று மருத்துவமனையின் மருத்துவர்கள் தெரிவித்தனர். அவர்களில் பலருக்கு கடந்த 3-4 நாட்களாக உணவு இல்லை.

பாதுகாப்பு வலயத்தை அடைய வேண்டிய மனிதாபிமான விநியோகக் கப்பல் கொழும்பு அரசால் யாழ்ப்பாணத்திற்கு திருப்பி விடப்பட்டது. உணவுப் பொருட்களை இறக்குவதற்கு எந்தவிதமான பாதுகாப்பு உத்தரவாதமும் இல்லை என்று காரணம் கூறப்பட்ட போதிலும், பாதுகாப்பு வலயத்திற்குள் பொதுமக்கள் பட்டினியால் வாடுவதால் கப்பல் முல்லைத்தீவு கடற்பரப்பு











# உயர் பாதுகாப்பு வலயத்தில் 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை – 28.04.2009



சிறீலங்கா இராணுவம் மாலை 6:00 மணி முதல் குறைந்தது 2,600 Multi-Barrel Rocket Launcher (MBRL) ராக்கெட்டுகள், 1,000 க்கும் மேற்பட்ட பீரங்கி குண்டுகள் மற்றும் குறைந்தது 2,000 கனரக மோட்டார் குண்டுகளை வீசியது. திங்கட்கிழமை காலை 11:00 மணி வரை, வன்னியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். முள்ளிவாய்க்கால், தாழம்பன், ஒட்டைப்பனையடி மற்றும் இரட்டைவாய்க்கால் பகுதிகளில் உள்ள சிவிலியன் தங்குமிடங்களை சிறீலங்கா இராணுவத்தினாலல் ஏவப்பட்ட பெரும்பாலான குண்டுகள் தாக்கின. விடுதலைப்புலிகளினால் 200க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட பொதுமக்களின் புள்ளிவிவரங்களை வெளியிட்டனர். மேலும் மூன்று மருத்துவ மையங்கள் நூற்றுக்கணக்கானவர்களுக்கு சிகிச்சை அளித்தன. நாள் முழுவதும் காயமடைந்த பொதுமக்கள். சிறீலங்கா விமானப்படையின் குண்டுவீச்சுக்கள் ஒட்டைப்-பனை மற்றும் இரட்டைவாய்க் கால் பகுதிகளில் கொத்து குண்டுகளை வீசி தாக்கியதாக தமிழீழ விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவர்கள், முதலுதவி வசதிகளுடன் கூடிய இரண்டு திலீபன் மருத்துவ நிலையங்கள் மற்றும் இரு மாவட்டங்களின் RDHS ஆல் நடத்தப்படும் முள்ளிவாய்க்காலில் உள்ள தற்காலிக மருத்துவமனை, கடந்த 3 நாட்களுக்குள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளித்ததாக விடுதலைப் புலிகள தெரிவித்தனர்.

நாள் முழுவதும் ஷெல் தாக்குதல் தொடர்ந்ததால், உயிரிழப்பு புள்ளிவிவரங்களை சுயாதீனமாக சரிபார்ப்பது சாத்தியமில்லை.







# வடக்கு முள்ளிவாய்க்கால் பகுதியில் 160 பொதுமக்கள் படுகொலை 29.04.2009

சுமார் 120,000 பொதுமக்களுடன் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படும் 5 கிலோமீற்றர் நீளமும் 1.5 கிலோமீற்றர் அகலமும் கொண்ட குறுகிய நிலப்பரப்பில் சிறீலங்கா இராணுவத்தினர் தாக்குதல்கள் பொதுவாக அதிகாலையில் தொடங்கும். சிறீலங்கா கடற்படையின் கடற்படைக் கப்பலில் இருந்து 100 மி.மீ கனரக பீரங்கி மற்றும் இயந்திர துப்பாக்கிச் சூடுகள் மாலை



4:00 மணியளவில் தொடங்கியது.

முள்ளிவாய்க்காலுக்கு வடக்கே புதன்கிழமை காலை 160 பொதுமக்களின் சடலங்களை மீட்புப் பணியாளர்கள் கண்டெடுத்துள்ளனர்.

மாலை 4.00 மணிக்குப் பிறகு சுமார் 150 பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும். புதன்கிழமை, மீட்புப் பணியாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

மாலை 4.00 மணியளவில் சிறீலங்காப் படையினரின் பீரங்கி மற்றும் பீரங்கித் துப்பாக்கிச் சூட்டில் மருத்துவமனை தாக்கியதில் 9 நோயாளிகள் கொல்லப்பட்டனர் மற்றும் 15 பேர் காயமடைந்தனர் என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படும் பகுதியில் 15,000 முதல் 20,000 பொதுமக்கள் மட்டுமே எஞ்சியுள்ளனர் என்று சிறீலங்கா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதன்கிழமை தெரிவித்தார். முன்னதாக, இந்தியாவில் ராஜபக்சேவும் அவரது போர் கூட்டாளிகளும் பாதுகாப்பு வலயத்தில் மொத்தம் 70,000 பேர் மட்டுமே இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். எனினும் புதனன்று ராஜபக்ச பிடிபட்ட பொதுமக்களின் எண்



ணிக்கை மட்டும் 180,000 என்று கூறினார்.

“திரு. ராஜபக்சவின் பொய்கள் சர்வதேச கவலைகளை மழுங்கடிப்பதையும் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படும் எஞ்சியுள்ள பொதுமக்களை பட்டினி கிடப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன” என்று வன்னியில் உள்ள அரச சார்பற்ற




# யாழ்ப்பாண பௌத்தம்: கி.மு 100 – கி.பி. 1200 பகுதி 2

## பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரிகம்

**(3) பெருங்கற் பண்பாடும் பௌத்தமும் இணைந்த சமரசப் பண்பு (The Syncretism of Buddhism with Megalithism)**

கந்தரோடைக் கிராமத்தின் தெற்குப் பக்கத்தில் பனந்தோப்புப் பகுதியிலிருந்த மண்மேடுகளை 1917ஆம் ஆண்டில் கவனித்த போல் பீரிஸ் அவை பௌத்த தாதுகோபங்களிருந்த மேடுகளாக இருக்கலாம் என எண்ணினார். ஆனால் அந்த இடமெல்லாம் பற்றையும் பறகும் மூடப்பட்டுக் காடாக இருந்தபடியினால் அங்கே அகழாய்வு எதையும் அவர் மேற்கொள்ளவில்லை (Pieris, P.E. 1917: 24).

1966-1967 ஆம் ஆண்டுகளில் இலங்கைத் தொல்லியல் திணைக்கள ஆணையாளராகவிருந்த சாள்ஸ் எட்மண்ட் கொடகும்புர கந்தரோடையின் தெற்குப்பக்கத்தில் பனந்தோப்பு களிடையே காணப்பட்ட மேட்டை முதல் தடவையாக அகழாய்வு செய்யும் படி பணித்தார். 24 ஏப்ரல் 1966 ஆம் ஆண்டு அகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. அவ்விடத்தில் பற்றையும் பறகுமாகக் காடு பற்றியிருந்தமையால் அவற்றை நீக்கி நிலத்தைச் சுத்தம் செய்வதற்கே சில மாதங்கள் பிடித்தது. மேலும், இடையில் வளர்ந்திருந்த இளம் பனை வடலிகளையும் தறிக்க வேண்டியிருந்தது.

1967 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் வாரம் வரை 20 ஸ்தூபங்களின் அடித்தளங்கள் காணப்பட்டன. இவற்றில் பெரியது 23 அடி அகலமும் சிறியது 6 அடி அகலமும் கொண்டிருந்தது. இங்கே முக்கியமாகக் கவனிக்க வேண்டியது அகழாய்வில் இந்த ஸ்தூபங்களின் மேல் கட்டுமானம் எதுவும் காணப்படவில்லை.

அவை காலப்போக்கில் அழிவுற்றிருக்கலாம், அல்லது மக்களால் செங்கட்டிகள் தங்கள் தேவைக்காக அகற்றப்பட்டிருக்கலாம். அடுத்துக் கவனிக்க வேண்டியது சில அடித்தளங்களின் பகுதிகள் வெவ்வேறு உயர மட்டங்களில் ஒன்றிற்கு மேல் ஒன்றாக - சில சமயங்களில் ஒன்றோடு ஒன்று செருகிய வண்ணம் காணப்பட்டன.

1967 ஆம் ஆண்டு பெப்ரவரி-மார்ச் மாதங்களில் கந்தரோடைக்கு மேலாய்வு செய்வதற்காக வந்த விமலா பெக்லி இந்த இடத்தில் இலங்கை தொல்லியல் இலாகா அகழாய்வு செய்வதாகவும், இந்த அகழ்வுகளில் ஸ்தூபங்களின் அடித்தளங்கள் காணப்படுவதாகவும், மற்றும் குழிகளிலிருந்து முத்திரை நாணயங்கள், உரோம நாணயங்கள், லக்ஷ்மி பட்டயங்கள் கிடைத்திருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார் (Begley, V.S. 1967).

இந்த ஸ்தூபங்களின் அடித்தளங்களைப் பரிசோதித்த கொடகும்புர, அவை ஏற்கனவே வார்ப்படமாக (Moulded) வெட்டப்பட்ட கோறல் கற்களால் சுற்றி அமைக்கப்பட்டு நான்கு அடுக்கு வரை காணப்படுவதாகக் குறிப்பிடுகிறார். அவற்றின நடுவே கோறல் கற்களின் குப்பைத் துண்டுகள் காணப்பட்டன. "இவற்றின் மேல் கட்டுமானம் கோறல் கற்களினால் அமைக்கப்பட்டிருக்கலாம். அதன் உச்சியில் சதுரமாக பெட்டி வடிவில் சுண்ணாம்புக் கல்லில் வெட்டப்பட்ட (Harmika) ஹாமிக்கா தளத்தின் மேல் ஸ்தூபத்தின் முடிகள் (Finials) பொருத்தப்பட்டிருக்கும்" எனக் குறிப்பிட்டிருக்கிறார் (Godakumbura, C. E. 1968: 72).

### கந்தரோடை ஈமக் கல்லறைகள்



கூம்பு வடிவில் படியடுக்குக்களைக் கொண்ட காஷிடு பௌத்த ஈமப்புதையல் ஸ்தூபி

Image Source - Dr Egil Mikkelsen



கந்தரோடை பெருங்கற் பண்பாடும் பௌத்தமும் இணைந்த ஈமக்கல்லறைகளின் மேற்கட்டுமானங்களை மாற்றியமைத்தமை

Image Source - Siva Thiagarajah



கந்தரோடையில் 1967ஆம் ஆண்டின் அகழாய்வின் முடிவில் கண்ட பெருங்கற் பண்பாடும் பௌத்தமும் இணைந்த ஈமப்புதையல் தளத்தில் வட்ட வடிவான, மற்றும் சதுர வடிவான அடித்தளங்கள் பட்டுமே காணப்பட்டன. மேல் கட்டுமானங்கள் அனைத்தும் அழிந்திருந்தன.

Image Source - Bennet Bronson



மாலைதீவு காஷிடு பௌத்தப்பள்ளியிலுள்ள ஸ்தூபங்களின் அடித்தளங்கள் கந்தரோடை போன்று வட்ட வடிவிலும், சதுர வடிவிலும் காணப்படுகின்றன

Image Source -Egil Mikkelsen

கந்தரோடையில் இன்று ஸ்தூபிகளாகக் காணப்படும் பௌத்த சின்னங்கள் இறந்த பௌத்தர்களைப் புதைத்த பின்னர் மேலே எழுப்பப்பட்ட பெருங்கற் பண்பாட்டுக் கட்டுமானங்களாகும். கந்தரோடையை வந்தடைந்த இப்புதையல் பண்பாடு ஆந்திரப் பெருங்கற்கால-பௌத்தப் பண்பாடாகும். கந்தரோடையில் பெருங்கற் பண்பாட்டைப் பேணிய மக்களிடையே பௌத்த மதம் பரவியபோது அவர்களும் இப்பண்பாட்டை மேற்கொண்டார்கள்.

கந்தரோடையில் காணப்படும் பெருங்கற் பண்பாடும் பௌத்த சின்னங்களும் மேலணைவதை அந்த அடித்தளங்களின் தளவமைப்பிலிருந்து தெளிவாகக் காணமுடிகிறது. அந்த ஸ்தூபங்களின் அடித்தளங்கள் நெருக்கமான கொத்தாகவும் (Cluster) சில சமயங்களில் வெவ்வேறு மட்டங்களில் ஒன்றுக்கு மேல் ஒன்றாகவும் காணப்படுவது இவை திட்டமிட்டுக் கட்டப்பட்ட வழிபாட்டுத் ஸ்தூபங்கள் அல்ல என்பதையும், கல்லறைக் குரிய ஈமச் சின்ன ஸ்தூபங்கள் என்பதையும் காட்டி நிற்கின்றன. இவ்வகையான ஈமச் சின்ன ஸ்தூபங்கள் ஆந்திர தேச மையங்களான அமராவதி, நாகர்ஜுனாகொண்டா ஆகிய இடங்களில் இறந்த பௌத்த துறவிகளுக்காக நிறுவப்பட்ட சின்னங்களை ஒத்திருக்கின்றன (Schalk, P., quoting Ragupathy, P. 1990: 205).

இதற்குச் சான்றுகளை வழங்கும் வகையில் கந்தரோடையில் ஒரு ஸ்தூபத்தின் அடித்தளத்தின் கீழே அகழ்ந்தபோது ஒரு ஈமப் பேழையில் அழுகிய நிலையிலிருந்த எலும்பு காணப்பட்டது. அதற்கும் கீழே அழுகிய நிலையிலிருந்த மற்றொரு எலும்பும் காணப்பட்டதை கலாநிதி கொடகும்புர தனது அகழ்வாய்வு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார் (Godakumbura, C. E. 1968: p. 72).

**கந்தரோடை ஈமப்புதையல் பற்றி இலங்கையின் இரு மூத்த பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் கூற்று இவை:**

"கந்தரோடையில் கிடைத்த பௌத்த சின்னங்களின் தோற்றம் என்ன என்ற கேள்வி அடுத்து எழுகின்றது. இச்சின்னங்கள் ஒரு வகையான ஈமச் சின்னங்களே ஆகும். பல்வேறு பரிமாணங்களில் அமைந்துள்ள, பல்வேறு காலப்பிரிவுகளுக்குரிய இத்தூபிகளில் இறந்த பௌத்த பிக்குமாரின் சாம்பல், எலும்புகள் என்பன முருகைக் கற்களிலமைந்த பேழைகளில் அடக்கம் செய்யப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது. ஒரு வகையில் இப்பகுதியில் நிலவிய பெருங்கற்கால ஈமச் சடங்கு முறை பௌத்தத்தின் வருகையோடு அதில் சங்கமமாகியதையே (Syncretism of Megalithism with Buddhism) இவை எடுத்துக் காட்டி நிற்கின்றன. இத்தூபிகள் காணப்படும் இடங்கூட முன் பொது காலத்தில் பெருங்கற் பண்பாட்டிற்குரிய ஈமக்காடாகவும் விளங்கியிருக்கலாம்" (சிற்றம்பலம், சி.க. 1993: 15).

"கந்தரோடையிலுள்ள பௌத்த சின்னங்கள் தனியான



மாலைதீவு காஷிடு பௌத்தப்பள்ளியில் வட்ட வடிவான மேடையும், அதன் நீடிப்பான மூன்று அடுக்குகள் கொண்ட கல்மேடை அழிபாடும் (Ruin XLII)

Image Source - Dr Egil Mikkelsen



மாலைதீவு காஷிடு பௌத்தப்பள்ளியில் அகழ்ந்தெடுத்த நான்கு கல்லறைகளில் ஒன்று
Image Source - Dr Egil Mikkelsen

பண்புகளைக் கொண்டவை. அவை அநுராதபுரம், மிகுந்தலை, மாகமை முதலான இடங்களில் உள்ளவற்றைக் காட்டிலும் வேறுபட்டவை. கந்தரோடையில் சிறிய அளவிலான தூபிகள் பல நெருக்கமாக அமைக்கப்பட்டுள்ளன. அங்கே வழிபாட்டுத் தலங்களான சேதியங்களுக்குரிய அமைப்பு காணப்பட வில்லை. அவற்றின் மேற்பாகம் அண்டவடிவமானது. அவை உயிர் நீத்த சங்கத்தாரின் பள்ளிப்படைகளாக அமைக்கப்பட் டவை. பௌத்த சமயக் கோட்பாடுகளுக்கு ஏற்ப, பெருங்கற் பண்பாட்டுக்குரிய ஈமக் கிடங்குகளுக்கு மேலாக அமைந்த கட்டு மான முறையினை பின்னர் மாற்றிவிட்டனர் போலத் தெரி கின்றது. இவற்றைப் போன்ற அண்டவடிவமான கட்டு மானங்கள் ஆந்திர தேசத்து அமராவதி, நாகர்ஜுனாகொண்டா போன்ற இடங்களில் காணப்படுகின்றன. அங்குள்ளவை உயிர் துறந்த சங்கத்தாரின் சடலங்களைப் புதைத்த குழிகள் மேல் அமைந்தவை" (பத்மநாதன், சி. 2011: 55).

ஆந்திராவில் அமராவதி, நாகர்ஜுனாகொண்டா, குந்துப்பள்ளி ஆகிய மையங்களில் இவ்வகையான பெருங்கற் பண்பாட் டுடன் இணைந்த பௌத்த ஈமப்புதையல்கள் இருந்ததை பிரித் தானிய தொல்லியலாளரான அல்பேர்ட் ஹென்றி லோங் ஹர்ஸ்ட் (Albert Henry Longhurst) எடுத்துக்காட்டியுள்ளார். இவர் சிந்துவெளி மொகஞ்சதாரோவில் அகழாய்வுகளை நிகழ்த்திய ஜோன் மார்ஷலின் மைத்துனராவார் (Longhurst, A. H. 1917; 1938).

1913ஆம் ஆண்டு முதல் இந்தியத் தொல்லியல் மேலாய்வின் தென் வட்ட மேலதிகாரியாகப் பணிபுரிந்த லோங்ஹர்ஸ்ட், 1917இல் ஆந்திராவில் கிருஷ்ணா மாவட்டத்திலுள்ள குந்துப் பள்ளியில் தொல்லியல் மேலாய்வுகளையும் அகழாய்வுகளை யும் மேற்கொண்டார். 1927ஆம் ஆண்டிலிருந்து 1931ஆம் ஆண்டுவரை நாகர்ஜுனாகொண்டா அகழ்வாய்வுகளுக்குத் தலைமை தாங்கினார்.

குந்துப்பள்ளியின் பௌத்ததலங்கள் வெட்டுப்பாறைக் குகைகள், பௌத்த சைத்தியங்கள், விகாரைகள், பௌத்தப் பள்ளியின் அடித்தளங்கள், ஸ்தூபிகள், கல்வெட்டுப் பொறிப்புகள் ஆகிய வற்றைக் கொண்டிருந்தன. வட்டவடிவான ஈமப் புதையல் களுக்கு மேல் சுட்ட செங்கற்களாலான இரண்டு அடுக்குச்



கடலுக்குள்ளிருந்து எடுத்து வந்து நீள்சதுரமாக வெட்டிய பவளக்கற் பாறைகள்

சுவர்களும், மேலே தட்டையான சுடுமண் கும்பலும் ஸ்தூபம் போல அமைக்கப்பட்டிருந்தன. இதன் காலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும் (Longhurst, A. H. 1917).

அமராவதி, நாகர்ஜுனாகொண்டா மையங்களில் ஈமப் புதையல்களின் மேல் கட்டுமானங்கள் அழிந்துபோய்விட் டிருந்தன. அகழாய்வுகளின் மூலமே இவை பௌத்தமத ஈமப் புதையல்கள் என்பது அறியப்பட்டது (Longhurst, A. H. 1938).

பெருங்கற் பண்பாடும் பௌத்தமத ஈம அடக்கமும் இணைந்த புதையல் பண்பு மாலைதீவுக் கூட்டத்தில் உள்ள காஷிடு தீவின் பௌத்தப் பள்ளியிலுள்ள ஈமப்புதையல் தளத்திலும் காணப் படுகிறது. 1996-1998 ஆம் ஆண்டுகளில் இந்த மையத்தை நோர்வே, ஒஸ்லோ பல்கலைக்கழகத் தொல்லியல் பேராசிரியர் எகில் மைக்கேல்சென் அகழ்வாய்வு செய்தார்.

கந்தரோடை தெற்குப் பகுதியிலிருந்த பனந்தோப்பை 1967ஆம் ஆண்டில் கலாநிதி கொடகும்புர அகழ்ந்த போது ஈமப்புதையல் களின் வட்ட வடிவமான மற்றும் சதுரவடிவமான அடித்தளங்



ஆனைக்கோட்டை-நவாலி எல்லைப் பகுதியில் வெளிக்கொணரப்பட்ட பண்டைக்காலக் கட்டிடம்
Image Source - Dr. P. Ragupathy

களே காணப்பட்டன. மாலைதீவு காஷிடு அகழ்வுகளிலும் இதே மாதிரி வட்ட வடிவமான, சதுரவடிவமான அடித்தளங்களே காணப்பட்டன. ஆனால் கந்தரோடையைப் போல அல்லாது பழுதடையாத முழுமையான ஈமத்தூபிகளும் காணப்பட்டன. வட்ட வடிவான தூபிகள் கூம்பு வடிவில் படியடுக்குகளாகச் சென்று உச்சியில் ஒரு முடியைக் கொண்டிருந்தன. சதுரவடி



கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்குரிய ஆந்திர இக்ஷ்வாகு வகைப் பிராமி எழுத்துக் கல்வெட்டு
Image Source - Archaeological Survey of India

வான தூபிகள் படிப் பிரமிட்டுகளைப் போல (Step-pyramids) படியடுக்குகளைக் கொண்டு அமைக்கப்பட்டு அவைகளும் உச்சியில் ஒரு முடியைக் கொண்டிருந்தன.

மாலைதீவு காஷிடுவில் மேற்கூறப்பட்ட ஸ்தூபிகளுக்கு அருகாமையில் 6.5 மீட்டர் விட்டமும் 0.6 மீட்டர் உயரமுமான வட்டவடிவான ஒரு கல்மேடை காணப்பட்டது. அதன் தெற்குப் பக்கத்தில் காணப்பட்ட கல்மேடை நீடிப்பு ஸ்தூபி வடிவில் வட்ட வடிவான மூன்று அடுக்குகளைக் கொண்டிருந்தது. இந்த அழி பாடு இல. 42 (Ruin XLII) எனப் பதிவு செய்யப்பட்டது. இந்த அழிபாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் நிலத்திலிருந்து 60-70 செ.மீ. ஆழத்தில் நான்கு கல்லறைகள் அகழ்ந்து ஆய்வு செய் யப்பட்டன. இக்குழிகளில் சடலங்கள் வடக்கு-தெற்கு திசை நோக்கி நீளக் கிடத்தி வைக்கப்பட்டிருந்தன. சடலங்கள் வலது பக்கத்தில் சரிந்து, கரங்கள் இரண்டும் கால்களின் இடையே வைக்கப்பட்டிருந்தன. இங்கே அடக்கம் செய்யப்பட்ட சடலங்கள் ஆண்களும் பெண்களுமாவர். இச்சடலங்களின் காலம் கதிரி யக்கக் கரிமத் தேதிக் கணிப்பின்படி கி.பி. 885ஆம் ஆண்டிற் கும் கி.பி. 1170ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலமாகும் (Mikkelsen, E. 2000: 19).

நன்றி: சிவ. தியாகராஜா – எழுநா முகநூல்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படிக்கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு 437.345.4203



# அன்பு

சிறுகதை

தீபா குமரேஸ்

நெடியதொரு பயங்கரக்கனவு போன்று இரவுகள் கனத்தன. இருட்டு மூலைகளிலிருந்து விநோத உருவங்கள் நடை முளை கொண்டு நடந்து வருவது போன்ற பிரமை. ஆம் பிரமையே தான். இல்லாவிடில் இத்தனை ஆண்டுகள் கழிந்த பின்னும் இன்னும் உயிரோடிருக்கிறோமே.

இறுக அடைத்த கதவுகள் யன்னல்கள் வீட்டினுள் ஒரு வித இறுக்கத்தைப் புழுக்கத்தைத் தோற்றுவித்திருந்தது. முகங்களும் புழுங்கிக்கொண்டுதானிருந்தன.

யாருமேயில்லாதது போன்ற வெறுமை வீட்டினுள் நிலவினாலும் ஆட்கள் இருக்கத்தான் செய்தார்கள். முன் விறாந்தையிலிருந்த ஈசிசெயரில் அப்பா சாய்ந்து கிடந்தார். அவர் வாசித்த டால்ஸ்டாயின் “போரும் சமாதானமும்” புத்தகம் கீழே கிடந்தது. அடையாளம் வைத்துப் புத்தகத்தை மூடுவதே அவர் வழமை.

இன்றோ... வழமைக்கு மாறாகப் பக்கங்கள் நிலத்தில் படப் புத்தகம் கவிழ்ந்து கிடந்தது. நடுவிறாந்தையிலிருந்த கட்டிலில் அம்மம்மா முடங்கிக் கொண்டு அடிக்கடி பெருமூச்சுவிட்டபடி கிடந்தாள். சமையலறைக் கதவுடன் சாய்ந்தவாறு இருந்த அம்மா. அடிக்கடி சட்டைக்கையில் கண்ணைத் துடைத்துக் கொண்டிருந்தாள். அழுகிறாள் போல..... தம்பியின்.... அறை விளக்கு வெளிச்சத்தில் கதிரையில் அவனிருப்பது சுவரில் நிழலாக விழுந்தது. கைகளிரண்டும் நாடியைத் தாங்கியவாறு இருப்பது தெரிந்தது. அவன் வெறுமனே எதுவும் செய்யாமல் உட்கார்ந்திருந்தான்.

முகங்களில் அப்பிக்கிடந்தது இருளா சோகமா எனத் தெரியாதவாறு... எல்லோர் முகங்களும் இருண்டு கிடந்தன.

எதுவுமே பேசாமல்.... எதுவுமே பேசப்பிடிக்காமல்... எது பேசினாலும் அழுது விடுவோமோ எனப்பயந்த... வாய்கள் இறுக மூடியிருந்தன. மனங்கள் மட்டும் புழுங்கி அவிந்து மூடிய உலையாய்த் தகித்துக் கொண்டிருந்தன.

கடந்த ஐந்து வருடங்களாகவே இரவுகள் பயம் தருவனவாய், எப்பொழுது விடியும் என்று ஏக்கந்தருவனவாய் இருந்தன. கூரை ஓட்டிலோ படலைத்தகரத்திலோ இருந்து எழும் சிறு அசைவும் ஒலியும் பேரிடியாய்.... பேரிரைச்சலாய்... மனங்களை அதிரவைத்தது.

மனங்களும் முகங்களும் பூரித்துப் பொலிந்து புன்னகை பூத்திருந்த விரவிக்கிடந்த அமையும் காற்றின்றி அசையாத மரங்களும், வெய்யில் தகித்த புல்வெளிகளும் கூட வசந்தம் பேசிய அந்த இனிய ஐந்து வருடங்களும் கனவே.

போர் சென்று முடிந்தபின் வந்த இந்த இருண்ட இலையுதிர் காலத்தில் எமக்கு உற்ற துணையாயிருந்தவன் அன்புதான்.

மற்றும் எந்த இரவை விடவும் இன்றைய இரவு கனத்துப் போய்க் கிடந்தது. காரணம், அன்புவின் இறப்பு. இன்னும் சூடு அடங்காத அன்புவின் உடல் முன் விறாந்தையில்...

அது தந்த மனத்துயரமும் பழைய நினைவுகளுமாய் நாங்கள்... முடங்கிப் போய்க் கிடந்தோம்.

யாரிந்த அன்பு? அன்பு யாரென்று யார் கேட்டாலும் நாங்கள் மௌனிப்பது வழக்கம். அன்பு எங்களில் ஒருவனாய், எம்மூரில் ஒருவனாய்... தெரு வழியே போகும் போராளிகளின் உற்ற நண்பனாய் அன்பு, தன் பெயரைப் போலவே அன்புருவாயிருந்தான்.

பருவ காலங்கள் மாறிமாறி வருவது போன்றிருந்தது. எங்கள் வாழ்க்கை.... துக்கமும் பயமும் விரவிக்கிடந்து முள்ளந்தண்டில் குளிர் பரப்பிய இலையுதிர் காலமும், பல்நிறவண்ணத்துப் பூச்சிகள் கலகலத்து சிறகடித்துப் பறக்க சுதந்திரக் காற்றும் மகிழ்ச்சியும் பொலிந்து கிடந்த வசந்த காலமுமாய் காலங்கள் மாறி மாறி வாழ்க்கையைப் பந்தாடின. “ஏன் வந்தாய்!” என சலிப்புற்று விரட்ட வைத்தன இலையுதிர் காலத்து இரவுகள். இரவுகளில் மரணங்கள் மலிந்து போயின. ஓலங்கள் சூழ்ந்தன. அதிகாலையில் மீந்திருக்கும் இரவின் இருள் முகங்களில் அப்பிக்கொள்ளும், கால்கள் தெருவில் இறங்கத் தயங்கும்.

இலையுதிர் காலப் பகல்களோ “எப்பொழுது வருவாய்?” என ஏங்க வைக்கும். இரவு மிச்சம் வைக்கும் பயங்கரங்கள் வீதியோரங்களில் கிடந்த போதும் கூட பகல் நம்பிக்கையூட்டியது. இரவுகள் ஒளியூட்டப்படும் எனும் நம்பிக்கையுரம் பகலிலேயே போடப்பட்டது.



இத்தகைய இலையுதிர் காலப் பகல்களிலும் இரவுகளிலும் அன்பு நம்பிக்கையின் அடையாளமாய் இருந்தான். படிப்படியாக அன்பு ஆட்களை இனங்காணத் தொடங்கினான். எதிரிகளெவர் நண்பர்களெவர் என அவனுக்குத் துல்லியமாகத் தெரிந்தது. அவர்களை எங்களுக்கு இனங்காட்ட விசேட ஒலிகளை அவன் கற்றுக் கொண்டான். வந்து போகும் போராளிகள் அவனுக்குப் பழக்கமானவர்களாயினர். அன்றுதான் ஒரு புது போராளி வந்தால் கூட அவரை தொடங்கியது எங்களுக்குப் பெரிய ஆச்சரியம். அது அவனை இனங்காண வைத்தது. காய்ந்த தலை புதர்மண்டிய முகங்கள், மெலிதாய் வரும் வெடிமருந்தின் மணம் அவர்களிடமிருந்து வெளிப்பட்டுப் பிரபஞ்சமெங்கும் பரவும் அன்பின் பலமிக்க எண்ணங்களின் அலை, எதை அன்பு இனங்கண்டான் என்பதை பேசத் தெரிந்திருந்தால் அவன் சொல்லியிருக்கக்கூடும்.

ஒரு இலையுதிர் காலத்தின் போது... காலம் கெட்டுக்கிடந்தது. எங்கள் இளைஞர்களே சிலர் எங்களுக்கு எதிரியாய் இருந்தார்களாம். இரவுகளில் திடீரென்று தோன்றி வீட்டிலுள்ள ஆணை வெளியே இழுத்துச் சென்று விடுவார்களாம். வீட்டிலிருந்து கதைக்கவென அழைத்துச் செல்லப்பட்ட அவர் தெருவில் பிணமாய் கிடப்பதை அதிகாலையில் எழும் ஓலம் ஊரக்குத் தெரிவிக்கும். அன்று அம்மா பள்ளிக்கூடம் போக விட மாட்டாள். எல்லோர் முகங்களிலும் சோகம் அப்பிக்கிடக்கும் பகலில் கூட வீட்டின் மூலைகள் பயம் தாங்கி நிற்கும்.

அந்த சோகமும் மௌனமும் பயமும் அன்புக்கு எதையோ உணர்த்தியிருக்கக்கூடும். ஏனெனில் அதன் பின்னர் நிசப்தமான இரவுகளில் ஊருக்குள் அந்த முகமூடி இளைஞர்கள் நுழைந்த போதெல்லாம் அன்பு மெதுவாக அழத் தொடங்குவான். படிப்படியாக அது ஓலமாகும். தெருவிற்கு ஓடி ஏதோ ஒரு திசையை உணர்ந்து அத்திசை நோக்கி நின்று ஓலமிட்டு ஓலமிட்டுக் களைத்து அவன் அனுங்கி அனுங்கிப் படுப்பான். மௌனமாகும் போதும் அவன் கண்களிலிருந்து நீர் வழியும். இத்தகைய இரவுகள் அதிகரிக்க அதிகரிக்க நாங்கள் இரவுகளை வெறுக்கத் தொடங்கினோம்.

இனிதே விடிந்த அன்றொரு நாளில் துப்பாக்கி முகவுரைகளோடும் இனிய முகமலர்ந்த நன்றியுரைகளோடும் கொடூர இரவுகள் சென்றொழிந்தன.

அமைதி காக்கவென அவர்கள் வந்தபோது அன்பு எங்களுக்குப் பெருந்துணையாகிப் போனான். தூரத்திலிருந்தே வந்து முகத் தில் மோதி அருவருப்பையும் அச்சத்தையம் தரும் கடலை எண்ணெயின் வாசனை எங்கள் மூக்குகளுக்கு இசைவாகிப் போனதாலோ என்னவோ காலஞ் செல்லச்செல்ல அவற்றை எங்களால் உணர முடியாமற் போனது. அந்த வாசனை வரு வதை உணர்ந்தே ஒளிக்க வேண்டியவற்றை ஒளித்தும் அனுப்பி வைக்க வேண்டியவர்களைப் பாதுகாப்பாக அனுப் பியும் செயற்பட்டுக் கொண்டிருந்த எங்களுக்கு இது சிக்கலாகிப் போனதுணர்ந்து அன்பு கைகொடுத்தான்.

அன்புவின் எச்சரிக்கைக் குரலுணர்ந்து துரிதகதியில் செயற்பட்டும் பத்து நிமிடங்கள் கழிந்த பின்னரே அவர்கள் வருவார்கள்.

அமைதி போர்த்த அவர்கள் முகங்களின் பின்னே மறைந்து கிடந்த அவர்கள் வெறிக்கு எங்கள் இளம் பெண்கள் பலியாகத் தொடங்கியது அப்போதுதான்.... இரவோ.... பகலோ..... எங் கிருந்தோ எழும். ஒரு பெண்ணின் “ஐயோ!... அம்மா....” என்ற கதறலில் நாங்கள் உடல் விறைத்து நிமிரும் போது அன்புவும் உடல் விறைப்பான். பின்னர் இத்தகைய சம்பவங்கள் எங்க ளூரில் நடைபெறாமற்போனதற்கு அன்பும் ஒரு காரணம். பகல்களில் “அவர்கள் வருகிறார்கள்” என்பது போல் அவன் எழுப்பும் ஒலி கேட்டு இளம் பெண்கள் கோயில்களை நோக்கியோடி மக்கள் கூட்டத்துடன் சேர்ந்திருந்து தம்மை மறைத்துக் கொள்வார்கள். இரவுகளிலோ அவனின் குரல்கேட்டு வள வளவாகப் பாய்ந்துசென்று இருண்ட தோட்டத்து மூலைக் குடிசையில் ஒதுங்கிக் கொள்வார்கள்.

திரௌபதி மானத்தைக் காத்ததாகக் கூறப்படும் கிருஷ்ணன் உண்மையிலேயே இருந்திருந்தால் எங்கள் அன்பு போலவே இருந்திருக்கக் கூடும். அவன் போலவே அன்பும் எம் மூர்ப் பெண்களின் நேசத்திற்குரியவனானான்.

அன்பு போராளிகளின் நேசிப்புக்குரியவனானான் இரவுகளில் எங்கோ தொலைவில் ஒரு வெடிச்சத்தமோ குண்டுச் சத்தமோ கேட்கும் அம்மா மௌனமாக எழுந்து குசினிக்குள் போய் அடுப்பை மூட்டுவாள். அதுவே தனக்கு சமிக்ஞை போல விறைத்து நிமிர்ந்த காதுகளுடன் அன்பு வேலியோரம் போவான். அங்கும் இங்கும் பார்த்தபடி நிற்பான். படலையில் என்ன சத்தம் கேட்டடாலும் திடுக்கிடும் எங்களுக்கு இந்த வேளைகளில் வரும் அன்புவின் குழைந்த மெல்லிய அன்புக் குரலுடன் வரும் படலைச் சத்தம் மகிழ்ச்சியையே தரும். வாசற் படிவரை அவர்களோடு மெய்ப்பாதுகாவலனாய் வந்துவிட்டு மீண்டும் பேசாமல் படலையோடு அன்பு நிற்பான்.

சில வேளைகள் அச்சமும் பரபரப்புமாய் அன்பு ஒலியெழுப்புவது எங்களுக்குள்ளும் அச்சத்தையும் பரபரப்பையும் தரும். அப்பா வெளியில் சென்று அன்பு பார்க்கும் திசையைப் பார்ப்பார். அதன் பின்தான் போராளிகள் எத்திசையால் செல்வதென்பது தீர்மானிக்கப்படும். அந்த வேளைகளில் அன்பு ஒரு திசையறி கருவியாய் செயற்படுவான்.

அமைதிப் போர்வை போர்த்தியவர்கள் எங்கள் வீட்டில் சந்தேகங் கொண்டு திடீர் திடீரெனத் தேடுதல் நடத்தி ஏமாற்றம் கண்ட போதெல்லாம் அவர்களின் ஆத்திரம் அன்புவின் முதுகில் துப்பாக்கியடியால் விடியும். அன்பு அலறவே மாட்டான். அந்த நேரங்களில் அவனும் ஒரு தியாகியாய்.....

அதிகாலைச் சுற்றி வளைப்புகளில் அன்பு அதிக பரபரப்புடன் காணப்படுவான். அனைத்து வேலியோரமும் சுற்றிச்சுற்றி ஓடியோடிக்கத்துவான். வீட்டுக்குள் ஓடிவருவான். மீண்டும் உள்ளே வந்து அறைகளை எட்டிப்பார்ப்பான் வீட்டின்பின் வளவினூடு பற்றைகளைத் தாண்டியோடி யாரையோ எச்சரிக்கை செய்துவிட்டு மீண்டும் ஓடிவருவான். அவனது குரலடங்கி அவன் அமைதியாகும் கணம் தான் அவர்கள் வரும் கணம். அதுவரை எங்கள் ஒளிப்பு மறைப்பை ஊக்குவிக்கக் கத்திக் கொண்டேயிருப்பான்.

மீண்டும் இனிதொருகாலைப் பொழுதில் அவர்கள் அனைவரும் கப்பலேறிச் சென்றொழிந்த போது, வீட்டிற்கு வந்த வாகனங்கள் அனைத்தையும் சுற்றிச்சுற்றி வந்து தடவி முகர்ந்தே அவன் களைத்த போது, புன்னகை பொலிந்த எங்கள் முகங்களில் மேலும் சிரிப்பு அப்போராளிகளின் மடியும் தோளும் அவன் குடியிருப்பாகிப் போனது.

இனிமையும் அமைதியும் கலந்த இவ் வசந்த கால வருடங்கள் கழிந்த பின் செல்மழை பொழிந்தவாறே இராணுவம் ஊரினுள் நுழைந்த இரண்டாவது இலையுதிர் காலத்தின் போது, ஊரோடு ஊராக இரவோடு இரவாக மக்களெல்லாம் வெளியேறினார்கள். அந்த இரவு மிகமிக நீண்டதாய் கொடியதாய்... கன்னங்களில் வழிந்த கண்ணீர், மழைத் தண்ணீரோடு கலந்து வெளியேறியது யாரறிவர்? கார்முகிலும் கனத்த சோகமும் இரவும் தந்த இருட்டில் எங்கள் முகவரிகளை நாங்கள் தொலைத்தோம்.

மரங்களின் கோயில் மண்டபங்களின் கீழும் கூரையைத்தேடி ஒதுங்கிய மக்களின் பயணம் தென்மராட்சியூடு தொடர்ந்த போது, கொட்டு மழையே கூரையாகிப் போனதே பலருக்கு இப் பயணம் வன்னியில்தான் முடிவுற்றது. வன்னி செல்ல எங்கள் மனங்கள் முனைந்து நின்றன. அன்புவோ வன்னி செல்வோர் முகங்களையே ஏக்கந் ததும்பப் பார்த்தபடி நிற்பான். நோயுற்ற அப்பப்பாவைக் கொண்டு செல்ல முடியாது தென்மராட்சியில்



தங்கிய போது அதிகம் துன்பப்பட்டவன் அன்புதான். அவனது உற்ற தோழர்களையெல்லாம் நாங்கள் பிரிய நேரிட்டது.

முன்பொரு காலம் மாட்டுக் கொட்டிலாகக் கிடந்த அக்குடிலை தெரிந்தவரொருவர் தங்குவதற்காக தந்த போது, நாங்கள் ஆறதலாக மூச்சுவிட்டோம். ஏனெனில் நான்கு புறமும் திறந்திருந்த அக் கொட்டிலுக்கு மேலே கூரையிருந்தது. மழையும் குளிரும் கூதல் காற்றும் அப்பப்பாவை மேலும் துன்புறுத்திய போது குளிரில் விறைத்த அவர் பாதங்களில் அன்பு ஏறிக்கிடப்பான். பாதங்களுக்கு சூடேற்றுவான். வீட்டை ஊரை உறவை பிரிந்த சோகம் அவன் முகத்திலும் உறைந்து கிடந்தது.

வன்னி செல்வதா? யாழ் செல்வதா? என நீண்ட மனப் போராட்டம் எங்களுக்குள் இடம்பெற்றபோது அன்பு வன்னி செல்வதிலேயே உறுதியாயிருந்தான். வன்னி செல்லும் மக்கள் கூட்டத்தை நோக்கி எங்களை இழுப்பான். அப்பப்பாவைக் கொண்டு செல்லவோ விட்டுவிட்டுச் செல்லவோ முடியாதென்பதை உணர்ந்து வீடு செல்ல நாங்கள் முடிவெடுத்தபோது அன்பு அழுத அழுகை.... இம்முறை அன்புவின் உள்ளுணர்விற்கெதிராக நாங்கள் முடிவெடுத்துக் கொண்டோம்.

மீண்டும் வீட்டுக்குச் சென்றபோது,

வாசற்படியே அன்புவின் வாசஸ்தலமானது. அவன் கண்களில் எச்சரிக்கை, எதையோ இழந்த ஏக்கம் யாரையோ எதிர்பார்த்துக் காத்திருக்கும் தவிப்பு. இரவுகள் மீண்டும் கொடியதாய், நெடியதாய் ஆயின உணவும் தூக்கமும் குறைந்து அன்புவின் செயற்றிறன் குறையத் தொடங்கியது. சற்று முன்னர் அனைத்தும் அடங்கி ஏக்கங்கலந்த விழிகளைத் திறந்தபடியே அவன் உயிரடங்கிய போது.

“யார் இந்த அன்பு” என்று யாரும்கேட்டால் நாங்கள் மௌனிப்பது வழக்கம். ஏனெனில் அன்புவை நாயென்று சொல்ல எங்களில் யாருக்குமே பிடிக்காது. “உந்த நாயைப் பிடி தம்பி” என்று சொன்ன கந்தசாமி அண்ணையுடன் தம்பி பிடித்த சண்டையை வேடிக்கை பார்த்த ஊர் மறந்தும் கூட அன்புவை நாயென்றதில்லை.

அன்பு எங்கள் வீட்டிற்கு வந்த முதல் நாள் இன்றும் நினைத்தவுடன் என் கண் முன் வரும். தெருவழியே போன சொறி நாயைப் பிடித்துத் தரும்படி மூன்று வயதுத் தம்பி அடம் பிடித்து அழ, அம்மா அப்பாவை அதட்டினாள்.

“போங்கோ, ஓடுங்கோ அவன் மூச்சடங்கியெல்லே அழுகிறான். அங்கை துரையண்ணை வீட்டு நாய் ஒரு மாதத்துக்கு முதல் குட்டி போட்டதாம்” ஒரு குட்டியை வேண்டிக் கொண்டு வாங்கோ, என விரட்டினாள். “இவவோடை பெரிய கரைச்சல்” எனப் புறுபுறுத்தபடியே ஓய்வுநாள் அலுப்புடன் கிடந்த அப்பா சைக்கிளைத் தூக்கிக் கொண்டு போனார்.

எனக்குள் பரபரப்பும் பயங்களும் போட்டி போட்டன. “உது தம்பிக்கென்றால் என்னை விளையாட விடுவானோ? என்னைத் தொடவிடுவானோ? உவருக்குப் பெரிசா என்ன தெரியும்? குளிக்க வார்ப்பாரே? சாப்பாடு வைப்பாரே? நான் தான் எல்லாம் செய்ய வேணும் என்ற நினைவு நாய் எனக்குத்தான் என்ற பலத்தைத் தந்ததும் என்ன பெயர் வைக்கலாம்? என நான் யோசித்ததும் இன்றும் நன்றாய் நினைவிருக்கிறது.

“மூன்று வீடு தள்ளியிருக்கிற அன்புச் செல்வனை எனக்குப் பிடிக்காது. நாங்கள் எல்லோரும் ஸ்கூலுக்கு ஒன்றாத்தான் போற நாங்கள். போகேக்கையும் வரேக்கையும் தலையிலை குட்டுவான். “எலிவால்” என்று சொல்லி என் தலைமயிரைப் பிடிச்சு இழுப்பான். அவனைக் கொல்ல வேணும்போல எனக்கு ஆத்திரம் வரும். ஆனா என்ரை வயநென்றாலும் அவன் குண்டன். அவனை ஒன்றும் செய்ய ஏலாது. அவனைப் பழி வாங்க ஒரேவழி, நாய்குட்டிக்கு “அன்பு” என்றுதான் பெயர் வைக்கிறது” என்று பல எண்ணங்கள் என் சின்ன மனதில் ஓடின. ஆனால் வெறும் நாயென்று நினைத்த போது அன்புச் செல்வனை பழிவாங்கவென்று “அன்பு” எனப்பெயர் வைத்த நான் சிந்திக்க ஆரம்பித்து அம்முரண்பாடும் உறுத்தத் தொடங் கிய போது, அன்பு எங்களில் ஒருவனாகியிருந்தான். அதே அன்பு அன்புச் செல்வனின் மேலும் ஏற்பட்டு அவன் என் பிரிய நிநேகிதனானான். “அன்பு” எனும் என் சிறுவயதுப் பெயர் சூட்டலைக் கேட்டவன் இன்றும் சிரித்துக் கொள்வான்.

படலையைத் திறந்து அப்பா வருமுன்னரே “தம்பி! தம்பி! நாய்க் குட்டி” என்று கத்திக் கொண்டுதான் நான் ஓடியதும் அப்பா அன்புவை என்னட்டைத் தாங்கோ என்று நான் கத்தியதும் அப்பா என்னை விறோதமாய்ப் பார்த்ததும் இன்றும் ஈரம் காயாமல் என்னுள்.

“என்னப்பா! உம்மடை மகள் நாய் வரமுன்னமே பேர் வைச்சிட்டாள். அதுவும் அன்புவாம்” என்று சொல்லியபடி உள்ளே போக நானும் தம்பியும் பொத்திப் பொத்தி நாய்க்குட்டியை மூலைக்குள்ளை வளர்த்திப் போட்டு முன்னுக்குக் குந்தியிருந்தோம். மண்ணிறந்தில் புசுபுசுவென்று வட்டக் கண்களை உருட்டி உருட்டிப் பார்த்தபடி இருந்த அன்பு அன்றே எங்களில் ஒருவனானான்.

அம்மா முட்டை அவித்தால் அம்மா அன்புக்கு முட்டை என்றும் நாங்கள் ரெண்டு பேரும்படும் பாட்டைப் பார்த்து அம்மா எங்களுக்கென்று வாங்கும் தின்பண்டம் எல்லாவற்றையும் மூன்று பேருக்காய் வாங்கத் தொடங்கினாள்.

“இஞ்சை தம்பி உதை வீட்டுக்கை அடுக்காதை கூடொன்று கட்டி வெளியிலை விடு” என் அப்பப்பா அப்பாவிடம் சொன்ன போது நானும் தம்பியும் அழுத அழுகை. அழுது.... முரண்டு பிடித்து அன்று காலை தான் அப்பப்பா சொல்லித்தந்த “அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்” என்ற குறளை நான் அவரிடமே பதம் பார்த்து... எல்லோரும் சிரித்து... நினைவுகளின் சுமையி னால் கண்ணீர் தானாகவே வழிந்தது.

அன்பு! எம்மினிய அன்பு! உன்தோழர்கள் வருவார்களே! அன்பு எங்கே என்று உன்னைத் தேடுவார்களே! அதுவரையும் காத்திராமல் நீ சென்றதேன்? - கொடிய இரவுகளில் நீயொரு நம்பிக்கைக் கீற்றாய் இருந்தாய், இனி.........

தம்பியின் அறையில் அசைவு தென்பட்டது. தம்பி எழும்பி வெளியே வந்தான். அன்புவின் அருகே அமர்ந்தான். “அப்பா” என மெல்ல அழைத்தான்.

திடுக்குற்றவராய் அப்பா “என்ன தம்பி?” என்றார். ”அன்புவை விதைக்க வேணும்”

“ஓமோம்”

“எங்கே விதைகுழி வெட்டலாம்”

“பின்னாலை தானே தம்பி தாக்க வேணும்” என்றார் அம் - மம்மா.

“அம்மம்மா!” என்று அழுத்தத்துடன் அழைத்தான் தம்பி.

“தாக்க என்று சொல்லாதீங்கோ விதைக்க என்று சொல்லுங்கோ. மனிதர்களைப் போலவே அவனும் போராட்டத்திற்காக உழைத்தான், மரித்தான். அன்புவால் எங்கள் இளம் பெண்கள் எத்தனை பேரின் மானம் காப்பாற்றப்பட்டிருக்கும். அவனால் எத்தனை போராளிகள் காப்பாற்றப்பட்டிருப்பார்கள். காயப்பட்டு பற்றைகளுள் பதுங்கி மயங்கிப் போன எத்தனை போராளிகளை அவன் எங்களுக்காகக் காட்டித் தந்திருப்பான். அவர்களுள் எத்தனை பேர் அன்று காப்பாற்றப்பட்டதால் இன்று பொறுப்பாளர்களாகவும் தளபதிகளாகவும் சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் அவனை முன்பக்கம் தான் விதைப்பேன் நடுவேன் இதுதான் அன்புவின்ர தியாகத்துக்குச் செய்யும் மரியாதை நாளைக்கு அவனால் காப்பாற்றப்பட்ட போராளி மாமாக்கள் வந்து கேட்டால் காட்டவொரு கல்லறை வேணும், அது வெறும் கல்லறையா இருக்காது ஒரு சரித்திரமே அதற்குள்ளை இருக்கும்” பதின்மூன்று வயதிற்கேயுரிய விளக்கத்துடனும் ஆவேசத்துடனும் அவன் உரைத்த போது......

சம்மதத்திறகறிகுறியாய் நாங்கள் மௌனமானோம். எங்கள் அன்பு போல் எத்தனை அன்புகளின் பணி இந்தப் போராட்டத்திற்குக் கிடைத்திருக்கும். உண்மையிலேயே இராமர் அணை கட்ட அணில்கள் மண் கொட்டி உதவினவா என நானறியேன். ஆனால் அவ்வணில்களைப் போல் அன்புக்கள் சரித்திரத்தில் இடம் பெறுவார்களா? நிலைப்பார்களா? என்ற எண்ணம் என் மனதில் ஓடியது. தம்பி கூறிய அந்தச் சரித்திரம் எல்லோர் விழிகளிலும் கண்ணீர் வரச்செய்தது. கூடவே ஏக்கம்... தவிப்பு... எதிர்பார்ப்பு... மூலைகளிலிருந்து இருட்டை விரட்ட ஒளிக்கீற்றைச் சுமந்துவரும் சூரியக் கடவுளர்க்காய்....

-எரிமலை டிசம்பர் 2002

www.sangathamil.com


வணிக முகநூலில்
2026 இலவச
விளம்பர வாய்ப்பு!
உங்கள் வணிகத்தை இன்னும் பலரிடம்
கொண்டு செல்ல விரும்புகிறீர்களா?
இப்போதே உங்கள் விளம்பரத்தை இலவசமாக வணிகச்
சமூக வலைத்தளங்களில் பகிர உதவுகின்றோம்!
வணிகம் Vanikam
அதிகமான மக்களை எட்டுங்கள்...!
உங்கள் விற்பனையை உயர்த்துங்கள்
எளிதாகவும் – விரைவாகவும்
BUSINESS PAGE
இப்போதே
எங்களை தொடர்பு கொள்ளுங்கள்:
437-345-4203
குறிப்பு: விளம்பர வடிவமைப்பின்
அளவு: 4.4''x 7.2''
உங்கள் வணிக வளர்ச்சிக்கான சிறந்த வாய்ப்பு
இதுவம் ஒன்று!!!

# வளைகுடாவில் அணு ஆயுதத் தாக்குதல் சாத்தியமா? ஈரான் போர் கட்டுப்பாட்டை மீறிச் செல்கிறதா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

02.04.2026



இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் ஈரான் இடையேயான போர் ஏற்கனவே உள்நாட்டிலும், பிராந்திய அளவிலும், உலக அளவிலும் பல உயிரிழப்புகளை ஏற்படுத்தியுள்ளது. அணு ஆயுதங்களின் பயன்பாடு, குறிப்பாக ஈரானில், உயிரிழப்புகளின் எண்ணிக்கையை பல மடங்கு அதிகரிக்கும். தற்போதைக்கு, அணு ஆயுதப் போருக்கான சாத்தியக்கூறுகள் நேரடியாக இல்லை.

ஆனால் ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதல் திட்டம் எதிர்பார்த்தபடி வெற்றிபெறவில்லை என்பதையும், அது ஒரு மிகப் பெரிய தவறு என்றும் பல ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் விமர்சித்துள்ளனர். இந்தப் போரில் உண்மையான அணுசக்தி ஆபத்து யாரால் இருக்கலாம் என்பதே தற்போதைய கேள்வியாக உள்ளது. ஏனெனில் இஸ்ரேலிய உளவு அமைப்பு தனது எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

ஈரான் போரை வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டுவர அணு ஆயுதத்தைப் பயன்படுத்த இஸ்ரேல் பரிசீலிக்கலாம் என்றும் கூறப்படுகிறது. ஏனெனில் ஈரான் அணு ஆயுதங்களை பயன்படுத்தி தாக்குதல் நடத்த முதல், இஸ்ரேல் தயாராக உள்ளதாக கூறப்படுகிறது.

## ஈரான் கட்டுப்பாட்டை மீறுகிறதா?

ஈரான் போர் கட்டுப்பாட்டை மீறிச் சென்றால், இஸ்ரேல் அணுசக்தி விருப்பங்களைக் கருத்தில் கொள்ளலாம் என்று டிரம்ப் ஆலோசகர் டேவிட் சாக்ஸ் என்பவர் எச்சரித்த கருத்துகளை அண்மையில் தெரிவித்துள்ளார்.

தற்போது ஈரான் மற்றும் இஸ்ரேல்-அமெரிக்கா இடையே போர் தீவிரமடைந்து வரும் நிலையில், சர்வதேச அணுசக்தி ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் (NPT) இருந்து விலகுவதற்கான அவசர சட்டமூலத்தை ஈரான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்மொழிந்துள்ளனர்.

கடந்த பெப்ரவரி 28 முதல் ஈரான் மீது நடத்தப்பட்டு வரும் வான் வழித் தாக்குதல்கள் மற்றும் அணுசக்தி நிலையங்கள் குறிவைக்கப் படுவதற்குப் பதிலடியாக இந்த அதிரடி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அணுசக்தி அச்சுறுத்தல் ஈரானால் என்று சொல்லப்பட்டு வந்தாலும், உண்மையில் இந்த பிராந்தியத்தில் இஸ்ரேலிய அணு ஆயுத அச்சுறுத்தல்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. ஆனால் இந்த விவகாரத்தில் அமெரிக்க ஒரு போதும் கேள்வி கேட்பது இல்லை.

உலகிற்கு பல ஆண்டுகளாக ஈரானை எதிர்த்து சொல்லப்பட்டு வரும் பிரச்சாரம், அமெரிக்க இஸ்ரேல் மீது ஒரு போதும் குற்றச்சாட்டு வைப்பது இல்லை. இப்போது இந்தப் போர் இந்தப் பிராந்தியத்தை நினைத்துப் பார்க்க முடியாததை நோக்கித் தள்ளக்கூடும் என்று எச்சரிக்கின்றனர்.

இதனால்தான் அமெரிக்க இப்போது ஈரான் போரிலிருந்து “விலகல்” பற்றிப் பேசுகிறது. ஏனென்றால் பெரும் மோதல் நிலையை அடைந்தவுடன் அதனை தடுத்து நிறுத்த முடியாத நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. கடந்த இரண்டு வாரங்களாக நீடிக்கும் இந்தப் போர், அமெரிக்காவிற்கு மிகப்பெரிய பின்னடைவைத் தந்துள்ளதாகவும், ட்ரம்பின் திட்டங்கள் தோல்வியடைந்து வருவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## ஈரானுக்கு எதிராக அணு ஆயுத போர்:

ஈரானுடனான மோதல் தீவிரமடைந்தால் இஸ்ரேல் ஒரு போதும் அணு குண்டைப் பயன்படுத்தாது என்று டிரம்ப் தெரிவித்து இருந்தார். அவ்வாறு சொல்வதன் மூலம், அணு ஆயுதங்கள் வைத்திருப்பதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளாத இஸ்ரேலின் நீண்டகால கொள்கையை அவர் புறக்கணித்தது மட்டுமல்லாமல், அவர் இஸ்ரேலின் சார்பாகப் பேசுகிறாரா என்ற கேள்வியையும் எழுந்துள்ளது. தற்போது இந்த விவகாரம் சர்வதேச அரங்கில் பெரும் விவாதத்தைக் கிளப்பியுள்ளது. அதிகமான அரசியல் ஆய்வாளர்கள் இவற்றைப் பற்றி வெளிப்படையாகப் பேசத் தொடங்கியுள்ளனர்.

## ஈரானின் நிலத்தடி அணுசக்தி :

ஈரானில் நிலத்தடியில் சேமிக்கப்பட்ட அணுப் பொருட்கள் இருப்பதாக நம்பப்படும் நடன்ஸ் மற்றும் ஃபோர்டோ ஆகிய இரண்டு இடங்களில் அமெரிக்கா அணு ஆயுதத் தாக்குதல் நடத்தி வருகிறது. ஆயினும், ஈரானிய அதிகாரிகள் ஆழமாகத் தோண்டப்பட்ட சுரங்கங்கள் வழியாக இந்தப் பொருட்களை நகர்த்தியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. அமெரிக்க இராணுவ வட்டாரங்களின்படி, வழக்கமான, மிகப் பெரிய பதுங்குகுழி தகர்ப்பு குண்டுகள் இந்த அமைப்புகளை முழுமையாக அழிக்கும் அளவுக்கு சக்தி வாய்ந்தவை அல்ல என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவர் பெரும்பாலும் சுயமாகவே முடிவெடுப்பதாலும், குறிப்பாகத் தன்னை ஒரு தோல்வியாளராக முத்திரை குத்திவிடும் வகையிலான அவமானங்கள் குறித்து டிரம்ப் கொண்டிருக்கும் உணர்திறனாலும், பதற்றத்தை அதிகரிக்கும் படிநிலையில் அவர் ஒரு தீவிரமான படியைத் தேர்ந்தெடுப்பது சாத்தியமற்றதல்ல.

மேலும் ஈரான் எண்ணெய் விநியோகத்தை முழுமையாக நிறுத்தினால், அழிக்கக்கூடிய இலக்குகளை இஸ்ரேல் முழுவதுமாக தாக்கி அழிக்கும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அது, ஈரான் மீண்டும் ஒரு தேசமாக கட்டமைக்கப்படுவதை கிட்டத்தட்ட சாத்தியமற்றதாக்கி விடும் என்றும் கூறப்படுகிறது.

**ஈரான் போரை வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டுவர அணு ஆயுதத்தைப் பயன்படுத்த இஸ்ரேல் பரிசீலிக்கலாம் என்றும் கூறப்படுகிறது. ஏனெனில் ஈரான் அணு ஆயுதங்களை பயன்படுத்தி தாக்குதல் நடத்த முதல், இஸ்ரேல் தயாராக உள்ளதாக கூறப்படுகிறது**

டொனால்ட் டிரம்பின் ஆலோசகர்கள் கடந்த ஆண்டு, பூமிக்கு மிக ஆழத்தில் உள்ள ஃபோர்டோவில் இருக்கும் பொருட்களை ஒரு தந்திரோபாய அணு ஆயுதத்தால் மட்டுமே அழிக்க முடியும் என்று கூறினர். கடந்த ஜுன் மாதம், ஈரானுடனான 12 நாள் இஸ்ரேலிய-அமெரிக்கப் போரின்போது, வெள்ளை மாளிகை இந்த அணு ஆயுதத் தேர்வை வெளிப்படையாக நிராகரிக்கவில்லை.

மற்றய முக்கிய விடயம் அமெரிக்கப் பதற்றத்தை அதிகரிக்கும் பொறியாக இஸ்ரேலிய அரசு செயல்படுகிறது. இங்குள்ள யதார்த்தவாத அரசியல் அறிவியலில் இராணுவப் பதற்றத்தை அதிகரிக்கும் ஏணி என்று இஸ்ரேல் அழைக்கப்படுகிறது.

ஈரானில் வழக்கமான இராணுவ வழிமுறைகள் தீர்ந்துவிடும் போது, பெருகிவரும் பற்றாக்குறையான அல்லது கடினமான இராணுவ இலக்குகளைக் குறிவைத்து நடத்தப்படும் பெரிய அளவிலான குண்டுவீச்சுகள் மட்டுமே எஞ்சியிருக்கும். அதையும் தாண்டி பொதுமக்கள் இலக்குகள் மீதான பெரும் தாக்குதல்கள் நடந்தால் பாரிய அழிவுகளை ஏற்படுத்தும். அதுவே அணு ஆயுதப் போரை நோக்கிய அடுத்த படியாக கருதவேண்டி வரும்.

## ஈரான் நீண்டகால போர் திட்டம்:

ஈரான் நீண்ட காலத்திற்கு இந்தப் போரைத் தொடரத் தயாராக இருப்பதாகத் தெரிகிறது. இதனால், உலகப் பொருளாதாரத்திற்கான விளைவுகள் மேலும் மேலும் கடுமையாகின்றன. பெரும் அவமானத்தைச் சந்திக்காமல் இந்த மோதலை எப்படி முடிவுக்குக் கொண்டுவருவது என்று தெரியாத ஒரு சூழ்நிலையில் டிரம்ப் தன்னைக் கண்டுகொள்ளக்கூடும்.

இது வெறுமனே ஒரு அணு அச்சுறுத்தல் மட்டுமல்ல, உலக அழிவு சார்ந்த, கடந்த 50 ஆண்டுகளில் மிகவும் வன்முறையான, கொடூரமான ஒரு நாடு அணு ஆயுதத்தை வைத்திருக்க ஈரானை அனுமதிக்க முடியாது என அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியுள்ளார்.

## இருப்புக்கே ஆபத்தான அபாயம்

ஈரான் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதைக் கருத்தில் கொண்டால், எதிர்காலத்தில் மத்திய கிழக்கு இல்லாமல் போய்விடும். கேள்விக்கே இடமின்றி இஸ்ரேல்தான் முதலில் அழியும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார். இதனால் இஸ்ரேல் தற்போதய போரை தீவிரப்படுத்தக்கூடும் என்ற சாத்தியக்கூறு குறித்து சில நாட்களுக்கு முன்பு எச்சரித்துள்ளது.

போர் தீவிரமானால் ஒரு கட்டத்தில், ஈரான் இதுவரை பயன்படுத்தாத மிகவும் மேம்பட்ட ஏவுகணைகளை நிலைநிறுத்தக் கூடும். அதே நேரத்தில் இஸ்ரேல் தனது விலையுயர்ந்த தற்காப்பு ஆயுதங்களின் இருப்பைப் பயன்படுத்தக்கூடும். சில நாட்களுக்கு முன்பு, இஸ்ரேல் அமெரிக்காவிடம் இருந்து கூடுதல் ஏவுகணை எதிர்ப்பு அமைப்புகளை அவசரமாகக் கோரியதாக அறிக்கைகள் உள்ளன. போர் தீவிரமானால் நெதன்யாகு அரசு ஒரு தந்திரோபாய அணு ஆயுதத்தைப் பயன்படுத்தும் என்றும் கூறப்படுகிறது.

மேலும் அமெரிக்கா போரிலிருந்து விலகினால், இஸ்ரேல் இதைத் தன்னை இருப்புக்கே ஆபத்தான சூழ்நிலையில் கண்டுகொள்வதாகக் காட்டிக்கொள்ளக்கூடும். காசாவிலும் தற்போது லெபனான் மற்றும் தெஹ்ரானிலும் தமது படை வலுவை நிரூபிக்க வேண்டிய கட்டாயம் இஸ்ரேலுக்கு ஏற்பட வாய்ப்புள்ளது.









# வல்லாதிக்க ஆக்கிரமிப்பு: மண்டியிடா ஈரான் மக்கள் வெற்றி!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா–

10.04.2026




அமெரிக்கா-ஈரான் இடையே தற்காலிக போர்நிறுத்தம் ஏற்பட்டுள்ளது. ஆனால் லெபனானில் தொடரும் இஸ்ரேலின் தாக்குதலால் ஈரான் மீண்டும் ஹார்முஸ் நீரிணையை மூடவுள்ளது. இப்படித் தொடரும் இந்தப் போரின் குழப்பம், தவறுகள், அழிவு எவையும் இன்னமும் குறைந்து விடவில்லை. முக்கியமாக, ட்ரம்ப் பயன்படுத்திய கற்கால மனித மனோபாவம் இன்னும் தொடர்கிறது. அதாவது, போர் நிறுத்தம் வந்தாலும், அவரின் தவறான அரசியல் சிந்தனை மாறவில்லை.

எவ்வாறாயினும் தோற்காமல் இருப்பதன் மூலம் ஈரான் இந்த போரில் வெற்றி பெற்றுள்ளது. ஆனால் வெற்றிபெறாமல் இருப்பதன் மூலம் அமெரிக்கத் தரப்பு தோல்வியை தழுவியுள்ளது. இந்த மோதலை அமெரிக்காவும் இஸ்ரேலும் கூட்டாகத் தொடங்கியது. அவர்கள் ஈரானை முழுமையாகக் கட்டுப்படுத்தலாம் என்று நினைத்தனர். ஆனால், போர் விரைவில் அவர்களது கட்டுப்பாட்டை விட்டு வெளியேறியிருக்கிறது. ஈரான் ஹோர்மூஸ் நீரிணையை மூடியதால் உலக அளவில் எரிபொருளுக்கான பாதிப்பு ஏற்பட்டது. இதனால் உலகளாவிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது.



ஈரானின் புவியியல் அத்துடன் அதன் போர் வியூகங்களை கட்டுப்படுத்தத் தெரியாமல் அமெரிக்கா யுத்தம் நடத்தியது. அது இறுதியில் அமெரிக்காவின் கண்களையே பதம் பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்தப் போரில் ஈரானைத் தோற்கடிப்பது இனிச் சாத்தியமில்லை. இதன் பொருள் என்னவென்றால், போரின் முடிவில் ஆயிரக்கணக்கான இழப்புகள் இருந்த போதிலும், ஈரானே இறுதியில் வெற்றியாளராக மாறியுள்ளது. இந்த யுத்தத்தில் ஈரான் நேரடியாக தனித்து போரிட்டு வெற்றியீட்டி உள்ளது என்றும் கூறலாம்.

## வல்லாதிக்க ஆணவத் தோல்வி

வளைகுடாவில் போர் நிறுத்தம் வந்த பின்னர், போரின் வெற்றியை இருதரப்பும் தமது எக்காள கொக்கரிப்பாக பிதற்றிக் கொண்டுள்ளனர். ஆனாலும் இந்தப் போர், அமெரிக்காவின்

**நீண்ட காலமாக உலகின் பொலிஸ்காரனாக, தானாகவே உருவாக்கிய பிம்பத்தை அமெரிக்க உடைத்துள்ளது. உலக நாடுகள், அமெரிக்கா மீதான நம்பிக்கையை பாரியளவில் இழக்க ஆரம்பித்துள்ளன. அதே வேளை ஈரான் நாட்டிற்கு எதிரான ட்ரம்ப் விடுத்த அநாகரிக அச்சுறுத்தல் உலக வரலாற்றில் மிகப்பெரிய கறை படிந்த வரலாறாக கருதப்படுகிறது**

சக்தியை அதிகரிக்கவில்லை. மாறாக, அதன் பலவீனத்தை வெளிப்படுத்தியுள்ளது.

நீண்ட காலமாக உலகின் பொலிஸ்காரனாக, தானாகவே உருவாக்கிய பிம்பத்தை அமெரிக்க உடைத்துள்ளது. உலக நாடுகள், அமெரிக்கா மீதான நம்பிக்கையை பாரியளவில் இழக்க ஆரம்பித்துள்ளன. இதன் விளைவாக சீனா உலக அரங்கில் தனது செல்வாக்கினை மேம்படுத்தி வருகிறது.

கொரியா, வியட்நாம், கியூபா, ஈராக் படிப்பினைகளை அமெரிக்கா தொடர்ந்து புறக்கணித்து வந்ததன் விளைவாகவே தற்போது ஈரானில் தடம் புரண்டுள்ளது. நீண்ட காலகட்டத்தில் தனக்குத் தோல்வி தரும் அணுகுமுறைகளை தொடர்ந்தும், இன்றும் கையாள்வது ஒரு பேரரசின் வீழ்ச்சிக்கான படிக்கட்டுகளை அமெரிக்கா உருவாக்கியுள்ளது.

அமெரிக்காவும் இஸ்ரேலும் செத்த பாம்பை தொடர்ந்து அடித்ததை போலவே தெஹ்ரானை கொடுமையாக தொடர்ந்து தாக்கியது. இறுதியில் ஈரான் வீழ்ச்சி அடைந்ததா? அல்லது இன்னும் வலுவாக மாறும் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளதா என்பதை பார்த்தால், அமெரிக்காவின் தோல்வி இலகுவாக புலப்படும்.

## இந்தப் போர் எப்படி ஆரம்பித்தது?

ட்ரம்பும் அவரது கூட்டாளிகளும் வலுப் பிரயோகம், சக்தி, பலம் போன்றவை தான் உலகத்தை நிர்ணயிக்கிறது என்ற நம்பிக்கை உடையவர்கள். ட்ரம்ப் பயன்படுத்திய ஒரு நாகரிகம் முழுவதும் அழிந்து போகலாம் போன்ற மிரட்டல்கள் மனித மாண்பினைச் சிதைத்தன. இங்கு நவீன அறிவியல் இராஜதந்திரம் இல்லை. பழமையான, கற்கால சிந்தனைப் போக்கு மேலெழுந்தது.

நாங்கள் எல்லா இலக்குகளையும் அடைந்தோம், வெற்றி பெற்றோம் என ட்ரம்ப் சொன்னாலும், ஆயிரக்கணக்கான பொது மக்களே இந்தப் போரினால் உயிரிழந்து உள்ளார்கள்.



பல்கலைக்கழகங்கள், கலை கலாச்சாரப் பேணிடங்கள் அழிவுக்குள்ளாக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவின் செல்வாக்கு உலகளாவிய ரீதியில் கேலிக்குள்ளாக்கப் படுகின்றது. உலகளாவிய பொருளாதார நெருக்கடி உருவாகிப் பொதுமக்கள் துன்பத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

என்னதான் இராணுவ ரீதியாக இருந்தாலும், ஈரான் நாட்டிற்கு எதிரான ட்ரம்ப் விடுத்த அநாகரிக அச்சுறுத்தல் உலக வரலாற்றில் மிகப்பெரிய கறை படிந்த ஒன்றாக கருதப்படுகிறது. ஈரானின் விளக்குகள் எல்லாம் அணைந்து விடும், நாடே இருளில் மூழ்கும், ஒரு நாகரீகமே அழிந்துவிடும் என்ற ஆணவ வசனங்களால் உலகையே பதட்டம் கொள்ளச் செய்தார்.

## ஈரான் மக்கள் காட்டிய வெளிச்சம்






ட்ரம்பின் அச்சுறுத்தல்கள் வெளியானதன் பின்னர், நிச்சயம் அந்த இரவு உலகில் பலருக்குமே தூக்கமில்லா இரவாகத் தான் அமைந்திருக்கும். ஆனால் ஈரான் மக்கள் பயத்தின் இருளக்குள் சென்றிடவில்லை, ஒரு அங்குலமும் அவர்கள் பின்வாங்கவில்லை. அவர்கள் தாங்கள் தான் ஈரான் நாட்டின் உயிர் துடிப்பு என்பதை உலகிற்கே உணர்த்தினார்கள். அந்த இரவின் பொழுதில் அவர்கள் காட்டிய வீரம் என்பது வரலாற்று நிகழ்வாகவே தோன்றியது.

ஈரானில் இஸ்பஹானின் மூடுபனியில் இருந்து தப்ரிஸ் நகரின் தொழில்துறை பகுதிகள் வரை மக்களால் வரலாறு எழுதப்பட்டது. கோடிக்கணக்கான மக்கள் மனித மதில் சுவர்களாக மாறினார்கள். தாக்குதலுக்கான இலக்குகளாக அவர்களே உருமாற்றம் பெற்றார்கள். தெஹ்ரானில், தபியத் பாலம் நள்ளிரவு கீதத்தின் மேடையாக மாறியது. அங்கு தார் இசையின் தாளங்களுாக்கு கலைஞர்கள் நடமனாடினார்கள். உலகமே பதட்டத்தில் உறைந்து கிடக்கும் நேரம் அவர்கள் இசையும் நடனமுமாக லயித்திருந்தார்கள்.

முழுமையான அழிவு என்ற அச்சுறுத்தலுக்கு எதிரான பண்பாட்டு எழுச்சி. மின் நிலையங்களை ஒளிக் காட்சியகங்களாகவும், பாலங்களை மனித சங்கிலிகளாகவும் மாற்றிய மக்கள், “Power Plant Day” என்ற தாக்குதல் தர்க்கத்தை மக்கள் தைரியத்தின் ஒளியால் செயலிழக்கச் செய்தனர். ஆம் உலகில் மீண்டும் பாரசீக கலாச்சாரத்தை காத்தனர்.

## பாரினை ஆண்ட பாரசீகம்:

இருளை ஒளியால் வென்ற ஈரான் மக்களைப் போல, பயம் அல்ல, அன்பே என்றனர். அழிவு அல்ல, கருணை என்றனர். போர் அல்ல, மனிதம் இவையே உலகை காக்கும் சக்திகள் என்றனர். ஈரான் முழுவதுமே எதிர்ப்பு பல்வகைமைகள் கொண்டாதாக, விரிவானதாக ஒன்றை விட ஒன்று வீரியமானதாகவே இருந்தது. ஒவ்வொரு நகரமும் தேசிய பாதுகாப்பின் ஓர் நூலாக தன்னை நெய்தது. புஷேர் நகரின் தெற்கில், மாணவர்களும் தொழிலாளர்களின் குடும்பங்களும் அணு நிலையத்துக்குச் செல்லும் சாலைகளில் பெரிய சுவரோவியங்களை வரைந்தனர். அவை மேலே பறக்கும் விமானிகளுக்கும் செயற்கைக் கோள்களுக்கும் அமைதியின் செய்திகளை வெளிப்படுத்தின.

கெர்மான்ஷா மற்றும் அஹ்வாஸ் நகரங்களில், ஆயிரக்கணக்கான மக்கள் மெழுகுவர்த்திகளை ஏந்தி, மருத்துவமனைகளையும் வீடுகளையும் சுற்றி அரன் அமைத்தனர். தங்களின் வாழ்வாதாரத்தை உத்திரவாதப் படுத்தும் மின் நிலையங்களின் வாயில்களை விட்டு நகர மறுத்தனர். இவை ஒளியின் கவசங்கள் என அழைக்கப்பட்டன. வீதிகள் எங்கும் உணர்வின் மணமும், கவிதை வாசித்தலின் ஓசையும் காற்றில் நிரம்பியிருந்தது.

அலி காம்சாரி மற்றும் பென்யாமின் பகதூரி போன்ற கலைஞர்கள் சாதாரண மக்களுடன் தோளோடு தோள் நின்று முழக்கத்தை தெருக்களில் எழுப்பினர். மக்களின் இதயத் துடிப்பு உலகம் முழுவதிலும் கலைஞர்கள் ஒலிக்கச் செய்தார்கள். இந்த வரலாற்றுச் செயல்பாடு ஒரு தற்காலிக பாதுகாப்பை விட ஒரு படி மேலே சென்றது. இதுவே பாரசீக மக்களின் மரபு என்பதை புரிந்துகொள்ள முடிந்தது.

## ஈரானிய மக்கள் ஒற்றுமை:

ஒன்றரை கோடி மக்கள் ஒரு இரவில் தங்களின் நாட்டை காக்க முதல் முறையாக கூடினார்கள். ஈரான் மக்கள் ஒன்றுகூடிய அந்த தருணம் 21 ஆம் நூற்றாண்டின் மறக்க முடியாத நிகழ்வாகும். எங்கள் பாலங்கள், எங்கள் மின் இணைப்புகள் என்ற அவர்களின் முழக்கம், நேரடி பதிலாக அமைந்தது. கலை மூலம் தெருக்களையும், இசை மூலம் தொடுவானத்தையும் நிரப்பிய ஈரானியர்கள், போர் இயந்திரங்களுக்கு எதிராக தங்களின் அசாத்திய எதிர்ப்பை வெளிபடுத்தினார்கள்.

போர்களை இந்த உலகம் மறுபரீசீலனை செய்ய வேண்டும் அதுவே அப்பாவி மக்கள் இந்த உலகிற்கு விடுக்கும் செய்தியாகும். உலகம் முழுவதும் நடைபெற்ற எல்லா போர்களிலும் எளிய மக்களும் அவர்களது உடமைகளும் அவர்களது வாழ்வாதாரமுமே முதன்மையாக பாதிக்கப்பட்டு அவர்கள் வாழ்வு தான் மிகுதியாக சிதைந்துள்ளது.

### அமெரிக்காவின் இராஜதந்திர தோல்வி:

அமெரிக்காவிற்கு இது ஒரு யுத்தத் தோல்வி மட்டுமல்ல. அமெரிக்காவுக்கு பெரும் இராஜதந்திர நெருக்கடியும், இராஜதந்திரத் தோல்வியும் ஆகம்.

ஒரு புறம் அமெரிக்கத் தலைவர் தனது வாயால் உலகின் வெறுப்பை சம்பாத்தித்துக் கொண்டே செல்லும் அதே வேளை ஈரான் அதிபரின் உரைகள் நாகரீக இராஜதந்திரம் மிகுந்த கருத்துக்களால் உலகைக் கவர்ந்து கொண்டிருகின்றது. அமெரிக்க மக்களுக்கு எழுதப்பட்ட ஈரான் அதிபரின் கடிதம் அதற்கொரு சிறந்த உதாரணம்.

போரின் இறுதியில் ஈரான் மக்களின் தைரியம், கலாச்சாரத்தின் ஒளி, மனித நேயத்தின் சக்தி எல்லாம் மிக அழகாக வெளிப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த நிகழ்வுகள் பெரிய உண்மையையும் வரலாற்றையும் வெளிப்படுத்தி உள்ளன.

போர் எந்தக் காலத்திலும் ஒரு தீர்வு அல்ல. அன்பும் மனித நேயமும் தான் இறுதி தீர்வு. மனிதர்கள் உருவாக்கிய எல்லா மதங்களும், எல்லா எல்லைகளும், எல்லா வேறுபாடுகளும் ஒரு பக்கமிருக்க, ஒவ்வொரு உயிரும் மதிப்புக்குரியது என்பதே உலகம் மறக்கக் கூடாத உண்மையாகும்.

மதம், இனம், மொழி, நாடு, இவை எல்லாம் மனிதன் உருவாக்கிய அடையாளங்கள். ஆனால் உயிர் என்பது இயற்கை நமக்குத் தந்த ஒரே உண்மையான அடையாளம். அதை மதிப்பதே நம் கடமை. உலகம் முழுவதும் அப்பாவி மக்கள் தான் போர்களின் முதல் பலி. அதனால் தான் போர் முடிவுகளை உருவாக்காது. இதனை உணர்ந்து அமெரிக்கா எதிர்காலத்தில் அமைதியை பேணுமா அல்லது மீண்டும் போர்முகம் கொண்டு அலையுமா என்பதை அமெரிக்க மக்களே தீர்மானிக்க வேண்டும்.









# போரால் சிதையும் லெபனான்: பெய்ரூட் ஆட்சி அதிகாரம் யார் கையில்?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

07.04.2026

ஈரானியப் போர் தற்போது லெபனானில் மேலும் பரவுகிறது. லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் ஈரானியப் புரட்சிப் படைத் தளபதிகளைக் குறிவைத்துத் தாக்கியதாக இஸ்ரேல் கூறுகிறது.

## லெபனானில் ஈரானியப் போர்

இதற்குமுன் ஹிஸ்புல்லாவுடன் நடக்கும் போரில் இஸ்ரேல் பெய்ரூட்டைத் பாரியளவில் தாக்கவில்லை. பெய்ரூட் மிகப் பெரிய சுற்றுப்பயணத் தலம். தற்போது அகதிகள் தஞ்சமடையும் பாரிய இடமாக மாறிவிட்டது.

இதுவரை சுமார் அரை மில்லியன் பேர் வீடுகளைவிட்டு வெளியேறி இருப்பதாக லெபனான் அரசு தெரிவித்துள்ளது. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 500க்கும் அதிகமானோர் மாண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. முன்னைய ஈரானிய உச்சத் தலைவர் ஆயத்துல்லா அலி கமேனி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து லெபனானில் இருக்கும் ஹிஸ்புல்லா படை இஸ்ரேல் மீது தாக்குதலைத் தொடங்கியது. அதன் விளைவாக போர் தொடங்கியது.

1975 முதல் 1990 வரை லெபனானில் பல தரப்பினரிடையே நடைபெற்ற உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை எந்தவொரு தீர்வும் கிடைக்கவில்லை. இந்த உள்நாட்டுப் போரில் 120,000 பேர் இதுவரை கொல்லப்பட்டிருக்கலாம் என மதிப்பிடப்படுகின்றது. 2012ஆம் ஆண்டு நிலவரப்படி, ஏறத்தாழ 76,000 மக்கள் லெபனானின் உள்ளேயே இடம்பெயர்ந்துள்ளனர். தவிரவும் இப்போரின் காரணமாக ஒரு மில்லியன் மக்கள் லெபனானை விட்டு வெளியேறியதாகவும் மதிப்பிடப்படுகின்றது.

## லெபனான் உள்நாட்டுப் போர்

1920 முதல் 1943 வரை பிரான்சிய குடியேற்றவாத அதிகாரங்களின்படி லெபனானில் அரசியலும் சமயமும் தொடர்பானவை ஆயிற்று. இந்த நாட்டு நாடாளுமன்றம் முன்னர் கிறிஸ்தவர்களே முன்னிலை வகிக்குமாறு அமைக்கப்பட்டிருந்தது. இருப்பினும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருந்த நாட்டில் மேற்கத்திய மரபுசார் அரசுக்கு எதிராக இடதுசாரிகளும் அரபுசார் அமைப்புகளும் பல எதிர்ப்பு இயக்கங்கள் அமைத்து போராட்டங்கள் நடத்தினர்.



**1943இல் லெபனான் பிரான்சிடமிருந்து சுதந்திரம் பெற்ற போது மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி, லெபனானின் அதிபர் மரோனைட் பிரிவைச் சேர்ந்த கிறிஸ்தவராகவும், பிரதமர் சுனி முஸ்லிமாகவும், நாடாளுமன்ற சபாநாயகர் ஷியா முஸ்லிமாகவும் இருக்க வேண்டும்**

1947 இல இஸ்ரேல் நிறுவப்பட்டு பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீன அகதிகள் லெபனானுக்கு இடம்பெயர்ந்தமையால் நாட்டின் முஸ்லிம் மக்கள் தொகை கூடலாயிற்று. ஆட்சியிலிருந்த மரோனியக் கிறித்தவர்கள் (Maronite Christians) மேற்கத்திய நாடுகளை ஆதரிக்க இடதுசாரிகளும் அரபுசார் குழுக்களும் அரபுநாடுகளை ஆதரிக்க பனிப்போரின் போது லெபனான் நாடு பிளவுபட்டது.

லெபனானில், அரசியல் அதிகாரம் பல்வேறு மதப் பிரிவுகளுக்கு இடையே பிரிக்கப்பட்டுள்ளன. 1943இல் லெபனான் பிரான்சிடமிருந்து சுதந்திரம் பெற்ற போது மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி, லெபனானின் அதிபர் மரோனைட் பிரிவைச் சேர்ந்த கிறிஸ்தவராகவும், பிரதமர் சுனி முஸ்லீமாகவும், நாடாளுமன்ற சபாநாயகர் ஷியா முஸ்லிமாகவும் இருக்க வேண்டும்.

### லெபனானில் யார் ஆட்சி?

இது அந்த நேரத்தில் லெபனானில் இருந்த பல்வேறு மத குழுக்களைச் சேர்ந்த மக்களின் எண்ணிக்கையைப் பிரதிபலித்தது. அப்போது சுனி மற்றும் ஷியா முஸ்லீம்களை விட அதிக எண்ணிக்கையில் கிறிஸ்தவர்கள் இருந்தனர். லெபனான் மக்கள் தொகையில் பாதிக்கும் மேல் கிறிஸ்தவர்களே இருந்தனர். இருப்பினும், கிறிஸ்தவர்கள், சுனி முஸ்லீம்கள், மற்றும் ஷியா முஸ்லீம்கள் மக்கள் தொகையில் 30% சதவீதத்திற்கும் சற்று அதிகமாக இருப்பதாக தற்போது மதிப்பிடப்பட்டுள்ளதால், இந்த உடன்படிக்கை காலாவதியானது என்று பலர் கூறுகிறார்கள்.

ஆரம்பத்தில் ஏற்பட்ட உடன்படிக்கை காரணமாக கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நாடாளுமன்றில் சமமான இடங்கள் உள்ளன. ஆனால் லெபனான் மக்கள் தொகையில் முஸ்லிம்கள் இப்போது பெரும்பான்மையாக உள்ளனர். உண்மையில், லெபனானில் எந்தவொரு கட்சியும் அல்லது மதப் பிரிவும் ஒட்டுமொத்த அதிகாரத்தையும் கொண்டிருக்கவில்லை. அரசாங்கங்கள் கூட்டணிகளால் உருவாக்கப்படுகின்றன. மேலும், அனைத்து பெரிய முடிவுகளும் ஒருமித்த கருத்துடன் எடுக்கப்பட வேண்டும். இதனால் அங்கு அடிக்கடி அரசியல் முடக்கமும் குழப்பமும் ஏற்படுகிறது.

சுனி இஸ்லாமியருக்கும் - ஷியா இஸ்லாமியருக்கும் இடையேயும், கிறிஸ்தவ - முஸ்லிம்களுக்கும் இடையேயும் நடைபெற்ற இந்த உள்நாட்டுப் போரில் சிரியா, இஸ்ரேல் நாடுகளும் பலஸ்தீன விடுதலை இயக்கமும் ஈடுபட்டன.




ஆனாலும் 1976இல் சிரியா மற்றும் அரபு நாடுகள் கூட்டமைப்பால் ஏற்பட்ட சிறு அமைதிக்குப் பிறகு மீண்டும் உள்நாட்டுச் சண்டை தொடர்ந்தது. முதன்மையாக பாலஸ்தீன விடுதலை இயக்கம் முதலிலும் பின்னர் இஸ்ரேல் ஆக்கிரமித்திருந்த தென் லெபனானில் சண்டை அதிகமாக இருந்தது. மே 17, 1983இல் அமெரிக்க ஐக்கிய நாடு ஆதரவு நல்கிய உடன்பாடொன்று லெபனானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே ஏற்பட்டது. ஆனால் சிரியா தனது படைகளை மீட்டுக் கொள்ளாததால் இந்த உடன்பாடு தோல்வியுற்றது.

உள்நாட்டுப் போருக்கு முன்னதாக லெபனான் பல சமயத்தவர் வாழும் நாடாக இருந்தது. அங்கே கடலோர நகரங்களில் சுனிகளும் கிறிஸ்தவர்களும் பெரும்பான்மையினராக இருக்க ஷியாக்கள் தெற்கு லெபனானிலும் பெக்கா இனத்தவர் கிழக்கிலும் துரூசு, கிறிஸ்தவர்கள் மலைப் பிரதேசங்களிலும் வாழ்ந்து வந்தனர். ஆனால் லெபனான் அரசு மரோனிய கிறித்தவர்களின் ஆதிக்கத்தில் இருந்தது.

மரோனியக் கிறிஸ்தவர்களுக்கும் பின்னர் பாலத்தீன விடுதலை இயக்கத்தினருக்கும் 1975இல் சண்டை மூண்டது. அதன் பிறகு இடதுசாரிகள், அரபுசார் குழுக்கள் இவர்களுடன் இணைந்து கொண்டனர். இந்தச் சண்டைகளின்போது கூட்டணிகள் விரைவாகவும் எதிர்பாரா வண்ணமும் மாறிக்



கொண்டு வந்தன. மேலும் இஸ்ரேல், சிரியா போன்ற வெளி நாட்டு சக்திகளும் போரில் ஈடுபட்டு பல்வேறு தரப்பினருடன் இணைந்து சண்டையில் பங்கேற்றனர். ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் படை, அமைதிக்கான பன்னாட்டு படை ஆகியனவும் லெபனானில் பல ஆண்டுகளாக நிறுத்தப்பட்டன.

1989இல் ஏற்பட்ட டைய்ஃப் உடன்பாட்டை அடுத்து சண்டை ஓரளவுக்கு முடிவுக்கு வந்தது. ஜனவரி 1989இல் அரபு நாடுகள் கூட்டமைப்பு நியமித்த குழு சண்டைக்கான தீர்வுகளை முன் வைத்தது. மார்ச் 1991இல் பெய்ரூட் நாடாளுமன்றம் மன்னிப்புச் சட்டத்தை செயலாக்கியது. இதன்படி இச்சட்டத்திற்கு முந்தைய அனைத்து அரசியல் குற்றங்களுக்கும் மன்னிப்பு வழங்கப் பட்டது.

இதன் விளைவாக மே 1991இல் பல்வேறு ஆயுதக் குழுக்கள் கலைக்கப்பட்டன. ஆனால் ஹிஸ்புல்லா மட்டுமே விலக்காக இருந்தது. லெபனானின் படைத்துறை மட்டுமே சமயச் சார்பற்ற ஒரே ஆயுதமேந்திய அமைப்பாக மீளமைக்கப்பட்டது. இருப் பினும் சண்டை நிறுத்திக்குப் பின்னரும் சுனிகளுக்கும் சியாக் களுக்கும் இடையே குழுநிலை சண்டைகள் இருந்து வந்தன.

## லெபனான் இராணுவம்– ஹிஸ்புல்லா வலிமை?

கடந்த ஐந்து வாரங்களாக லெபனான் மீது இஸ்ரேல் தீவிர தாக் குதல்களை நடத்தி வருகிறது. இதில் 2,000-க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டு உள்ளனர். இஸ்ரேலிய துருப்புக்கள் தொடர்ந்து லெபனானில் படையெடுத்துள்ளன. இவை இஸ் ரேலுக்கும் ஹிஸ்புலாவுக்கும் இடையிலான தற்போதைய மோதலின் காரணமாக நடந்தவை.

ஹிஸ்புலா ஒரு அதிகாரப்பூர்வ அரசு அமைப்பு அல்ல. ஆனால் கடந்த 40 ஆண்டுகளில் லெபனானுக்குள் அது ஒரு ஆதிக்கச் சக்தியாக மாறியுள்ளது. ஹிஸ்புலா லெபனானில் இருக்கும் ஒரு அரசியல் கட்சியாக இருந்தாலும் பாரிய இராணுவ அமைப் பையும் கொண்டுள்ளது. ஆயுத ரீதியாக லெபனானின் தேசிய இராணுவத்தை விட ஹிஸ்புலா மிகவும் சக்திவாய்ந்தது. குறிப் பாக, லெபனானின் ஷியா முஸ்லிம் மக்கள் மத்தியில் அது ஆதர வைப் பெற்றுள்ளது.

ஹிஸ்புலா லெபனானில் சக்தி வாய்ந்ததாக இருப்பதற்கு அதன் ஆயுததாரிகளே காரணம். அக்குழு தங்களிடம் ஒரு இலட்சம் வீரர்கள் உள்ளனர் என்று கூறுகிறது. இருப்பினும் சுயாதீன மதிப்பீடுகள் இந்த எண்ணிக்கை 20,000 முதல் 50,000 வரை இருக்கக் கூடும் என்கின்றன.

அத்துடன் ஹிஸ்புலாவிடம் 1.2 இலட்சம் முதல் 2 இலட்சம் ராக் கெட்டுகள் மற்றும் ஏவுகணைகள் உள்ளன என்று அமெரிக் காவைத் தளமாகக் கொண்ட சிந்தனைக் குழுவான, உத்தி மற்றும் சர்வதேச ஆய்வுகளுக்கான மையம் தெரிவித்துள்ளது. ஹிஸ்புலா உலகின் மிகவும் சக்திவாய்ந்த அரசு சாரா இராணு வங்களில் ஒன்றாகக் கூறப்படுகிறது. இது லெபனானின் தேசிய இராணுவத்தை விட மிகவும் வலிமையானதாகக் கருதப் படுகிறது.

லெபனானின் தேசிய அரசாங்கம் பலவீனமாக இருப்பதாலும் ஹிஸ்புலா பயனடைந்துள்ளது. 2022ஆம் ஆண்டு முதல் லெப னானுக்கு அதிபர் இல்லை. அதிபர் யார் என்பதைத் தீர்மனிப் பதில் அரசியல் கட்சிகளுக்கிடையே உடன்படிக்கை ஏற்பட வில்லை. ஹிஸ்புலா தனது சொந்தக் குறிக்கோளைச் செயல் படுத்துவதைத் தடுக்கும் அளவுக்கு லெபனான் அரசு பலமான தாக இல்லை.

1982ஆம் ஆண்டு, லெபனான் உள்நாட்டுப் போரின் போது, லெபனானை ஆக்கிரமித்திருந்த இஸ்ரேலியப் படைகளை எதிர்க்க, ஷியா முஸ்லீம்களின் ஆயுதக் குழுவாக ஹிஸ்புலா அமைக்கப்பட்டது. இக்குழுவுக்கு, ஈரானின் இஸ்லாமிய குடி யரசு பெருமளவில் ஆயுதம் மற்றும் நிதியுதவி வழங்கியுள்ளது. அரபு மொழியில் ஹிஸ்புலா என்பதன் பொருள் 'கடவுளின் கட்சி' என்பதாகும்.

1985இல் ஹிஸ்புலா தனது இருப்பை முறையாக அறிவித்தது. அப்போது அக்குழு, ஈரானில் உள்ளதைப் போல லெபனானில் ஒரு இஸ்லாமிய அரசை நிறுவ விரும்புவதாக அறிவித்தது. தெற்கு லெபனான் மற்றும் பாலத்தீனப் பகுதிகளில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவருவதாகவும் அது உறுதி யளித்தது. 2009இல், ஹிஸ்புலா ஒரு புதிய கொள்கைப் பிர கடனத்தை வெளியிட்டது. அதில் அது ஒரு இஸ்லாமிய அரசை




உருவாக்குவதைக் குறிப்பிடவில்லை. இருப்பினும், இஸ் ரேலுக்கு எதிரான தனது நிலைப்பாட்டை அது தொடர்ந்தது.

லெபனானின் உள்நாட்டுப் போர் 1990இல் முடிவடைந்தபோது, போரிட்ட அனைத்துப் பிரிவுகளும் தங்கள் ஆயுதக் குழுக்களை கலைத்தன. இருப்பினும், ஹிஸ்புலா கலைக்கப்படவில்லை. தெற்கில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராட வேண் டும் என்று அது கூறியது.

இஸ்ரேல் இறுதியாக 2000ஆம் ஆண்டில் அப்பகுதியிலிருந்து தனது படைகளை திரும்பப் பெற்றது. ஹிஸ்புலா அதை வெற்றி என்று கூறியது. 1992இல், ஹிஸ்புலா நாடாளுமன்றத்திற்கு வேட்பாளர்களை நிறுத்த தொடங்கியது.

லெபனானில் ஹிஸ்புலா இப்போது பல நாடாளுமன்ற உறுப் பினர்களைக் கொண்டுள்ளது. அந்நாட்டின் அரசாங்கத்தில் ஹிஸ்புலா அமைச்சர்களும் உள்ளனர்.

லெபனானில் ஷியா சமூகங்கள் பெருமளவில் உள்ள பகுதி களில் பள்ளிகள், சுகாதாரம், மற்றும் சமூக சேவைகள் போன்ற வற்றையும் ஹிஸ்புலா வழங்குகிறது.

லெபனானில் உள்ள மற்ற கட்சிகளும் தங்கள் தொகுதிகளுக்கு இத்தகையச் சேவைகளை வழங்குகின்றன. ஆனால் அவற் றைவிட ஹிஸ்புலா மிகப்பரந்த வலையமைப்பைக் கொண் டிருப்பதாக நம்பப்படுகிறது.

**எமது தாய்நாடு விடுதலை பெறவேண்டும்; எம்மைப் பிணைத்திருக்கும் அடிமை விலங்குகள் உடைத்தெறியப்படவேண்டும்; எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும்; இந்த இலட்சியம் ஈடேறவேண்டுமாயின் நாம் போராடித்தான் ஆகவேண்டும்; இரத்தம் சிந்தித்தான் ஆகவேண்டும்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–




12.04.2026

## முன்னுரை

ஈழத் தமிழர் என்பது இலங்கைத்தீவைத் தாயகமாகக் கொண்டு வாழும் தமிழர்களைக் குறிக்கும் ஒரு தனித்துவமான அடையாளம். பல்லாயிரம் ஆண்டு கால வரலாற்றையும், செழுமையானமொழியையும், வீரஞ் செறிந்த போராட்ட குணத்தையும் கொண்டவர்கள் ஈழத்தமிழர்கள். கடலால் பிரிக்கப்பட்டிருந்தாலும், தமிழ் உணர்வால் உலகத்தமிழர்களோடு பிணைக்கப்பட்டுள்ள இவர்களின் வாழ்வு, வெற்றிகளாலும் அதேசமயம் ஆறாத வடுக்களாலும் நிரம்பியது.

## 1. வரலாற்றுப் பின்னணி மற்றும் தாயகம்

ஈழத்தமிழர்களின் வரலாறு என்பது இலங்கைத்தீவின் ஆதி வரலாற்றோடு பின்னிப் பிணைந்தது. சங்க இலக்கியங்களில் “ஈழத்துப்பூதன்தேவனார்“ போன்ற புலவர்களின் பெயர்கள் இடம் பெற்றிருப்பது, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்களுக்கும் ஈழத்திற்குமான தொடர்பை உறுதிப்படுத்துகிறது.

- **யாழ்ப்பாண அரசு:** கி.பி 13ஆம் நூற்றாண்டுமுதல் 17ஆம் நூற்றாண்டு வரை யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு ஒரு சுதந்திரமான தமிழ் அரசு இயங்கிவந்தது. இதுகலை, இலக்கியம் மற்றும் வணிகத்தில் சிறந்து விளங்கியது.

- **மண்ணின் மைந்தர்கள்:** வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைத் தங்களின் பாரம்பரிய தாயகமாகக் கொண்டு, நிலத்தோடும் கடலோடும் ஒன்றி வாழ்ந்தவர்கள் ஈழத்தமிழர்கள்.

## 2. மொழி மற்றும் இலக்கியச் சிறப்பு

ஈழத்துத்தமிழ், செந்தமிழுக்கு மிக நெருக்கமான ஒரு வடிவமாகக் கருதப்படுகிறது. குறிப்பாக, அவர்கள் பயன்படுத்தும் சொற்கள்பல தொன்மையான சங்க காலச் சொற்களை இன்றும் நினைவூட்டுகின்றன.

- **கல்விப் புரட்சி:** ஈழத்தமிழர்கள் கல்வியை ஒரு தவமாகவே கருதுபவர்கள். யாழ்ப்பாண நூலகம் ஒரு காலத்தில் ஆசியாவிலேயே மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது அதன் அறிவுப்பசிக்குச்சான்று.

- **இலக்கியப் பங்களிப்பு:** ஆறுமுக நாவலர் போன்ற அறிஞர்கள் தமிழ் உரைநடைக்கும், சைவசமயத்திற்கும் ஆற்றிய தொண்டு அளப்பரியது. ஈழத்துப் போராட்டக்காலங்களில் எழுந்த “ஈழப் போராட்ட இலக்கியங்கள்” உலக அளவில் ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகப் பார்க்கப்படுகின்றன.

## 3. கலாச்சாரம் மற்றும் வாழ்வியல்

ஈழத்தமிழர்களின் கலாச்சாரம் என்பது சைவமும் தமிழும் கலந்த ஒரு புனிதமான கலவையாகும்.

- **கோவில் பண்பாடு:** நல்லூர் கந்தசுவாமி கோவில், நகுலேசுவரம், திருக்கேதீசுவரம் மற்றும் கோணேச்வரம் போன்ற ஆலயங்கள் அவர்களின் ஆன்மீக அடையாளங்கள் மட்டுமல்ல, கட்டிடக்கலை அதிசயங்களுமாகும்.

- **உணவு முறை:** ஈழத்து உணவு முறை தனித்துவமானது. ஒடியல்கூழ், யாழ்ப்பாண நண்டுக்கறி, புட்டரிசிச்சோறு மற்றும் விதவிதமான துவையல்கள் என அவர்களின் சமையல் நாவிற்கு விருந்தளிப்பவை.

- **கலைகள்:** கூத்து (நாடகக்கலை) ஈழத்தின் கிராமிய அடையாளமாகும். குறிப்பாக மட்டக்களப்புப் பகுதிகளில் “நாட்டுக் கூத்து” இன்றும் உயிர்ப்புடன் பேணப்படுகிறது.

## 4. உரிமைப் போராட்டமும் நெருக்கடிகளும்

20ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியில், இலங்கை அரசின் இனவாதக் கொள்கைகளாலும், தரப்படுத்தல் போன்ற கல்விப் பாகுபாடுகளாலும் ஈழத்தமிழர்கள் பெரும் பாதிப்புக் குள்ளாயினர். இது வேதார்மீகரீ தியிலான அரசியல் போராட்டமாகவும், பின்னர் ஆயதப் போராட்டமாகவும் உருவெடுத்தது.

- **இழப்புகள்:** முப்பது ஆண்டுகாலப் போரில் ஈழத்தமிழர்கள் இழந்த உயிர்களும், உடமைகளும் ஈடுசெய்ய முடியாதவை. 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் நடந்த இறுதிப்போர், ஈழத்தமிழர் வரலாற்றில் ஒரு பெரும் துயர வடுவாக இன்றும் நிலைத்துள்ளது.

- **அடையாள அழிப்பு:** பல வரலாற்றுச் சின்னங்கள், நூலகங்கள் மற்றும் வாழ்வாதாரங்கள் போரினால் சிதைக்கப்பட்டன. இருப்பினும், தங்களின் அடையாளத்தை மீட்டெடுக்க அவர்கள் இன்றும் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

## 5. புலம் பெயர் தமிழர்களும் உலகளாவிய தாக்கமும்

போரின் விளைவாக இலட்சக் கணக்கான ஈழத்தமிழர்கள் அகதிகளாகத் தங்களின் தாயகத்தை விட்டு வெளியேறி கனடா, ஐரோப்பா, லண்டன், ஆஸ்திரேலியா எனப் பல்வேறு நாடுகளில் குடியேறினர்.

- **பொருளாதார வலிமை:** கடின உழைப்பால் அந்தந்த நாடுகளின் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகிப்பதோடு, ஈழத்தமிழர்கள் இன்று ஒரு உலகளாவிய சக்தியாகத் திகழ்கிறார்கள்.

- **மொழிக் காவலர்கள்:** புலம் பெயர்ந்த நாடுகளிலும் வார இறுதித் தமிழ்ப்பள்ளிகள் மூலம் அடுத்த தலைமுறைக்குத் தமிழைக் கொண்டு செல்வதில் ஈழத்தமிழர்கள் காட்டும் ஆர்வம் வியக்கத்தக்கது.

## 6. ஈழத்தமிழர்களின் எதிர்காலம்

இன்று ஈழத்தமிழர்கள் அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் ஒரு முக்கியமான கால கட்டத்தில் இருக்கிறார்கள். தாயகத்தில் இருப்பவர்கள் ஒரு நிலையான அரசியல் தீர்வை நோக்கியும், புலம்பெயர்ந்து வாழ்பவர்கள் தங்களின் வேர்களைப் பாதுகாக்கவும் உழைத்து வருகின்றனர்.

## முடிவுரை

ஈழத்தமிழன் என்பவன் வெறும் ஒரு இனத்தைச் சார்ந்தவன் மட்டுமல்ல் அவன் ஒரு பெரும் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் வாரிசு. எத்தனை துயரங்கள் வந்தாலும், கல்வியாலும் உழைப்பாலும் மீண்டெழும் அவர்களின் மன உறுதி உலகிற்கே ஒரு சிறந்த பாடம். “யாதும் ஊரெ யாவரும் கேளிர்” என்ற தத்துவத்திற்கு ஏற்ப, உலகம் முழுவதும் பரவி வாழ்ந்தாலும், அவர்களின் இதயம் எப்போதும் அந்தத் தமிழ் ஈழ மண்ணையே நினைத்துத் துடித்துக் கொண்டிருக்கிறது.

ஈழத்தமிழர்களின் கலை, கலாச்சாரம் மற்றும் அறிவுத்திறன் தொடர்ந்து உலக அரங்கில் தமிழ் மொழியின் பெருமையை உயர்த்திக் கொண்டே இருக்கும் என்பதில் ஐயமில்லை.



# அகண்ட இஸ்ரேலுக்காக பலியாகும் ட்ரம்ப்: அமெரிக்காவின் அறியாமையா? போலி வேசமா?

**– ஐங்கரன் விக்கினேஸ்வரா –**

06.04.2026

தற்போதய இஸ்ரேலிய தேசத்தை மேலும் வலுவாக்க மேற்கு கரையை (West Bank) இணைத்து அகண்ட இஸ்ரேலை (Greater Israel) உருவாக்கும் நெதன்யாகுவின் திட்டத்திற்க்கு வலிமை சேர்க்கும் வகையில் டிரம்பின் போர் வியூகங்கள் அமைந்துள்ளன. ஆயினும் இறுதியில் நெதன்யாகு தனக்கு வேண்டிய அனைத்தையும் பெற்றுக் கொள்பவராக விளங்கு -வார்.







நீண்ட காலமாக ஈரானைத் தகர்க்க அமெரிக்காவைத் தன்னுடன் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பது அவரது வாழ்நாள் இலட்சியம். தற்போது அவரது எண்ணம் இலகுவாக நிறைவேறி வருகிறது என்பதே உண்மை ஆகும்.

அத்துடன் கடந்த 14 மாதங்களில் டிரம்பின் போர் முறையைப் பற்றி நாம் தெரிந்துகொண்டது என்னவென்றால், அவர் ஒரு போதும் தனது இலக்குகளைத் தெளிவாகச் சொல்வதில்லை. எனவே ஈரான் போரில் ட்ரம்ப் அரசு தோல்வியடைந்து விட்டதாக யாரும் குற்றம் சாட்ட முடியாது. அதற்குப் பதிலாக, ஒவ்வொரு நாளும் ஒரு புதுக் கதையைச் சொல்லி, தனக்குத் தோன்றும் நேரத்தில் "வெற்றி" என்று அறிவித்துவிட்டு வெளியேறிவிடுவார். ஆனால் அந்த நாடு என்னவானாலும் அவருக்குக் கவலையில்லை, மேலும் அதனைப் பற்றி அவர் எதிர் காலத்திலும் கவலைப்பட மாட்டார்.

எதிர் வரும் மாதங்களில் என்ன நடந்தாலும், நெதன்யாகு அடுத்த இஸ்ரேலியத் தேர்தலில் வெற்றி பெறக்கூடும். அது அவரை ஊழல் வழக்குகளிலிருந்து பாதுகாக்கும் என்பதை உறுதியாக கூறலாம். மேலும் மேற்கு கரையை இணைத்து அகண்ட இஸ்ரேலை உருவாக்கும் அவரது திட்டத்திற்கு வலிமை சேர்க்கும் டிரம்பின் தற்போதைய நடவடிக்கைகளால் ஈரானில் நிலையான அமைதி ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் மிகவும் குறைவு. மாறாக, அங்கு குழப்பமான சூழலும், கூடுதல் துயரங்களுமே மிஞ்சப்போகின்றன.

இதனாலேயே தற்போதைய வளைகுடாப் போரில் டிரம்பால் தனக்கு வேண்டிய அனைத்தையும் பெற்றுக்கொள்பவர் நெதன்யாகு மட்டுமே. ஈரானைத் தகர்க்க அமெரிக்காவைத் தன்னுடன் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பது அவரது வாழ்நாள் இலட்சியம் நிறைவேறி வருகிறது.

அமெரிக்க அரசு வியட்நாமிலிருந்து கற்றுக்கொண்ட இரண்டு பாடங்களை மீண்டும் ஒருமுறை பரிசீலித்து பார்க்க முயல்கிறது. வெற்றி பெறுவோம் என்ற எண்ணம் இருந்தால் ஒழிய போருக்குச் செல்லாதே. அத்துடன் உன் எதிரி எவ்வளவு பல வீனமானவனாகத் தெரிந்தாலும், அவனது மனஉறுதியையும் வளங்களையும் ஒருபோதும் குறைத்து மதிப்பிடாதே. இதை கற்றுக்கொள்ள தற்போதய ட்ரம்ப் அரசும் முயல்கிறது.

அதிகாரத்தில் உள்ளவர்களிடம் கசப்பான உண்மைகளைப் பேசவும், சொந்த மக்களுடன் இணைந்து பணியாற்றவும், போரில் உயிரிழப்புகளைத் தவிர்க்கவும் அமெரிக்க முயன்றாலும், ஈரானிய போர்க்களத்தில் இவை அனைத்தும் சாத்தியம் இல்லாத நிலையில் தான் உள்ளது.

## அமெரிக்க அறியாமையா வேசமா?

அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மத்திய கிழக்கில் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பொறுப்பற்றவை என்று அமெரிக்க மக்கள் பெருமளவில் கருதுகிறார்கள். விளைவுகளைப் பற்றித் துளியும் கவலைப்படாமல் தனது அரசியல் வாழ்க்கையை அமைத்துக்கொண்ட ஒரு மனிதரிடமிருந்துகூட இத்தகைய செயலை எதிர்பார்க்க முடியாது. ஈரான் மீதான தாக்குதலானது தேவையற்ற போர் என்று அமெரிக்க உளவு நிறுவனமான சிஐஏ ஏற்கெனவே தெரிவித்துள்ளது.

## நெதன்யாகுவின் சுயநலம்:

அகண்ட இஸ்ரேலை உருவாக்கும் நெதன்யாகு ஆட்சிக்கு வலிமை சேர்க்கும் விதமாக தற்போதய போரை அவரே வழி நடத்துகிறார். இது மேற்கத்திய நாடுகளின் கவனத்திற்கு வராமலேயே படிப்படியாக நடந்து கொண்டிருக்கிறது. அகண்ட இஸ்ரேல் அமைந்தால் நெதன்யாகுவின் இஸ்ரேலுக்குள் அரசியல் உரிமைகள் வழங்கப்படாத பாலஸ்தீனியர்களின் நிலை என்னவாகும் என்பது யாருக்கும் தெரியாது.

**நீண்ட காலமாக ஈரானைத் தாக்க அமெரிக்காவைத் தன்னுடன் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே நெதன்யாகுவின் நோக்கம் ஆகும். தற்போது அவரது எண்ணம் ட்ரம்பால் இலகுவாக நிறைவேறி வருகிறது என்பதே உண்மை**

லகமே டிரம்ப்பும் அவரது குழுவினரும் கொண்டுள்ள அறியாமையைக் கண்டு திகைத்துப் போயுள்ளது. ஈரானிலும், ஆபிரிக்காவிலும் அவர்கள் தடுப்பூசித் திட்டங்களை ரத்து செய்கிறார்கள், பசியால் வாடுபவர்களுக்கான உணவு உதவியை நிறுத்துகிறார்கள், பருவநிலை மாற்றத்தை மறுக்கிறார்கள், உலகளாவிய ஒழுங்கின் தூண்களைத் தகர்க்கிறார்கள் மற்றும் உண்மையை நிராகரிக்கிறார்கள். இப்போது அவர்கள் போர் விளையாட்டை ஆடிக்கொண்டிருக்கிறார்கள்.

இதன் விளைவாக வரும் பலனாக, டிரம்பின் போரால் தனக்கு வேண்டிய அனைத்தையும் பெற்றுக்கொள்பவர் நெதன்யாகு மட்டுமே. ஈரானைத் தகர்க்க அமெரிக்காவைத் தன்னுடன் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பது அவரது வாழ்நாள் லட்சியம். வரும் மாதங்களில் என்ன நடந்தாலும், நெதன்யாகு அடுத்த இஸ்ரேலியத் தேர்தலில் வெற்றி பெறக்கூடும். அத்துடன் அது அவரை ஊழல் வழக்குகளிலிருந்து பாதுகாக்கும்.

வியட்நாமிலும் மற்ற இடங்களிலும் உண்மையாகப் போர்க்களத்தில் நின்றவர்கள் ட்ரம்ப் தலைமையிலான போரை நிராகரித்துள்ளனர். அவரது ஆட்சியின் முட்டாள்தனத்திற்கு ஒட்டுமொத்த உலகமும் – குறிப்பாக ஈரான் மக்களும் – பெரும் விலையைக் கொடுக்க வேண்டியிருக்கும் என்பது எதிர்வரும் நாட்களில் நிச்சயம் தெரியும்.

## டிரம்பின் விசித்திர வியூகங்கள்

டிரம்பின் பதவியேற்பு நாளில் இருந்து உக்ரைனில் அமைதி ஏற்படுத்துவதாக கூறினார். ஆனால், விளாடிமிர் புட்டினிடம் சமரசம் செய்ய தவறுவிட்டார். விலோடிமிர் செலென்ஸ்கியை மிரட்டுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை அவர் இப்போது கண்டறிந்துள்ளார்.

டிரம்பின் ஈரான் முட்டாள்தனத்திற்காக உக்ரைன் குடிமக்கள் பெரும் விலையைக் கொடுப்பார்கள். ஏனெனில் அமெரிக்காவின் ஆயுதங்கள் மத்திய கிழக்கில் தற்போது தீர்ந்து கொண்டிருக்கின்றன.

மற்றொரு பக்கம், வெனிசுலாவின் அதிபர் மதுரோவைப் பதவி நீக்கம் செய்வதாகக் கூறித் தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்த டிரம்ப், இப்போது வெனிசுலா மக்களை மதுரோவின் கூட்டாளிகளின் பொறுப்பில் விட்டுவிட்டு மீண்டும் நகர்ந்து விட்டார்.

ஈரானில் அமைதி நிலவுவதற்கான சாத்தியம் மிகவும் குறைவு. அங்கு குழப்பமான சூழலும், ஈரானியர்களுக்குக் கூடுதல் துயரங்களுமே மிஞ்சப் போகின்றன. உச்சத் தலைவர் அலி கமேனியின் மறைவின் காரணமாக ஈரான் ஒற்றுமைப் பட்டுள்ளது. டிரம்ப் தனது அகங்காரத்தால் இயக்கப்படுபவர். தனது செயல்களால் பாதிக்கப்படுபவர்கள் மீது அவருக்கு எந்த இரக்கமும் இல்லை என்பது வெளிப்படை.

## அமெரிக்காவின் தோல்வியுற்ற போர்கள்:

ஈரான் மீதான தாக்குதல் வியட்நாம், ஈராக் அல்லது ஆப்கானிஸ்தான் போன்ற அமெரிக்காவின் தோல்வியுற்ற போர்களைப் போன்றது அல்ல. ஏனெனில் ஒவ்வொன்றின் சூழலும் வேறுபட்டவை. ஆனால், இவை அனைத்திற்கும் பொதுவான ஒரு காரணியை அடையாளம் காண முடியும். அதாவது ஆக்கிரமிப்புக்கான அடிப்படையே இந்த போர்களாகும்.

அமெரிக்கா ஈரானின் மலைகளுக்கும் பள்ளங்களுக்கும் சென்று தாக்குவது தனது சொந்த சுயநலத்திற்காகத்தான். தாம் யாரைக் காப்பாற்றப் போவதாகச் சொன்னார்களோ, அந்த மக்கள் மீது அவர்கள் காட்டும் அக்கறை என்பது போலி வேஷமே.

வியட்நாம் குறித்து முன்னாள் போர் வீரர் எழுதிய புத்தகத்தில், வெள்ளை மாளிகையில் இரண்டு தசாப்தங்களாக நடந்த வியட்நாம் போர் குறித்த மூலோபாயக் கூட்டங்களில் அமெரிக்கர்கள் மட்டுமே இருந்தனர். ஒரு வியட்நாமியர்கூட இல்லை. இறுதியில், ஹனோய் நகரத்தில் வியட்கொங் தலைவர்கள் போரில் வென்றார்கள். ஏனெனில் அவர்கள் வியட்நாமியர்கள். ஆனால் சாய்கானில் (Saigon) அமெரிக்காவின் கையாட்களாக இருந்தவர்கள் தங்கள் நாட்டு மக்களால் கூட அங்கீகரிக்கப்பட்டவர்கள் அல்ல என்பதை அமெரிக்க அரசும் ஒப்புக் கொள்ள மறுத்தது.

அதேவேளை ஈராக் மீது போர் தொடுத்ததற்கு முக்கியக் காரணம் முன்னாள் அதிபர் ஜார்ஜ் டபிள்யூ. புஷ், சதாம் உசேன் மீது கொண்டிருந்த பகைதான். பேரழிவு ஆயுதங்கள் ஈராக்கிடம் இருப்பதாகப் பொய்ச் சான்றுகளை உருவாக்க அவர் அன்றைய பிரிட்டிஷ் பிரதமர் டோனி பிளேயருடன் இணைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்க வரலாற்று ஆய்வாளர்களிடையே நடத்தப்பட்ட சமீபத்திய வாக்கெடுப்பில், 2003இல் நடந்த ஈராக் படையெடுப்புதான் அமெரிக்க வரலாற்றில் வெளியுறவு தொடர்பான மிக மோசமான தவறு என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

தற்போது டிரம்பின் ஆதரவாளர்கள் (MAGA), முந்தைய அதிபர்கள் செய்ததையே இவரும் செய்கிறார் என்று வாதிடலாம். ஆம், அவர்களும் தாங்கள் எடுக்கப்போகும் இராணுவ நடவடிக்கைகளை ரகசியமாகவே வைத்திருந்தனர். வெள்ளை மாளிகை இன்றும் அதையே செய்கிறது. பழைய தவறுகள் தொடர்கின்றன. இந்தப் பாடங்களைக் கற்றுக்கொள்ள உலகம் பெரும் விலையைக் கொடுத்துள்ளது. டிரம்ப் நிர்வாகம் அந்தப் பாடங்களை வேண்டுமென்றே புறக்கணிக்கிறது.

மிகவும் நகைச்சுவையாக ஈரானில் தனது இலக்குகள் என்ன என்பது குறித்து டிரம்ப் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கதையைச் சொல்கிறார். ஆட்சி மாற்றம் என்பார், அடுத்த நாள் வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் அது எங்கள் பட்டியலில் இல்லை என்பார். ஈரானின் அணுசக்தி நிலையங்களை அழிப்பேன் என்பார். கடந்த ஆண்டு ஜூன் மாதமே அதை ஒரே ஒரு குண்டுவீச்சில் அழித்துவிட்டதாகக் கதை விடுவார். அமெரிக்க வீரர்களை அனுப்பாமல் ஈரானை நிராயுதபாணியாக்குவேன் என்பார். பிறகு வீரர்களை அனுப்பவும் கூடும் என்பார்.

எவ்வாறாயினும் அகண்ட இஸ்ரேலுக்காக பலியாகுவது ட்ரம்ப் அரசும், அவரது படையினரும் தான். அமெரிக்காவின் அறியாமையும் போலி வேஷமும் விரைவில் உலக அரங்கில் வெளிப்படும்.

# நாட்டுப்பற்றாளர் ஈகைச்சுடர் அன்னை பூபதி அம்மாவை நினைவுகூர்ந்து

## முன்னெடுக்கப்படும் அடையாள உண்ணாவிரதப் போராட்டம்



தியாக தீபம் அன்னை
பூபதி அம்மாவை நினைவுகூர்ந்து
முன்னெடுக்கப்படும் அடையாள
உண்ணாவிரதப் போராட்டம்.

"நாட்டுப்பற்றாளர் தியாக தீபம் அன்னை பூபதி" அவர்கள் உயிரீகம் செய்த 38 ஆவது ஆண்டு நினைவுநாளான 19/04/2026 ஐ நினைவு கூர்ந்து முன்னெடுக்கப்படும் "அடையாள உணவுத் தவிர்ப்பு விழிப்புணர்வு அரசியற் போராட்டம்".

திகதி : சனிக்கிழமை 19/04/2026
நேரம் : காலை 10 மணி முதல் 4 மணி வரை
இடம் : In front of UK Prime Ministers Office
10 Downing Street London, UK. SW1A 2AA

அனைத்து தமிழீழ மக்களையும் கலந்து கொள்ளுமாறு உரிமையுடன் அழைக்கின்றோம்.

தமிழீழ சுயநிர்ணய அமைப்பு & அனைத்து தமிழ் அமைப்புகளும்
Movement for Self-Determination of Tamil Eelam [MSDTE]
www.msdte.org | admin@msdte.org

**FOR FURTHER DETAILS CONTACT**

| | | | |
|---|---|---|---|
| YOGI | : 07404369106 | PRIYAN | : 07453604900 |
| RAJ | : 07950888047 | RAGAVAN | : 07799374035 |
| RAJEEPAN | : 07404755495 | NINTHUJA | : 07908183147 |
| THAVAKUMARAN | : 07448768132 | | |

தமிழரின் தலைவிதி தமிழரின் கையில்

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்



# வளைகுடாப் போரில் அமெரிக்கா பின்னடைவு: நிஜமான பலத்தை நிரூபிக்கும் ஈரான்!

-ஐங்கரன் விக்கினேஸ்வரா-

04.04.2026

கடந்த ஐந்து வாரங்களாக அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரானின் மீது கடுமையான வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. ஆனால் ஈரானின் நிஜமான இராணுவ பலம் தற்போது நிருபிக்கப்பட்டுள்ளது. வீழ்த்தப்படும் அமெரிக்க விமானங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

அதனை விட ஈரானிடம் இன்னும் ஐம்பது வீதமான ஏவுகணை தளங்கள் அழிக்கப்பட இல்லை என்ற அமெரிக்க உளவுத்துறை அறிக்கையினால் பென்டகனில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## இராணுவ நடவடிக்கை தோல்வி?

மத்திய கிழக்கில் அமெரிக்கா - இஸ்ரேல் நடத்தி வரும் போரில் ஈரான் மீது தாக்குதல் நடத்திய அமெரிக்க படைகளுக்கு டிரம்ப் பாராட்டு தெரிவித்த வேளையிலேயே அமெரிக்க விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. ஈரானின் இராணுவக் கட்டமைப்பு பெருமளவு அழிக்கப்பட்டுவிட்டதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தொடர்ந்து கூறி வரும் நிலையில், அமெரிக்க உளவுத்துறையின் மதிப்பீடுகள் முற்றிலும் மாறுபட்ட ஒரு கள நிலவரத்தை வெளிப்படுத்தியுள்ளன. அமெரிக்கத் தாக்குதல்களுக்கு மத்தியிலும் குறையாத ஈரானின் இராணுவ பலம் குறித்த உளவுத்துறைத் தகவல்கள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

இந்த அம்பலமான உண்மைகளால் வெள்ளை மாளிகை சொன்னது ஒரு பக்கம், உளவுத்துறை சொல்வது மறுபக்கம் என ட்ரம்ப் அரசின் பித்தலாட்டம் தெரிய வந்துள்ளது. ஈரானுக்கு எதிரான போர் முடிவுக்கு வருவதாக ஜனாதிபதி ட்ரம்ப் முழங்கி வரும் வேளையில், அமெரிக்க உளவுத்துறையின் புதிய மதிப்பீடுகள் (Intelligence Assessments) அதிர்ச்சியூட்டும் தகவல்களை வெளியிட்டுள்ளன. ஈரான் அடியோடு சிதைந்து விட்டது என்ற ட்ரம்பின் வாதத்திற்கு இந்த அறிக்கை ஒரு மிகப் பெரிய சவாலாக அமைந்துள்ளது.

ஈரான் மீது பல்லாயிரக்கணக்கான ஏவுகணைகளை வீசிய போதிலும், ஈரானிடம் இன்னமும் அதன் சரிபாதி ஏவுகணைத் தளங்களும், பெரும் எண்ணிக்கையிலான ஆளில்லா விமானங்களும் (Drones) எவ்விதச் சேதமுமின்றிப் பாதுகாப்பாக இருப்பதாகக் கூறப்படுகிறது. அதிபர் ட்ரம்பின் கூற்றுக்கும் யதார்த்தத்திற்கும் இடையே பெரும் இடைவெளி இருப்பதை இது காட்டுகிறது.

ஈரான் தன்னிடம் உள்ள யுரேனியத்தை செறிவூட்டி அணு ஆயுதம் தயாரிக்கும் கட்டத்திற்கு மிக நெருக்கமாக சென்று விட்டதாக குற்றம் சாட்டிய அமெரிக்கா, இஸ்ரேலுடன் இணைந்து கடந்த ஆண்டு ஜூன் மாதம் 12 நாட்கள் சண்டையிட்டது. அதில் ஈரானின் அணுசக்தி நிலையங்கள் சேதப்படுத்தப்பட்டதாக அமெரிக்கா கூறியது. அதைத் தொடர்ந்து இந்த ஆண்டு ஆரம்பத்தில் பொருளாதார சீர்குலைவால் ஈரான் அரசுக்கு எதிராக அந்நாட்டில் மக்கள் போராட்டம் வெடித்த நிலையில், ஈரானில் தலைமையை மாற்றுவதற்காக மீண்டும் அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து இந்த ஆண்டு பெப்ரவரி 28ம் திகதி ஈரான் மீது போர் தொடுத்தது.





போரின் முதல் நாளிலேயே ஈரான் அதிபர் அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்ட நிலையிலும், அமெரிக்காவிடம் ஈரான் பணியவில்லை. அத்தோடு இஸ்ரேல் மீது மட்டும் பதில் தாக்குதல் நடத்தாமல், ஒட்டுமொத்த வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க இராணுவ தளங்களை குறிவைத்து ஈரான் ஏவுகணை, டிரோன் தாக்குதல் நடத்தியது. இதனால் அரபு நாடுகள் அதிர்ச்சி அடைந்தன.

மேலும், எண்ணெய், எரிவாயுவின் முக்கிய நீர்வழிப்பாதையான ஹார்முஸ் நீரிணையை ஈரான் மூடியது. இதனால் உலகளவில் கச்சா எண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டு உலக பொருளாதாரம் ஆட்டம் கண்டுள்ளது. இந்நிலையில் எங்கள் இலக்குகளை முழுமையாக எட்டும் வரை போர் தொடரும் என அதிபர் டிரம்ப் தெரிவித்தார்.

## ஈரானின் நிஜமான இராணுவ பலம்

வாரக்கணக்கில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களையும் மீறி, ஈரானிடம் இன்னும் வான் பாதுகாப்பு ஏவுகணை ஏவுதளங்கள் (Missile Launchers) பத்திரமாக இருப்பதாக உளவுத்துறை உறுதிப்படுத்தியுள்ளது. ஈரானின் ட்ரோன் (UAV) பலம் அடியோடு முடக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. ஆனால், இப்போதும் ஈரானிடம் ஆயிரக்கணக்கான தற்கொலை ட்ரோன்கள் (Kamikaze Drones) தயார் நிலையில் உள்ளன. அதன் ட்ரோன் தளங்கள் இன்னும் அப்படியே உள்ளது என்று அமெரிக்க உளவு அமைப்பு தெரிவித்துள்ளது.

ஈரானிடம் மிகக் குறைந்த ஏவுகணைகளே மிச்சமுள்ளன்என ட்ரம்ப் சொன்னார். அத்துடன் அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் ஹெக்செத் ஈரானின் பலம் 90% குறைந்துவிட்டது என்றார். ஆனால், உளவுத்துறையின் இந்த புதிய அறிக்கை, அமெரிக்கத் தலைமைக்கு ஒரு மிகப்பெரிய இராஜதந்திர நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

பல்லாயிரக்கணக்கான ஏவுகணைகளை அமெரிக்க வீசிய போதிலும், ஈரானிடம் இன்னமும் அதன் சரிபாதி ஏவுகணைத் தளங்களும், பெரும் எண்ணிக்கையிலான ஆளில்லா விமானங்களும் (Drones) எவ்விதச் சேதமுமின்றிப் பாதுகாப்பாக இருப்பதாகக் கூறப்படுகிறது. அதிபர் ட்ரம்பின் கூற்றுக்கும் யதார்த்தத்திற்கும் இடையே பெரும் இடைவெளி இருப்பதை இது காட்டுகிறது.

அமெரிக்கப் பாதுகாப்புத் தலைமையகத்தின் (Pentagon) கணக்கின்படி இதுவரை ஈரானில் சுமார் 12,000 இலக்குகள் தாக்கப்பட்டுள்ளன. அமெரிக்கப் படைகளுக்கு எதிரான ஈரானின் எதிர் தாக்குதல் திறன் 90 வீதம் குறைந்துள்ளதாகவும், ஈரானின் வான்பரப்பில் அமெரிக்கா முழு ஆதிக்கத்தைச் செலுத்துவதாகவும் அமெரிக்கப் பாதுகாப்புத் துறை பெருமிதம் தெரிவித்தது.

## ஈரானின் எதிர் தாக்குதல் திறன்:

வான்வழி ஆதிக்கம் ஒருபுறமிருந்தாலும், இஸ்ரேல், வளைகுடா நாடுகள் மற்றும் அமெரிக்கப் படைகள் மீது ஈரான் தொடர்ந்து தாக்குதல்களை நடத்திக் கொண்டேதான் இருக்கிறது. ஈரானின் வெளிப்படையான ஏவுகணைத் தளங்கள் பல இன்னும் செயல்படுவதாக இஸ்ரேலிய அதிகாரிகள் மதிப்பிடுகின்றனர். இவை தவிர, கண்டுபிடிக்க முடியாத பிரம்மாண்டமான நிலத்தடிச் சுரங்கங்களில் மறைத்து வைக்கப்பட்டுள்ள ஏவுகணைகள் மற்றும் நடமாடும் ஏவுகணைத் தளங்களை அழிப்பது இரு நாட்டுப் படைகளுக்கும் பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது.

கடல்வழிப் போரைப் பொறுத்தவரை, ஈரானின் அதிகாரப்பூர்வக் கடற்படை பெருமளவு அழிக்கப்பட்டுவிட்டது என்று அமெரிக்கா தெரிவித்தாலும், ஈரானியப் புரட்சிகரப் படையின் (Revolutionary Guards) வசம் இன்னும் நூற்றுக்கணக்கான அதிவேகப் படகுகளும், கடல்வழி ஆளில்லா விமானங்களும் பெரும் ஆயுத பலமாக இருக்கின்றன .

ஈரானின் மேலோட்டமான நகல் இராணுவக் கட்டமைப்புகளையே அமெரிக்காவும் இஸ்ரேலும் அழித்துள்ளன. அதன் உண்மையான மற்றும் ஆபத்தான ஆயுதங்கள் இன்னும் இரகசியச் சுரங்கங்களில் உள்ளதாக போர் முனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ட்ரம்ப்பின் விதண்டாவாத பேச்சு:

ஈரான் கடற்படையை அழித்து விட்டோம். ஈரானுக்கு அணு ஆயுதங்கள் இல்லை. அணு ஆயுதங்கள் தயாரிக்க மாட்டோம் என ஈரான் உறுதி அளித்துள்ளது. ஈரான் தலைவர்களில்

**ஈரானின் ராணுவக் கட்டமைப்பு பெருமளவு அழிக்கப்பட்டுவிட்டதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் வேளையிலேயே அமெரிக்க விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.**

**தெஹ்ரானின் படைத்திறன் பற்றிய அமெரிக்க உளவுத்துறையின் மதிப்பீடுகள் முற்றிலும் மாறுபட்ட ஒரு கள நிலவரத்தை வெளிப்படுத்தி உள்ளன. பென்டகனின் இராணுவ நடவடிக்கை தோல்வியில் முடிந்தால் அமெரிக்க போரியல் வரலாற்றில் பாரிய பின்னடைவு சந்திக்கும்.**

பெரும்பாலோர் பயங்கரவாதிகள், இப்போது இறந்துவிட்டனர். ஈரான் இராணுவத்தின் கட்டுப்பாட்டு அமைப்புகள் முற்றிலும் சிதைக்கப்பட்டுள்ளன, ஈரானிடம் மிக குறைவான ஏவுகணை ஏவுதளங்களே எஞ்சியுள்ளன என ட்ரம்ப் முன்னர் தெரிவித்திருந்தார்.



ஈரானுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. அமெரிக்கா தனது இலக்குகளை மிக விரைவில் எட்டும். ஈரான் தோற்றால் ஹார்முஸ் நீரிணை தானாக திறந்து விடும். ஈரான் போரில் நான் எப்போதும் இராஜதந்திர பாதையையே விரும்பினேன். எந்த சூழலிலும் ஈரான் அணு ஆயுதங்களை பெற அனுமதிக்க முடியாது. தீவிரவாத சக்திகளிடம் அணு ஆயுதம் இருப்பது ஏற்றுக்கொள்ளவே முடியாத அச்சுறுத்தல் என ட்ரம்ப் கூறியிருந்தார்.

சமாதான ஒப்பந்தம் எட்டப்படாவிட்டால் ஈரானின் மின் உற்பத்தி நிலையங்களை அழிப்போம். அமெரிக்காவின் எரிசக்தி தேவை மத்திய கிழக்கு நாடுகளை சார்ந்திருக்கவில்லை. அமெரிக்கா தனது இலக்குகளை மிக விரைவில் எட்டும், அமெரிக்கா தனது ஆற்றல் தேவைகளில் தன்னிறைவு அடைந்துள்ளது.



அமெரிக்கா எரிசக்தி உற்பத்தியில் தன்னிறைவு அடைந்த நாடாக மாறியுள்ளது. மில்லியன் கணக்கான பீப்பாய்களை உற்பத்தி செய்து வருகிறோம். ரஷ்யாவும் சவுதி அரேபியாவும் சேர்ந்து எவ்வளவு உற்பத்தி செய்யுமோ, அந்தளவிற்கு நாம் உற்பத்தி செய்கிறோம். அமெரிக்காவின் எரிசக்தி தேவை மத்திய கிழக்கு நாடுகளை சார்ந்திருக்கவில்லை.

ஈரான் கச்சா எண்ணெய் கப்பல்களை தாக்கியதே விலை உயர்வுக்கு காரணம். இது தற்காலிகமானது தான். ஹார்முஸ் நீரிணையை நேரடியாக கைப்பற்றி பாதுகாக்க வேண்டும். வளைகுடாவில் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகள் தைரியம் காட்ட வேண்டும். ஹார்முஸை மீட்க மற்ற நாடுகளின் நேரடி நடவடிக்கை தேவை.

தற்போது அமெரிக்காவிடம் போதுமான அளவுக்கு கச்சா எண்ணெய் உள்ளது. நாங்கள் வளைகுடா நாடுகளை சார்ந்திருக்கவில்லை. ஆனால் அங்கிருந்து கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்யும் நாடுகள் ஹார்முஸை கைப்பற்றி தைரியமாக, நேரடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அது எளிமையான விஷயம்தான். இல்லையென்றால் எங்களிடம் எரிசக்திகளை வாங்குங்கள். எங்களிடம் ஏராளமாக உள்ளன. ஈரானின் அணுசக்தி திட்டம் முற்றிலும் அழிக்கப்பட்டு விட்டது. இருந்தாலும் அடுத்த 2, 3 வாரங்கள் ஈரானை மிகக் கடுமையாக தாக்குவோம். அனைத்து வாய்ப்புகளும் எங்களிடம் உள்ளன. ஈரானிடம் எதுவும் இல்லை.

இப்படி எல்லாம் பேசிய ட்ரம்ப்பின் உரைக்கு மாறாக, அமெரிக்காவையே அதிரவைக்கும் புதிய உளவுத்துறை அறிக்கை வெளியாகியுள்ளது. ஈரானின் பலத்தைப் பற்றி ஜனாதிபதி ட்ரம்ப் உலகிற்கு தவறான தகவலைத் தெரிவித்து வருகிறார். இன்னும் பாரிய இராணுவ பலம் ஈரானிடம் நிலையில், ட்ரம்ப் சொன்ன காலக்கெடு சாத்தியமா என்பது சந்தேகமே. உளவுத்துறையின் இந்த அறிக்கை வெளியான பிறகு, கச்சாய் எண்ணெய் விலை சிகரத்தை தாண்டுமா என்று கேள்வி எழுந்துள்ளது.





# நேட்டோ சாதித்த எதிர்ப்புரட்சி கொள்கையும்: இராணுவ வல்லாதிக்க நோக்கமும்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –




09.04.2026

அமெரிக்காவை நேட்டோவிலிருந்து வெளியேற்ற முடியுமா? அல்லது அமெரிக்கா நேட்டோவிலிருந்து வெளியேறுகின்றதா என்ற கேள்விகள் ஐரோப்பிய இராஜதந்திர வட்டரங்களில் எழுந்துள்ளன. அப்படி வெளியேற்றினாலோ அல்லது வெளியேறினாலோ என்ன நடக்கும் என்பதை அலசும் ஓர் ஆக்கமாகும்.

## ஐரோப்பாவுடன் முரண்படும் டிரம்ப்:



ஐரோப்பிய நாடுகளுடன் முரண்படும் ஜனாதிபதி டிரம்ப் அமெரிக்காவை நேட்டோவிலிருந்து விலக்கிக் கொண்டால், உலகளாவிய அதிகார சமநிலை ஒரே இரவில் மாறும் நிலை ஏற்படும். ஐரோப்பா இதற்கு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு ஒரு பாரிய பாதுகாப்பு நெருக்கடியை எதிர்கொள்ளும்.

அதன் விளைவாக உலகின் வலுவான பாதுகாப்பு அமைப்பான நேட்டோ சரிந்துவிடும் அல்லது ஒரு காகிதப் புலியாக மாறும் என்றும் நம்பலாம்.

அத்துடன் அமெரிக்க நிதி மற்றும் இராணுவ சக்தி இல்லாமல், நேட்டோ அமைப்பில் தங்களுக்குள் தலைமைக்காக போராடும் நிலை ஏற்படும்.

அமெரிக்கா தற்போது நேட்டோவின் பாதுகாப்பு செலவினங்களில் எழுபது சதவீதத்தை செலுத்துகிறது. அது இல்லாமல், ஐரோப்பிய நாடுகள் இராணுவ வரவு செலவுத் திட்டங்களை வெகுவாக அதிகரிக்கவோ அல்லது இராணுவ வீழ்ச்சியை ஏற்கவோ கட்டாயப்படுத்தப்படும்.

மேலும் பல தசாப்தங்களாக அதன் சொந்த இராணுவப் படையை விரைவாக உருவாக்க முடியாவிட்டால், ரஷ்யா போன்ற பெரிய சக்திகளுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் பாதுகாப்பற்றதாக இருக்கும் நிலையும் ஏற்பட வாய்ப்புள்ளது.

1949 இல் நேட்டோ உருவாக்கத்தின் பின்னர், இடதுசாரி நாடுகளில் ஒரு வன்முறை, எதிர்ப்புரட்சிக் கொள்கையைப் பின்பற்றியது. அமெரிக்கா, பிரான்ஸ் பிற நேட்டோ நாடுகள் குறிப்பாக இந்தோனசியா, கொரியா, அல்ஜீரியாவில் காலனித்துவ போர்களை நடத்தி வந்தன.

## எதிர்ப்புரட்சி கொள்கையும் உருவாக்கமும்:

அதன் பின்னர் நேட்டோ கிரீஸ் மற்றும் துருக்கியில் ஆட்சிக் கவிழ்ப்புகளை ஆதரித்ததோடு, சோவியத் ஒன்றியத்தின் செல்வாக்கைக் கட்டுப்படுத்த ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்காவில் இடதுசாரி தேசியவாத அரசாங்கங்களுக்கு எதிரானவர்களுக்கு ஆதரவளித்தது.

எவ்வாறாயினும், அமெரிக்க ஆளும் உயரடுக்கில் சோவியத் யூனியனை "கட்டுப்படுத்துவதன்" மூலமாகவோ அல்லது இராணுவப் "பின்வாங்கல்" மூலமாகவோ, இடதுசாரி எழுச்சிகளை பல நாடுகளிலும் வன்முறைகளால் அழித்தமை வரலாறாகும்.

## நேட்டோ 75 ஆண்டு சாதனை:

கடந்த ஆண்டு நேட்டோ 75வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் வாஷிங்டனில் மூன்று நாள் ஜூலை 8 முதல் 11 வரை இந்த உச்சி மாநாட்டை நடத்தியது. இந்த மாநாட்டின் முக்கிய விடயமாக உக்ரைனுக்கான இராணுவ உதவி அமைந்தது. உலகின் மிக சக்தி வாய்ந்த இராணுவக் கூட்டமைப்பில் உக்ரைன் நேட்டோ உறுப்பினருக்கான "திரும்ப முடியாத" (Irreversible Path) பாதையில் இருப்பதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. அத்துடன் இராணுவ உதவியாக குறைந்தபட்சம் 43 பில்லியன் டாலர் வழங்க உறுதியளித்தது.

**அமெரிக்கா நேட்டோவிலிருந்து வெளியேறினால், அது 'உலகின் போலீஸ்காரரர்' என்ற அதன் பங்கின் முடிவைக் குறிக்கும். அமெரிக்கா வெளிநாட்டுப் போர்களில் அல்ல, அதன் சொந்த எல்லைகளைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று டிரம்ப் ஏற்கனவே கூறியுள்ளார்.**

2024 இல் ஒவ்வொரு நேட்டோ நாடும் அதன் இராணுவத்திற்காக எவ்வளவு செலவழிக்கிறது என்பதை யாரும் அறிந்தால் அதிர்ந்து போய்விடுவார்கள். உலகின் மிக சக்திவாய்ந்த இராணுவக் கூட்டணியின் 32 உறுப்பினர்கள் இந்த ஆண்டு 1.47 டிரில்லியன் டாலர் செலவழிக்க திட்டமிட்டுள்ளனர். அத்துடன் பாதுகாப்பு செலவினங்களை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மேலும் 2% ஆக உயர்த்த நேட்டோ தனது உறுப்பினர்களை வேண்டுகிறது.

2006 ஆம் ஆண்டில், நேட்டோ கூட்டணியின் இராணுவத் தயார் நிலையை உறுதி செய்வதற்காக, அவர்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) குறைந்தபட்சம் 2 சதவீதத்தை பாதுகாப்புச் செலவீனங்களுக்கு வழங்க, கூட்டணியின் பாதுகாப்பு அமைச்சர்கள் ஒப்புக்கொண்டனர். தற்போது, அதன் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு நாடுகள் (32 இல் 23) இந்த உறுதிமொழியை நிறைவேற்றியுள்ளனர்.

## சோவியத்தை உடைக்கும் திட்டம்:

பனிப்போரின் ஆரம்ப காலத்தில், அணு ஆயுதப் போரை ஆபத்தில் ஆழ்த்துவதன் மூலம் கிழக்கு ஐரோப்பாவை பயமுறுத்தி வைத்தனர்.

எவ்வாறாயினும், அமெரிக்க அரசு தனது நீண்டகால இலக்கான சோவியத் ஒன்றியத்தை அழிப்பதை ஒருபோதும் கைவிடவில்லை. இறுதியில் பனிப்போர் 1991 இல் முடிவுக்கு வந்தது.

சோவியத் ஒன்றியத்தில் 1917 அக்டோபர் புரட்சியால் உருவாக்கப்பட்ட சோசலிச நடைமுறையை கலைத்து, முதலாளித்துவத்தை மீட்டெடுத்து, வார்சா ஒப்பந்தத்தையும் சோவியத் யூனியனையும் கலைத்தது. சோவியத் யூனியனால் முன் வைக்கப்பட்டதாகக் கூறப்படும் ஆபத்துடன் தனது இருப்பை எப்போதும் நியாயப்படுத்தி வந்த நேட்டோ, பனிப்போரின் பின்னர் தன்னைக் கலைக்கவில்லை.

## ரஷ்யாவை சுற்றி நிழல் போர்:

அமெரிக்க அரசு சோவியத் யூனியனின் கலைப்பை தொடர்ந்து,

கோர்பச்சேவ், யெல்ட்சின் பின்னர் புட்டின் மூலமாக ரஷ்யா மீதான காலனி ஆதிக்கத்தை விரும்பியது.

ஆயினும் புட்டினின் எதிர்ப்பால், நேட்டோவும் அமெரிக்காவும் ரஷ்யாவை சுற்றி நிழல் போரை தொடங்கின. நேட்டோ ரஷ்யாவை நோக்கி திட்டமிட்டு முன்னேறி கிழக்கு ஐரோப்பா முழுவதையும் (பால்டிக் நாடுகளுடன்) மற்றும் முன்னாள் சோவியத் யூனியனின் சில பகுதிகளையும் இணைத்துக் கொண்டு ரஷ்யாவை பகைக்க தொடங்கியது.

இதன் வழியே அமெரிக்காவின் ஐரோப்பிய கூட்டாளிகள் தங்கள் சொந்த நலன்களை பின்பற்றி, அதன் வழியை நேட்டோவை பின்பற்றி வருகின்றனர்.

## மத்திய கிழக்கில் நேட்டோ:

அமெரிக்கா 1990 இல் ஈராக்கை முதன் முதலில் தாக்கியது. 1999 இல், நேட்டோ ஐ.நா ஆணை இல்லாமல் - சர்வதேச சட்டத்தை மீறி - சேர்பியா மீது குண்டுவீசி கொசோவோவை பிரிந்து செல்ல கட்டாயப்படுத்தியது.

அதன் பின்னர் 2001 ஆம் ஆண்டில், நேட்டோ முதன்முறையாக பரஸ்பர பாதுகாப்பு விதியை செயல்படுத்தி ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தது. ஆப்கான் நாட்டினை அழிவுக்கு உள்ளாக்கி, 20 ஆண்டுகள் நீடித்த இந்தப் போர் தலிபான்களின் வருகையுடன் முடிவுக்கு வந்தது.

ஈராக், லிபியா மற்றும் சிரியாவிற்கு எதிரான அடுத்தடுத்த போர்கள் உத்தியோகபூர்வ நேட்டோ உறுப்பு நாடுகளால் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் மத்திய கிழக்கில் நடந்த போர்களுக்கு இணையாக, கிழக்கு ஐரோப்பாவிலும், முன்னாள் சோவியத் யூனியனின் பல நாடுகளிலும் ரஷ்யாவிற்கு எதிரான பல போர்களை நேட்டோ ஊக்கப்படுத்தியது.

## ரஷ்ய தாயும் உக்ரேனிய சேயும்:

சோவியத் உடைவின் பின் உலகின் மிக சக்திவாய்ந்த நேட்டோ இராணுவக் கூட்டணி 12இல் இருந்து 32 உறுப்பினர்களாக வளர்ந்தது. கடந்த ஆண்டு, அதன் பாதுகாப்புக்காக 1.3 டிரில்லியன் டொலர்கள் அல்லது உலக இராணுவச் செலவில் 60 சதவிகிதத்தை நேட்டோ செலவழித்தது. அமெரிக்க இராணுவ




வரவுசெலவுத் திட்டம் மட்டும் மொத்தம் 905 பில்லியன் டொலர்களாகும். இது மற்றய நாடுகளை விட அதிகமாகும். மாறாக, சீனா 220 பில்லியன் மற்றும் ரஷ்யா 109 பில்லியன் பாதுகாப்புக்காக மட்டுமே செலவிட்டுள்ளது.

2014 முதல் ரஷ்யாவுடன் போருக்கு திட்டமிட்டு, அமெரிக்கா மேற்கத்திய சார்பு கைப்பாவை ஆட்சியை உக்ரைனில் நிறுவுவதற்கான ஒரு சதியை ஆதரித்தது. நேட்டோவும் அமெரிக்காவும் தொடர்ச்சியாக உக்ரேனுக்கு ஆயுதங்களை வழங்கி வந்தது. இறுதியில் 2022 இல் ரஷ்யா தாயும் சேயுமாக வாழ்ந்த அயலவர்களுடன் தாக்குதலை மேற்கொள்ளத் தூண்டியது.

இதன் பின்னர், ரஷ்யாவிற்கு எதிரான போரில் உக்ரேனியர்களை பீரங்கித் தீவனமாகப் பயன்படுத்தி, நூறாயிரக்கணக்கான உக்ரேனிய உயிர்களைப் பலி கொடுத்து வரும் நேட்டோ, அணுவாயுத மோதலாக அதிகரிக்கும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளதும் உண்மையே.



# மௌனச் சாட்சிகள்

அமைதி காக்க வந்தவர்கள்
ஆயுதங்கள் தந்துவிட்டுப் போனார்கள்...
மனித உரிமைக் காகிதங்கள்
எம் குருதி நனைந்து கனக்கின்றன.
கூடிப் பேசும் மேசைகளில்
குண்டுச் சத்தங்கள் கேட்பதில்லை...
வீடும் வாசலும் எரியும் போது
வீதி வரைபடம் வரைந்தார்கள்.
நிவாரணக் கப்பல்கள் கரை சேரவில்லை,
நம்பிக்கை நங்கூரங்கள் பிடுங்கப்பட்டன...
வல்லரசுகளின் சதுரங்க ஆட்டத்தில்
வெட்டுண்டது என்னவோ
வெற்றுடம்புடன் நின்ற தமிழன் தான்.
நீதிமன்றக் கூண்டுகளில்
நாட்கள் நகர்கின்றன...
எங்கள் பிணங்களின் மேல் ஏறிநின்று
உலகம் 'அமைதி' என்று கூச்சலிடுகிறது.
கடல் கடந்து கேட்ட கதறல்கள்
காகிதப் புகார்களாய் உறங்குகின்றன...
காட்சிகள் சொல்ல யாரும் இல்லை,
சருகுகளாய் உதிர்ந்த சனங்களைத் தவிர!

- சு. லோஜிதன்

www.sangathamil.com




# LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல
அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள்
செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு
நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை
பெருகச் செய்யும். அது உங்கள் வணிக
முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது
உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படிக்கற்கள்.

விளம்பரத் தொடர்புகளுக்கு

**437 345 4203**

www.vanikam.ca
thamilarvanikam@gmail.com

# ஆப்கான் போர்க்குற்றத்தில் அவுஸ்திரேலியப் படைகள்: தனித்துவமான விசாரணையும் முறை தவறாத நீதியும்!

-ஐங்கரன் விக்கினேஸ்வரா-

14.04.2026



அவுஸ்திரேலிய உயரிய இராணுவ விருது பெற்ற வீரரான பென் ராபர்ட்ஸ்-மித், போர்க் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் சிட்னி விமான நிலையத்தில் கடந்த வாரம் கைது செய்யப்பட்டார். ஆப்கானில் பணியாற்றிய போது கைதிகள் கொல்லப்பட்ட சம்பவங்களில் இவருக்குத் தொடர்பு இருப்பதாகக் கூறப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் அவுஸ்திரேலிய பொலிஸார் விசாரணை நடத்தி நடத்தி வந்தனர். முன்னதாக, ஊடகங்களுக்கு எதிராக இவர் தொடர்ந்த அவதூறு வழக்கில், இவர் மீதான குற்றச்சாட்டுகள் உண்மையானவை என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மேலும் இந்த முக்கிய வழக்கில் பென் ராபர்ட்ஸ்-ஸ்மித் (Ben Roberts-Smitπ) போன்ற உயரிய விருது பெற்ற வீரர்கள் மீதும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

ஆனாலும் பல்வேறு மேல்முறையீடுகள் தோல்வியடைந்த நிலையில், தன் மீதான குற்றச்சாட்டுகள் காழ்ப்புணர்ச்சி கொண்டவை என்று அவர் தொடர்ந்து மறுத்து வந்தார். இந்நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த கைது நடவடிக்கை அவுஸ்திரேலிய இராணுவ வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவங்கள் அவுஸ்திரேலிய இராணுவத்தின் வரலாற்றில் ஒரு கரும்புள்ளியாகக் கருதப்படுகிறது.

## போர்க்குற்றத்தில் அவுஸ்திரேலிய படை:

நியூயோர்க் இரட்டைக் கோபுரம் 2001 செப்டம்பரில் தாக்குதலுக்கு உள்ளாகியது. அதன்போது மூவாயிரம் வரையான பொது மக்கள் கொல்லப்பட்டனர். அதனால் அமெரிக்கா மட்டுமல்ல, உலகமே அதிர்ச்சிக்கு உள்ளாகியது. இத்தாக்குதலை ஆப்கானில் உள்ள தலிபான்களே தொடுத்தனர் என்றும், அதனுடைய விளைவாக தலிபானுக்கு எதிரான அமெரிக்காவின் யுத்தம் ஆரம்பமாகியது. அமெரிக்காவுடன் கூட்டாளிகளாக இணைந்த அவுஸ்திரேலியத் துருப்புக்கள் 2002இல் ஆப்கானிஸ்தானில் களம் புகுந்தன.

அவுஸ்திரேலியாவின் விசேட படைப்பிரிவினர் ஆப்கானில் போரில் நின்றனர். அங்கு நடந்த போர்க்குற்றங்களில் 39 பேரை அவுஸ்திரேலியா படுகொலை செய்தனர் என்ற அதிர்ச்சி அறிக்கை 2020 இல் வெளியானது. அவுஸ்திரேலிய விசேட படைப்பிரிவினர் இழைத்த போர்க்குற்றங்கள் குறித்து இடம் பெற்ற விசாரணைகளின் முடிவை அவுஸ்திரேலிய பாதுகாப்பு படை அப்போது வெளியிட்டது. இதன் போது அவுஸ்திரேலியாவின் விசேட படைப்பிரிவினர் ஆப்கானிஸ்தானில் 39 பொது மக்களை கொலை செய்தனர் என்ற அதிர்ச்சி தகவல் விசாரணை மூலம் உறுதியாகியது.

ஆப்கானில் 57 சம்பவங்கள் தொடர்பில் 300க்கும் அதிகமானவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் முடிவில் இந்த அறிக்கை வெளியாகியது. 25 படையினர் குற்றங்களில் ஈடுபட்டுள்ளனர் அல்லது குற்றங்களிற்கு உதவியுள்ளனர் என விசாரணை அறிக்கை தெரிவித்தது.

2009 முதல் 2013 முதல் சிறைக்கைதிகள், விவசாயிகள், பொதுமக்களை கொலை செய்தமைக்காக பல படைவீரர்களை விசாரணை செய்யவேண்டும் என விசாரணை அறிக்கை பரிந்துரை செய்தது. அவுஸ்திரேலியாவின் விசேட வான்சேவை படையணியை சேர்ந்தவர்களே இந்த போர்க்குற்றங்களில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிய வந்தது.

## நம்பகமான போர்க்குற்ற ஆதாரங்கள்:

அதேவேளை ஆப்கானிஸ்தானில் 2005-2016 காலகட்டத்தில் அவுஸ்திரேலிய சிறப்புப் படை வீரர்கள் 39 ஆப்கானிய குடிமக்கள் மற்றும் கைதிகளை சட்டவிரோதமாகக் கொன்றதற்கான "நம்பகமான ஆதாரங்கள்" உள்ளதாக 2020 பிரெரெட்டன் அறிக்கை (Brereton Report) உறுதிப்படுத்தியுள்ளது.

இளம் வீரர்களைக் கொல்வதற்குத் தூண்டும் "ப்ளடிங்" (Blooding) கலாச்சாரம் மற்றும் போர்க்குற்றங்களை மூடி மறைத்தல் ஆகியவை இதில் அடங்கும். இதன் முக்கிய குற்றச்சாட்டாக 23 சம்பவங்களில் 39 பேர் சட்டவிரோதமாகக் கொல்லப்பட்டனர். ஆரம்ப கட்ட விசாரணையின் முடிவில் படை வீரர்கள் மீது குற்றவியல் விசாரணை நடத்த பரிந்துரைக்கப்பட்டது.

ஆரம்ப நடவடிக்கையாக அவுஸ்திரேலிய பாதுகாப்புப்படை (ADF) விசாரணைகளைத் தொடர்ந்து, சில அதிகாரிகளின் பதக்கங்கள் பறிக்கப்பட்டு, போர்க் குற்றங்களுக்காகச் சிறப்பு புலனாய்வு அலுவலகம் (OSI) விசாரணை நடத்தியது. மேலும் போர்க் குற்றங்களால் பாதிக்கப்பட்ட ஆப்கான் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்க அவுஸ்திரேலிய அரசு திட்டமிட்டது.

## அவுஸ்திரேலிய இராணுவ வரலாற்றில் கரும்புள்ளி

இந்த போர்க்குற்ற சம்பவங்கள் அவுஸ்திரேலிய இராணுவத்தின் வரலாற்றில் ஒரு கரும்புள்ளியாகக் கருதப்படுகிறது. அவுஸ்திரேலியாவின் மிகப் புகழ்பெற்ற இராணுவ வீரர்களில் ஒருவரான திரு பென் ராபர்ட்ஸ்-ஸ்மித் (Ben Roberts-Smith) மீது குற்றஞ் சாட்டப்பட்டமை பாரிய அவமானத்தை ஏற்படுத்தியது.




ஆப்கானிஸ்தானில் ஆயுதமேந்தாமல் இருந்த கைதிகளைக் கொலை செய்ததாகச் சந்தேகிக்கப்படும் 47 வயது ராபர்ட்ஸ்-ஸ்மித், 2009க்கும் 2012க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆப்கானிஸ்தானில் பணியாற்றியபோது பல்வேறு கொலைக் குற்றங்களைப் புரிந்ததாக நம்பப்படுகிறது. இதனாலேயே திரு ராபர்ட்ஸ்-ஸ்மித் மீது "போர்க்குற்றம்-கொலைக் குற்றம்" என்ற பெயரில் ஐந்து குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. குற்றம் நிரூபிக்கப்பட்டால் திரு ராபர்ட்ஸ்-ஸ்மித்துக்கு அதிகபட்சம் ஆயுள் தண்டனை விதிக்கப்படலாம்.

ஆஸியில் அதி மேன்மைக்குரிய போர் நாயகனாகப் போற்றப்பட்ட திரு ராபர்ட்ஸ்-ஸ்மித் 2011ஆம் ஆண்டில் அவருக்கு விக்டோரியா குரோஸ் (Victoria Cross) பதக்கம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தனித்துவமான போர் குற்ற விசாரணை

இரண்டாம் உலகப் போரின் பின்னர், வியட்நாமில் "Mỹ Lai" மைலாய் படுகொலைக்காக அமெரிக்க இராணுவ லெப் டினன்ட் வில்லியம் காலே 22 தென் வியட்நாம் பொது மக்களைக் கொன்றதற்காக வழக்குத் தொடரப்பட்டது. அதன் பின் 2003 இல் ஈராக்கில் அபு கிரைப் சிறை துஷ்பிரயோகம், அமெரிக்க வீரர்கள் சார்லஸ் கிரானர், லின்டி இங்கிலாந்து மற்றும் பலர் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டனர்.

2006 இல் 14 வயது ஈராக் சிறுமியை கற்பழித்து கொலை செய்ததற்காகவும், அவரது குடும்பத்தினரைக் கொன்றதற்காகவும் அமெரிக்க துருப்புக்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது. 2007 இல் நான்கு அமெரிக்க பிளாக்வாட்டர் தனியார் இராணுவ ஒப்பந்தக்காரர்களால் 17 ஈராக் குடிமக்கள் கொல்லப்பட்டமைக்கும் வழக்குத் தொடரப்பட்டது.

2010இல் மூன்று ஆப்கானிஸ்தான் குடிமக்களை கொலை செய்ததற்காக அமெரிக்க துருப்புக்கள் தண்டிக்கப்பட்டனர். 2012இல் "காந்தகார் படுகொலை" என்று அழைக்கப்படும் - 16 ஆப்கானிஸ்தான் குடிமக்களை கொலை செய்ததற்காக அமெரிக்க இராணுவ துப்பாக்கி சுடும் ராபர்ட் பேல்ஸ் மீது வழக்குத் தொடரப்பட்டது.

**ஆப்கானிஸ்தானில் நடந்ததாக கூறப்படும் போர் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் முறையில், அவுஸ்திரேலிய அணுகுமுறை தனித்துவமான தன்மையை வெளிப்-படுத்துவதாகவும் பார்க்கப்படுகிறது.**

இப் போர்க்குற்ற நிகழ்வுகள் அமெரிக்காவை போரில் பொறுப்புக்கூறலை சர்வதேச போர்க்குற்றவியல் வேண்டியது. ஆனாலும் மேலே பட்டியலிடப்பட்டுள்ள போர்க்குற்ற வழக்குகள் அனைத்தும் அமெரிக்காவால் நிராகரிக்கப்பட்டது.

ஈராக் படையெடுப்பிற்கு ஜார்ஜ் டபிள்யூ. புஷ் நிர்வாக உறுப்பினர்கள் மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் சேர்க்கப்பட்ட வழக்கை அமெரிக்கா நிராகரித்து மறுத்துவிட்டது. ஆனால் ஆப்கானிஸ்தானில் நடந்ததாக கூறப்படும் போர் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் முறையில், அவுஸ்திரேலிய அணுகுமுறை அதன் முக்கிய கூட்டாளி நாடுகளிலிருந்து வேறுபட்டதாக நிபுணர்கள் கூறுகின்றனர். நாட்டின் மிக உயர்ந்த விருதுகள் பெற்ற முன்னாள் வீரர் பென் ராபர்ட்ஸ்-ஸ்மித் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டிருப்பது, இந்த விசாரணைகளில் ஒரு முக்கிய முன்னேற்றமாகவும், அவுஸ்திரேலிய தனித்துவமான தன்மையை வெளிப்படுத்துவதாகவும் பார்க்கப்படுகிறது.

மேலும் போர்க்குற்ற அறிக்கை வெளியான பின்னர் அவுஸ்திரேலியாவின் அன்றைய சிரேஷ்ட இராணுவ அதிகாரியான ஜெனரல் அங்கஸ் ஜோன் காம்ப்பெல், ஆப்கானிஸ்தானிடம் மன்னிப்புக் கோரிமையும் குறிப்பிடத்தக்கது.

## போரின் வெட்கக்கேடான பதிவுகள்

ஆப்கானிஸ்தானில் நடந்ததாக கூறப்படும் போர் சாட்டுக்களையடுத்து நவம்பர் 2020இல் அவுஸ்திரேலியா பல சிறப்புப் படை வீரர்களுக்கு பணிநீக்கம் தொடர்பான அறிவித்தலை அனுப்பியது. இதனை அநநாட்டு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (ABC) உறுதிப்படுத்தி அறிவித்தது.

இந்த விசாரணைகளின் போது ஒரு போர் வீரக் கலாச்சாரத்தின் வெட்கக்கேடான பதிவுகள் வெளியாகியுள்ளன என அவுஸ்திரேலிய பாதுகாப்பு படையின் (ADF)தலைவர் தெரிவித்தார். இந்த கொலைகள் எவற்றையும் மோதலின் உச்சகட்டத்தின் போது நிகழ்ந்தவைகள் என தெரிவிக்க முடியாதவை என்றும் தெரிவித்தார்.

குற்றவாளியின் நோக்கம் தவறானதாகவோ தெளிவற்றதாகவோ அல்லது குழப்பமானதாகவோயிருந்த தருணத்தில் இந்த குற்றங்கள் நிகழவில்லை என அவர் தெரிவித்துள்ளார். நாங்கள் விசாரணைகளை மேற்கொண்ட ஒவ்வொருவரும் யுத்தசட்டங்கள் எவ்வாறு போரிடவேண்டும் என்பதை நன்கு அறிந்தவர்கள் எனவும் தெரிவித்துள்ளார். சில விசேட படைப்பிரிவினர் சட்டத்தினை தங்கள் கைகளில் எடுத்தனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் நடந்ததாக கூறப்படும் போர் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் முறையில், அவுஸ்திரேலிய அணுகுமுறை அவுஸ்திரேலிய தனித்துவமான தன்மையை வெளிப்படுத்துவதாகவும் பார்க்கப்படுகிறது.

# ஆனந்தபுரம் ஒரு வீரவரலாறு



பிரிகேடியர் மணிவண்ணன் — அழகரத்தினம் துஸ்யந்தன்
பிரிகேடியர் விதுசா — கந்தையா ஞானபூரணி
பிரிகேடியர் துர்க்கா — பொன்னுத்துரை கலைச்செல்வி
பிரிகேடியர் தீபன் — வேலாயுதபிள்ளை பகீரதகுமார்
பிரிகேடியர் ஆதவன் (கடாபி) — ஆறுமுகம் விநாயகமூர்த்தி

வன்னியில் போர் உக்கிரமம் பெற்ற காலப்பகுதிகள் ஒவ்வொரு நாளும் மக்கள் படுகொலைகளும் போராளிகளின் வீரச்சாவும் அன்று நடந்தேறிக்கொண்டிருந்தன. இவை தமிழ் மண்ணின் வரலாறுகளாக அன்று காணப்பட்டன.

அதன் நினைவுகளை மீட்டிப்பார்க வேண்டிய தேவை தமிழ் மக்கள் அனைவருக்கும் ஓர் கடமை. அந்தவகையில்தான் கிளிநொச்சியினை விட்டு பின்னகர்ந்த மக்களும் விடுதலைப்புலிகளும் இறுதியான தாக்குதல்களை எதிரிமேல் தொடுத்தவண்ணம் எதிரிக்கு பாரிய இழப்புக்களையும் ஏற்படுத்திக்கொண்டார்கள்.

இந்நிலையில் விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடத்தின் இறுதிக்கட்டமாக ஆனந்தபுரம் பகுதி அமைகின்றது. புதுக்குடியிருப்பின் வடகிழக்கில் உள்ள பகுதியாக ஆனந்தபுரம் காணப்படுகின்றது. இந்த இடத்தில்தான் விடுதலைப்புலிகளின் நெருப்பாற்று தாக்குதல்கள் தீச்சுவாலைகளுக்கும் மத்தியில் இடம்பெற்றன.

தமிழீழ தேசியத்தலைவர் அவர்கள் ஆனந்தபுரத்தினை விட்டு பின்னகரமாட்டேன் என்பதற்கு இணங்க சில நேரடி கட்டளைகளை வழங்கிகொண்டு இருந்தார். தலைவர் அவர்களை பாதுகாக்கும் நோக்கில் விடுதலைப்புலிகளின் மகளிர் படை அணிகளும் அதன் பிரிகேடியர்களும் கேணல், மற்றும் லெப்ரினன் கேணல் நிலை அதிகாரிகளும் களமுனையில் நேரடியாக நின்றார்கள்.

இதேபோன்றுதான் ஆண் போராளிகளின் கட்டளைத் தளபதிகளும் பிரிகேடியர்களும், கேணல்களும், லெப்ரினன் கேணல் நிலையுடைய போராளிளும் சகபோராளிகளுடன் நின்று களமாடினார்கள். இவர்களின் வீரவரலாறுகள் ஆனந்தபுரம் மண்ணில் பதிந்து பதினோழாவது ஆண்டாகின்றது. இந்த விடுதலை வீரர்களின் தியாக உணர்வுகளுக்கு மதிப்பளித்து, அன்று ஆனந்தபுரம் மண்ணில் எமது தேசியத்தலைமையினை பாதுகாத்து மாவீரர்களான போராளிகள், பொறுப்பாளர்கள், தளபதிகள், பிரிகேடியர்களை நாங்கள் நினைவிற்கொள்கின்றோம்.

இந்நிலையில் அன்று சிறீலங்காப்படையினரின் கொத்துக் குண்டு, நச்சுக்குண்டு, இரசாயன குண்டு மழைக்குள் நின்று களமாடி மாவீரர்களான வீரர்களையும் அன்றைய காலகட்டபகுதியில் உயிர்நீத்த பொதுமக்களையும் நினைவிற்கொண்டு இம்மாவீரர்களின் ஈகைக்களுக்கு மதிப்பளித்து தொடர்ந்தும் ஈழவிடுதலை பணியினை மேற்கொள்வோம்.

ஆனந்தபுரம் ஒரு வீரவரலாறு, முப்பதாண்டு கால ஆயுத விடுதலைப் போராட்டத்தின் அசைவியக்கத்தை உலுப்பிவிட்ட நிகழ்வாக - 2009 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தின் தொடக்கத்தில் - முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஆனந்தபுரம் கிராமத்தில் நிகழ்ந்த சமர் கணிக்கப்படுகின்றது.

விடுதலைப்புலிகள் எதிர்பார்த்தற்கு மாறாக - பாரிய ஆள் இழப்புக்களுக்கு பின்னரும் - தொடர்ச்சியாக ஆயிரக்கணக்கான சிங்கள தேசத்தின் படைவீரர்கள் களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தனர். அதேவேளை விடுதலைப்புலிகளுக்கான படைக்கல வளங்கள் தமிழீழ கடற்பரப்பினூடாக தாயகத்திற்கு கொண்டு செல்லப்படுவதை தடுப்பதற்கான முழுமையான "கடற்தடுப்புச் சுவரை" வல்லாதிக்க அரசுகளின் உதவியுடன் சிங்கள தேசம் அமைத்திருந்தது.

அத்தோடு பாரிய படைக்கல பிரயோகத்துடனும் வல்லாதிக்க அரசுகளின் புலனாய்வு தகவல்களையும் உள்வாங்கியவாறு சிங்கள தேசத்தின் இராணுவ பூதம் தமிழீழ தாயகத்தை முழுமையாக அழிக்கும் வகையில் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கையை மேற்கொண்டது.

வரையறுக்கப்பட்ட போர்த் தளபாடங்களுடனும் ஆட்பல வளத்துடனும் போரிட்ட தமிழர் சேனை வன்னிப்பெருநிலத்தின் பெரும்பகுதியை கைவிட்டு பின்வாங்கியிருந்தது. எனினும் இறுதி வரை ஏதோ ஒரு இடத்திலிருந்து மீண்டும் - ஆக்கிரமித்து



வரும் படைகளை தடுத்து - முறியடிப்பு தாக்குதலை செய்து தமிழீழ தாயகத்தை மீட்டுவிடலாம் என்றே அனைத்து மக்களும் நம்பியிருந்தனர்.

புதுக்குடியிருப்பு பிரதேசம் சிறீலங்கா படைகளிடம் வீழ்ந்தபோது, தமிழீழ விடுதலைப் புலிகளின் அசாத்திய பலத்தை முழுமையாக நம்பிய மக்களும் விடுதலைப் புலிகளும் தங்களுக்கு ஒரு சிறிய இடைவெளி கிடைத்தாலும் அதனை சாதகமாக பயன்படுத்தி வெற்றியை பெற்றுவிடமுடியும் என்றே முழுமையாக நம்பியிருந்தனர்.

அந்தவகையில் தான் ஆனந்தபுரம் பகுதியில் - இறுதியாக அறிவிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பு வலயத்திற்கு வெளிப்புறமாக - விடுதலைப்புலிகளின் இறுதிப்போருக்கான அவசர போரரங்கு ஒழுங்குபடுத்தப்பட்டது.

தமிழீழ தேசிய தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் உட்பட விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகள் பலரும் அடங்கலாக தளம் அமைத்து பெருமளவிலான முறியடிப்பு தாக்குதல் ஒன்றை திட்டமிட்டுக்கொண்டிருந்தனர்.

விடுதலைப்புலிகளின் பிரதான போர்க்கலங்கள் அனைத்தையும் உள்வாங்கி திட்டமிடப்பட்ட இத்தாக்குதலுக்காக பெருமளவு விடுதலைப் புலிகளும் நிலைப்படுத்தப்பட்டிருந்தனர். தொலைதூர தாக்குதலுக்கேயென வடிவமைக்கப்பட்ட போர்க்கலங்கள் அனைத்தும் குறுந்தூர தாக்குதலுக்காக நிலைப்படுத்தப்பட்டு இருந்தது.

விடுதலைப்புலிகளின் இத்திட்டமிடலை ஏதோ ஒரு வகையில் அறிந்துகொண்ட சிறீலங்கா படையினர் எத்தனை இழப்பை சந்தித்தேனும் தடை செய்யப்பட்ட போர் ஆயுதங்களை பயன்படுத்தி என்றாலும், அத்தாக்குதலை முறியடிக்க முடிவெடுத்திருந்தார்கள்.

அதன்படி ஆனந்தபுரம் பகுதியை சுற்றிவளைத்து அப்பகுதியில் நிலைகொண்டிருந்த விடுதலைப்புலிகளை தனிமைப்படுத்தி முற்றுகை பாணியிலான தாக்குதலை சிறீலங்கா படைகள் முன்னெடுத்தன.

தமிழீழ தேசிய தலைவரை பாதுகாப்பாக பின்னகர்த்திய விடுதலைப் புலிகள், சிறீலங்கா படைகளின் முற்றுகையை முறியடிப்பதற்காக உறுதியுடன் போர் செய்துகொண்டிருந்தார்கள்.

இத்தளத்தில் நிலைகொண்டு இறுதிவரை உறுதியோடு போரிட்டு பிரிகேடியர் தீபன், பிரிகேடியர் ஆதவன் / கடாபி, பிரிகேடியர் மணிவண்ணன், பிரிகேடியர் விதுசா, பிரிகேடியர் துர்க்கா உட்பட விடுதலைப் புலிகளின் பல முக்கிய தளபதிகள் உட்பட பல நூற்றுக்கணக்கான போராளிகள் மாவீரர்களாக ஆனந்தபுரம் மண்ணில் வீழ்ந்து தமிழீழ தாயகத்தின் விடிவெள்ளிகளாக போனார்கள்...



கேணல் அன்ரன் — ஆண்டி அன்ரன்ராஜா
கேணல் அமுதா — வேலாயுதம் கஜேந்தினி
கேணல் தமிழ்ச்செல்வி — நாகேசுவரன் கமலேசுவரி
கேணல் நாகேஸ் — சூசைமுத்து அமலதாஸ்
கேணல் ஐயனார் — சீவரத்தினம் துசியந்தன்
கேணல் அகிலேஸ் — செல்வராசா துரேஸ்குமார்
கேணல் சேரலாதன் — சிவசோதி சிவகுமரன்

**இழப்புகளுக்கு அஞ்சினால் யுத்தம் நடாத்த முடியாது;**
**இழப்புகளை வளர்ச்சியின் ஊன்றுகோலாகக் கருத வேண்டும்.**
**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**

# பிரான்சில் இனவெறி எதிர்ப்பு போராட்டம்!
# இஸ்லாமோபோபியா இனியும் தொடருமா?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

05.04.2026

பிரான்சின் கலாச்சார சூழலில் முஸ்லிம் மற்றும் கருப்பின சமூகம் தங்களின் அடையாளத்தையும், பிரெஞ்சு குடியரசின் சட்டங்களையும் சமநிலைப்படுத்தி வாழ முயற்சிக்கின்றனர். சமீபத்திய ஆண்டுகளில், இன பாகுபாடு மற்றும் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும், அது முஸ்லிம் சமூகத்தைப் பாதிப்பதாகவும் புகார்கள் பல உள்ளன.






இதற்கு சான்றாக கடந்த வாரம் சென்ட்-டெனிஸ் நகர முதல்வர் பாலி பகாயோகோ என்பவருக்கு எதிரான இனத்துவேச கருத்துக்கள் பாரியளவில் எதிர்ப்பை வெளிப்படுத்தி உள்ளன. நகர முதல்வர் பாலி பகாயோகோ தலைமையில் திரண்ட எழுச்சிப் பேரணி நடைபெற்றது. பிரான்சின் இரண்டாவது பெரிய புறநகர் நகரமான சென்ட்-டெனிஸின் நகர முதல்வர் பாலி பகாயோகோ (Bally Bagayoko), தமக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இன வெறித் தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் பிரம்மாண்டமான குடிமக்கள் பேரணி ஊடகங்களில் முக்கிய கவனத்தை ஈர்த்துள்ளது.

## இனவெறிக்கு இனி இடமில்லை

பாரிஸில் முஸ்லிம் சமூகம் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் உள்ளது. அவர்கள் பிரெஞ்சு கலாச்சாரத்துடன் கலந்து வாழ்ந்தாலும், பொது வழிபாட்டு இடங்கள் பற்றாக்குறை, சமூக ஒருமைப்பாடு, மற்றும் பாதுகாப்பு தொடர்பான சவால்களை எதிர்கொள்கின்றனர். அவர்களின் ரமலான் மாதத்தில் இப்தார் நிகழ்வுகள் மற்றும் வெள்ளிக்கிழமை தொழுகைகள் சமூக ஒற்றுமையை வெளிப்படுத்துகின்றன, அதே நேரத்தில், தெருவில் தொழுகை நடத்துவது மற்றும் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பான விவாதங்களும் அவ்வப்போது ஏற்படுகின்றன.

ஆயினும் இன்னமும் பிரான்சில் இன மத துவேச கருத்துக்கள் ஊடகங்களில் பரப்பப்பட்டு வருகிறது. சமீபத்தில் சென்ட்-டெனிஸில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்று நகர முதல்வராகப் பொறுப்பேற்ற பாலி பகாயோகோ, "சி-நியூஸ்" (CNews) தொலைக்காட்சியில் மிகக் கடுமையான இனவெறி விமர்சனங்களுக்கு உள்ளானார். அவரை "குரங்கு இனத்தோடு" ஒப்பிட்டும், "ஆதிக்க ஆண் விலங்கு" (Mâle Dominant) என்றும் அந்த ஊடகத்தில் விமர்சிக்கப்பட்டது. இந்தச் செயல் பிரான்ஸ் முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இதற்கு எதிராக சென்ட்-டெனிஸ் நகர மண்டபத்தின் முன்பாக நடைபெற்ற பேரணியில் 10,000 முதல் 20,000 பேர் வரை கலந்துகொண்டனர். இனவெறி, இஸ்லாமோபோபியா, யூத எதிர்ப்பு மற்றும் அனைத்து பாகுபாடுகளுக்கும் முற்றுப்புள்ளி வைப்போம் என்ற முழக்கங்கள் பேரணியில் ஓங்கி ஒலித்தன.

இந்த பேரணியில் நகர முதல்வர் பாலி பகாயோகோ பேசுகையில், இது எனக்காக எழுப்பப்பட்ட குரல் மட்டுமல்ல. புலம் பெயர்ந்தோரின் வாரிசுகளாக இருந்து இந்த நாட்டின் குடியரசு விழுமியங்களைப் பாதுகாக்கும் ஒவ்வொருவருக்குமான அபயக் குரல் (SOS) என்று உணர்ச்சிவசப்படத் தெரிவித்தார். அதேபோல், அதிபர் இம்மானுவேல் மக்ரோனின் மௌனத்தையும் பகாயோகோ கடுமையாக விமர்சித்தார்.

இந்தப் பேரணியில் "லா பிரான்ஸ் இன்சுமிஸ்" (LFI) கட்சியின் தலைவர் Jean-Luc Mélenchon, Mathilde Panot, Sophia Chikirou போன்ற முக்கியத் தலைவர்கள் கலந்து கொண்டனர். மெலஞ்சோன் பேசுகையில், பிரெஞ்சு வரலாற்றில் ஒரு பெரிய மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அதிகாரத்திற்கு வரும் தகுதியுள்ள நபர்களை அவர்களின் நிறத்தை வைத்து அவமதிக்கும் எலைட் வர்க்கத்தின் செயல் அருவருப்பானது என்று கடுமையாக சாடினார்.

## சட்ட நடவடிக்கை அவசியம்

சோசலிசக் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியத் தலைவர்கள் இந்தப் பேரணியில் நேரில் கலந்துகொள்ளவில்லை. இந்த இனவெறி அவமதிப்பு தொடர்பாகப் பாரிஸ் அரசு வழக்கறிஞர் அலுவலகம் ஏற்கனவே விசாரணையைத் தொடங்கியுள்ளது. பிரெஞ்சு பிரதமர் செபாஸ்டியன் லெகோர்னு மற்றும் உள்துறை அமைச்சர் லோரான் நுனேஸ் ஆகியோர் இந்தச் செயலைக் கண்டித்துள்ளதோடு, அரசின் சார்பில் சிவில் தரப்பாக (Partie civile) வழக்கில் இணைவதாகவும் அறிவித்துள்ளனர்.



தற்போது பிரான்சில் 2026 உள்ளாட்சித் தேர்தலுக்குப் பிறகு அரசியல் களம் இனவெறி மற்றும் அடையாளம் சார்ந்த விவாதங்களால் சூடுபிடித்துள்ளது. இந்தப் பேரணி, பாதிக்கப்பட்ட ஒரு மேயருக்கான ஆதரவு என்பதைத் தாண்டி, பிரான்சின் பன்முகத்தன்மையைப் பாதுகாப்பதற்கான ஒரு பெரும் போராட்டமாகப் பார்க்கப்படுகிறது.

## பிரான்ஸில் முஸ்லிம் வருகை:

முதல் முஸ்லிம் காலடித்தடம் பிரான்ஸினுள் இஸ்லாமின் ஆரம்ப காலத்திலேயே பதிந்துவிட்டது. ஸ்பெயினைக் கைப்பற்றிய முஸ்லிம்கள் தென் பிரான்ஸையும் கிபி 759 வரைக்கும் தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். பின்பு ஒஸ்மானிய ஆட்சிக் காலங்களில் 1543-44 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒஸ்மானியர்களின் கடற்படைத் தளமொன்றும் தூளுன் எனுமிடத்தில் இருந்தது. இதற்குத் தளபதியாக கைருத்தீன் பர்பரோஸா என்ற வட ஆபிரிக்க இனத்தவரொருவர் இருந்துள்ளார்.

**பிரான்சில் இஸ்லாம் இரண்டாவது மதமாக பன்முகத்தன்மை கொண்ட சமூக அமைப்பைக் கொண்டுள்ளது. ஆனாலும் பிரான்சில் இன மத துவேச கருத்துக்கள் ஊடகங்களில் பரப்பப்பட்டு வருகின்றமை கவலைக்குரியதாகும்**





இறுதியாக 1960 களில் பிரான்ஸின் குடியேற்ற நாடுகளிலிருந்து பாரிய தொழிலாளர் நகர்வுகள் இடம்பெற்றன. இவர்கள் பெருமளவு வட ஆபிரிக்கர்களாகவே இருந்தனர். எனினும் பாரிஸ் நகரில் முதல் முஸ்லிம் பள்ளிவாசல் 1922ஆம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது. இதுவே இன்று பிரான்ஸின் பாரிய முஸ்லிம் வழிபாட்டிடமாகக் காணப்படுகின்றது.

தற்போதய தரவுகளின்படி முழு பிரான்ஸிலும் 2000 க்கும் மேற்பட்ட பள்ளிவாசல்கள் காணப்படுவதென்பது இஸ்லாமின் துரித வளர்ச்சியைக் காட்டுகின்றது. மேலும் அவர்கள் வருடாந்தம் ரமழான் நோன்பு போன்றவற்றை ஆர்வத்துடன் செய்து வருகின்றனர். அத்துடன் பிரான்ஸிய முஸ்லிம்களை ஒருங்கிணைக்கும் பிரதான இரு அமைப்புக்களாக "Federation of the French Muslims" (Fédération des musulmans de France), "Union of Islamic Organizations of France" (Union des organizations islamiques de France) ஆகியவற்றைக் குறிப்பிட முடியும். இதில் முதலாவது அமைப்பு மொரோக்கோ முஸ்லிம்களின் ஆதரவு அதிகம் உள்ள அமைப்பாகும்.

## பிரான்ஸ் கலாச்சார சூழலில் முஸ்லிம்கள்

பிரான்சின் கலாச்சார சூழலில் முஸ்லிம்கள் மிக முக்கியமான, அதே சமயம் சிக்கலான ஒரு அங்கமாகத் திகழ்கின்றனர். பிரான்சில் இஸ்லாம் இரண்டாவது பெரிய மதமாக உள்ளது, இது பன்முகத்தன்மை கொண்ட சமூக அமைப்பைக் கொண்டுள்ளது.

பிரெஞ்சு முஸ்லிம்கள் முக்கியமாக வட ஆப்பிரிக்க அல்ஜீரியா, மொராக்கோ, துனிசியா, சஹாரா போன்ற நாடுகளிலிருந்து குடியேறியவர்களின் வழித்தோன்றல்கள் ஆவர். 2024 ஆம் ஆண்டின் தரவுகளின்படி, பிரான்சில் உள்ள முஸ்லிம்களில் 76% பேர் மதம் தங்களுக்கு மிகவும் முக்கியம் என்று கருதுகின்றனர். ரமலான் நோன்பு நோற்பது 70% முக்கியம் என்று கருதுகின்றனர். அதேவேளை வெள்ளிக்கிழமை தொழுகைக்காக மசூதிக்குச் செல்வது 23% என தரவுகள் உள்ளன.

மக்கள் தொகை பெருக்கத்தால் போதிய மசூதிகள் இல்லாததால், பாரிஸின் புறநகர்ப் பகுதிகளில் முஸ்லிம்கள் தெருக்களில் தொழுகை நடத்த வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றனர்.

இது உள்ளூர் நிர்வாகத்துடன் மோதல்களை ஏற்படுத்துகிறது. ரமலான் மாதத்தில் பாரிஸ் தேசிய நூலகம் போன்ற இடங்களில் திறந்தவெளி இப்தார் சமூக நிகழ்வுகள் மூலம் முஸ்லிம்கள் தங்களின் ஒற்றுமையை வெளிப்படுத்துகின்றனர்.

இதேவேளை 2009 முதல் 2020 வரை முஸ்லிம் பெண்களிடையே தலைக்கவசம் அணிவது 55% அதிகரித்துள்ளது என்று சில தரவுகள் கூறுகின்றன. முதிய தலைமுறையினர் தங்கள் சொந்த நாட்டுடன் நெருங்கிய உறவைப் பேண, இளம் தலைமுறையினர் பிரெஞ்சு கலாச்சாரத்துடன் தங்களை அடையாளப் படுத்திக் கொள்கின்றனர்.






## பிரான்சில் மதச்சார்பின்மை -Laïcité

பிரான்சின் மதச்சார்பின்மைக் கொள்கையின்படி பொது இடங்களில் மத அடையாளங்களைத் தடை செய்கிறது. இது அரசுக்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் இடையே அவ்வப்போது மோதல்களை ஏற்படுத்துகிறது.

இஸ்லாத்தை ஒரு அரசியல் இயக்கமாகப் பார்க்கக் கூடாது என்பதிலும், வெளிநாட்டு தலையீட்டைத் தடுக்கவும் பிரான்ஸ் அரசு புதிய சட்டங்களை, குறிப்பாக பிரிவினைவாத எதிர்ப்புச் சட்டத்தை கொண்டு வந்துள்ளது.

ஆனாலும் 2015 பயங்கரவாத தாக்குதல்களுக்குப் பிறகு, முஸ்லிம்கள் மீதான கண்காணிப்பு மற்றும் சமூகக் கட்டுப்பாடுகள் அதிகரித்துள்ளன. பாரிஸ் தாக்குதல்களுக்குப் பிறகு, முஸ்லிம் சமூகம் ஒருங்கிணைவதில் பல தடைகளை ஏற்படுத்தி, "Scapegoating" எனப்படும் பலிவாங்கும் சூழலை உருவாக்கியது என்ற அச்சம் சமூகப் பாதிப்பை ஏற்படுத்தியதும் உண்மையே.

ஆனாலும் இதன் விளைவாக பிரெஞ்சு முஸ்லிம்கள் தங்கள் பாரம்பரியத்தை நிலைநிறுத்துவதற்கும், பிரான்சின் மதச்சார்பற்ற கலாச்சார விழுமியங்களுக்கு ஏற்ப வாழ்வதற்கும் இடையில் ஒரு சவாலான சமநிலையை மேற்கொண்டு வர முயற்சி செய்கின்றனர்.

## பிரான்ஸ் ஊடகங்களில் இனமுரண்

பிரான்ஸ் சஞ்சிகையான சார்ளி ஹெப்டோ மீதான பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிற்பாடு பிரான்ஸிய முஸ்லிம்கள் குறித்த நமது கவனம் அதிகரித்தது. இஸ்லாமிய மயமாகி வரும் ஐரொப்பாவில் இருக்கும் பெரிய சிறுபான்மைகளுள் ஒன்றாக பிரான்ஸ் சிறுபான்மை மக்களைக் கண்டு கொள்ள முடியும். அவர்களின் மொத்த எண்ணிக்கை தற்போது ஐம்பது இலட்சங்கள் வரை இருக்கலாமென மதிப்பிடப்படுகிறது. இது மொத்த சனத்தொகையில் 8% ஐ உள்ளடக்கியதாகும். அங்கு இன ரீதியாக மற்றும் மத ரீதியாக சனத்தொகைக் கணக்கெடுப்புக்கள் மேற்கொள்வது 1872ஆம் ஆண்டின் பின்னர் சட்டத்தின் மூலம் தடுக்கப்பட்டுள்ளதென்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸின் முஸ்லிம் சனத்தொகைக் கட்டமைப்பை 1999ஆம் ஆண்டு மேற்கொள்ளாப்பட்ட சுயாதீனக் கணக்கெடுப்பொன்றின் பிரகாரம் நோக்க முடியும். இஸ்லாம் பிரான்ஸின் இரண்டாவது பெரிய மதமாகும். அது கத்தோலிக்க மதத்துக்கு அடுத்த ஸ்தானத்திலிருக்கிறது. பாரிசில் வட ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள் அதிகளவில் இருப்பதைப் பார்க்கலாம். இதற்கு அடிப்படைக் காரணம் இந்நாடுகள் பிரான்ஸின் காலணித்துவ நாடாக இருந்தமையாகும்.

மேலும் அண்மைக்காலமாக பிரான்ஸிய சுதேச மக்களும் இஸ்லாமைத் தழுவும் வீதம் தொடர்ந்து அதிகரித்து வருவதனையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இவர்களின் தற்போதைய தொகை 100,000 ஐத் தாண்டுவதாகப் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. இது வருடாந்தம் ஆயிரக்கணக்கில் அதிகரித்துச் செல்கின்றது. இதுவும் பாரம்பரிய பிரான்ஸ் நாட்டு மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.



**நாம் ஒன்றுபட்ட மக்களாக – ஒரே சக்தியாக – அணிதிரண்டு, எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ள வேண்டும்.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**

**www.sangathamil.com**

# அன்னை பூபதி
# மக்கள் எழுச்சியின் ஓர் வடிவம்

அன்னை பூபதியை நினைவகூரும் முகமாக இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

அன்னை பூபதி அவர்கள் இந்த மண்ணின் விடுதலைக்காகத் தன்னைத் தற்கொடை செய்து ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. அன்னையின் கோரிக்கையைச் செவிசாய்க்க மறுத்து எள்ளி நகையாடிய அன்னியர்கள் இந்த மண்ணில் இருந்து வெளியேற்றி மூன்று ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.

சிங்கள இனவாதிகளின் பிடியிலிருந்து இந்த மண்ணை மீட்டெடுக்க விடுதலைப்புலிகள் மூன்றாம் கட்டப்போரில் இடு பட்டு இருவருடமும் ஒன்பது மாதங்களும் கடந்துவிட்டன.

ஆக்கிரமிப்பின் அகோரம் தென் தமிழீழத்தை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது. அன்று அன்னை பூபதியின் வடிவில் மக்களின் எழுச்சி ஆக்கிரமிப்புக்கெதிராகக் கிளர்ந்தெழுந்து, மக்கள் சக்தி புலிகளுக்குண்டு என்பதை தெளிவுபடுத்தியது.

ராஜீவ் அரசின் உண்மையான நலைப்பாட்டை தமிழர்களும், உலகமும் புரிந்து கொள்வதற்கு பூபதி அம்மாவின் புனிதப் போர் காணரமாக அமைந்தது.

ராஜீவின் வல்லாதிக்கப் படையினர் தமிழீழத்தை ஆக்கிரமித்த போது தென் தமிழீழ மக்களின் எழுச்சியைக் கண்டு நிலை குலைந்த சிங்கள ஆக்கிரமிப்பு வாதிகள் இன்று தென் தமிழீழத்தில் மக்கள் எழுச்சியைத் தடுக்க பயங்கரவாத வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் 51 தமிழ் கிராமங்கள் அழிக்கப்பட்டு அங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் அகதிகளாக விரட்டப்பட்டுள்ளனர்.

கிராமங்களில் தமிழர்கள் பண்பாட்டு மையமாக விளங்கிய இந்துக் கோவில்கள் உடைத்துத் தகர்க்கப்பட்டன. தொழில் நிலையங்கள் எரிக்கப்பட்டுள்ளன. விவசாய நிலங்ககளை பயன்படுத்த முடியாத அளவிற்கு தமிழர்கள் தாக்கப்பட்டுள்ளனர். இதுவரை கிடைத்த தகவலின் படி 1990 ஆனி மாதத்திற்குப் பிறகு இம் மாவட்டங்களில் 6,468 க்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டும், காணாமலும் போயுள்ளனர். 2,927க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் காயமடைந்துள்ளனர். எரிக்கப்பட்ட குடியிருப்புக்கள் எண்ணிலடங்காதவை. சொத்துக்கள் சூறையாடப்பட்டன.

1983ஆம் ஆண்டிற்கு பின்பு மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கூட்டாகத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் நிறைய உண்டு. 1991ஆம் ஆண்டும் மகிழடித் தீவில் 123 தமிழர்கள் கூட்டாகக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறாகத் தமிழ் மக்களின் பண்பாடு, பொருளாதாரம் என்பவற்றையும், தமிழ் மக்களையும் திட்டமிட்டு அழித்து தமிழரின் தாயகப் பிரதேசங்களின் மீது சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்திவருகின்றனர்.

தமிழீழத் தாயகத்தில் தென் தமிழீழப் பிரதேசம் பெரும்பாலும் சிங்கள ஆக்கிரமிப்பின் அகோரத்தில் அழிந்து கொண்டிருக்கின்றது.

அடக்கப்படும் மக்கள் மத்தியில்தான் எழுச்சியும், புரட்சியும் தோன்றும், இந்த அடிப்படையில்தான் அச்சுறுத்தலுக்கும், கொலைப் பயமறுத்தலுக்கும் மத்தியில் துணிந்து துவளாது போர் தொடுத்த அன்னை பூபதியின் தற்கொடையை தமிழ் மக்களாகிய நாம் என்றும் மறக்க முடியாது. அன்றும் விடுதலைப் புலிகளை மக்கள் நேசித்தார்கள். இன்றும் நேசிக்கிறார்கள்.

இழப்பதற்கு எதுவுமே இல்லாத நிலையில் விரட்டப்பட்டு அகதிகளாக வாழ்கின்ற மக்கள் தங்களின் விடுதலைக்காகப் போராடுகின்ற விடுதலைப் புலிகளை எந்த அளவிற்கு நேசிக்கிறார்கள் என்பதை தென் தமிழீழ மக்கள் மத்தியில் இன்றும் காண முடிகிறது. புலிகளை அரவணைத்து தங்களின் உணவுகளைப் பரிமாறி அன்புடன் அவர்களை வழியனுப்பி வைத்து பூரிப்படைகின்ற மக்களைப் பார்த்து மனம் மகிழ்ந்து நிற்கின்றோம். அன்னை பூபதியின் எழுச்சியினால் உந்தப்பட்ட மக்கள் அகிம்சைப் போராட்டம் எமது உரிமையை சிங்கள அரசிடமிருந்து பெற்றுத் தராது. ஆயுதப் போராட்டம் மூலமே இது சாத்தியமாகும் என்பதை உணர்ந்து விடுதலைப் புலிகளுடன் கைகோர்த்து நிற்கின்றனர்.

அன்று அகிம்சைப்போர் தொடுத்த அன்னையை இழந்து நின்றோம். அன்னை பூபதி அவர்களின் நினைவாக மக்கள் தங்கள் எழுச்சியைக் காட்டினார்கள். ஆனால், ஆக்கிரமிப்பு வாதிகள் உணரத் தவறினார்கள். இதனால் அன்னையின் மகனைக் கூட கண்ணதாசன் என்னும் பெயரில் புலிகளின் ஆயுதத்துடன் காண்கின்றோம்.




1990ஆம் ஆண்டு அன்னை பூபதி அவர்களின் 02ஆம் ஆண்டு நினைவு தினத்தின் போது மக்களின் எழுச்சியை மட்டக்களப்பில் சிங்கள ஆக்கிரமிப்புவாதிகள் கண்கூடாகக் கண்டார்கள். எழுச்சிப் பேரணியில் ஒரு இலட்சம் தமிழ் மக்கள் கலந்துகொண்டு அன்னை பூபதியின் தற்கொடையை கௌரவித்தும், விடுதலைப்புலிகளுக்கு தமிழ் மக்களின் ஆதரவை வெளிக்காட்டியும் நின்றனர்.

> “சுதந்திர தாய்நாட்டைப் பெற ஒவ்வொரு தாயும் போராடுகிறாள். மலரும் தமிழீழத்தில் நம் குழந்தைகள் இனிதாய் வாழப்போகின்றன.”
>
> –மரணத்துக்கு முன்னர் அன்னை பூபதியின் உரையிலிருந்து.

**www.sangathamil.com**



அன்னைக்கு ஆதரவு ஊர்வலம் நடத்தும் பெண்கள்

சிங்கள இனவாதிகள் ஏக்கமடைந்தனர். மக்களின் உண்மை நிலையை புரிந்தனர். மட்டக்களப்பின் வரலாற்றில் இவ் வாறான பேரணியை இதுவரை கண்டதில்லை என்பதை உணர்ந்தனர். இதனாலேதான் 1990 ஆனி 11இல் சிங்கள ஆக்கிரமிப்புக்கெதிராக தமிழீழ விடுதலைப்புலிகளின் போர் தொடங்கிய போது எண்ணிக்கையற்ற மக்களைக் கொன்று குவித்தனர்.

ஈழத்தமிழரின் 'பாரம்பரிய பிரதேசம்' எனப்படும் தமிழீழத் தாயகம் ஈழத் தமிழ் மக்களின் மரபுவழிச் சொத்தாகும். சிறீலங்கா அரசு எமது தாயகத்தை வடக்கு, கிழக்கு எனப் பிரித்துக்காட்டிய போதும் எமது தாயகம் புவியமைப்பாலும், மக்கள் தொடர்பாலும், மொழிப் பண்பாட்டுத் தொடர்பாலும், வரலாற்றுச் சான்றுகளாலும், இப்பகுதியானது "ஒரே நாடு" என்றுணரத்தக்க பொதுப்பண்புகளைக் கொண்டு விளங்குவ தோடன்றி 'தனிநாடு' என்ற அரசயில் பண்பும் பெற்றுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைகள் பேணப்படவும், எங்கள் 'தாயகம்' சிறீலங்கா அரசின் மேலாண்மையிலிருந்து தளை நீக்கம் பெறவும், தாயகத்தின் இறைமையைப் பேணவும் 'புலிகளின் தாகம் தமிழீழத் தாகயம்' என்ற ஒரே குறிக்கோளுடன் மண் மீட்புப் போராட்டத்தில் தம்மை தற்கொடை செய்துள்ள மாவீரர் களையும், இக்குறிக்கோளை நோக்கிய வழியில் செல்லும் புலிவீரர்களையும் நாம் போற்றுகின்றோம். நமது தாயகத்தை மீட்டெடுக்கும் போராட்டத்தில் இதுவரை நம் ஒவ்வொருவரினதும் பங்களிப்பு என்ன என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இந்நிலையில், சிறீலங்கா அரசும் பேரினவாதக் கல்விமான் களும், பௌத்த பீடங்களும் எமது தாயகம் 'ஈழம்' என்பதை ஏற்க மறுக்கின்றன. இத்தகைய பேரினவாதக் கும்பல்கள் எமது தாயக எல்லைக்குள் சிறீலங்கா அரசு ஆதரவுடன் திட்டமிட்ட ரீதியில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளப் பக்க பலமாகசெயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இவ்வளவிற்கும் மேலாக கோடாரிக்காம்புகள் போன்று தன் னின் அழிவிற்கே துணை போகின்ற சில தமிழ்க் குழுக்களின் அட்டூழியங்களோ சோகம் நிறைந்த கோரச் செயல்களாக மாறிக்கொண்டிருக்கின்றன. இவர்கள் காட்டிக் கொடுக் கிறார்கள்; தமிழினத்தின் இறைமையின் கல்லறையில் உல்லாச வாழ்க்கை அனுபவிக்கிறார்கள். சிறீலங்கா அரசின் கூலிப் படைகளுடன் சேர்ந்து தமிழ் மக்களின் அழிவுக்கு பக்கத் துணையாக செயற்பட்டு வருகின்றார்கள். தாயக எல்லைப்புறக் கிராமங்களில் வாழும் தமிழ் மக்களை அகதிகளாக விரட்டியடிக் கிறார்கள்.

அரச கூலிப்படையினதும், அடிப்படைகளுக்குச் சோரம் போகும் தமிழ்க் குழுக்களினதும், முஸ்லீம் காடையர்களினதும் இன அழிப்பு, பொருள் அழிப்பு, எல்லைப்புறக் கிராமங்களிலிருந்து மக்களைத் துரத்தியடித்தல் முதலான பயங்கரச் செயல்களுக்கு தினமும் பலியாகி வருபவர்கள் தென்தமிழீழ மக்களே என லாம்.

எங்கள் வளங்களில் வாழ்ந்து, பண்பாட்டுச் சூழலில் வளர்ந்து, எங்களது போராட்டச் சூழலில் பயிற்சி பெற்று ஈற்றில் பேரின வாத சக்திகளுக்கு அடிமைப்பட்டுத் தமிழர்களுக்கெதிராக பயங் கரவாத நடவடிக்கைகளைக் கட்ட விழ்த்து விட்டு ஆயிரக்கணக் கான மக்களின் உயிரையும் பொருளாதார வளங்களையும் சூறையாடி வருகின்ற சில முஸ்லீம் காடையர்களினதும் பயங் கரவாத நடவடிக்கைக ளுக்கும் பெரிதும் தென்தமிழீழ மக்களே பலியாகி வருகின்ற னர்.



மலர் படுக்கையில் துயிலும் அன்னை.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதலாக தென் தமிழீழத்தில் திட்டமிட்ட குடியேற்றங்களைச் சிறீலங்கா அரசு செயற்படுத்தி வந்துள்ளது. டி.எஸ். சேனநாயக்கா தொடக்கி வைத்த கல் லோயாக் குடியேற்றத் திட்டங்களினால் தமிழ்ப் பாரம்பரியப் பகுதிகள் சிங்களவரின் ஆக்கிரமிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளன. மதுறு ஓயாத் திட்டத்தின் மூலம் சிங்களக் குடியேற்றம் முடுக்கிவிடப்பட்டது. இதன் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தில் வடமேற்கே சிங்களவர் குடியேற்றப்பட்டனர். இதனைத் தொடர்ந்து ஆங்காங்கே அமைக்கப்பட்ட பொலிஸ் இராணுவ நிலையங்களும், முகாம்களும், தமிழர்களைப் பழிவாங்கும் சிறீலங்கா அரசின் திட்டமிட்ட செயல்களுக்குத் துணையாக அமைந்தன.

தென் தமிழீழத்தில் சிறீலங்கா அரசின் இராணுவ அட்டூழியங் களாலும், முஸ்லீம் மதரீதியான ஜிகாத் இயக்கத்தின் அழிப்பு நட வடிக்கையாலும் அவலத்தின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுள்ள தென் தமிழீழ இளைஞர்கள் தமது தாயகத்தை, தாயகத்தின் வளத்தை, இப்பிரதேசங்களில் தன்மானத்துடன் வாழ்வதற் கான வாய்ப்பைப் பெறும் மண்மீட்புப் போராட்டத்தில் தம்மைப் பெரிதும் இணைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

....அன்னை பூபதியின் போராட்ட சூழ்நிலையை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். தமிழீழ மக்களின் அவலக்குரல் கேட்டு "தமிழ் இனத்தின் துயர் துடைப்போம்" என்ற போர்வையில் இந்திய அமைதி காக்கும் படை தமிழீழத்தில் கால் வைத்தது. விடுதலைப்பு லிகளின் எழுச்சியையும். செயல் திறன்களையும் கண்டஞ்சிய இந்திய அரசு அவ்வியக்கத்தை அழிக்கத் திட்ட மிட்டது. ஆயுதக் கையளிப்பு என்ற வகையில் புலிகளைப் பலமிழக்கச் செய்து, எமது இயக்கத்தை நலிவடையச் செய்ய லாம் என இந்திய அரசு பகற்கனவு கண்டது. இப்பின்னணியில் சிறீலங்கா அரசுடன் ஒப்பந்தம் செய்து தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கிவிடும் நயவஞ்சகத் தன் மையை அறிந்து கொண்ட விடுதலைப் புலிகள் இந்தியப் படையை எதிர்த்துப் போரிடத் தொடங்கினர். இந்திய இராணு வத்தை வெளியேற்றும்படி தமிழ் மக்கள் ஒருமித்துக் குரல் கொடுத்தார்கள். இந்திய அமைதிப்படை புலிகளை வேட்டை யாடித் தீர்த்துக் கட்டலாம் எனப் போர்க்கொடி உயர்த்திப் புலிக ளைத் தேடித் தேடி வதம் செய்யத் தொடங்கிய காலகட்டத்தில் காந்திய வழிவந்த இந்திய அரசுடன் யுத்த நிறுத்தக் கோரிக் கையை முன்வைத்து, இந்திய அரசு புலிகளுடன் அமைதிப் பேச்சுக்களை மேற்கொள்ள வேண்டுமெனக் கோரி சாகும் வரை உண்ணா நோன்பு மேற்கொண்டு, தமிழீழத்தளை நீக்கத்திற்காக அகிம்சை வழியில் தன்னையே தற்கொடை செய்த தமிழீழத் தாய் அன்னை பூபதியாவார்.



உயிர் பிரியும் இறுதிக் கட்டத்தில்

அனைத்துலக அரசியலரங்கில் எமது நியாயமான உரிமைப் போராட்டத்தின் தேவையை அன்னை பூபதியின் வீரச்சாவு எடுத்துக் காட்டியது; காந்தி தேசத்தின் கபடததைப் பாரறியப் பறைசாற்றியது. எமது போராட்டம் வெறுமனே விடுதலைப் புலிகளின் போரல்ல. அது தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் என்பதை எம்மை அடக்கியாள நினைக்கும் ஆக்கிரமிப்புச் சக்திகளுக்கு எடுத்தியம்பியது.

அன்னை , பூபதியின் போராட்ட வரலாறு, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமிழீழப் பெண்களின் வீரத்தையும், மானத் தையும் உரிமையுடன் வாழும் உணர்வையும் வெளிக்காட்டி நிற்கின்றது.

- எரிமலை: சித்திரை 1993

# ஹார்முஷ் நீரிணையை மூடும் அமெரிக்கா: உலக கச்சாய் எண்ணெய் விலை உயர்வு!

-ஐங்கரன் விக்கினேஸ்வரா-

14.04.2026

ஹார்முஸ் நீரிணையை கட்டுப்பாட்டை கையில் எடுக்கும் ட்ரம்ப் போட்ட உத்தரவால் உலக நாடுகள் பல அதிர்ச்சிக்கு உள்ளாகி உள்ளன. இதனால் உலக பொருளாதாரம் கடுமையான சிக்கலை மீண்டும் சந்தித்துள்ளது. பாகிஸ்தானில் ஈரான்-அமெரிக்கா இடையேயான அமைதி பேச்சுவார்த்தை தோல்வியடைந்திருக்கும் நிலையில், ஹார்முஸ் நீரிணை வழியாக செல்லும் அனைத்து கப்பல்களையும் தடுக்க வேண்டும் என்று டிரம்ப் உத்தரவிட்டிருக்கிறார்.

இது சர்வதேச அளவில் பதற்றத்தை அதிகரித்திருக்கிறது. ஏற்கனவே இந்த பாதையில் செல்லும் கப்பல்களை முன்னர் ஈரான் குறி வைத்து தாக்கி வந்தது. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், ஈரான் உடனான அமைதிப் பேச்சுவார்த்தைகள் முறிந்ததைத் தொடர்ந்து, ஹார்முஸ் நீரிணை (Strait of Hormuz) வழியாகச் செல்லும் அனைத்துக் கப்பல் போக்குவரத்தையும் முடக்குவதாக (Blockade) அறிவித்துள்ளமைக்கு பல நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இதற்கு முன்பாக ஹார்முஸ் நீரிணையைத் திறந்து வைத்து, கப்பல் போக்குவரத்தை அனுமதிக்க ஈரானுக்கு 48 மணிநேர கெடு விதித்த டிரம்ப், இல்லையெனில் நரகத்தைச் சந்திப்பீர்கள் என எச்சரித்து இருந்தார்.

ஹார்முஸ் நீரிணை மூடப்படும் என்ற ட்ரம்பின் இந்த அறிவிப்பால் மீண்டும் வளைகுடாவில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

## ஹார்முஸ் நீரிணை முக்கியத்துவம்:

ஈரானின் கட்டுப்பாட்டில் உள்ள ஹார்முஸ் நீரிணையை உலகப் பொருளாதாரத்தின் இதயத்துடிப்பு என கூறப்படுகிறது. 33 கிமீ அகலம் கொண்ட நீரிணை வழியாகச் செல்லும் கப்பல் போக்குவரத்து ஒரு நாள் நிறுத்தப்பட்டால் கூட, உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை பாரியளவில் உயர்ந்துவிடும்.

உலகில் பாவிக்கப்படும் கச்சா எண்ணெய்ப் பொருட்களில் சுமார் 20% முதல் 30% வரை ஹார்முஸ் நீரிணை குறுகிய பாதை வழியாகவே செல்கிறது. சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், குவைத் மற்றும் ஈராக் போன்ற நாடுகள் தங்கள் எண்ணெயை உலக நாடுகளுக்கு அனுப்ப இந்தப் பாதையையே நம்பி இருக்கின்றன.

இது பாரசீக வளைகுடாவையும் ஓமன் வளைகுடாவையும் இணைக்கிறது. 33 கிலோமீட்டர் அகலமான நீரிணையில் கப்பல்கள் செல்வதற்கான பாதைகள் இன்னும் குறுகலானவை ஆகும். இந்தப் பாதையின் வடக்குக் கரை முழுவதையும் ஈரான் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.

ஈரான் மேற்கத்திய நாடுகளுக்கு இடையே குறிப்பாக அமெரிக்கா உடன் பதற்றம் ஏற்படும் போதெல்லாம், ஹார்முஸ் நீரிணையை மூடிவிடுவோம் என்று ஈரான் எச்சரிப்பது வழக்கம். இதனால் இது உலகின் மிகவும் பதற்றமான மற்றும் தற்காப்பு ரீதியாக முக்கியமான பகுதியாகக் கருதப்படுகிறது. இது உலக நாடுகளின் பொருளாதாரத்தை முடக்கும் வல்லமை உடையது.

ஹார்முஸ் நீரிணை என்பது வெறும் கடல் பாதை மட்டுமல்ல, அது உலக நாடுகளின் எரிசக்தி பாதுகாப்பைத் தீர்மானிக்கும் ஒரு முக்கிய கருவியாகவும் இருக்கிறது.

## டிரம்பின் அடாவடித்தன அறிவிப்பு:

தற்போதைய டிரம்பின் அடாவடித்தனமான நீரிணை முடக்கத்தால் உலகளாவிய கடும் பொருளாதார விளைவுகள் ஏற்பட்டுள்ளன. இந்த முடிவால் கச்சா எண்ணெய் விலை கணிசமாக உயர்ந்துள்ளது. அமெரிக்க கச்சா எண்ணெய் விலை 8% உயர்ந்து பீப்பாய் ஒன்றுக்கு $104.24 ஆகவும், உயர் கச்சா எண்ணெய் 7% உயர்ந்து $102.29 ஆகவும் அதிகரித்துள்ளது.

அதேவேளை ஐரோப்பிய நாடுகள் ஈரான் மீதான தாக்குதலை தொடர்ந்து ட்ரம்பை கடுமையாக விமர்சித்து எதிர்த்து வருகின்றன. ஹார்முஸ் நீரிணையைத் திறக்க ஐரோப்பிய நாடுகள் தங்களது கடற்படைகளை அனுப்பத் தவறினால், உக்ரைனுக்கு வழங்கப்பட்டு வரும் ஆயுத விநியோகத்தை நிறுத்திவிடுவதாக டிரம்ப் எச்சரித்துள்ளார்.

ஆனால் சர்வதேச பதற்றம் தற்போது உருவாகி உள்ளது. உலகின் 20% கச்சா எண்ணெய் போக்குவரத்திற்கு ஆதாரமாக விளங்கும் இந்த முக்கிய நீரிணை மூடப்படுவது, மத்திய கிழக்கில் பதற்றத்தை உச்சக்கட்டத்திற்கு கொண்டு சென்றுள்ளது. ஈரானின் எண்ணெய் ஏற்றுமதியைத் தடுப்பதே இதன் முக்கிய நோக்கமாகக் கருதப்படுகிறது.






இந்த நடவடிக்கைகள் அமெரிக்கா-ஈரான் மோதலைப் புதிய கட்டத்திற்கு எடுத்துச் சென்றுள்ளது எனக் கூறப்படுகிறது.

## கச்சா எண்ணெய் விலை உயர்வு

கடந்த வார இறுதியில் அமெரிக்க துணை அதிபர் வான்ஸ், சிறப்பு தூதர்ஸ்டீவ் விட்காப், ஜெராட் குஷ்னர், பாகிஸ்தான் இராணுவதளபதி ஆசிம் முனீர், பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் ஆகியோர் ஈரானுடன் அமைதிப் பேச்சு நடத்தினர். பாகிஸ்தானில் இவர்கள் நடத்திய பேச்சு வார்த்தையில், அணு ஆயுத திட்டத்தை கைவிட மாட்டோம் என்று ஈரான் கூறியது.

அதற்கு எதிர்ப்பு தெரிவித்த அமெரிக்கா, மோசமானவர்களின் கையில் அணு ஆயுதம் இருப்பதை ஏற்க முடியாது. ஹார்முஸ் நீரிணையில் வீசப்பட்ட கண்ணி வெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். எங்கள் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தினால், ஈரானை நரகமாக மாற்றுவோம் என ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார். இதனாலேயே ஹார்முஸ் நீரிணையை மூடும் நடவடிக்கை விரைவில் தொடங்கப்படும். போருக்கு தயாராக உள்ளோம். ஈரானின் பெரும் பகுதியை அழித்துவிட்டோம். தேவைப்பட்டால் மீதமுள்ள பகுதிகளையும் அழிப்போம் என்று அதிபர் டிரம்ப் கூறியுள்ளார்.

ஆனால் ஈரான் இஸ்லாமிய புரட்சிப் படை வெளியிட்ட அறிக்கையில், ஈரான் அரசால் அனுமதி வழங்கப்பட்ட சரக்கு கப்பல்கள் மட்டுமே ஹார்முஸ் நீரிணையை கடந்து செல்ல முடியும். போர்க் கப்பல்கள் நுழைய முயற்சித்தால் மிகப்பெரிய தாக்குதல்களை நடத்துவோம் என்று கடுமையாக எச்சரித்துள்ளது. இதனால் வளைகுடாப் பகுதியில் போர் பதற்றம் மீண்டும் அதிகரித்துள்ளது.

சமாதான பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்று இருக்கையில் அமெரிக்காவும் ஹார்முஸ் நீரிணையை வலியுறுத்தி இருப்பதாக அறிவித்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இதன் காரணமாக சர்வதேசமே மிகப்பெரிய நெருக்கடியை எதிர்கொள்ள இருக்கிறது என்று ஊகிக்கப்படுகிறது.

## டிரம்பின் நீரிணை முடக்கும் திட்டம் :

இஸ்லாமாபாத்தில் நடந்த பேச்சுவார்த்தை தோல்வியடைந்த நிலையில், டிரம்ப் இந்த நீரிணையில் கப்பல்களை முடக்க செய்வது தொடர்பாக தனது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளார். ஹார்முஸ் நீரிணை வழியாக உள்ளே செல்லும் மற்றும் வெளியே செல்லும் கப்பல்கள் அனைத்தையும் தடுத்து நிறுத்துமாறு தனது அமெரிக்க கடற்படைக்கு உத்தரவிட்டிருக்கிறார். ஆனாலும் ஈரானின் பிடிவாதம் காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

**உலகின் இருபது வீத கச்சா எண்ணெய் போக்குவரத்திற்கு ஆதாரமாக விளங்கும் ஹார்முஸ் நீரிணையை அமெரிக்க முடக்குவது, ஈரானின் எண்ணெய் ஏற்றுமதியைத் தடுப்பதே இதன் முக்கிய நோக்கமாகக் கருதப்படுகிறது**

அனைத்து கப்பல்களும் தடையின்றி உள்ளே வரவும், வெளியே செல்லவும் அனுமதிக்கப்பட வேண்டும் என்பதே எங்கள் நிலைப்பாடு. ஆனால், ஈரான் அதற்கு ஒத்துழைக்காததால், தற்போது இந்த நடவடிக்கை எடுக்க வேண்டி உள்ளது என்று கூறியிருக்கிறார்.

இந்த பாதை வழியாக பயணிக்கும் கப்பல்கள், சுங்க கட்டணம் செலுத்த வேண்டும் என்று ஈரான் வலியுறுத்தியிருந்தது. இதை டிரம்ப் ஏற்கவில்லை. இருப்பினும் மறைமுகமாக கட்டணம் செலுத்தி கப்பல்கள் பயணிப்பதாகவும், ஈரானுக்கு மறைமுகமாக சுங்க கட்டணம் செலுத்தும் கப்பல்களை குறி வைத்த மறிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். இது சர்வதேச அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

அமைதி பேச்சுவார்த்தையின் முக்கிய கட்டமாக இந்த நீரிணை பற்றியே விவாதிக்கப்பட்டது. பாக்கிஸ்தான் பிரதமரை சந்தித்த அமெரிக்க துணை அதிபர், ஹார்முஸ் நீரிணை பகுதியில் அமெரிக்க எண்ணெய் கப்பல்களுக்கு முழுப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார். ஏனெனில் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் போக்குவரத்து 20% இந்த பாதையில்தான் நடக்கிறது. இந்த பாதை மூடப்படும் எனில், அது எரிபொருள் விலையை கடுமையாக உயர்த்தும்.

குறிப்பாக ஆசிய, ஐரோப்பிய நாடுகள் அதிக பாதிப்புகளை எதிர்கொள்ளும். ஏற்கெனவே எல்பிஜி விஷயத்தில் இந்தியாவுக்கு சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. இப்படி இருக்கையில், நீரிணையை மொத்தமாக அமெரிக்கா மூடினால் இந்தியா மிகப்பெரிய அளவில் பெட்ரோல், டீசல் பிரச்சனையை எதிர்கொள்ளும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை ஏற்கெனவே அதிகரித்து உள்ளது. சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை மேலும் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. இருவார போர் நிறுத்தம் காரணமாக தற்போது விலை ஓரளவுக்கு குறைவாக இருந்தாலும், மீண்டும் நிச்சயம் விலை ஒரு பீப்பா 115 டாலரை தாண்டும் என்று சர்வதேச அரசியல் விமர்சகர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்த பொருளாதார பாரம் எல்லாம் அப்பாவி மக்கள் தலையில் தான் வந்து விழும். இதன் காரணமாகவே தென் ஆசிய நாடுகளில் பெட்ரோல், டீசல் விலைகள் உயர்த்தியிருக்கின்றன. கச்சா எண்ணெய் விலை உயர்ந்தால், அரசின் பொதுத்துறை நிறுவனங்களும் விலையை உயர்த்தும். இந்த விலை உயர்வு சங்கிலி தொடர் போல மற்ற பொருட்களின் விலையையும் உயர்த்திவிடும் நிலை ஏற்பட்டுள்ளது.

# பரீட்சை முடிவுகளும் ஆசிரியர்களின் வோல்டேஜ்ஜூம்

05.04.2026

பரீட்சை முடிவுகள் வெளிவந்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில், சில வாரங்களுக்கு முன்னதாக ஈழத்தமிழ் சமூக வலைத்தளங்களில் ஆங்காங்கே விவாதிக்கப்பட்ட ஒரு காணொளியை இங்கு குறிப்பிடவேண்டும். இக்காணொளி வெளிவந்து இரண்டு ஆண்டுகள். காணொளியில் பேசியிருப்பவர் தமிழ் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர். ஜெயந்தஸ்ரீ. அவர் சில ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தார். இங்கு அவர் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஊக்கமூட்டும் உரைகளை ஆற்றியிருக்கிறார்.

தன்னுடைய யாழ் விஜயத்தின் விளைவாக அவர் பெற்றுக் கொண்ட அனுபவங்களின் அடிப்படையில், தமிழ்நாடு, கோவையில் ஓரிடத்தில் உரையாற்றும்போது அவர் "யாழ்ப்பாணத்து ஆசிரியர்களுக்கு வோல்டேஜ் குறைவு" என்று கூறியிருக்கிறார். அதைக் குறித்து யாழ்ப்பாணம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையைச் சேர்ந்த ஒரு விரிவுரையாளர் அவரிடம் கேள்வி கேட்கிறார். அந்தக் கேள்விக்கு ஜெயந்தஸ்ரீ கூறும் பதில் அக்காணொளியில் உண்டு.

தனது உரையில் ஜெயந்தஸ்ரீ வோல்டேஜ் என்று தான் கருதுவது "அறிவு ரீதியான வோல்டேஜ் மற்றும் மொழி அறிவு ஆகிய இரண்டையும்" என்று கூறுகிறார். அதாவது தொடர்ச்சியாக வாசிப்பதன்மூலம் பரந்துபட்ட தளத்தில் தமது அறிவையும் மொழி அறிவையும் ஆசிரியர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று அவர் கூறுகிறார். மேலும் "உங்கள் பிள்ளைகளை படித்த ஆசிரியர்களிடம் அனுப்பாமல், படித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்களிடம் அனுப்புங்கள்" என்றும் கூறுகிறார். அதாவது தன்னைத்தானே அப்டேட் செய்து கொள்ளும் ஆசிரியரிடம் அனுப்ப வேண்டும் என்று கூறுகிறார்.

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளிவந்திருக்கும் இக்கால கட்டத்தில் தமிழ்ப் பகுதிகளில் பிள்ளைகள் பெற்ற வெற்றிகளைத் தொகுத்துப் பார்க்கும்போது ஆசிரியர்களின் வோல்டேஜ் கவலைப்படும் அளவுக்குக் குறையவில்லை என்று எடுத்துக் கொள்ளலாமா? அல்லது அது பொருத்தமான வோல்டேஜ்ஜா என்று கேட்கலாமா ?

நாட்டில் நடப்பில் இருப்பது ஒரு பரீட்சைமையக் கல்விமுறை. தேசிய அளவிலான போட்டிப் பரீட்சைகளை நோக்கி பிள்ளைகளைத் தயார்படுத்த வேண்டும். அதைப் பிள்ளைகள் மற்றும் பெற்றோரின் பிரயோக உளவியல் அர்த்தத்தில் சொன்னால், பந்தயக் குதிரைகளை பந்தயத்திற்குப் பழக்கி எடுக்க வேண் ம். இவ்வாறு பந்தயக் குதிரைகளை பழக்குவதற்கு தேவையான வோல்டேஜ்ஜூம் பேராசிரியர் கூறும் வோல்டேஜ்ஜூம் ஒன்றுதானா?

இந்தியாவின் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த ஒரு கவிஞருடைய நேர்காணலை பல ஆண்டுகளுக்கு முன்னுக்கு வாசித்த ஞாபகம். அவருடைய பெயர் மறந்து விட்டது. அவர் ஒரு கவிஞரும் ஆசிரியரும் ஆவார். அவரை நேர்கண்டவர் கேட்கிறார், "நீங்கள் ஆசிரியராக இருக்க விரும்புகிறீர்களா அல்லது கவிஞராக இருக்க விரும்புகிறீர்களா?" என்று. அதற்கு அவர் பின்வரும் பொருள்பட பதில் கூறுகிறார். "ஆசிரியராக இருப்பது என்பது தனக்குத் தெரிந்ததை பிள்ளைகளுக்கு விளங்கப்படுத்துவதற்காக, ஏனைய பல விடயங்களும் தனக்குத் தெரியும் என்பதுபோல ஒரு தோற்றத்தைக் காட்டுவது. ஆனால் கவிஞராக இருப்பது என்பது இயல்பானது. எனக்கு எது தெரியும் தெரியாது என்ற அவஸ்தை இன்றி இயல்பாக இருப்பது.எனக்கு தோன்றுவதைக் கூறுவது, எழுதுவது. எனவே நான் இயல்பாக இருப்பது என்ற அடிப்படையில் ஒரு கவிஞராக இருப்பதைத்தான் அதிகமாக விரும்புகிறேன்"என்று. ஆனால் பேராசிரியர் சிவத்தம்பி கூறுவார் "தெரியாததை தெரியாது என்று சொன்னால்தான் தெரிந்ததைச் சொல்லும்போது நம்புவார்கள்"என்று.

பிள்ளைகளை ஆகர்சிக்கவும் அவர்களுடைய அகத்தைத் தூண் டவும் உயர்ந்த இலட்சியங்களை நோக்கி ஊக்கப்படுத்தவும் ஆசிரியர் பரந்தபட்ட அறிவைக் கொண்டிருக்க வேண்டும். ஜெயந்தஸ்ரீ கூறுவதுபோல சார்ஜ் அதிகமாக இருக்க வேண்டும். ஆனால் இங்கு பிரச்சனை என்னவென்றால், இலங்கை போன்ற நாடுகளில் பரீட்சை மைய, போட்டிக் கல்விச் சூழலுக்குள் ஆசிரியர்கள் பரிட்சையை நோக்கித்தான் பிள்ளைகளை தயார் படுத்துவார்கள். பந்தயக் குதிரைகளை தயார் படுத்துவது போல. ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் இருந்து இந்தப் பந்தயம் தொடங்குகிறது. எனவே பந்தயக் குதிரைகளைத் தயார் படுத்தும் ஓர் ஆசிரியர் அந்தக் குதிரையை பரீட்சையை நோக்கித்தான் பயிறுவிக்கலாம். அதற்கு வெளியே போனால், சிறுவர் வகுப்புகளில், பெற்றோர் அதை அனுமதிப்பார்களா? அல்லது வளர்ந்த பிள்ளைகளின் வகுப்புக்களில் பிள்ளைகள் அது பாடத் திட்டதுக்கு வெளியே போகிறது என்று கருதினால்? தனது கற்றல் வேளை வீணாக் கப்படுகிறது என்று முறைப்பாடு செய்தால்?



அதுமட்டுமல்ல பந்தயக் குதிரைகளை அதிகம் பயிற்றுவிப்பது தனியார் கல்வி நிறுவனங்கள்தான். தேசியப் பரீர்ட்சைகளில் போட்டியிடும் பந்தயக் குதிரைகள் பெருமளவுக்கு தனியார் கல்வி நிறுவனங்களில்தான் தங்கியிருக்கிறார்கள். ஒப்பீட் டளவில் குறைந்த அளவுக்கே பாடசாலைகளில் தங்கியிருக் கிறார்கள்.

சில பாடசாலைகளில் மிக அரிதான புறநடைகள் உண்டு. அங்கெல்லாம் சில ஆசிரியர்கள் பந்தயக் குதிரைகளை முழுமையாகப் பொறுப்பெடுத்து பரீட்சைகளுக்குத் தயார்படுத்துகிறார்கள். தங்களிடம் படிக்கும் பிள்ளைகளை தனியார் கல்வி நிறுவனங்களுக்கு அவர்கள் அனுமதிப்பதில்லை. அதை ஒரு தவம்போல அவர்கள் கடைப்பிடிக்கிறார்கள் ஆனால் அது ஒரு பொதுவான தோற்றப்பாடு அல்ல. இந்த ஆசிரியர்களும்கூட எந்தவகை வோல்டேஜ்ஜை கொண்டிருக்கிறார்கள் என்ற கேள்வி இங்கு முக்கியம். ஏனென்றால் நாட்டின் கல்வி முறைமை எதுவோ அதற்கு வேண்டிய வோல்டேஜ்ஜைத்தான் கல்விக் கட்டமைப்பு ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கும். அதுபோலவே மாணவர்களும் பெற்றோர்களும் அதாவது பந்தயக் குதிரைகளும் அவற்றின் பெற்றோரும் அந்த வால்டேஜ்ஜைக் கொண்டிருக்கும் ஆசிரியரைத்தான் தேடிப்போவார்கள். இங்கே எது பொருத்தமான வால்ட்டேஜ் என்பதனை கல்வியின் பிரயோக நோக்கந்தான் தீர்மானிக்கிறது. அதைமீறி ஆசிரியர்களால் அதைத் தீர்மானிக்க முடியுமா?

பரீட்சை மைய, போட்டிக் கல்வியில் கரணம் தப்பினால் மரணம் என்று வாழ்க்கை வெறுத்துப் படிக்கும் பிள்ளைகள் பந்தயத்தில் எப்படி ஜெயிப்பது என்றுதான் சிந்திப்பார்களே தவிர ஒரு முழு மனிதப் பிறவியாக தமது ஆளுமையை முழுமையாகக் கட்டியெழுப்பும் விடயங்களைக் குறித்து சிந்திப்பதற்கு அவர்களுக்கு நேரம் உண்டா? அவ்வாறு சிந்திப்பதற்கு கல்விமுறையும் பெற்றோரும் அவர்களை விடுவார்களா?

இதில் விதிவிலக்கான பெற்றோரும் பிள்ளைகளும் உண்டு. அசாதாரணமான பிள்ளைகளும் உண்டு. அவர்கள் ஒரே சமயத்தில் பந்தயத்திலும் ஜெயிக்கிறார்கள்; வாழ்க்கைக்குத் தேவையான ஏனைய அறிவையும் திரட்டிக் கொள்கிறார்கள். ஆனால் இது ஒரு பொதுப்போக்கு அல்ல. இப்படிப்பட்டதோர் கல்விச் சூழலுக்குள் பந்தயக் குதிரைகளைப் பயிற்றுவிப்பதற்கும் குதிரைகளின் முழுமையான ஆளுமையைச் செதுக்குவதற்குமிடையில் எதோ ஒரு சமநிலையைக் கண்டுபிடிக்க வேண்டும்.

பாடசாலைகள்தான் முழு மனித ஆளுமையைச் செதுக்கத் தேவையான வாய்ப்புகளையும் வளங்களையும் கொண்டிருக்கின்றன. தனியார் கல்வி நிறுவனங்கள் அல்ல. தனியார் கல்வி நிறுவனங்கள் பெருமளவுக்கு வணிக நோக்கங்களைக் கொண்டவை. அங்கே குறிப்பிட்ட நேரத்துக்குள் பந்தயக் குதிரைகளைப் பழக்கி எடுக்க வேண்டும். அங்கே நோக்கம் பந்தயம்தான். ஆனால் பாடசாலையின் நோக்கம் அதுவல்ல.

ஆனால் துயரம் என்னவென்றால் போட்டிக் கல்வி முறைமையானது பாடசாலைகளின் மதிப்பை பெருமளவுக்கு குறைத்துவிட்டது. அதாவது ஆசிரியர்கள் பந்தயக் குதிரைகளைப் பழக்கும் பயிற்றுவிப்பாளர்களாகத்தான் பார்க்கப்படுகிறார்கள். கல்வி முறையின் தேவை அப்படித்தான் உள்ளது. மாறாக பரந்த தளத்தில் தனது அறிவைக் கட்டியெழுப்பி, தன்னை எப்பொழுதும் அப்டேட் செய்து கொண்டு தனது வோல்டேஜ்ஜை உயர்வாக வைத்திருக்கும் ஆசிரியர்களுக்கு இந்தக் கல்விமுறையில் எவ்வளவு தேவை உண்டு?

தமது பிள்ளைகள் தம்மைப் போலவே ஆசிரியர்களாக வர வேண்டும் என்று ஏன் பெரும்பாலான ஆசிரியர்கள் விரும்புவதில்லை? போட்டிக் கல்வி முறைமைக்குள் ஆசிரியருக்குள்ள மதிப்பு குறைந்து போய்விட்டது காரணமா? அல்லது சில தனியார் கல்வி நிறுவனங்களில் வெற்றிபெற்ற, கோடீஸ்வரர்களாக உள்ள ஆசிரியர்களைவிட ஏனைய பெரும்பாலான ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் சம்பளம் போதாது என்பதனாலா? தன் பிள்ளை தன்னைப்போல ஆசிரியராக வரவேண்டும் என்று கனவு காணும் ஆசிரியர்களை அதிகமாகக் கொண்டிராத ஒரு கல்வி முறைமைக்குள் எது சரியான வால்ட்டேஜ்?

இப்படிப்பட்டதோர் கல்விச் சூழலில் கடந்த வாரம் வெளிவந்த பரீட்சை முடிவுகளில் சில அரிதான புறநடைகளைத்தவிர பெரும்பாலான வெற்றிகளுக்கு தனியார் கல்வி நிறுவனங்களும் காரணம். இதில் ஆசிரியரின் வோல்டேஜ் என்பது எது என்பதை போட்டிக் கல்விச்சூழல்தான் தீர்மானிக்கின்றது. பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தொகுத்துப் பார்த்தால், நமது ஆசிரியர்களின் வோல்ட்டேஜ் கவலைப்படுமளவுக்குக் குறையவில்லை என்றுதான் எடுத்துக்கொள்ளப்படும். போட்டிப் பரீட்சைதான் பிரதான இலக்கு என்றால் நமது ஆசிரியர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். கல்வி முறைமையில் மாற்றத்தைச் செய்துவிட்டு புதிய அளவு கோல்களுடன் வரலாம்.

நாட்டை இப்பொழுது ஆட்சி செய்வது மாற்றத்தை வாக்களித்து வந்த ஓர் அரசாங்கம். அதில் பிரதமராகவும் கல்வி மந்திரியாகவும் இருப்பவர், அரசாங்கத்தின் லிபரல் முகமாகக் கருதப்படும் ஹரிணி அமரசூரிய. ஆனால் அவரால் இன்றுவரை பாடசாலைகளில் ஆசிரியைகளின் ஆடை விவகாரத்தில் காணப்படும் பால் அசமத்துவத்தை நீக்க முடியவில்லை. பிள்ளைகளின் உளவியலை பாரதூரமான விதங்களில் பாதிப்பது என்று கல்வி உளவியலாளர்களால் ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்ட ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையான தேசிய சித்திரவதையை நிறுத்த முடியவில்லை. இதுதான் அரசியல் சூழல் என்றால் ஆசிரியருக்கு எது பொருத்தமான வோல்டேஜ் என்பதனை போட்டிப் பரீட்சைக் கல்வி முறைமைதான் இனியும் தீர்மானிக்கும்.

நன்றி: நிலாந்தன்

**தார்மீக அடிப்படையில், நாம் ஒரு உறுதியான அத்திவாரத்தில் நிற்கிறோம். எமது போராட்ட இலட்சியம் நியாயமானது: சர்வதேச மனித அறத்திற்கு இசைவானது. எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள், தனியரசை அமைக்கும் தகுதி பெற்றவர்கள். சர்வதேச சட்டத்தின் அடிப்படையில், இந்த உரிமையை எவரும் நிராகரித்துவிட முடியாது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# ஈழத்தமிழர் மீதான கட்டமைக்கப்பட்ட இன அழிப்புக்கு சர்வதேச சமூகத்திடம் நீதி கோரி யாழில் மக்கள் போராட்டம்

01.04.2026




ஈழத்தில் மகளிர், சிறுவர் மீதான துஸ்பிரயோகம் வன்கொடுமை, திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் போதை பரப்பலை கண்டித்தும், அதனை தடுக்கவும் அதற்கான சர்வதேச நீதி கோரி இன்று 31.03.2026 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ் நல்லூரான் வீதியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது, இப்போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் சிவில் சமூக பிரதிநிதிகள் பொது அமைப்புக்கள், அரசியல் தரப்பினர் உள்ளடங்கலாக நூற்றுக்கணக்கில் கலந்து கொண்டனர்.

சிங்கள ஆட்சியாளர்களால் தமிழர் மீதான இன அழிப்புக்கு சர்வதேச சமூகத்திடம் நீதிகோரி இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது சர்வதேசமே இன அழிப்பு இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி வேண்டும். பெண்களின் பாதுகாப்பே எமது தேசியத்தின் பலம்!

எதிரியின் இன அழிப்புத் திட்டத்துக்குப் பலியாகாதே! ஒவ்வொரு சிறாரையும் பாதுகாப்போம்! எங்கள் எதிர்காலத்தைக் கட்டிக காப்போம்! தொடரும் இன அழிப்பு நிகழ்ச்சிநிரலை எதிர்ப்போம்! உரிமைகளுக்காகவும் பாதுகாப்புக்காகவும் குரல்கொடுப்போம்- என மேலும் பல கோசங்கள் பதாகைகளை ஏந்தியவாறு போராட்டம் முன்னடுக்கப்பட்டது.

இதன் போது ஈழத்தமிழர் மகளிர், சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு மேம்பாட்டிற்கான அமைப்பின் வடகிழக்குக்கான பணிப்பாளர் திருமதி வாசுகி சுதாகரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,





திட்டமிட்ட இன அழிப்பு வெவ்வேறு வடிவங்களில் ஈழத்தமிழர் சிறார்களையும் பெண்களையும் குறிவைப்பது பற்றி சமூக விழிப்புணர்வை ஈழத்தமிழர் மகளிர் சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு மேம்பாட்டு அமைப்பு வலியுறுத்துகிறது.

வடக்கு-கிழக்குத் தமிழர் தாயகப் பகுதிகளில் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிரான குற்றங்கள் பெருமடங்கு அதிகரித்துவருகின்றன.

இதற்கும் இராணுவ, பொலீஸ் மயமாக்கலுக்கும், மதுபானம், போதைவஸ்து உள்ளிட்ட சமூகச் சீர்கேடுகள் அதிகரித்து வருவதற்கும் மிகவும் நெருங்கிய தொடர்புகள் உள்ளன.

பல்கலைக் கழகச் சூழலில் இருந்து கிராமியச் சூழல் வரை இராணுவ மயமாக்கல் ஈழத்தமிழரை இரண்டாந்தரப் பிரஜைகள் ஆக அச்சுறுத்தி வருவதுடன் சமூகச் சிக்கல்களையும் அதிகரித்துள்ளது.

இன அழிப்புப் போரின் போது நாட்டை விட்டு அகலவேண்டும் என்ற மனப்பாங்கு இருந்ததைப் போல, முள்ளிவாய்க்காலுக்கும் பின்னர் முட்கம்பிவேலி முகாம்களில் இருந்து விடுதலையான பின்னரான காலத்தில் பண்பாட்டுரீதியான பாதுகாப்பற்ற சூழலில் இருந்தும் பொருளாதார நெருக்கடியில் இருந்தும் விடுபட வெளிநாடுகளுக்குப் புலம் பெயரவேண்டும் என்ற சிந்தனை ஈழத்தமிழரிடையே தொடர்ந்துகொண்டிருக்கிறது.

தமிழர் தாயகத்திலிருந்து மக்களை அகற்றும் உத்தியாகவும் இதைப் பார்க்கவேண்டியுள்ளது.

இராணுவமயமாக்கல் எவ்வாறாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழர் தாயகத்தில் சமூகச் சீர்கேட்டுக்கு உள்ளாக்கியுள்ளது என்பதை சர்வதேச நிறுவனங்களும் சாட்சியப் பொறிமுறைகள் முறையாக ஆய்வுக்கு உட்படுத்தத் தவறியுள்ளன.

போரின் பின் பண்பாட்டுரீதியான அத்துமீறல்களும் அவற்றால் ஏற்பட்டுவரும் சமூகப் பாதிப்புகளும் பெருமளவில் வடக்கு கிழக்கையும் குறிவைக்க ஆரம்பித்தாலும், ஒருபுறம் தமிழ்ப் பண்பாடும் தேசிய விடுதலைப் போராட்ட மரபும் இவற்றுக்குத் தடையாய் இருப்பதால் தமிழ்ச் சமூகம் தன்னை ஓரளவு சுதாகரித்துக் கொண்டு காப்பாற்ற முயல்கிறது.

இருப்பினும், மறுபுறம் இராணுவ ரீதியான எதிர்க்கிளர்ச்சி உத்தியாக தமிழர் தாயகப் பகுதிகளில் மதுபான, போதைவஸ்து அறிமுகம் திட்டமிட்ட வகையில் ஊக்குவிக்கப்பட்டுவருகிறது என்பது வெளிப்படை.

இந்த போதைவஸ்து அறிமுகத்துக்காக ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் தாயகத்தில் படையினருக்கு வழங்கப்பட்டிருந்த திறந்த உரிமம் தென்னிலங்கை நோக்கிய போதைவஸ்துப் பரவலாக்கத்துக்கும் காரணியாகியுள்ளது. அண்மைக்காலங்களில் போதை வஸ்து அத்துமீறல் தொடர்பாகக் கைது செய்யப்படும் படை அதிகாரிகள் பற்றிய செய்திகள் இதை உறுதிப்படுத்துகின்றன.

ஜனவரி 2026 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுலகத்தின் போர் தொடர்பான குற்றங்கள் தொடர்ந்தும் அரச படையினரால் வடக்கு-கிழக்கில் பரவலான பாலியற் குற்றங்களாகத் தொடர்கின்றன என்ற கண்டறிதல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பெண்களும் ஆண்கள் உள்ளிட்ட குறிப்பாகச் சிறுவர்களும் குறிவைக்கப்பட்டுள்ளதை அந்த அறிக்கை ஒத்துக்கொண்டுள்ளது.

இந்தச் சூழலிற்தான் அண்மையில் கொடூரமான கொலைகள் கிழக்கிலும் வடக்கிலும் நடந்துள்ளன.

இவற்றில் கொல்லப்படுபவர்களும் கொல்பவர்களும் தமிழர்களாய் இருந்தாலும், எம்மைக் கொண்டே இன அழிப்பைத் தொடருகின்ற கோரமான ஒரு அத்தியாயத்தையே இந்தக் குற்றங்கள் வெளிப்படுத்துகின்றன.

இவை, பாதுகாப்புத் தொடர்பான அச்ச உணர்வைக் கூட்டி, இளம் தலைமுறையினரைத் தமது தாயகத்தை விட்டுப் புலப்பெயர்வுக்கும் ஆளாக்குகின்றன.

ஒட்டுமொத்தமாக எமது மண்ணுக்கும் எமக்குமான உரித்தைச் சிதைக்கும் நோக்குடன் பண்பாட்டுரீதியான, கட்டமைக்கப்பட்ட இன அழிப்புத் திட்டம் நீண்டுசெல்வதன் வெளிப்பாடே இந்தக் குற்றங்கள் என்ற விழிப்புணர்வு எமது மக்களிடம் தேவையாகிறது.

இவ்வாறு கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு 1948 ஆம் ஆண்டில் இருந்து நீடிப்பதற்கு இன்னொரு காரணம் 2009 இன அழிப்புப் போரின் பின் 16 ஆண்டுகளாகியும் சர்வதேச சட்ட ரீதியாக, அதிலும் குறிப்பாக 1948 இன அழிப்பைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான ஐ. நா. உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கையின் அரச பொறுப்பும் தனிநபர் குற்றவியற் பொறுப்பும் சர்வதேச நிதிமன்றங்களால் விசாரிக்கப்படுமளவுக்கு கனதியான நகர்வுகள் மேற்கொள்ளப்படாமல் தாமதிக்கப்படுவதும் ஒரு காரணமாகும்.

ஆட்சி மாற்றத்துக்கு மட்டும் சர்வதேச நீதியை வல்லரசுகள் மட்டுப்படுத்தி ஐ நா வில் பயன்படுத்துவதே சர்வதேச அரசியலாக உள்ளது.

இந்த நிலையை மாற்ற தாயகத்திலும் புலம்பெயர் சூழலிலும் இனியும் தாமதியாது தமிழ்த் தேசியத் தரப்பினர் அனைவரும் இணைந்து பணியாற்றவேண்டும்.

'எட்டாப்பழம் புளிக்கும்' என்றோ, 'கிட்டாதாயின் வெட்டென மற' என்றோ சுயநிர்ணய உரிமை, இறைமை, சர்வதேசநீதி போன்ற அடிப்படை விடயங்களில் நாம் தவறு இழைக்கக் கூடாது. சலுகைகளுக்காக உரிமைகளைக் காற்றில் பறக்க விடவும் முடியாது!

சர்வதேச அரசியலின் அநீதியையும் எதிர்கொள்ளவேண்டும், அதேவேளை அது நல்கும் வாய்ப்புகளையும் 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என்பதற்கேற்ப கை நழுவவிடாது பயன்படுத்தவேண்டும். இதற்கு முதற் படியாக தாயகத்திலுள்ள தமிழ்த் தேசியத் தரப்புகளும் புலம்பெயர் அமைப்புகளும் தம்மிடையே முரண்பட்டுக்கொண்டிருப்பதில் இருந்து தடவழித் திருத்தத்துக்கு உள்ளாக்கப்படவேண்டும். பிளவுகள் நீங்க வேண்டும்.

சர்வதேச நிதீயைப் பற்றுக்கோடாகக் கொண்டு எமது ஒருங்கிணைந்த கோரிக்கைகளையும் அவற்றுக்கேற்ற சர்வதேசமயப்பட்டுத்தப்பட்ட அமைதிவழி, ஜனநாயகப் போராட்டங்களையும் முன்னெடுக்கும் அதேவேளை, தாயகத்தில் இராணுவத்தை விலக்கிக் கொள்ளுமாறும், எமக்கான சுயாட்சியை உறுதிப்படுத்துமாறும் உலகளாவிய விழிப்புணர்வை நாம் ஏற்படுத்தவேண்டும்.

எமது தாயகத்தில் எம்மை நாமே ஆளும் அரசியல் அதிகாரம் இல்லாமல், உண்மையான பாதுகாப்போ, பண்பாட்டு இருப்போ, பொருளாதார அபிவிருத்தியோ ஏற்படப் போவதில்லை. நிரந்தரத்தீர்வை எதுவகையிலும் பாதிக்காத இடைக்காலத் தீர்வுகளும் அவசியம்.

ஆதலால், உரிமைகளை முன் நிறுத்திச் சிந்திக்கும் மரபு ஈழத்தமிழர்களிடையே முன்னெப்போதையும் விட கூடுதலான சிரத்தையோடு முன்னெடுக்கப்படவேண்டும் என்று ஈழத்தமிழர் மகளிர் சிறுவர் பாதுகாப்பு மேம்பாட்டு அமைப்பு அறுதியும் உறுதியுமாக வலியுறுத்துகிறது.

கொள்கை-கோட்பாடு, நடைமுறைச்சாத்தியம் என்ற இரு வழிகளும் ஒன்றோடொன்று முரண்படாது எமது அணுகுமுறைகள் நுட்பமாக வழிவகுக்கப்படவேண்டும்.

அடிமைத்தனமும் வேண்டாம், உரிமைகளற்ற சலுகைகளும் வேண்டாம்!

எமது பண்பாட்டுச் சீரழிவுக்கு எம்மவரே பலிபோகும் எதிரிகளின் இன அழிப்புத் திட்டத்திற்கு பலி போகவேண்டாம்!

உரிமைகளுக்காகப் போராடுவோம்! இரண்டாந்தரப் பிரஜைகளா இல்லையா என்பதைத் தீர்மானிப்பது எமது சுயநிர்ணய உரிமையே அன்றி வேறொன்றுமல்ல!

விழிப்புத் தான் விடுதலையின் முதற்படி என்றார் என்பது குறிப்பிடத்தக்கது…





# பாகிஸ்தான் அணு ஆயுதத்தை உருவாக்கிய அமெரிக்கா: ஈரான் அணு திட்டத்தை தடை செய்வது ஏன்?



– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

01.04.2026

உலகில் பல்வேறு நாடுகளின் ஆட்சி மாற்றங்களிலும், ஆட்சி கவிழ்ப்புகளிலும் அமெரிக்கவே ஆதிக்கம் செலுத்தி வருகிறது. தற்போது நிகழும் ஈரான் போரானது ஆட்சி அதிகாரத்தை மாற்றுவதுடன், தெஹ்ரானின் அணுசக்திதிட்டத்தை முடக்கி நிர்மூலமாக்குவதே அமெரிக்க அரசின் நோக்கமாகும். ஆனால் அறுபது வருடங்களுக்கு முன்னர் ஈரானின் அயல் நாடான பாகிஸ்தானில் அணு ஆயுத வளர்ச்சியை உருவாக்கியதே அமெரிக்கா தான். உலகில் மனிதகுல பேரழிவை ஏற்படுத்தும் கொடூர அணு வாயுதங்களை அமெரிக்காவே உருவாக்கி, பின்னர் தனது சுய நலனுக்காக அழிக்கவும் முனைகின்றது.

பாகிஸ்தானில் அணு ஆயுத திட்டத்தை உருவாக்குவதன் மூலமாக இந்தியாவை அச்சுறுத்தி, அதன் மூலம் டெல்லி அரசை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்பதே அமெரிக்காவின் நோக்கமாக இருந்தது.

கடுமையான பனிப் போர் காலகட்டத்தில் 1965ல் பாகிஸ்தான் முதலாவது ஆராய்ச்சி அணு உலையை (PARR-I) ஆரம்பித்தது. அப்போது Pakistan Atomic Research Reactor 1972 வரை விஞ்ஞானிகளுக்கு அமெரிக்காவே பயிற்சியும் அளித்தது. ஆனால் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா நேரடியாக அணு ஆயுதங்களை வழங்கவில்லை என்று அமெரிக்க கூறினாலும், பாகிஸ்தானின் அணு ஆயுதத் திட்டத்தின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பில் அமெரிக்கா மறைமுகமான மற்றும் நேரடிப் பங்கைக் கொண்டுள்ளது என்பது வரலாற்றுத் தரவுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## பாகிஸ்தான் முதல் அணு உலை:

அமெரிக்காவின் இந்த திட்டம் அநேகமாக இந்தியாவுக்கான வைக்கப்பட்ட பொறி என்றுதான் பார்க்க வேண்டும். இந்தியா எப்போதும் ரஷ்யாவுடனான உறவை பேணி வந்த காரணத்தால் அமெரிக்காவுக்கு இந்த பனிப்போர் காலத்தில் முக்கியமாக பாகிஸ்தானில் நிலை கொள்ள வேண்டிய தேவையேற்பட்டது.

ஆரம்பகட்ட உதவிகள் 1950களின் பிற்பகுதியில், அமெரிக்காவின் அணு அமைதிக்காக (Atoms for Peace) திட்டத்தின் கீழ் பாகிஸ்தானுக்கு ஆராய்ச்சி உலைகள் (Research Reactors) வழங்கப்பட்டன. இதுவே பின்னர் அவர்களின் அணு ஆயுத ஆராய்ச்சிக்கு அடித்தளமிட்டது.

அமெரிக்காவின் இந்த திட்டம் தொடர்பில் விமர்சனங்கள் எழுந்த நிலையில் 1979இல் தனது உதவியை இடை நிறுத்தியது. ஆனால், 1980களில் மீண்டும் பல பில்லியன் கணக்கில் பாகிஸ்தானுக்கு உதவியை வாசிங்டன் அரசு வழங்கியது. இந்த பணத்தை பயன்படுத்தி பாகிஸ்தான் அணுவாயுதத்தை உருவாக்கி முடித்திருந்தது. மனித குலத்தை வேரோடு அழித்தொழிக்கும் இந்த அணுவாயுதத்தை பாகிஸ்தான் உருவாக்குவதற்கு காரணமாக இருந்த அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் றேகன் அதை மறுத்து அறிக்கை விட்டபோதிலும் நாளடைவில் 1983இல் அதை அமெரிக்கா ஒப்புக்கொண்டது.

1989வரை ரொனால்ட் ரேகனின் நிர்வாகம் பாகிஸ்தானுக்கு ஆதரவாக அணு ஆயுத வளர்ச்சிக்கு பூரண ஒத்துழைப்பை நல்கி வந்தது. அதைத்தொடர்ந்து 1990களில் பதவிக்கு வந்த ஜோர்ஜ் டபிள்யு புஷ் தொடர்ச்சியாக பாகிஸ்தானுக்கு உதவிகளை அதிகமாக புரிந்து வந்தார். இந்த காலப்பகுதியில் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்திருந்த ரஷ்ய படைகள் அங்கிருந்து வாபஸ் பெற்றவுடன் பாகிஸ்தானுக்கான நிதியுதவியை அமெரிக்க அரசு உடனடியாக நிறுத்தியது.

அப்போது பாகிஸ்தான் மனித பேரழிவை ஏற்படுத்தும் அணு வாயுதத்தை தயாரித்து தயாராக வைத்திருந்தது. ஆனால் பாகிஸ்தான் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் உறுப்பினராக இல்லை. 2025 ஆம் ஆண்டு நிலவரப்படி, பாகிஸ்தானின் ஆயுதக் கிடங்கில் 170 அணு ஆயுதங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் பாகிஸ்தான் 1998 ஆம் ஆண்டில் சாகாய்-ஐ மற்றும் சாகாய்-ஐஐ என இரண்டு அணு சோதனைகளை நிலத்தடியில் நடத்தியது. இந்த திட்டத்துக்கு மேலதிகமான ஆதரவை சவூதி அரேபியா மற்றும் லிபியா போன்ற நாடுகள் வழங்கி வந்தது என்று கூறப்படுகிறது.

போர் ஏற்பட்டால் பாகிஸ்தானின் கொள்கையின் படி தன் நலனுக்கு பாதிப்பு ஏற்பட்டால் அணுவாயுதத்தை பயன்படுத்த தயங்காது என்பதுதான் அதன் நோக்கமாகும். அண்மையில் பாகிஸ்தானின் உயர்ஸ்தானிகர் ஒருவரிடம் கேட்கப்பட்ட கேள்வி என்னவென்றால், இந்தியா உங்கள் மீது தாக்குதல் நடத்தினால் உங்கள் நிலைப்பாடு என்னவாக இருக்கும் என்ற கேள்வியொன்றுக்கு அவரின் பதில் நாம் இந்தியா மீது அணு குண்டு தாக்குதல் நடத்துவோம் என்பதாகும். அமெரிக்கா பாகிஸ்தானியர்களின் கையில் மனிதகுல அழிவு ஆயுதங்களை வழங்கியுள்ளது என்பது மிகவும் தவறான விடயமாகவே இருக்கிறது.

## சீனா– அமெரிக்க மௌனம்:

1980களில், பாகிஸ்தான் அணு ஆயுதங்களை உருவாக்கத் தொடங்கிய போது, சீனாவும் அவர்களுக்குத் தொழில்நுட்ப மற்றும் அறிவியல் உதவியை வழங்கியது. அந்த சமயத்தில், சோவியத் யூனியனுக்கு எதிரான ஆப்கானிஸ்தான் போரில் பாகிஸ்தானின் உதவி அமெரிக்காவுக்குத் தேவைப்பட்டதால், பாகிஸ்தானின் அணு ஆயுதத் திட்டத்தை அமெரிக்கா கண்டுகொள்ளாமல் மௌனம் சாதித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் 2001 செப்டம்பர் 11 தாக்குதல்களுக்குப் பிறகு, பாகிஸ்தானின் அணு ஆயுதங்கள் இஸ்லாமிய பயங்கரவாதிகள் கைக்குச் செல்லக்கூடும் என்ற அச்சத்தில், புஷ் நிர்வாகம் பாகிஸ்தானின் அணு ஆயுதங்களைப் பாதுகாப்பதற்கான இரகசியத் திட்டத்திற்காக 100 மில்லியன் டாலர் உதவி வழங்கியது. சில முன்னாள் CIA அதிகாரிகள், பாகிஸ்தானின் அணு ஆயுதக் கட்டுப்பாடுகள் அமெரிக்காவின் கண்காணிப்பில் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளனர். இந்த பாதுகாப்பு கட்டுப்பாடுகள் 2001 முதல் 2007 வரை அமெரிக்க அரசால் கடுமையாக கண்காணிக்கப்பட்டது.

ஆனால் தற்போதைய சூழலில், பாகிஸ்தானின் அணு ஆயுதத் திறன் அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாகவும், அந்த ஆயுதங்கள் ஈரான், வட கொரியா போன்ற நாடுகளுக்குப் பரவிய வரலாறும் கவலையை அளிப்பதாக அமெரிக்க உளவுத்துறை அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அமெரிக்கா அணு ஆயுதங்களை பாகிஸ்தானுக்கு வழங்கவில்லை, ஆனால் ஆரம்பகட்ட ஆராய்ச்சி வசதிகளை வழங்கியது என்று கூறி அமெரிக்க அரசு நழுவப் பார்க்கிறது. 2010 இன் பின்னர் அமெரிக்க அரசு பாகிஸ்தானை கண்டுகொள்ளாமல் விட்டது. இறுதியாகப் பாதுகாப்புக் கட்டுப்பாடுகளை கண்காணிக்கவும் தவறிவிட்டது.



## இந்தியா–பாகிஸ்தான் அணு ஆயுத முறுகல்:

அதேவேளை இந்தியா–பாகிஸ்தான் இடையே நீடிக்கும் அணு ஆயுத மோதல் ஆபத்து இன்னமும் தொடர்கிறது. இந்தியாவும் பாகிஸ்தானும் நேரடி மோதலை விரும்பாவிட்டாலும் அணு ஆயுத மோதலுக்கான ஆபத்து நீடித்து வருவதாக சர்வதேச அணு ஆயுத பாதுகாப்பு ஆலோசகர்கள் அறிக்கை தெரி விக்கிறது.

கடந்த காலத்தில் இருதரப்பும் நேருக்கு நேர் மோதிக்கொண் டதால் ஏற்பட்ட பதற்றம் மேலும் அதிகரிக்கும் பட்சத்தில், அணு ஆயுத மோதல் நிகழும் என்று அமெரிக்க உளவுத்துறை தனது அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது. தற்போதுள்ள சூழலில் இந்தியாவும் பாகிஸ்தானும் மோதலைத் தொடங்க விரும்ப வில்லை என்றும் பயங்கரவாத சக்திகள் தொடர்ந்து நெருக் கடிகளுக்கான காரணிகளை உருவாக்கும் வாய்ப்பு உண்டு என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான சாத்தியக்கூறுகள் எதிர்காலத்தில் இருப்பதாகவும் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## ஈரான் அணுஆயுத திட்டம்:

தற்போதைய போர்ச் சூழலில் ஈரான் கடும்போக்காளர்கள் அணு குண்டுக்கான கோரிக்கைகளை தீவிரப்படுத்துகின்றனர். அதிகரித்து வரும் அமெரிக்க-இஸ்ரேலிய தாக்குதலை மீறி தெஹ்ரான் அணு குண்டை நாட வேண்டுமா என்பது குறித்த ஈரானிய கடும்போக்காளர் இடையேயான விவாதம், மேலும் பகிரங்கமாகவும், வற்புறுத்தலாகவும் மாறி வருகிறது.

ஈரான் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்திலிருந்து விலகும் யோசனையை அரசு ஊடகங்கள் வலியுறுத்துகின்றன. சில கடும்போக்காளர்கள் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தி லிருந்து முழுமையாக விலக அழைப்பு விடுத்துள்ளனர்.

பெப்ரவரி 28 அன்று போர் தொடங்கியபோது, மூத்த உச்ச தலைவர் அயதுல்லா அலி காமெனி உடனடியாக கொல்லப்பட் டதைத் தொடர்ந்து, புரட்சிகர காவலர்கள் இப்போது ஆதிக்கம் செலுத்துவதால், ஈரானின் அணு ஆயுத அணுகுமுறை குறித்த கடும்போக்காளர்களின் கருத்துக்கள் அதிகரித்து வருகின்றன என்று ஈரானிய வட்டாரங்கள் தெரிவித்தன.

நீண்ட காலமாக ஈரான் அணுகுண்டுகளை தயாரிக்க விரும்பு கிறது. குறைந்தபட்சம் மிக விரைவாக ஒன்றை உருவாக்கும் திறனைப் பெற விரும்புகிறது. ஆனாலும் கொமேனி அணு ஆயுதங்களைத் தடைசெய்தார் என்றும், அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் (NPT) உறுப்பினராக இருப்பதையும் சுட்டிக் காட்டி, ஈரான் அதை எப்போதும் மறுத்து வந்துள்ளது.

ஆயினும் தற்போதய சூழ்நிலையில் அமைதிப் பேச்சுவார்த்தை எல்லாம் முடி, இனி அணு ஆயுதம் தான் ஒரே வழி என ஈரா னிய கடும்போக்காளர்கள் எடுத்துள்ளார்கள். கொமேனியின் மறைவுக்குப் பின் ஈரானிய இராணுவம் இப்போது ஒட்டுமொத்த அதிகாரத்தையும் தன் கைக்குள்ளே எடுத்துள்ளது. அணு குண்டு ஒன்று உருவாக்குவோம், அல்லது வாங்குவோம் எனத் தொலைக்காட்சி விவாதங்களிலேயே பகிரங்கமாக ஈரானியத் தலைவர்கள் கூறிவருகின்றனர்.

## கிழித்தெறியப்படும் NPT ஒப்பந்தம

அமெரிக்காவின் மிரட்டல்களுக்குப் பணியாமல், ஹார்முஸ் நீரிணையை தொடர்ந்து ஈரான் தக்கவைக்க அணு ஆயுதங்களை மிரட்டலாக பாவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஈரானின்










இந்தப் புதிய வியூகம் உலகப் போருக்கு வழிவகுக்குமா என்று கூட மக்கள் அஞ்ச வேண்டிய நிலையில் உள்ளனர்.

ஈரான் கொமேனியின் மரணம் அணு ஆயுத சமன்பாட்டை மாற்றியுள்ளது. தற்போது தெஹ்ரானில் அணுசக்திக் கொள் கையை மாற்றுவதற்கான திட்டம் எதுவும் இன்னும் இல்லை என்றும், அணுகுண்டுகளைத் தேட ஈரான் முடிவு செய்ய வில்லை என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆனால் உயர் அதிகார அமைப்பில் உள்ள முக்கியத் தரப்பினர் தற்போதைய கொள்கையை கேள்விக்குட்படுத்தி மாற்றத்தைக் கோரி வருகின்றனர். தெஹ்ரானின் அணுசக்தித் திட்டம் குறித்த பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியில் நடந்த, ஈரான் மீதான அமெரிக்க - இஸ்ரேலியத் தாக்குதல்கள், நிலைமையை மாற்றி யிருக்கலாம். அணு குண்டுகளைத் துறப்பதாலோ அல்லது NPT-யில் நீடிப்பதாலோ தங்களுக்குப் பெரிதாக எதுவும் கிடைக்காது என்று ஈரானிய விஞ்ஞானிகளை இது நம்ப வைத் துள்ளது.

முன்னர் கடும்போக்குவாதிகள் அச்சுறுத்திய, அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்திலிருந்து (NPT) விலகும் யோசனை, அரசு ஊடகங்களில் அதிகளவில் பரப்பப்பட்டு வருகிறது. அத னுடன், ஒரு காலத்தில் பொதுவெளியில் பேசத் தடை செய்யப் பட்டிருந்த, ஈரான் நேரடியாக அணுகுண்டு தயாரிக்கும் முயற் சியில் இறங்க வேண்டும் என்ற யோசனையும் பரப்பப்படுகிறது.

காவல் படையுடன் தொடர்புடைய தஸ்னிம் செய்தி நிறுவனம், ஈரான் தனது குடிசார் அணுசக்தித் திட்டத்தில் உறுதியாக இருக்கும் அதே வேளையில், கூடிய விரைவில் NPT-யிலிருந்து விலக வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.



**நாம் ஒன்றுபட்ட மக்களாக – ஒரே சக்தியாக – அணிதிரண்டு, எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ள வேண்டும்.**

**–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–**



# ஈகைச்சுடர் அன்னை பூபதி

அவர்களின்

38ஆம் ஆண்டு நினைவில்

நாட்டுப்பற்றாளர் நாள் – ஏப்ரல் 19 2026

மண்ணில்:
03.11.1932

ஈகைச்சாவு:
19.04.1988

## அன்னை பூபதி கணபதிப்பிள்ளை Annai Poopathy Kanapathipillai

கிரான், மட்டக்களப்பு – தமிழீழம்

**உண்ணா நோன்பு போராட்டத்தில் ஈகைச்சாவைத் தழுவிக்கொண்ட முதல் பெண்மணி**

**Annai Poopathy was the first woman to embrace martyrdom in the fasting struggle for Thamileelam**

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

# தந்தை செல்வாவின் இலக்கு ஒன்றுதான் அது இனத்தின் விடுதலை

பா. அரியநேத்திரன்

01.04.2026



தந்தை செல்வா என அழைக்கப்படும் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் 1898 மார்ச்31 இல் பிறந்து 1977 ஏப்ரல் 26இல் இயற்கை அடைந்தார். அன்னாரின் 128 ஆவது ஜனன தினம் 2026 மார்ச் 31ஆம் நாளாகும்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அங்குரார்ப் பணம் 1949டிசம்பர் 18ஆம் திகதி மு.ப. 9:30, மணிக்கு கொழும்பு மருதானை அரசாங்க லிகிதர் சேவை சங்கக் கட்டிட அறையில் தந்தை செல்வா தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் “இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி” தோற்றம் பெற்றது. அந்த கூட்டத்தில் டாக்டர். இ.மு.வி.நாகநாதன், திரு.கு.வன்னியசிங்கம், டாக்டர். எம்.திருவிளங்கம் உட்பட பலர் சமூகம் கொடுத்திருந்தனர்.

தலைவராக தந்தை செல்வா அவர்கள் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். அன்று தமிழரசு கட்சி உருவாக்கிய அங்குராப் பணக்கூட்டத்தில் தந்தை செல்வா ஆற்றிய தலைமை உரை “மன்னராட்சி நிலவிய காலங்களில் ஒரு நாட்டின் சரித்திரம் அந் நாட்டை ஆண்ட மன்னர்களின் வரலாறாகவே எழுதப்படும்.

மக்களாட்சி மலர்ந்த பின் மக்கள் சக்தியை திரட்டிச் செயற்பட்ட அரசியல் இயக்கங்களின் வரலாறே நாட்டின் சரித்திரமாக அமைகிறது. அக்கண்ணோட்டத்தில் அரசியல் கட்சிகளின் தோற்றம், வளர்ச்சி, சமுதாயத்தில் அவற்றின் தாக்கம், அவற்றின் கொள்கைகளில் ஏற்ப்பட்ட மாற்றங்கள், சாதனைகள், ஆகியன அதிமுக்கியத்துவம் வாய்ந்தவை.

இலங்கையில் வாழுகின்ற தமிழ்பேசும் மக்கள் விடுதலை பெறுவதற்காக உழைக்கும் ஸ்தாபனமாக அமைக்க வேண்டுமென்னும் தனி நோக்கத்துடன் நாங்கள் எல்லோரும் இன்று கூடியிருக்குறோம். “இப்போதிருக்கும் நிலையில் நாம் விடுதலை பெறுவதற்கு ஒரு சுதந்திர தமிழரசை நிறுவுவது இன்றியமையாதது இது எமது திடமான நம்பிக்கையாகும்”

இதுதான் தந்தை செல்வா 1949 டிசம்பர் 18இல் ஆற்றிய முதலாவது கட்சி தலைமை உரை. இதனை உறுதிப்படுத்தி முதலாவது இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி மாநாட்டை திருகோணமலையில் 1951 ஏப்ரல் 13, 14, 15 ஆம் திகதிகளில் நடத்தி அம்மாநாட்டில், தமிழ் பேசும் மக்கள் ஒரு தனியான தேசிய இனம் என்றும், சிங்களவர்களுடன் சமஷ்டி அடிப்படையில் இணைந்து வாழ விரும்புவதாகவும் பிரதான தீர்மானத்தை தந்தை செல்வா நிறைவேற்றினார் சமஷ்டி கொள்கை இருந்தமையால் சமஷ்டிக் கட்சி என்ற பெயரையும் தமிழரசுக்கட்சி பெற்றது. ஈழத்தமிழர்களுக்கான தலைநகர் ‘திருகோணமலை’ என்பதும் அந்த மாநாட்டில் உறுதி செய்யப்பட்டது.

இந்த சமஷ்டிக்கொள்கைக்காக 1949, தொடக்கம் 1976, வரையும் 27 ஆண்டுகள் அறவழிப் போராட்டங்கள், மாநாடுகள், பேச்சுக்கள், ஒப்பந்தங்கள் எல்லாம் செய்தும் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியின் 10ஆவது தேசிய மகாநாடு 1966 யூலை 23.24,25, ஆகிய மூன்று தினங்கள் கிழக்கு மாகாணம் கல்முனையில் டாக்டர் இ.மு.வி.நாகநாதன் தலைமையில் இடம் பெற்ற போது இறுதி நாள் (25.07.1966) அப்போது பிரதமராக இருந்த ட்ட்லி சேனநாயக்காவை பிரதம விருந்தினராக அழைத்து மேடையில் ஏற்றி அவர் மூலமாகவேனும் அரசியல் தீர்வை பெறலாம் என தந்தை செல்வா முயன்றார்.

அந்த மகாநாட்டில் உரையாற்றிய பிரதமர் ட்ட்லி சேனநாயக்கா “நான் இலகுவில் வாக்கு கொடுக்கமாட்டேன் வாக்கு கொடுத்தால் அதை நிறைவேற்றாமல் விட மாட்டேன்” என கூறினார் அவர் தமிழ்மக்களுக்கான அரசியல் உரிமையை வழங்குவேன் என்று அந்த மகாநாட்டில் வாக்கு கொடுத்தார் கூறினார் அந்த வாக்குறுதியை அவர் நிறை வேற்றவில்லை என்பது பின்னர் தெரியவந்தது.

இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியின் தேசிய மாநாட்டில் இலங்கை பிரதமர் ஒருவரை அழைத்து மேடையில் உரையாற்றவைத்த மாநாடு இதுவாகும் இதற்கு முன்னமோ, இன்று வரையோ எந்த மாநாட்டிலும் இவ்வாறு சிறீலங்கா பிரதமர் எவரும் அழைக்கப்படவில்லை. இப்படி விடுதலைக்காக பல வழிகளை 1949 டிசம்பர் 18 தொடக்கம் 1976 மே 14வரை சமஷ்டிக்கொள்கைக்காக 27 வருடங்களாக செய்து பார்த்து உழைத்த தந்தை செல்வா ஏமாற்றம் அடைந்து இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியையும், அதன் பிரதான சமஷ்டிக்கொள்கையையும் அப்படியே (கைவிட்டு) மௌனிக்க விட்டு விட்டு 1972 மே 04 இல் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், கணபதி காங்கேஜர் பொன்னம்பலம் இலங்கைத் தமிழரசுக் கட்சி, எஷ்.ஜே.வி.செல்வநாயகம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், சௌ மியமூர்த்தி தொண்டமான் ஆகியோரால் ஆரம்பித்த “தமிழர் கூட்டணி” என்ற கட்சியின் பெயரை மாற்றி 1976 மே 14.ல் “தமிழர் விடுதலைக் கூட்டணி” என புதிய பெயரை சூட்டி அந்த கட்சி மூலமாகவே வட்டுக்கோட்டை தீர்மானமாக “சுதந்திர தமிழீமே ஒரே தீர்வு” என தந்தை செல்வா நிறைவேற்றினார்.

தந்தை செல்வா 1976 மே 14இல் வட்டுக்கோட்டை தீர்மானம் எடுப்பதற்கு சரியாக 09 நாட்களுக்கு முன்பு 1976 மே 05இல் “தமிழீழ விடுதலைப்புலிகள்” இயக்கத்தை உத்தியோகபூர்வமாக தலைவர் பிரபாகரன் ஆரம்பித்தார் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும், வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றிய தந்தை செல்வா சரியாக 11 மாதம் 12 நாட்களால் 1977 ஏப்ரல் 26இல் இறைபதம் அடைந்தார்.

அவர் மரணம் அடைந்து சரியாக 02 மாதம 25 நாட்களால் 1977 யூலை 21இல் நடைபெற்ற தொகுதிவாரியான இறுதித் தேர்தலில் வட்டுக்கோட்டை தீர்மானத்தை தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடகிழக்கில் 23 தொகுதிகளில் முன் வைத்து பிரசாரம் மேற்கொண்டு “தமிழீழம் வேண்டுமானால் உதயசூரியனுக்கு வாக்களியுங்கள்” என்ற கொஷத்துடன் அந்த தேர்தல் இடம்பெற்றது அதில் 18 தொகுதிகளில் தமிழ் மக்கள் தமிழீழத்துக்காக ஆணை வழங்கியிருந்தனர்.

வடகிழக்கில் முஷ்லிம் மக்கள் அன்றே தமிழீழத்துக்கு ஆணை வழங்கவில்லை என்பதே வரலாறு. தமிழர் விடுதலைக்கூட்டணியால் முஷ்லிம் வேட்பாளர்களை நிறுத்திய கல்முனை - ஏ.எம்.சம்சுதீன், சம்மாந்துறை - எச்.எல்.எம்.ஹாசீம், மூதூர் - எஷ் .எம்.மக்கீன். ஆகிய மூன்று தொகுதிகளிலும் படுதோல்வி அடைந்து எந்த ஒரு முஷ்லிம் வேட்பாளரும் வெற்றிபெறவில்லை அதேபோல் கல்குடா தமிழ் முஷ்லிம் மக்கள் வாழும் தொகுதியும் படுதோல்வி கண்டது.

வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு அப்போதே முஷ்லிம் மக்கள் ஆணைவழங்கவில்லை என்ற கசப்பான உண்மையை புரிய வேண்டும். இதற்கும் காரணம் 1977 தமிழர் விடுதலைக் கூட்டணி விட்ட தவறு என்பதே உண்மை. மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியில் முஷ்லிம் பிரதிநித்துவத்தை இல்லாமல் செய்ய செல்லையா இராசதுரையை தமிழர் விடுதலை கூட்டணி உதயசூரியன் சின்னத்திலும், காசி ஆனந்தனை இலங்கை தமிழ் அரசுக்கட்சி வீட்டுச் சின்னத்திலும் தமிழர் விடுதலைக்கூட்டணி தலைமை வேட்பாளர்களாக இரண்டு தமிழர்களை போட்டியிட வைத்தமையால் முஷ்லிம் மக்கள் தமிழர் விடுதலை கூட்டணி மீது கொண்ட அதிருப்தியால் கல்முனை, சம்மாந்துறை, மூதூர் ஆகிய மூன்று தொகுதிகளிலும் வட்டுக்கோட்டை தீர்மானம் தோல்வியடைந்தது என்பதே உண்மை.

மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியில் செல்லையா இராசதுரையை பழிவாங்க அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எடுத்த முயற்சியின் விளைவே இதுவாகும். தந்தை செல்வா வட்டுக்கோட்டையில் எடுத்த தீர்மானத்துக்கு வடகிழக்கு தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை தந்தை செல்வா அறியும் முன்னே அவர் கண்மூடினார்.

தந்தை செல்வா என்ற ஒரு பெரும் தலைவர் ஈழத்தமிழர்களுக்காக இரண்டு கட்சிகள் மூலம் இரண்டு தீர்மானங்களை எடுத்திருந்தார்.

1. இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி மூலமாக 1949 டிசம்பர் 18இல் சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வு.

2. தமிழர் விடுதலைக்கூட்டணி மூலமாக 1976 மே 14இல் சுமந்திர தமிழீழம்.

இந்த இரண்டு தீர்மானத்துக்கும் சொந்தக்காறர் தந்தை செல்வா ஆனால் இரண்டு தீர்மானமும் இரண்டு கட்சிகளால் எடுக்கப்பட்டது. இதைத்தான் நாம் பார்க்கவேண்டும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் கொள்கை எது என்றால் அது சமஷ்டிக் கொள்கை என்பது சரி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கை எது என்றால் தமிழீழ தனியரசு இதுதான் இரண்டு கட்சி ரீதியான கொள்கை என்பதை புரிதல் வேண்டும்.

ஆனால் தந்தை செல்வாவின் கொள்கை எது? இந்த கேள்விக்கான பதில் தந்தை செல்வா இறப்பதற்கு 02 மாதங்கள் 25 நாட்களுக்கு முன்னம் வட்டுக்கோட்டையில் எடுத்த இறுதித்தீர்மானமான சுதந்திர தமிழீழமே தந்தை செல்வாவின் கொள்கையாகும் சமஷ்டிக்கொள்கையை தந்தை செல்வா 1976 மே 14 இல் கைவிட்டுவிட்டார் என்பதே உண்மை.

சிலர் கூறுவது தந்தை செல்வா சாகும் போது “தமிழர்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்” என கூறியே இறந்தார் என இதுவும் தவறு அவர் சாவடைவதற்கு ஆறு வருடங்களுக்கு முன்னமே 1972இல் புதிய இலங்கை குடியரசு அரசியல் யாப்பினை நிராகரித்து நாடாளுமன்றப் பதவியை துறந்தார் அந்த காலத்தில்தான் தந்தை செல்வா தமிழர்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என கூறியிருந்தார்.

தந்தை செல்வா சாகும் போது இறுதியாக கூறியது வட்டுக்கோட்டை தீர்மானமான “சுதந்திர தமிழீழமே இறுதித்தீர்வு” என்பதையே தந்தை செல்வா பகிரங்கமாக கூறி இறந்தார் என்பதே வரலாற்று உண்மை.

வரலாறுகளை சிலர் தவறாக மாற்றி தந்தை செல்வா சாகும் போது தமிழர்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என கூறி இறந்தார் என்பது முற்றிலும் பொய்யான கருத்தாகும். எனவே தந்தை செல்வாவானாலும், தலைவர் பிரபாகரன் ஆனாலும் இரண்டு தலைவர்களினதும் இலக்கு ஒன்றுதான் அது இனத்தின் விடுதலை மட்டுமே என்பதே உண்மை.


வீரவணக்கம்
லெப். கேணல் காந்தன்
(வீ. நாள் 28.01.2009)
மேஜர் இளந்தி
(வீ. நாள் 11.03.2009)
லெப். கேணல் உமாசுதன்
(வீ. நாள் 09.03.2009)
மேஜர் வழுதி
(வீ. நாள் 11.03.2009)
லெப். கேணல் கலையழகன்
சிவபாதசுந்தரம் ஞானசீலன்
02.09.1976 - 18.04.2007
(யாழ் மாவட்டம்)
லெப். கேணல் எழில்செல்வன்
(வீ. நாள் 11.03.2009)
கப்டன் கலையழகன்
(வீ. நாள் 30.03.2009)
எம்மிடையே வாழ்ந்த தேசத்தின் தூண்களைத் - தாய்
மண்ணிடை விதைத்தோம் விடுதலைப் பயணத்தில்
விண்ணிடை ஏகிய எங்கள் இன்னுயிர்த்தோழரை
மீண்டும் பிறந்திடவைப்போம் ஈழம்மீட்பதன் மூலம்.
லெப். கேணல் தமிழ்மணி
(வீ. நாள் 22.03.2009)
லெப். செவ்வேள்
(வீ. நாள் 15.10.2008)
லெப். கேணல் அசோக்
(வீ. நாள் 02.04.2009)
2ம் லெப். மாதுளன்
(வீ. நாள் 11.10.2008)
2ம் லெப். குறட்பருதி
(வீ. நாள் 16.10.2008)
லெப். ஈழவேந்தன்
(வீ. நாள் 07.03.2009)
லெப். ஈழச்செல்வன்
(வீ. நாள் 16.10.2008)
“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்